அகஸ்தியர்

வாதகாவியம்-1000

தாமரை நூலகம், சென்னை - 26.

அகஸ்திய முனிவர் வாத காவியம்

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

தாமரை நூலகம்
7, N.G.O. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் 23620249

தாமரை வெளியீடு எண் : 173

முதல் பதிப்பு : ஆகஸ்ட் - 1996

இரண்டாம் பதிப்பு : நவம்பர் 2002

மூன்றாம் பதிப்பு : ஜனவரி 2014

நான்காம்பதிப்பு :பிப்ரவரி 2021

உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர் : அகஸ்திய முனிவர் வாத காவியம் 1000

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : :பிப்ரவரி 2021

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

அச்சுத்தாள் : 16.கி. வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 12 புள்ளி

மொத்த பக்கங்கள் : 281+16

பிரதிகள் : 1000

நூல் விலை : ரூ- 140/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

பதிப்புரை

அகஸ்திய மாமுனிவர் பாடிய எண்ணற்ற நூல்களில் பஞ்ச காவியங்கள் மிகவும் முக்கியமானவை. (1) இலட்சண காவியம், (2) வாத காவியம், (3) மாந்திரீக காவியம், (4) ஞான காவயம், (5) பூரண காவியம் என்பவை அவைகள்.

சித்தர் நெறி என்பதில் ஒரு முறையான வாழ்க்கை அமைந்துள்ளது. முதலில் உடம்பில்உள்ள மிகையான வாத பித்த சிலேத்துமங்களை அகற்றுவதும் பிறகு கடுக்காய், மிளகு, வல்லாரை என்று படிப்படியாக கற்ப மூலிகைகளை உண்டு உடலை வலுப்படுத்த வேண்டும். கற்ப மருந்துகள் பஸ்ப செந்தூரங்கள் வரை செல்லும். அதனாலேயே இந்நூலில் வெண்காரம் முதல் நவலோசங்கள் வரை பல வைப்பு முறைகளையும் அவற்றைக் கொண்டு வேலைசெய்யும் முறையையும் அகஸ்தியர் பெருமான் கூறியிருக்கிறார்.

கற்ப மருந்துகளை உண்ணும் அதே காலத்தில் முக்கியமான யோகாசனங்கள் செய்வதும் பிராணாயாமம் மூலம் வாசியைக் கட்டுப் படுத்துவதும் இன்றியமையாதது. காயத்தைக் கல்தூண் போல் ஆக்கிக் கொண்டு சமாதி யோகத்தின் மூலம் அது முதுமையடையாமல் கட்டுப் படுத்தி ஒரே நிலையில் நிறுத்தி வைக்கும் முறையையும் சாதனை செய்து கொள்ள வேண்டும்.

சமாதி என்பது - ஒருவர் நூறு வயதில் சமாதியில் அமர்ந்தால் அதன்பின் எத்தனை ஆண்டுகள் அல்லது யுகங்கள் கழிந்து மீண்டு வந்தாலும் அவருக்கு அதே நூறு வயதுதான். உடல் முதிர்ச்சியடையாத தன்மையைக் கொடுக்கக் கூடியது சமாதியோகம்.

இவ்வாறு கல்ப காலம் வாழக்கூடிய நெறிகளைக் கூறுகிறது சித்தர் நெறி.

சித்தர்களின் நூல்களைக் கற்றுப் புரிந்துகொண்டு ஆய்வுகளிலும் ஈடுபட வேண்டியது மிகவும் இன்றியமையாத ஒன்று. கற்போருக்கு மேலும் மேலும் புதுப்புது உண்மைகள் தோன்றவும், மறைப்புகள் வெளிப்படவும் உதவக்கூடிய இந்த அரிய நூலை அழிந்து போகாமல் காப்பாற்றி வைத்திருந்து மறுபதிப்பு செய்ய அனுமதியளித்த ஆவணக் காப்பகத்தாருக்குத் தமிழகம் மிகவும் கடப்பாடுடையது. அவர்களுக்கு உளம் கனிந்த நன்றி தெரிவித்துக் கொண்டு நூலைத் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

எஸ்.பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்.

உ

கடவுள்துணை

மகாமகத்துவம் பொருந்திய

அகஸ்திய மாமுனிவர்

⌘⌘⌘⌘⌘

திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சகாவியங்களில் முதற்காவியமாகிய

வாதகாவியம்

ஆயிரம்

இஃது

⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘

மதுரை,புதுவை,சென்னை,இச்சங்கங்களில் தமிழ்த்

தலையமைப்பு நடத்திய

களத்தூர்

வேதகிரி முதலியார்

குமரன்

⌘⌘⌘⌘⌘⌘

ஆயுள்வேத பாஸ்கரன்

கந்தசாமி முதலியாரவர்களால்

தென்னாட்டு ஆதீன பிரதிகளைக் கொண்டு

சீர்திருத்தித் தமது

இலக்கணக் களஞ்சிய அச்சுக் கூடத்தில்

பதிக்கப்பட்டது

1895

எஸ். மாலதி, இ.ஆ.ப.,
ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று
ஆராய்ச்சி ஆணையர்

தமிழ்நாடு
ஆவணக்காப்பகம்
எழும்பூர்,சென்னை 8

க.எண்.11267/ ஆ, நூ / 95 ---------------------- நாள் : 14.3.96.

அனுதிக் கடிதம்

பொருள் : தமிழ்நாடு ஆவணக்காப்பகம், நூலகம் – அகஸ்திய முனிவர் வாதகாவியம் 1000 – மறு பதிப்பு செய்தல் – அனுமதி வழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ் நூல்களைக் காப்பாற்றி, மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம், அரிய தமிழ் நூல்கள் மறு பதிப்புச் செய்யும் திட்டம் ஒன்றீனைத் தமிழக அரசு கல்வித் துறை அரசாணை நிலை எண்.372, கல்வி, நாள் 20.4.92ல் வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தின்படி “அகஸ்தியர் வாதகாவியம் 1000'' என்னும் நூலீனை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்து கொண்ட மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையர்

(ஒ.ம்) எஸ். மாலதி,

பெறுநர்
தாமரை நூலகம்,
7, என்.ஜி.ஓ.காலனி,
வடபழனி, சென்னை – 600 026.

அகஸ்திய முனிவர் வாதகாவியம்

பொருளடக்கம்

	பொருளடக்கம்	பக்க எண்
124.	காரசாரம்	114
125.	அடிமூலம்	114
126.	மேல்மூலம்	115
127.	சித்தினியின் வரணம்	115
128.	சங்கினி	115
129.	கல்வியறிவது	117
130.	காரசாரம்	119
131.	கருங்காகம் அண்டம் கோழி அண்டம்	124
132.	செம்பருந்து அண்டம்	125
133.	மாக்கரு	126
134.	எங்கும் அகத்தீசர்	126
135.	சூரிய செபம்	127
136.	பொட்டிலுப்பு	129
137.	பழச்சாறு	131
138.	ஐந்தாவது காண்டம்	134
139.	அட்டவசியம் செந்தூரப்பொட்டு	145
140.	செந்தூரமை	149
141.	அஞ்சனம்	150
142.	விந்துநாதப் பெயர்	153
143.	ஆறாவது காண்டம்	156
144.	ஐந்துருவின் சவுக்காரம் வைப்புசலம்	160
145.	அண்டசவுக்கார வைப்பு சுத்தி	160
146.	பிண்ட சவுக்காரம்	162
147.	காரசவுக்கார வைப்பு	165
148.	காரமெழுகு	165
149.	நன்றிசொல்	167
150.	சிவன் கேள்வி	167
151.	சாரவைப்பு சுத்தி	168
152.	வாசித்த ஆயிரம்பேர்	168
153.	அகஸ்தியர் வேதங்காணுதல்	172
154.	அண்டரசம்	174
155.	பிண்ட சவுக்கார ரசம்	176

	பொருளடக்கம்	பக்க எண்
212.	முன்ரசக்கண்ணாடி குருவித்தை	220
213.	அசுவகாண்டம் பார்க்கவும்	222
214.	ஒன்பதாவது காண்டம் (அமுர்தசஞ்சீவி கோர்வைக்கு மேற்பட்ட ஒன்பதாங் காண்டம்).	223
215.	சூதசெந்தூர செயநீர்	231
216.	முப்பின்மெழுகு	232
217.	படிகாரவுப்பு	233
218.	யோகபூசை	233
219.	மதியமுர்தம்	233
220.	இரவியமுர்தம் பொட்டுலுப்பு வைப்பு	234
221.	பொட்டுலுப்பு செயநீர்	234
222.	உப்பு திராவகம்	235
223.	இரசக்கரகம்	235
224.	வெண்காரவைப்பு	236
225.	கஞ்சாசெடி	236
226.	நீர்அருவிபாயும்	237
227.	மெழுவிலாட்டு கஞ்சாபுகைபிடிக்க	237
228.	வெண்காரவைப்பு	238
229.	வெண்காரக்கட்டியின் நிறமறியவும்	238
230.	சீனக்காரவைப்பு	239
231.	சீனக்காரக்கட்டு	239
232.	நாகவைப்பின்கட்டு	239
233.	நாகரசக் கட்டினத்தின் பெயர்	240
234.	நாகரச செந்தூரம்	240
235.	லிங்கரசம்	241
236.	லிங்கரசத்தில் தங்கவேதை மாற்று	241
237.	வறுமையில் தங்கமாறிக் கொள்ளவும்	241
238.	தங்கவேதை கொண்டு யோகஞ் செய்யவும்	242
239.	மானாதியறியவும்	242
240.	தங்கசுண்ணம்	243

	பொருளடக்கம்	பக்க எண்
241.	நவமூல சத்தி	243
242.	நவமூல யோகத்தில் வயதைந்து	243
243.	தாம்பிர வைப்பு	243
244.	நவமூலத்தில் யோகம் பார்க்கவும்	244
245.	பஞ்சலோகம் பழுப்பு	244
246.	வெங்கல வைப்பு	245
247.	அட்டலோக வைப்பு	245
248.	நவலோக வைப்பு	245
249.	நவலோக தங்கம்	247
250.	காந்த செந்தூரம்	247
251.	பத்தாவது காண்டம்	250
252.	பன்னீராயிரக் காண்டபெருமை நூல் தொகை நூல்கோடி கணக்கு	251
253.	அஷ்டமாத் தயிலம்	252
254.	நவரத்தின சுண்ணம்	253
255.	தாம்பரவேதை	254
256.	பஞ்சலோக தங்கம்	254
257.	முத்து லோகம்	255
258.	செந்தூர கற்பம்	256
259.	வெங்கல தங்கம்	257
260.	கோமேதக சுண்ணம்	259
261.	கோமேதக செந்தூரம்	259
262.	புட்பராக சுண்ணம்	261
263.	அட்டலோக தங்கவேதை	263
264.	புட்பராக செந்தூரம்	264
265.	சாப நிவர்த்தி	266
266.	சதானந்த யோக ராசாங்கம்	266
267.	சதானந்த யோக ராஜாங்க மென்றறியவும்	267
268.	வங்கவேதை தங்கம்	267
269.	வைடூரியம்	267
270.	ரசவேதை தங்கம்	269

	பொருளடக்கம்	பக்க எண்
271.	வயிடூரிய செந்தூரம்	270
272.	அயவேதை தங்கம்	271
273.	அயச்செம்பு	271
274.	நவரெத்தின செய்ய	272
275.	அஷ்டயோக வேதையில் தங்கமறியவும்	274
276.	கெந்திரச தங்கம்	276
277.	கெந்தி ரசத்தில் தங்கவேதை	277
278.	பாஷாணத்தில் தங்கவேதை	278
279.	ரசபாஷாண செந்தூரம்	279
280.	நாகரச வேதை	280

ஓம்

அகஸ்திய முனிவரருளிச் செய்த

வாத காவியம் - 1000

முதலாவது சருக்கம்

காப்பு

ஆதியெனும் பராபரமே சின்மயமே போற்றி
அண்டரண்டம் நிறைந்த நிற்குணமே போற்றி
சோதிமயமாய் நிறைந்த சுடரொளியே போற்றி
சூட்ச சடாதார பீடத்துருவே போற்றி
வேதியெனும் சுழிமுனையின் பொருளே போற்றி
வேதாந்த மாயிரத்தின் விதிநூல் போற்றி
நீதியெனு மாதி சருவாணியம்மாள் போற்றி
நிரஞ்சனமாய் நின்ற கணபதியே போற்றி. 1

நிரஞ்சனமாய் நின்றகைலாசந் தன்னில்
நிகழ்ந்த கணபதியினிட பரப்பிரமன் - காப்பு
அரஞ்சனமாய் நின்ற பஞ்சபூதஞ்ஞான
ஆதாரம் நிராதார மருளேகாப்பு
குரஞ்சனமாய் நின்றசடா முடியின்பாலை
குஞ்சரமே யுனைத்தொழுதேன் குருபரனே காப்பு
பரஞ்சனமாய் நின்றபரை யுமையாளீசன்
பகர்ந்தமதி ரவியொளியின் பதங்காப்பே. 2

பாதமென்ற காலறிந்து நிலையிற்சென்று
பறந்தெழும்பி சுழிமுனையில் வாசியொட்டி
வேதமென்ற கலையறிந்து விந்தைநாட்டி
விளங்குமதி பூரணத்தி லொளிபோனின்று
நாதமென்ற பூருவத்தி லுமைபாற்கண்டு
நவப்பிரம மூலவெளிக் கப்பாலேகி
காதமென்ற தூலமதில் மேருபாய்ந்து
கருவி கரணாதியிலே யிறவியாமே. 3

இறவியாம் பிறவியென்று மிரண்டுண்டாகி
இரவிமதி ரவியினுட மேகமாகி
அறவியாம் பிறவிசென்மத் தப்பாலேகி
அகமதிலோ நிகம்பரமு மளவற்றாகி
கறவியாம் திரோதாயி பார்வையாகி
கருக்குருவு மதுக்குள்ளே சிவமுமாகி
வறவியாம் வடிவாகி யுருவுமாகி
மண்டலங்க ளிரண்டொன்றாய் மதிமூன்றாச்சே. 4

மூன்றொன்றும் யிரண்டொன்று மிரண்டுக்கப்பால்
மும்மூல முள்மூலம் பிறமூன்றாகி
ஆண்டொன்றுங் கடந்துவப்பா லமுர்தமாகி
அப்பாலும் ரசமாகி யண்டமாகி
நாண்டொன்று நால்மூன்றும் பனிரெண்டாகி
நவசராசரங்க ளெல்லா மதற்குள்ளாகி
பூண்டொன்று வனமெல்லா மபானமாகி
பூரணசந்திரன் போலு முதித்தவாறே. 5

வார்பெருகி நாற்றிசையு மகண்டமாகி
வடமேரு கிரியுயர மலர்வத்தாகி
பேர்பெருகும் பரப்பிரம்ம கபாலமாகி
பேரண்ட மண்ட பகிரண்டமாகி
சார்பெருகி சற்குண முக்குணமுமாகி
சராசரங்க ளதிலுதித்த பிண்டமாகி
ஊர்பெருகி பூமி பாதாளமாகி
யுதித்தகலை ரவிமதியிற் சோதியாச்சே. 6

சோதியென்ற வாதி யொளிக்கப்பால்நின்று
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லுறோமியாம்
வாதியென்று மகமதிலே பிறந்தோம்பாரு
வளர்பிறையி லுற்பவித்தோம் மதியால்வாழ்ந்தோம்
வேதியென்று சாதியொன்றாய் மனதிற்கண்டோம்
வேதாந்த மின்னூலைத் தாவடமாய்ப்பூண்டோம்
ஆதியென்றும் பாயிரத்தோ டெட்டுரெண்டும்
ஆகயிதுகாண டம்பத்து சருக்கனூறே. 7

சருக்கமதை யுருக்கமதாய்க் குறுக்கியீசன்
தந்திமுகன் கணேசருக்கு வுபதேசிக்க
சுருக்கமாஞ் சருக்கமென்ற கவினூறாகி
காவியமாங் காண்டமதாய்ப் பத்துக்குள்ளே
அருக்கமா மெவர்க்குமுத லுருவாய்ச்சொன்னார்
அன்பன்சொன்ன வாக்கதுவே யகமாய்நின்று
தருக்கமா மின்னூல்தா னாயிரத்தை
தந்திமுக னருள்குமர குருசொன்னாரே. 8

வேறு விருத்தம்

தந்திமாமுக னெந்தன் குருத்தமை
தாளடிக் கருள்சரணம் புரிந்தோமே
முந்திமா முகனந்தி குருவருள்
முக்கரு தன்னுடன் சற்குருபாதமே. 9

நந்திமா முகன்கொண் டருள்குண்டலம்
விந்தையாய்ப் பதம்மெய்ப்பதம் போற்றுமே
துந்திமா முகன்சொன்னதோ ரிம்மொழி
கந்துலாவிய காவியக் கண்டமே. 10

காவியக் கடல்கடந்த வமுற்தமை
நாவியைத் தின்று மசத்ஞ்தயறிபவர்
மேவியக்கடல் வடமேரு துருகமா
மாவியக்கரு வைம்பூத மாகுமே. 11

மேவியக்கட நேர்பெரு மண்டலம்
தாவிசூ ழண்டமாஞ் சராசரமமைத்தகூற்
ஆவியக்கட லண்ட பேரண்டமாம்
தூவியமா மறையோர்கள் சொல்நூலே. 12

நூலினர்ப் பொருள் கால்தலைகண்டனர்
மாலின் வரப்பதி மாதவராகையால்
ஆலினுறப் பொருள்கண்ட சராசரம்
காலியின் னொளி கண்டனர்பாலே. 13

பாலினுர்ப் பொருள் படர்ந்தகரையது
வேலிபோ லெங்கும் விளங்குமதுவுடல்

நாலினுர்ப் பொருள் நவப்பராம்சிஷ்டையால்
காவித்துக் கண்டவர் கவியுரைவாரே. 14

வேறு

வார்பெருகும் காவியமாமுனி யுரைத்தனூல்
நேர்பெருகு மகத்தியர்நிலைத்த ெ:பாருள்தன்மையாம்
சீர்பெருகு மாயிரம் சிறந்தனூல் துகையதாம்
பேர்பெருகு மூன்றுலட்சம் பாடலுக்கிதுசேரே. 15

சேர்பெருகு போகஞான செயலுடல்மவுனமா
ஊர்பெருகும் நொடியுரைத்த உடல் நேர்மைகேளு
ஆர்பெருகு மகத்தியன் மகத்துவம் பிறவிகேள்
பேர்பெருகும் புலத்தியர் புகழ்ந்துரைந்து கேட்டிடே. 16

கேட்டிடு மென்னுயிர் கிரகலையஞ்சினில்
நாட்டிலுள்ளோ ரவர்க்கும் முதல்மொழி
சாட்டிடு மாம்சுயமதாட்டிடு முயிரதாம்
கேட்டிடு மனமுள்ளோர் தங்களுக்கே. 17

ஓட்டிடு விவேகபுத்தி பூருவமிருந்தால்
நாட்டினி லுள்ளோரனைவர்க்கு நன்றாய்
ஏட்டினில் மறைத்த தியானவையும்விரித்து
காட்டிவிட்டேன் கைம்முறை யுண்மையே. 18

வேறு

உண்மையா யுரைப்பதற்கு வுவந்துகேள் புலத்தியாநீ
நன்மையா யுரைப்பதற்கு நாவேது வுணர்வேதாம்
சென்மையா யிருப்பதற்கு செப்புறே னூலினுண்மை
வண்மையா யிரண்டினில் வளரின்பதுன்ப மன்னே.19

அன்மையாய் சரணொன்றல்லோ அறிவுக்கு யிறவுகேளு
குன்மையஞ்சி லிரண்டிலொன்று குணமதிரவி ரவிதான்
வன்மயத்து அருவபூர்வம் வானகையி லுதிப்பாற்கு
குன்மையிது வாக்கியதாம் குணமுணர்ந்து வல்லவா. 20

அல்லல்ல விசாரமென்ன தறியவே குணமிதாகும்
நல்லல்ல மா ·க்கத்துண்மை நன்மையை யறிவாய்நீயும்

யல்லல்ல புண்ணியபாவம் யறிவதே குணமிதாகும்
சொல்லல்ல மாதாமாதா சொரூபத்தி னடக்கைநல்லே.21

நல்லல்ல சுணையிடும்பு நடத்து - மதியை யறிகுணம்
மல்லல்ல மகத்தினில் மகிழ்ந்து - நின்றதே குணமிதாம்
கொல்லல்ல வல்லமையால் கூறுமே குணமிதாம்
கல்லல்ல கருவுதிப்ப கண்டுகொள் மனமிதே. 22

சிந்து

மனமென்ன புத்திமதியி னுயிருயிர்
தனமென்ன கனகம்தான் படைத்தோரை
சனமென்ன அறிவு சத்தமிதாகும்
குணமென்ன வாசான்குருமொழி யின்னூலே
வனமென்ன நாவுவாக்குத் தவறாதே
குணமுடையோர் சொன்னகுறி யிதான்பாரு
புனமென்ன பூருவ புத்தியினாலே
வனமெல்லாஞ் சூழ்ந்தவாடை யிதாமே. 23

வாடையில் மாமலர் சாடையில்பேசும்
தேடையி லன்னம் ஓடியிடுவாரே
ஆடையி லம்மனமென்னுயி ரன்னத்தால்
ஓடிடும் போதுண்டு வதுபாரே
நாடையி லக்கல்வி வயதுபதினாறில்
பாடிடும் காவியம் பத்துனூரின்னூல்
தேடையி லமைப்பது தெளிவுள்ளோராக்கிதுவுரை
காடையில் பிறந்த கரவென்னலாமே. 24

ஆமென் றமைப்பதற்கு ஆககுணமூன்றிதாம்
ஏமென்ற யெவரெவர்க்கு மிக்குணமறிந்திடில்
பாமென் றமைப்பதற்கு பத்துனூறும்கண்டாற்
தேமென்ற பிறவியற்று சிவபதத்தினிலமைப்ப
வான மென்றுமக மகத்தினில்பறை
தேமென்ற திசையெட்டினில் பூறுவம்
காமென்ற கயிலைகருவு யிரண்டாம்
நாமென்றும் பிறந்தோம் நவிலிவதாமே. 25

விருத்தம்

தாமேதான் தந்திமுகம் கணேசனென்றும்
சதாசிவத்தி னமுர்த சதுர்முகனானென்றும்
நாமேதான் பஞ்சமதி லுருவாய்நின்று
நவசரா சரங்களெலா மரைநொடிக்குள்
தேமேதான் வடகாலையி லுற்பவித்தோம்
தேவிபறை யவளிடத்தில் சிலநாட்சென்றோம்
பாமேதான் பறைவலத்தி லஞ்சில்கண்டோம்
பஞ்சபூத வுருவாகி பரமானோமே. 26

பரமான மனமல்லோ அரமாய்நின்று
பரமகதி யகமதுக்குள் சகமாயென்றும்
குரமான வுயிர்களிட மன்னானென்றும்
கும்பமெனும் நெற்கலையில் வாசியாலே
அரமான கொடிகலையில் துருகமேரு
மதிலிருந்தோ மகத்தீச ரமைத்தகூர்கேள்
உரமான வுயிர்வாசிக் குரையாய்நின்று
உணர்வதற்குக் காவியந்தா னிந்தநூலே. 27

வேறு

கரவியத்தி னூல்தனிற் கடல்பெருகுஞ் சின்மயந்,
தாவியத்து மேவுதற்குத் தடைபடாத நெஞ்சகம்
ஆவியத்தி னுட்பொரு ளறிந்தவர் தனக்குரை
நாவுணர்ந்து கேட்பதற்கு ஞானபக்தில் பானமே. 28

வேறு

தாவியத்தினில் சூழ்ந்த சராசரம்
ஆவியத்துக் குளஞ்சுபூத முணர்
மேவியத்தினில் தாவுஞ் சதாசிவம்
நாவியத்தினி லடைந்த வுரையிதே. 29

வேறு

உரைபடாத நெஞ்சகம் வுணர்ந்தமதி நேர்மைகேள்
அரபடாக மென்றமூலம் அங்குநின்ற வோங்காரம்
தரபடாத பூரணம் தடாகமிதி லொடுங்குயிர்
நிரபடாத நெஞ்சகம் நின்றநேர் நிலைகண்டமே. 30

வேறு

அரபடாக மென்றண்டமாமதி லுதிப்பவரஞ்சு பிண்டமாம்
குரபடாக நெறிகும்பமேறு நிலைகூடியே யிருவட்டமாம்
வரபடாக நிலைதடகமாமதிலும் வாழுமாமனிதர்கொடிதனில்
கரபடாம லெவ்வுயிருமாமனிதர் கருணையோடு மிக நிகழ்ந்தரே.31

வேறு

நெகிழ்ந்தநற் குறல்வள்ளுவர் பள்ளுதான்
மகிழ்ந்தநற் குறைமவுன மெஞ்ஞானமாம்
அகிழ்ந்தநற் குறையாக மகத்தினில்
கசிழ்ந்தநற் கடல்குறளிது முத்தமே. 32

உகந்தநற் பூர்வம்தன்னி லுதிப்பவர்
உகந்தநற் பெரியோருடல் காணனே
உகந்த வின்பதுன்பங்க ளகற்றிடும்
உகந்தமே பெருவாத நூற்காவியம். 33

நூலுமே பெரியோர்களுங் கண்டனர்
வாலுமா ழறையோக ரகசியம்
பாலுபோலாக பகர்ந்த விவ்வாயிரம்
மாலுமே யயன்கண்டு மறைவரே. 34

மறையுமே பெரியோருடன் சென்றுயான்
குறையகற்றிக் குருமுறை வாய்மொழி
மறையகற்றிப் பகர்ந்த பெருநூலில்
நிறை பொருந்த நிகழ்த்தும் வேதமிதே. 35

விருத்தம்

இரண்டான வொன்றல்லோ பூரணமேயாகி
யிரண்டுதனி லொன்றுதித்த நேர்மைகண்டு
மூன்றான பரப்பிரம்ம சொரூபத்தாலே
மூன்றிரண்டு மஞ்சுதனி லடக்கமாகி
ஒன்றான வஞ்சுமூன்று மெட்டதாகி
வொன்பதுக்குள் பரவாச லொடுங்கிநின்ற

அன்றான வகமகமாமக பத்தாகி
அண்ட சராசரங்களெல்லா மமைப்பதாமே. 36

சந்த விருத்தம்

அமைப்ப தகத்தினி லிமைப்பவரோரிதழ்
தமிழ்க்குரையார் மொழிநமைக் குருகந்தனடிவாழ்க
கமைப்பக்கருகட னிமைப்பொழுதோர் கடிசமைக்க
நிமைக்குள் அமைத்த வொருநொடி தன்மதியாலே
தமைப்பதென குழிஅமைப்ப தருள்மொழி
தமைப்பவோர் காசெமைப்பதென்செயல் அருள்வே
வமைப்ப குறையென நமைப்பவரெனதுதி (ணும்
உமைப்பவ ருடலறி யெமைப்பாலா. 37

முடுகு விருத்தம்

பாலமுர்த மென்றவரை யாறுவரைக்கப்பால்
மேலமுர்த மென்றதுரை ஊருமதிலப்பால்
ஆலமுர்த மென்றவுரை நாவுருசியப்பால்
காலமுர்த மூன்றுவிசை தாவிதம்பிப்பா. 38

தூலமுர்த மென்றநிலை நாவுகுளறாதே
துருகமதி லேறிவிளையாடி டும்பிப்பா
னாலமுர்த மென்றவுயிர் வாசியிதினாலே
ஞாலமதி லேறியதில் காலமறிவாயே. 39

காலமறிவா யுடலுமே வுடலுமேலும்
கண்ணுவிழி நேர்முகமு மென்னுமறிவாலும்
பாலமறி பூருவத்தேரு வழியாலே
காலமறி வாயகல கோலநதிகாணும். 40

ஆலமறி தாரமெனகண்டு வொருமனதாய்
வாலசுப்ர மணியருட மகிமையதினாலே
தலமறி யாறுசபையோர் மறையோர்சொன்ன
பாதையிதினாலே வழிதேறு மனதுரையே. 41

விருத்தம்

துரைகண்டோம் பறையென்ற வாத்தாளெந்தன்
துருகவழி வடகலையில் சொன்னால்தியானம்

மரைகண்டோ மாமறையென் றுரையாய்ச்செய்தோம்
வலயிடமா யிடம்வலமாய் மவுனம்பாய்ந்தோம்
கரைகண்டோம் கால்தலைக ளுருவாகச் செய்தோம்
காவியக்காண்டமதாய்க் கருக்குருவாய்ச் சொன்னோம்
பரைகண்டோ முமையிடத்தில் துரைகண்டோமியாம்
பாடினோம் பஞ்சபூத நெஞ்சேகேளே. 42

வேறு

நெஞ்சகம்போரவழி சஞ்சலமதாகிவிடும் // வரும்நேர் தெரியா தென்னகுறையோ // நெடுநாள் சற்குருமன மறிந்தா லென்ன// தன்னினவு தனிலறிவு தருமோ // சஞ்சகம் பண்ணாமலொருவர் மொழிதவறாமல் // சார்ந்து மிகப் பேசும் வரதன்//சண்முக சதாசிவம் எனஉருக // சிவபதந் தந்தருளு மோனகுருவே // அஞ்சகம் பஞ்சபொருள் கஞ்சகவி // காண்டமிது ஐரெண்டு பத்துநூறு // மடக்கமது யெண்ணுமவர்க் கென்னாளு // மொருகுறைக ளணுகாது கேளுமனமே.// 43

மனமென்ன தொருபுத்தி நிலையாதநிர்மூடா //மவுனகுரு புத்திவருமோ // மகத்தான ஞானவுடல் வாய்ப்படித் தாலென்ன // வாயுணர்வு ருசி தருகுமோ // குணமென்ன தன்மனம் தெரியாத கொடுமையால் // கொடியதீவினை பாவமோ // குருவின்மொழி யறியாத பழிபாவ சண்டாளர்க்கு // உதவிசெய்தாலும் சதமோ // பணமென்ன தமக்கொருவர் புத்திசொன்னாலென்ன // படித்தாலும் ஞானம் வருமோ // பாகமென்றதொரு தடாகத்தின் மாய்கையால் // படர்ந்த சுரையது காயாமோ // கணமென்ற காவியம் பாராத படுமூடர் // கருவரியாத விதமோ // கண்டுபிடியண்டமுர்த மண்டலம்சூழுமதி // காமகருவாம் பதியமே. // 44

பதியெண்டிருக்கை யெனுமதி யெண்டிருக்கை // வளர் பவமொன் றிருக்கசிவ // நவமண்டலத் தருளும் பருகொனற்சைதி // யெண்டிருக்கை யொரு // வதி யெண் டிருப்பவர்கள் சகலத்துணர்ந்தமொழி // அவலப்

படாதகருகுரு வருளா // லெனதி யெண்டிருக்கை வகை // ததியொண் டொருக் குரைகள் // கவிலத் தடைந்த சிவ // புவிலத்துடைந்த நிகர் வடவாலை // அதியெண் டிருக்கை புவி // நதியொண் டடைப் பதிவா // அகலத் தவத் தளவு குவிலக் // கொடைக்கடைய மருனாதி. // 45

ஆதிஅந்த மந்தமிது // மூன்றுடலு நீதியந்த மசமந்த // மகவிந்த வுயிர் வாதியந்தம்//சுகந்த மீராறுகலை வடவாசி // சோதியந்தம் நிமந்தம் நிகழ்ந்த // பதிந்தம் பதுப்பந்தி னாதியந்த மகுந்தம் // சுடரொளிவு யிடவாசி காதியந்த // மகமுந்தம் திசை யுலகும் // பாதி யந்தம் பகுந்தம் // பகுந்த மயி உயிரும் // நேதி யந்த மடைந்த //மவுன குருஅடி நூலே/ வேதி யந்தம் விகுந்தமூவாறுபதி // சாதியந்தம் சவுந்தமறாறும் வயல் // பூதி யந்த மிகுந்தம் // பொதிகை அகம்மிது பாலை. // 46

பாலையொரு வாலைதுதி னாளைப்புளந்துதிர// வேலையிடுகாலைமதி சோலைக்கவுந்தருள // னாலை யொடிறாறுகளை தூலைதருள்பதிய // அறுகோணம் னாளைகணையாலைவழி விடுத்தெரிய சுழல // ஆலை கொடுமூலையருள கொணமிடுத்தவிடு // மேலைபதினாத வயல் பாதையிதுக்குயிரு // வடவாசல் தோலையுரினா றிதழில் வாலைத்தொடுத்தசரம் // சாலைகுடி நெடுமறை கூடித்தனைந்தவுயிர் // காலைபதிமேவுதரு பாடிப் படிப்பவர்கள் // கருமானும் வாலையிரு கூடமதி லாட மெழுந்துமர // மாலையுரு யோர்னொடியில் பீடமிதுக்குயிரு // வொலைகரு வாலை அதினாலே புளந்த சிவ மிதுதானே. // 47

முடுகு விருத்தம்

தானெனவே யோர்களிடம் நானெனவே கண்டோம்
தற்பரமே சொற்பனமாய் உற்பனமாய்க் கண்டோம்
வானெனவே யோர்களிடந் தேனெனவே கண்டோம்
மவுனமொழி கவனமதாய்ப் புவனமதி லுண்டோம்
நானெனவே யோர்களிடம் நான்மறைகள் கண்டோம்
நாவுருசி யாவெனவே நாவெனவே பூண்டோம்

ஆனெனவே யோர்களிடம் ஊனெனவே யுண்டோம்
அண்ட பகிரண்ட நவகண்ட மதிற் பாய்ந்தோம். 48

விருத்தம்

பாய்ந்தோமே சூரியகலை பன்னிரண்டில்
பாலகனே சந்திரகலை யெட்டில் பாய்ந்தோம்
ஆய்ந்தோமே தென்லைகயாம் பொதிகைச்சார்பில்
அமர்ந்தோமே வடதெற்கு வானவாறும்
சாய்ந்தோமே யம்மலையின் சாரல்பாய்ந்தோம்
சராசரங்க ளொடுங்குநிலை சணத்தில்கண்டோம்
காய்ந்தோமே காவியந்தா னின்னூல்காண்டம்
கண்டமப்பா புலத்தியனே கலையின்வாறே. 49

வெண்பா

கலையான பூருவந்தான் கண்டுணர்ந்தோ மென்றுரைத்தீர்
நிலையான வடதெற்கு நாடோசொல் - அலையாமல்
அப்பா புலத்தியனே யாயிரத்தின் பாடல்மொழி
நப்பிறவி சென்மத்தால் நயந்து. 50

அலையாமல் ஞானவழி வப்பனே தானுணர்ந்து
கலையான காவியத்தின் காரணத்தை - விலையாக
வானவழி யாய்ந்தோர்க்கு வகுக்கும் பொருளொடுக்கம்
தானவுயிர் சிலையாகத் தோன்றும். 51

விருத்தம்

செயலான சின்மயத்தி னருளேகண்டு
செப்புகிறோம் புலத்தியனே செயலுளானே
வயலான மகமேரு பொதிகைச்சார்பு
வளர்ந்து வுர்பவித் - துணர்ந்தோ மன்னாள்தன்னில்
கயலான வின்னூல்தான் மகத்தாம்நூலு
கருவாகப் பாடுகிறோங் கருத்தாய்க்கேளு
அயலான வாயிரந்தான் காவியமப்பா
அட்டநவ திசைகளுக்கு மதிசயந்தான்கேளே. 52

கேளடா புலத்தியனே ராசயோகி
கிருபையுட னெனையழைத்துக் கேழ்க்கும்பிள்ளாய்
மூளடா மூன்றுலட்சம் காப்பாமின்னூல்
முப்புரத்தை யெரித்தசிவ னுணர்ந்தார்பாலா

ஆளடா வாதிசிவன் னுமையாளன்று
வதிகசெய மானமொழி பறைக்குச்சொல்ல
பாளடா பறையுமையாள் நந்திக்குச்சொல்ல
பாங்கானநந்தி தன்வந்திரிக்குப் பாலித்தாரே. 53
பாலித்தா ரசுவனியாந் தேவர்மைந்தா
பாடினா ரிதுகண்டு பத்துலட்சம்
ஆலித்தா ரெந்தனுக்கு அசுவனியாந்தேவர்
அருளினோம் மூன்றுலட்ச மொழியேபார்த்து
காலித்தார் வேதமது வாசியாலே
கவுனகுறி கெவுனமிதில் கண்டோமின்னூல்
சாலித்தார் வாவியதி னாலேயப்பா
சாற்றினோங் காவியந்தான் முதல்மொழிதான்பாரே. 54

வேறு

பாருமிதினோர்கருவை ஆறுமறிந்துணர சாருமிதின்னார்//வழலை
கோருமதிக்குருவை // தேருமதி - னோர்களிடதூறுமறை //
நொடியிலிதுபேகம் வாருமிதினாருடைய // கூறுமொழிப்பவள
மாறுமிதின் தேறுகடையாளம் // படைப்பவர்களாரு மிதின்சாதி
யறிந்தாறும் மிருப்பவர்க ளனைவோரும் //
காருமிதிகுதியிது வாதிக்கருக்கவடம் பூதிமிதிலாறுதுரை //
யேறுமறைகடிகை னாருமதினோருடல சாருமெவர்க்கு
வுரைபுவியாதி // நேருமிதிலாதிபரை மேருக்கடம்பனருள் //
சேருமிதினோர்விகட மாருக்குதவியருள் // தோருமிதின்விதிவட
தேருமிதிலப்பொருள் - அருளாசான். // 55

ஆசனவராலேவிதி கோசம்மறிந்துணர் தேசபதியாலேகுறி
மூசைதவறாமலெடு வாசமலராசையொடு பூசமொடுங்குமுயிர்
யிதுவே - பார்
காசனவராலேகலை கும்பித்துணர்ந்தமுத மாசனைவராலே
யருள் தம்பித்தடர்ந்தமுது மோசனவராலே யுடல் நம்பிப்
பொருந்துடர வுமேவாழ்
வாசனவராலேகனி தோடம்பழுத்தமுது வீசனவராலேது
சனாசம்படப்படல்தூசனவராலேபயிரெட்டும் மொருக்குதவி
தரவேணும்
பாசனவரானேச காசம்கனப்பவர்க ளாசையிருவாலேவிலதுரு
நேசம் மறிப்பவர்கள் ளோசைதரவேணுமிதி னாதவெளிக்கு
சரமிதினாலே. 56

நாலைபடையாடுதுரை வாதம்மொடுங்குமிதில் வாலைபடை
நெடுவரைபூத
மடங்குநட சோலைபடை நீடுலகுமகட்டும் கற்கடகநமநீதால்
வாலைபடை யாலையுரு கெற்பக்குனி அதின்மாலைபடை சாலை
வயரகப்பக்கபால்
உடலாலைத் துடைவருட நெடுமாலைத்தவடமிக யிருநாவால்
நேலைபடை ஊருலகு முகுத்தகருக்குருவின் வேலையிடுனாடு
லமைத்த பொருளதின் சேலைபடை கோலசரமண்டம் (செய
நிறைந்தகுருவருளாலே
பாலைபடைஞானிகள் வட்டமயிற்றுமதிள காலைபடையோனிநவ
சட்டமிதுக்குநிகர் தூலபடையண்டமகண்ட மதுக்குவுரை
நிகறோசொல். 57

நிகரபொடி கொடிகயிலை டம்பம்படப்படக வகரபொடிநூலதிக
மிகம்பம்சுகத்தனைய விகரபொடிகொடுமுடியில்
திருமமுனைத்திரளஆதாரம் (நொடியில்
அகரபொடி னொருசவளை கண்டங்கறுத்தமுடி புகரபொடி யொரு
திரும்புகைக்கொருதல பகரபொடிபடபடென நடுங்குமுடற்
குறிகளிதுவாலே (அகரமுத
சகரபொடி வெளியுயர வொடுங்கும்மிதுக்கொருவர் ககரப்பொடி
லடங்குமிவைத்துருவ யிகரபொடிதுகநிகடிரும்ப மிலக்கண
நூலதிகாரம் (வடகவிய
முகரபொடி முகரமதி சகரத்தொடர்ந்துயிரு மகரபொடி
தமிழுகதிதுப்பொருளு தகரபொடிடுகுநகரதமர மிகுந்தகவி
யிதுவாலே. 58

வாலாரசூலநவ காலமறிந்துணரநேலகர மாலசிவதூலம் (யோர்கள்
பிறிந்தகலஞாலகர மேவபவஞானம் தெரிந்துணர்ந்த பெரி
ஆலகரவாலதவ காலம் குறிந்துரை போலகர கோலமவகபாலம்
சிரிந்துயலவேலகர நீலபவதியான மறிந்தசிவயன்பா
சமநாலகரமால் நீவதூலம் கிரிந்தரை
சீலகரமூலபவ யேலம்மறிந்து வலமாலகர டிலடவதியானம்
பறிந்துயவழு மழுலமமுலகரநுவழவ வாலமகுறிந்தகண
ழாலகரடாலயிவ ஊலம்தெரிந்து யலஓலகர
ஞாநொடியில் காணுங்கருக் குறிகளிதுவாமே. 59

வாமவஸ்துவளவாதே யொருமனமேகுறிக் கருளாளேயிது
பொருள்
காமவெகுளிவோடாதே படுதுயர்பூமகுருவருளாலே யறிமனம்
நவபீடம்
நாமவஸ்து நளமாதே நியிருவேமயிட கலையாதே விந்துடல்
பாமமென்றருளவே குருகரு சோமநிலைமதியிதுவே
ரவியொளிசதுர்பீடம்
காமவஸ்துவளபாதையிது வழிநிமதாவதுநாவே யதுருசிகடாம்
உருவவழியாதே கெடுகலைமா மிதுபொருளாலே குருவழி
சிவயோகம். 60

சிவயோகப் பெருமை
விருத்தம்

சிவயோக மதிலிருக்க வயணங்கேளு
செப்புகிறோம் புலத்தியனே சிறுபிள்ளாய்நீ
அவயோகம் பண்ணாம லடுத்துநீயும்
அகத்தியநான் சொன்னபடி யகமதுவாய்க்கண்டால்
நவயோகம் நாற்றிசைக்குங் கீர்த்திபெற்று
நான்முகனைப் போலிருந்து நலமாய்வாழ்வாய்
இவயோகம் யெதுக்கு நிகரில்லையப்பா
யின்பமுடன் சொல்லுகிறோ மின்னங்கேளே. 61

இன்னங்கே ளஞ்சுவயதான பிள்ளாய்
இளம்வயது வுந்தனுக்கு யிருநேரந்தான்
அன்னங்கே ளதிகாலம் ரவிமுன்பாக
அப்பனே யெழுந்திருந்து வடமுகமாய்க்குந்தி
ஒன்னங்கே ளொருபுத்தி மனமாய்க்கொண்டு
ஓங்கார மென்றதொரு யெழுத்தைநாட்டி
வன்னங்கேள் வாவென்ற வாசியாலே
வங்கென்று கும்பிக்க வயணங்கேளே. 62

வங்கென்று கும்பிப்பாய் வடகலையினாலே
வாசியது பிறழாது வாய்வுபேதம்
உங்கென்று தம்பித்தோர் நிலையில்நில்லு
ஒடுங்குமடா கபாலவழி யோர்நாழிமட்டும்

அங்கென்று வறிவுகொண்டு வுபாயமாக
வப்பனே யிடகலையில் வாசிவிட்டால்
சங்கென்று சாதுரிய குணங்கூசாம
லச்சுதானந்த வெளிக்கப்பால் செல்லே. 63

சத்தி யோகம்

செல்லப்பா சிவயோகப் பரிட்சைசொன்னோம்
சிவசிவா சத்தியுட யோகங்கேளு
மல்லடா வதிகாலம் பதினைந்துநாழி
மைந்தனே சென்றுதென்றால் மகத்தாம்நன்று
எல்லடா வெழுந்திருந்து தென்முகமாய்குந்து
இடகலையில் வாசியொட்டிக் கும்பித்தாயானால்
பல்லடா பரவாசல் சந்துத்துவாரம்
படபடென்று வோடியொரு நிலையிலாமே. 64

நிலையாக நிற்குமப்பா வாகாசத்தில்
நின்றவிடங் கபாலவழி மேலேவாசல்
ஒலையாக நிற்கின்ற வாசியோகம்
ஒருநாழி மட்டாக நிலைத்துபோகும்
அலையாக ஞானமதா யறிவுகொண்டு
அங்குநின்று கும்பித்து வடகலையில்விட்டால்
கலையாக அலைவந்து மோதினாப்போல்
கண்கள்ரெண்டும் முழிபிறளுங் காணுகாணே. 65

காணுகின்ற வாசியைநீ மெதுவாய்நின்று
கண்மணியே வாங்கிவிடு கைபாகந்தான்
ஆணுகின்ற பானுவிது யார்க்குங்கிட்டா
வாயிரத்தின் கருவறிந்தால வர்க்கேகிட்டும்
ஏணுகின்ற விந்தபடி யாசான்சொல்ல
யென்மகனே யிறுத்துமடா வோராண்டுக்குள்
பாணுகின்ற பரிட்சையிது பாகம்பாகம்
பரமசிவன் சொன்னமொழி பலிதந்தானே. 66

காயசித்தி யோகம்

பலிதமென்ற சத்தியுட யோகஞ்சொன்னோம்
பாலகனே காயசித்தி யோகங்கேளு
அலிதமென்ற அஞ்சுகொண்டு பத்தாண்டுக்கு
ளப்யாச பாகமடா வரன்தான் சொன்னார்

எலிதமென்ற பத்தாண்டு வருடம்போனால்
யிறுத்துமடா சந்துநவத் துவாரமெல்லாம்
வலிதமென்ற வாசியப்பா தேகமப்பா
வச்சிரமென்ற வெழுகதுபோ லாகுந்தானே. 67

ஆக்குமடா வப்பியாசஞ் செய்தாயானா
லதின்பிறகு காயசித்தி செய்யும்போது
காக்குமடா கற்பமது வுண்ணும்போது
லாடசிவ யோகஞ்செய்யும் வகையைக்கேளு
மாக்குமடா மதிகாலம் பதினாறுநாலும்
மைந்தனே யிருபது நாழிகைக்குமேல்
சாக்குமடா வெழுந்திருந்து வைகையேகி
தானபானம் நேமநிஷ்டை சார்வாய்ச்செய்யே. 68

செய்யப்பா புலத்தியனே குகைதானேகி
திரிபுரத்தை யெரித்தசிவன் செயல்தன்னால்
மெய்யப்பா சிவயோக பூசைசெய்து
மேலான யோகசத்தி பூசைசெய்து
பையப்பா கோவின்பசு பால்தான்கொண்டு
பராபரத்தை வுன்மனதில் தியானஞ்செய்து
ஐயப்பா வரைப்படிதான் உட்கொண்டேநீ
அரைநாழி சென்றுதென்றா லப்பாகேளே. 69

கேளடா தேகமெல்லாங் குளிர்ச்சிகாணும்
கிருபையென்ற வாசியது யிருப்பிடமாய்நிற்கும்
நாளடா கீழ்த்திசையின் முகமாய்நீயும்
நளினமதா யுட்கார்ந்துநவ பந்தனமேசெய்து
கோளடா குருபரனைத் தியானஞ்செய்து
கொண்டிடாய்க் கற்பமதைக் கூறக்கேளு
நேளடா நெல்லிக்கா யுள்பருப்பின்பாகம்
நிர்மலத்தைத் தான்பணிந்து கொண்டிடாயே. 70

பஞ்சமூர்தகலசம் எழுந்து வாசிகொண்டு கும்பிக்கிறது

கொண்டிடவே யோர்நாழி சென்றுதென்றால்
கூறுகிறேன் வேகமது யென்னசொல்வேன்
வெண்டிடவே யென்போதை லகிரிதான்பாரு
விளங்குமடா வேதாந்தம் பலகலைகளெல்லாம்

அண்டிடவே யப்போது யோகம்பாரு
    அமுர்தமென்ற கலசமஞ்சு மடவாய்க்காணும்
தெண்டிடவே பஞ்சமுர்தத் தரிசனமாஞ்
    சேர்வை சித்திக்கு மின்னமொருசேதிகேளே. 71

சித்திக்கும் முதல்சேர்வை யாகும்பாரு
    செயமாகத் தரிசித்து நங்கென்றேகும்பி
முத்திக்கு விதுவல்லோ வாசிதம்பம்
    மூர்க்கமதாய் மூன்றுநாழிகைக் கும்பித்தால்
கத்திக்கும் வாசியது கருமேகம்போல்
    கருவான கண்டத்தில் கலங்கும்பாரு
மத்திக்கு மங்கென்று வங்கேதம்பி
    மார்பில்நின்றுக் குளம்புமடா வாசிதானே. 72

தானான வாசியது வொடுங்கும்பாரு
    தயங்காதே சிங்கென்று தம்பித்தாக்கால்
நானான நவத்துவார மெங்குமோடி
    நமனிவன் தானென்றதுவும் நாபிபுக்கும்
வானான வாய்வுவப்பா யுனைவிட்டோடி
    வனம்புக்க நினைக்குமடா மைந்தாகேளு
பானானப் பராபரத்தை தியானஞ்செய்து
    பாலகனே வங்கென்று தம்பிப்பாயே. 73

மவுன யோகம்

வங்கென்று தம்பித்துக் கும்பித்தாக்கால்
    வளமாகக் குய்யநின்ற யகாரத்தேகும்
யங்கென்று வாலகால கண்டனைப்போல்
    அலரிவிடும் வாசியது வசையாறில்லு
யெங்கென்று நாமிருப்போ மிருப்பிடமோயில்லை
    யிருந்தவிடம் பூருவத்தி லேகும்பாரு
அங்கென்று வமருமடா மும்மூலத்தில்
    அறிந்துகொள்ளு மென்மகனே யகாரவாழ்வே. 74

அகாரமென்ற யோகமது பூர்த்தியான
    அகத்தியனா னறிந்தமட்டு மறிவாய்ச்சொன்னேன்
உகாரமென்ற பதவியடா யோகநாலு
    உறுதியடா வுன்தேக மெதுபோலாகும்

சகாரமென்ற யோககற்பஞ் சான்றோர்க்குள்
சடாட்சிப்பாய் புலத்தியனே சாற்றக்கேளு
வகாரமென்ற காவியந்தா னிந்தநூலில்
கைபாகந் தவறாமல் கருச்சொன்னோமே. 75

ஒருமன ஆசான்

சொன்னோமே யின்னமொரு யோகங்கேளு
சொற்பெரிய யோகமடா மவுனயோகம்
அன்னோமே யோகமதுக் கஞ்சாண்டான
அன்பதினாயிரம் வருஷமடைவாய் வாழ்வாய்
என்னோமே யோகநால் வருஷம்கேளு
இருனூறாயிரம் வருடம் யோகம்வாழ்வு
நன்னோமே னால்யோக வொருமனதாய் நின்றால்
நவப்பிரமம் நீயாவாய் நலமாய்க்கேளே. 76

கேளப்பா புலத்தியனே யின்னூல்காண்டம்
கிரியையிலே வாழ்வார்க்குக் கிட்டாதப்பா
ஆளப்பா வாயிரந்தா னிந்தனூலு
ஆதிசிவன் சொன்னமொழி யைவர்பார்த்து
ஏளப்பா யெந்தனுக்கு வுபதேசித்தார்
யென்மகனே சிறுபிள்ளா யுனக்குச்சொன்னேன்
நாளப்பா புத்திஅஞ்சி யறிவுவொன்று
நால்ரெண்டு மாறுமொன்றாய் நலமாய்க்காணே. 77

ஒன்றான மனமானா லாசான்சொல்வார்
ஓகோகோ யார்க்கெய்தும் ஒருவர்க்கெய்தும்
அன்றான வாசானென்ற வயணங்கேளு
அஞ்சுமொன்று மாறப்பா அறிவாம்பாரு
பன்றானப் பஞ்சறிவும் மூலத்தேகி
பதுங்குமடா பூருவந்தான் பாகங்கேளு
சன்றான சலமப்பா தடாகத்தின் கீழ்
சலப்பையின் நேரிடந்தான் பூர்வவீடே. 78

பூர்வ வீடு

வீடான பூருவந்தா னெங்கேயென்றால்
விளம்புகிறேன் வெளிதிறந்து பயிரமாக

பாடான பையப்பா நீளம்சாணு
பாலகனே வதிலொடுங்கு மவுனவாசி
மாடான வீடப்பா பத்தாம்வீடு
மகத்தான வாசலப்பா பஞ்சவாசல்
ஆடான வஞ்சுபஞ்ச பூதமுந்தான்
அதிலொடுங்கும் புலத்தியனே யறையக்கேளே. 79

அறையக்கே ளங்குநின்று கும்பிப்பாய்நீ
அகாரமென்ற யெழுத்ததுவா லடவாய்க்கேளு
வரையக்கேள் வடகலையி லிருத்துதம்பி
வங்கென்ற வாயுவது வசியமாச்சு
வரையக்கேள் பந்தனமா மவுனவாசி
பத்துனூறாயிரம் வருடம் பயமோயில்லை
மறையக்கேள் பத்தாண்டு மவுனயோகம்
மைந்தனே வாய்வுதம்பம் வளமாய்ச்செய்யே. 80

வாயுதம்பம்

செய்யப்பா மவுனதம்பம் சொன்னோம்பாரு
செயலான வாயுதம்பம் சொல்லக்கேளு
மெய்யப்பா சொல்லுகிறோ முண்மையாக
வித்திருக்கும் வாசியது யெங்கேயென்றால்
உய்யப்பா நாபியின்கீ ழோரங்குலத்துக்கப்பால்
உதித்தபிறை போலிருக்கும் பையின்சோதி
அய்யப்பா சாணரைதான் குடலைப்பத்தி
அப்பனே தொங்குமடா அடவாய்ப்பாரே. 81

பாரப்பா யிடகலையில் வாசியொட்டி
பாலகனே வடகலையில் தம்பித்தாக்கால்
கூரப்பா குய்யத்தி லிருந்தவாயு
குபீலென்று தானெழும்பி பிறையிற்சேரும்
சேரப்பா சிங்கென்று வங்கேகும்பி
சிறுபிள்ளா யொருமனதாய் தம்பித்தாக்கால்
ஆரப்பா வாயுவது வொடுங்கிப்போகும்
அஞ்சுநூறு கோடியுக மிருக்கலாமே. 82

சந்த விருத்தம்

ஆடமென்ட வாக்குருவின் யேமென் டெவர்க்குரிகள்
ஓமென்ட வரர்க்கொருவர் வாமென்டுவர்ப்பவர்கள்
ஈடோசொல்
தாமென்டவர்க்கருவி நேமென்டிவர்ப்பொருள்க
ளாமென்டெனப் பவர்கள்
ஓமென்டனத்துருவ வாய்வாலே காமென்டுவர்க்குநிரு
தேமென்டெனப் பருவம் - போமெண் டருள்பிறிய
னாமெஎ்டிருந்துபர சிவமாவாய் கேமென்டருளறிய
போமென் டொருப்பொருளை வாமண்டல
மெதுவசேர மண்டலத்தறியு மிதுபாகம். 83

குருமொழி

பாகம்பதிநிகமருளிசை யனேகம்பொருளாகம
னுயர் -தாகம்பதி
ஆகமிடகலையோகம் சிவஞானமிதுநலம் மாகம்பதி
ஆகம்கரதல
பேகம்பதிவிபேகம் கருகுரு அரிபாலா ஆகம்பதீ
வாகம்மதி குருநேகம்
மருளிகம்தனுவயரலாகம் பதிமாகமுடலக்குறி கூகம்
மருருகம் அனுசுடர்
சூகம்பரி அனாகமதுவிசை தடாகவடாமடாகம்பதி யொடு
வேகமிதுவரு
நோகம் குருசெயல் அமைப்பாலேமாகம்பதி சோகம்
குருவழி
சேகம் நிருனாகமதுவிஷம் சாகமதுவாலே உணரு
சிறுகம்பதி
அறிவாலே தெளிமனம் லோகம்பதிதேகம் யெழுஉடல்
மனமேகேள். 84

முடுகு விருத்தம்

கேளுமன மோர்களிட மாளுமிதுவாலே
னாளுமொரு கோளுமதுதவறாது யிதுவாலே

ஆளுமன மார்களிட சேருமொருக்காலே
தேளுமன வாளுடலி லாடுமிதுவாலே
நேளுமன நேர்களிட வாக்கதுவினாலே
தாளுமன மேதுருவ யோர்களிடபாலை
சாளுமன தோர்களிட மோர்புத்தியினாலே
ஆடும்சிவ வாயுவுதம்பம் நாடுமிதுபாரே. 85

விருத்தம்

பாரப்பா புலத்தியனே விவேகவானே (வோம்
பாகமென்ற பொருள்களெல்லாம் பண்பாய்ச்சொல்
காரப்பா யின்னூல்தான் காவியந்தான்
காண்டமாம் கர்த்தரால் கருக்கள்கண்டோம்
நேரப்பா யிந்நூலில் குருவேகண்டு
நிகழ்த்துகிறே னென்மகனே நினைவாய்ப்பாரு
ஆரப்பா வகமென்ற தொன்றதாலே
அதிகசெயம் பெற்றுநீ யாகுவாயே. 86

ஆவதற்கு யின்னமொரு சேதிகேளு
வாயிரத்தின் கருவறிந்து வரையாறேறி
மாவதற்கு மவுனகுரு யோகஞ்செய்து
வாயுதம்ப மொருநொடிக்குள் கும்பித்தேகி
நாவதற்கு நவப்பிரம்ம மூலங்கண்டு
நாதாந்த குருவாகி ஞானத்தேறி
ஏவதற்கு யிடகலையில் வாசிபாய்ந்து
யெமப்பால வமுர்தமதில் யிமைப்பாலுண்ணே. 87

உண்ணப்பா வாயுதம்பம் சொன்னோம்பாரு
ஓகோகோ சலஸ்தம்பம் உரைக்கக்கேளு
கண்ணப்பா விண்ணையொட்டிக் குண்ணைப்பாரு
கடும்புரவி மேலேறி யறிவைக்கொண்டு
நண்ணப்பா ஞானக்கண் மற்றக்கண்ணால்
நாதாந்த குருவிருக்குந் தலந்தானேகி
பண்ணப்பா பரபூசை நவபூசைசெய்து
பராபரத்தை தியானித்து பணிந்திடாயே. 88

சலஸ் தம்பம்

பணிந்தகுரு பதம்போற்றி யோகம்பாரு
பதியிருந்து கீழ்த்திசையி லாடத்தேகி
வணிந்துகுரு வடகலையில் வாசியோட்டி
வாயுவதினாலே யப்பா வங்கென்றேத்தி
குனிந்துகுரு கும்பித்து கும்பிப்பாய்நீ
குருவிருக்கும் வுனதுயிடம் கொண்டேபோகும்
சனிந்துகுரு சலப்பையினோரங் கலத்துக்கப்பால்
தாநிருக்கு மபானபீடம் சார்ந்துபாரே. 89

சார்ந்துபா ரென்மகனே புலத்தியாகேள்
சலப்பையினுடன் சேர்ந்துசர மாயித்தொங்கும்
ஆர்ந்துபார் வாசியதைத் தம்பித்தப்பா
அங்கென்று கும்பித்து வடகலையினாலே
மார்ந்துபா ரொருமனதாய் கும்பித்தாக்கால்
வாயுவது வப்பையி லொடுங்கிப்போகும்
ஏர்ந்துபா ரிவரெமக்கு யெமந்தானென்று
யீசுவரத் துவாலையத்தி லொடுங்கும்பாரே. 90

பாரடா யென்மகனே வஞ்சாண்டாள்வாய்
பாகமடா யிதுவல்லோ பரன்சொன்னாரப்பா
ஏளடா யோகத்தி லிப்படியேபாகம்
யென்மகனே சலஸ்தம்ப மிகவாய்ச்செய்தால்
பாளடா போகர்து பத்துலட்சம்
பதிகோடி யுகமளவும் பரன்போல்வாழ்வாய்
ஆளடா வாயுசுதான் வளர்ந்தேபோகும்
அரன்சொன்னா ரிந்தமுறை யான்கண்டேனே. 91

யோகக் கருவி

கண்டேனே யின்னமொரு சேதிகேண்மோ
கண்மணியே யோகமென்ற கருவேசொல்வோம்
ஒண்டேனே குகைதனிலே யோகம்பாரு
ஓகோகோ யோகத்துக் கொருநிறந்தான்
எண்டேனே யிடகலையில் வாயுவைக்கும்பி
யிடகலையில் வாங்கிவிட்டால் யெழும்பும்வாயு
அண்டேனே வண்டரண்டங் கொண்டேபோகும்
அவ்வண்ட வதிசயத்தை யறியலாமே. 92

அக்கிநிஸ்தம்பம்

அறியலாஞ் சலஸ்தம்பமப்பா சொன்னோம்
அக்கினியின் ஸ்தம்பமதை யறையக்கேளு
முறியலா மூலமென்ற வட்டம்போலே
மூதண்ட ரவியப்பா சூரியவீடு
நறியலாம் நாபியின்கீ ழுஞ்சலங்குலந்தான்
நளினமென்ற பையொன்று நவிலக்கேளு
குறியலாங் குடலிருக்கும் வடபாகத்தில்
கூறுகிறோம் தொங்கலப்பா வப்பைதானே. 93

தாமேதான் யோகநிலை வாசிகொண்டு
தங்கென்று வடகலையில் கும்பிப்பாய்நீ
போமேதான் கும்பித்து யிடகலையிலொட்டி
கூராக பார்த்தாக்கால் சூரியவீடு
தேமேதான் கிறுகிறென்று சுழன்றேவாசி
செயலான பைதனிலே யொடுங்கும்பாரு
ஆமேதா னஞ்சாண்டு வருடயோக
மப்பனே வொருநிலையாய் தம்பிப்பாயே. 94

அக்கிநிஸ்தம்பம்

ஒருநிலையாங் கும்பித்தா லுருவங்கேளு
ஓடாது வாயுவது வொடுங்கிப்போச்சு
அடுநிலையாய் கும்பித்தால் பித்தமெல்லாம்
அடிபட்டு வக்கினியி லழுந்திப்போச்சு
செருநிலையாய் ஸ்தம்பித்தால் சிலேற்பமெல்லாம்
செயலான வுடல்விட்டு வோடிப்போகும்
வருநிலையாய் வாயுவது ரவியில்நின்று
மாண்டுதடா வக்கினியின் ஸ்தம்பத்தாலே. 95

தம்பித்து வுலகமதை பார்க்கவென்றால்
தண்மையென்ற புரவியப்பா வாசிமேலே
எம்பித்து யிடகலையில் சினிவைத்து
யேரடா யென்மகனே அகாரத்தாலே
அம்பித்து வாயுவைநீ விட்டாயானால்
அண்டரண்டம் தூக்குமடா வக்கினியின்தம்பம்
சம்பித்து வாயுவப்பா கொண்டுபோகும்
சராசரங்கள் சுத்தியரை நொடிக்குள்தாமே. 96

ஆமேதான் வக்கினியில் தம்பத்தாலே
அடிமுடிகள் கொடிமுடிகள் நீறிப்போகும்
போமேதான் புவனமெல்லாம் கட்டும்கட்டும்
புதுமையப்பா யிவ்வித்தை வாயுபேதம்
நாமேதான் நவப்பிற்மஞ் சதுர்முகனைக்கட்டும்
நவசராசரங்க ளெல்லாம் நீறிப்போகும்
ஏமேதா னிந்தமுறை சிவன்தான்சொன்னார்
என்மகனே யின்னமொரு சேதிகேளே. 97

நேரடி சந்த விருத்தம்

கேளுமதியாலே யொருவாளு மிதுக்கீடோ
கிரிதுமுக மேருபுவனங்கள் சரியீடோ
மாளுமிதினாலே வடமேரு துருகேடோ
மனவேகமதி வாயுகுரு வானநாடோ
நாளுமதியாலே யொருபாழு பெருமோடோ
நாசிபொருள் வாசியதுனாலே குடகாடோ
ஆளுமதியாலே யொருகோளும் பரநாடோ
அன்றுயிடி கொண்டரவ நின்றுபிடிசாடோ. 98

வேறு

சாடுங்குருவளாலே நடமாடும் வாய்வதுனாலே
கூடுங்குருவிதுனாலே
பொருளாடு மதியறிவாலே ஓடும்வடமெருதாலே
சிவம்பாடும் மதியினி நூலே - முறையாமே
மூடும் அருள்பரினாலே வடதாகும்சாயதுகாலே
ஆடுமுருகதுவாலே
மருவாடும்படுயிருளாலே கோடும்குடல் சரிநூலே
பவநீடுமதிசரிவாலை - பறையாமே
ஏடுமுறுசறுகோலே கடலோடுங் காயதுநேலே
தூடும்வருகிறதாலே
அருநீடும்கதினுருகாலே பாடுங்கடலறுசேலே
கவகாடும் விதியனிசாலைவரையாமே
ஆடும்மறுதுறுசாலே புடநீடும்வாயதினாலே
தூடுமிறுசறுதாலே
சடம்போடும் நாலதுகாலே கூடும்குருவிருதாலே
உடலோடும்முன்டிகாலே வாய்வாமே. 99

விருத்தம்

ஆமேதா னிந்தப்படி னாமேசொன்னோம்
    ஆதிசிவ னுமைபதி யாளதுவுங்கண்டோம்
வேமேதான் தளம்விட்டு யோகம்பாய்ந்தோம்
    விபரமதாய் விட்டகும்பம் விதமாய்ச்சொன்னோம்
பாமேதான் புலத்தியனே வக்கினியின்தம்பம்
    பரிவாக தாம்வகுத்தோம் பண்பாய்ப்பாரு
தேமேதான் வடகலையி லாறுஞ்சொன்னோம்
    தென்பொதிகைச் சாரலிட கலையைக்கேளே. 100

கேளடா யென்மகனே யோகம்நாலு
    கிருபையென்ற தம்பமது மூன்றேசொன்னோம்
ஊளடா யோகமதில் சருக்கஞ்சொன்னோம்
    ஓகோகோ வடகலைகள் நன்றாய்ச்சொன்னோம்
தேளடா வாசியிட வொடுக்கஞ்சொன்னோம்
    தெளிவான வாய்வினிட மரணஞ்சொன்னோம்
மூளடா மூலமென்ற யுருவஞ்சொன்னோம்
    முடிந்ததப்பா நூற்றியொன்றாம் பாடல்முற்றே. 101

முற்றிற்று.

இரண்டாங்காண்டம்

பரப்பிரமப் பருவம்

ஆதியென்ற பரப்பிரம்மக் கபாலங்கண்டு
    அறையுறோம் புலத்தியனே யீராங்காண்டம்
சோதியென்ற வாதியொளிக் கப்பால்நின்ற
    துலங்கிநின்ற பூரணத்தின் சூட்சமெல்லாம்
பாதியென்ற வாதிவரை யுமையாள்சொன்ன
    பருஞான வுடல்கறுவை நலமாய்க்கண்டு
ஓதியென்ற நீதியுடன் யெனக்குச்சொன்னார்
    ஓகோகோ வுடல்குறிப்பை யுரைக்கக்கேளே. 1

உரைக்கிறேன் தத்துவந்தான் தொண்ணூற்றாறும்
உத்தமனே வெளிதிறந்து வுரைக்கக்கேளு
புரைக்கிறேன் புலத்தியனே ராசயோகி
புனிதமுடன் காவியந்தா னிந்தநூலில்
நிரைக்கிறேன் கேளுநீ யொருமனதாய்
நின்று நிர்மலத்தின் சூட்சமெல்லா
முறையாகத்தான் வுரைக்கிறேன் மறையாமல்தான் (னே.2
முறையாய்மைந்தா மவுனபொருள் ஞானவழிமாட்டுறே

மாட்டுகிறோம் புலத்தியனே வையாவையா
மாதிசிவன் சொன்னதொரு மாற்கமெல்லாம்
பாட்டுகிறோ மின்னூல்தான் காவியத்தில்
பஞ்சபூத வுடல்குறிகள் பாகஞ்சொல்வோம்
போட்டுகிற பிரிதிவியோ டொப்பதாகும்
பேசுகிறோம் தேயுவென்ற வாயுவாசி
ஆட்டுகிறோ மாகாயத்தோ டைந்துபூதம்
அதினுடைய மூலமதை வறையக்கேளே. 3

பஞ்சபூதக்கூறு

அறையக்கேள் பிரிதிவியின் கூறைக்கேளு
அகண்டசடம் பூமியென்ற மண்ணதாகும்
மறையக்கே ளப்புவதின் ரசந்தானப்பா
மைந்தனே பூமியின்கீழ் சலமேயாகும்
தெறையக்கேள் தேயுவென்ற சூடதாகும்
சேர்ந்துநின்ற வக்கினிதான் தீயதாகும்
வறையக்கேள் வாதமென்ற வாய்வுகாத்தாம்
அதினறுகே வாகாயஞ் சத்தமாமே. 4

பஞ்சபூத நிறமறிய

ஆமென்ற பஞ்சபூதக் குறிப்பைச் சொன்னோம்
அறையுறோ மதினுடைய நிறந்தான்கேளு
போமென்ற பிரிதிவியின்றன் நிறந்தான்கேளு
பொன்னிறம்போல் தானிருக்கும் தங்கவர்ணம்
பாமென்ற வப்பினிட நிறந்தான்கேளு
பளிங்குநிறம் போலிருக்கும் பஞ்சவர்ணம்
மானென்ற வக்கினியின் நிறந்தானப்பா
மகத்தான செம்புநிற வர்ணங்காணே. 5

பஞ்சபூத மகாயம்

காணப்பா வாயுவதின் நிறந்தான்கேளு
காளகண்டமாக ரசப்புகை மேகந்தான்
பேணப்பா பிரிதிவியி னுயிரைக்கேளு
பேசுகிறோம் பரப்பிரம்ம தேவனாகும்
சூணப்பா சூட்சமென்ற சுவாதிஷ்டானம்
சொல்லுகிறோம் பிரிதிவியின் வீடதாகும்
ஆணப்பா வஞ்சியிட நிறந்தான்சொன்னோ
மதிலிருக்கும் வீடதனி னட்சரந்தான்கேளே. 6

பஞ்சபூதவீடு அட்சரங்களறியவும்

கேளப்பா பிரிதிவியின் ஞானவீடு
கிருபையுடன் சொல்லுகிறோ மைந்தாகேளு
நாளப்பா நவப்பிரம்ம வீடேகேளு
நால்வட்டம் இதழாறு பீசம்நவ்வாம்
மாளப்பா ரோமமென்ற தோல்நரம்பு
மச்சயெலும் பதுவினிட மார்க்கமாகும்
ஆளப்பா யப்புவென்ற வுயிரைக்கேளு
அறையுறோ மதுக்கு விட்ணுதெய்வங்காணே. 7

காணடா யென்மகனே விட்ணுவீடு
கதிர்பிறைபோல் மணிபூரகங் கண்டிடாய்நீ
வாணடா வச்சிரம்போ லிதழ்தானப்பா
வளர்பிறையை சுத்திநிற்கும் பத்திதழ்தான்கேளு
ஆணடா வதுக்குகீழ் லப்புபீசம்
அழுந்திருக்கும் பிறையினுள்ளே மவ்வதாகும்
ஊணடா வதினுடைய கூரைக்கேளு
வுதிரசுக்கில மச்சியொடு வுறுவதாமே. 8

உறவான வுதிரமொடு நீரோடப்பா
உச்சியின்கீழ் மூளைமச்சை வுருவதாகும்
தெறவான தேயுவிட மூலமாகும்
தெய்வமென்ற ருத்திரன்றா னதுக்குயிரதாகும்
முறவான முக்கோண மிருப்பிடமுமாகும்
மூதண்ட வனாகதத்தின் வீடதாகும்
எறவான யிதழதுதான் பனிரண்டாகும்
என்மகனே சுத்திநிற்கு மிருப்பிடந்தானாமே. 9

ஆகுமே தேயுவுக்கு சிவ்வுபீசம்
அடுத்திதழை சேர்ந்துநிற்கு மதுக்குள்ளாகும்
மாகுமே போகமது துஞ்சலாகு
மாதார மென்றதுவு மௌனமாகும்
வாகுமே யவருடைய கூறைக்கேளு
மாச்சரியம் சோம்புடனே மதியுமாகும்
பாகுமே வாய்விதுக்கு சோம்பின்மூலம்
பரமென்ற மயேஸ்பரந்தான் சோடசந்தானாமே. 10

ஆமென்ற வாயுவுக்கு வுயிரைக்கேளு
அப்பனே மயேஸ்பரந்தான் தெய்வமாகும்
சோமென்ற சோடசந்தான் விசுத்திவீடு
சொற்பெரிய வவ்வதுவின் பீசமாகும்
மானென்ற யவருடைய கூரைக்கேளு
மைந்தனே நடத்தல் நிற்றல்ஆட லோடல்
ஏமென்ற விரிவப்பா யிருத்தலோடல்
என்னசொல்வே னறுகோண மிருப்பிடங்காண்பாரே.11

சடலமுற்பத்தியினடக்கம்

பாரப்பா வாகாசம் சத்தமாகி
பரிவான வாக்கினையி னிடமேயேகி
ஆரப்பா வதினுள்ளே விரண்டிதழுமாகி
அழுந்திருக்கு மாக்கினைதா னடவாய்கேளு
கூரப்பா நேராக வுரைக்கக்கேளு
கூர்மையுள்ள வாக்கினையின் குறிதான்பாரு
காரப்பா காமக்குரோத லோகமோகம்
கருவான மதமாச்சரியங் கண்டிடாயே. 12

கண்டிடா வாணுவுக்கு வுயிரைக்கேளு
கருவான கெவுனமப்பா சதாசிவந்தான்
அண்டிடா வாகாச மதுக்குபீசம்
அவ்வென்ற வட்சரந்தான் விரிந்துகொள்ளு
பெண்டிடா யென்மகனே பஞ்சபூதம்
பிரிதிவியின் கூரைநன்றாய் பேசினோம்யாம்
எண்டிடா யிக்கூறை நன்றாய்ச் சொன்னோம்
யென்மகனே யுடல்குறிப்பை யியம்புறேனே. 13

இயம்புறேன் காவியந்தா னிரண்டாங்காண்டம்
என்னசொன்னோ மென்மகனே யியம்பக்கேண்மோ
அயம்புகிறோம் அகமப்பா சடலவாழ்க்கை
அதினுடைய தேகக்கூரறிந்து யானும்
ஒயம்புகிறோம் வொளியாமல் வெளியாய்ச்சொல்வோம்
ஒன்றான பூரணத்தி னனுக்கிரகத்தால்
கயம்புகிறோம் கருவியந்தா னிந்தநூலு
காதலில்லாப் பொருள்களப்பா காணுகாணே. 14

காணுகின்ற வுடல்குறியின் கூரைக்கேளு
கணக்காக சடலத்தின் கருவின்பாகம்
பாணுகின்ற பஞ்சதுதான் சுக்கிலந்தான்கேளு
பகந்ததொரு சுரோணிதமும் பருவாய்நின்று
மூணுகின்ற மூர்க்கமதாம் பவளப்பையில்
முத்துதிப்பாய்ப் போலேயல்லோ வுருவாய்நின்று
ஆணுக்னிற வறுகுமூளை கொழுந்தில்நின்ற
ஆகாசமேக பனிவதுபோல் வாரே. 15

வானான வூசிமுனை னுனிபோலப்பா
மகத்தான சுரோணிதத்தில் விந்துவீழ்ந்து
தானான பம்பரம்போல் சுழன்றேபாய்ந்து
தருவான சுரோணிதந்தான் சுழன்றெழுந்து
தேனான தேகம்போ லுருவதாகி
தெளிவான தமர்வாசல் திரண்டேமூடும்
மானான வாசலது களையாய்நின்று
வாசுவென்ற வாயுவது மூடும்பாரே. 16

பாரப்பா மண்டலம்போ லெழுந்துவோங்கி
பாங்கான வாயுவது மதிழ்போலாகி
வேரப்பா வேலியென்ற காவிதானும்
வில்வளைத்தாற் போலேயல்லோ சுத்திநிற்கும்
காரப்பா வளர்ந்தோங்கி வாயுதானும்
கருணையுடன் கார்க்குமப்பா விந்தில்நின்று
சேரப்பா விந்தினிட வுருவைப்பற்றி
சேர்ந்துநிற்கும் பிராணவாயுவு செயலைக்கேளே. 17

செயலான வபானமென்ற வாயுவைக்கேளு
சேர்ந்ததொரு பரவெளியில் தனியாய்நிற்கும்
வெயலான விந்துவுக்கு பிராணவாயு
விசிதமுடன் பிரியாம லுயிராய்நிற்கும்
கயலான கருவப்பா வுதானவாயு
கருவுக்குள் ளுருவமதாய் குருவாணின்று
வயலான வட்சரமா வங்கென்றேகி
வளர்க்குமது வுதானமது வகைசொன்னோமே. 18

வகையான துகையப்பா வியாதிமூன்று
வளர்ந்த சதாமேகம்போல் கருவிற்கேளு
தகையான கருவில்வந்து துடரும்பாரு
கருமமென்ற வியாதியப்பா கண்டுகொள்ளு
அகையான விந்துவுற்பவித்த நாள்கேள்
வஞ்சாநாள் கருவாகு மப்பால்கேளு
பகையான நாளப்பா பத்துநாளில்
பம்பரம்போல் சுழண்டதுவுந் திரளுங்காணே. 19

காணுகின்ற பதினைந்தாம் நாளிலேகேள்
கருநீல மென்றதொரு வண்டம்போலே
மூணுகின்ற வெழுந்தோங்கி முட்டைபோலாம்
மூர்க்கமென்ற திங்கள்முதல் கம்பமாகும்
வாணுகின்ற மூங்கில்முளை யெழும்புறாப்போல்
வானு சதாமண்டலம்போ லோங்கும்பாரு
ஏணுகின்ற திங்களிரண் டாகும்நாளில்
என்னசொல்வேன் கபாலமுடி யெழும்புந்தானே. 20

தானென்ற தலைமுதுகுகாணும்பாரு
தற்பரத்தின் கிருபையினால் தவறொன்றில்லை
மூனென்ற திங்களப்பா மூன்றுக்குள்ளே
மூர்க்கமாம் விரல்கைகால் தானேயாகும்
நானென்ற திங்களப்பா நாலுக்குள்ளே
நளினமுடன் பாதம்மூக்கு நவிலக்கேளும்
ஆனென்ற திங்களப்பா வஞ்சுக்குள்ளே
அரகரா நாவிசெவி கண்ணாகும்பாரே. 21

பாரடா புலத்தியனே திங்களாறில்
பருகி கண்களீராகும் பண்பாய்கேளு
மாரடா திங்க ளேழாகும்நாளில்
மைந்தனே மயிரெழும்பு நரம்புமாகும்
சாரடா சடலமொடு வுடலைக்கேளு
சலமலங்கள் தாதுவென்ற மூச்சுண்டாகும்
ஏரடா திங்களெட் டினிலேகேளு
யென்மகனே தாயுண்ட யிடங்காண்பாயே. 22

இடமான பூருவந்தான் சொல்லக்கேளு
யென்மகனே யிந்நூலி லுரையாய்சொன்னோம்
கடமான தாயுண்ட ரசமேசாரம்
கம்புமுளையது போலே கதுர்போலோங்கி
அடமான வாற்துபோ லருவிப்பாய்ந்து
அகண்டமென்ற கபாலத்தின் வழியேசென்று
சொடமான மென்றதொரு யிடந்தானேகி
சுத்தசலம் பிள்ளைக்கு சோடசந்தானாமே. 23

ஆமேதான் திங்க ளொன்பதிலேகேளு
ஆதி பராயத்திதி னிடவமைப்பினாலே
பாமேதான் பஞ்சதுவு மொன்றாய்த்தோன்றி
பராபரனைத் தியானித்துப் பாவந்தானும்
போமேதான் பூர்வமென்ற பேச்சுண்டாகி
பிறப்பித்தோன் றனைநினைந்து தவமேசெய்து
கோமேதான் குருபரனைத் தியனாஞ்செய்து
கும்பிட்டு வறுளெனக்கு கூறுவாயே. 24

கூறுகின்ற திங்களப்பா பத்துக்குள்ளே
குருவினிட வமைப்பதினால் கூறக்கேளு
பாறுகின்ற பார்வையது பரத்திநேர்மை
சேருகின்ற னபானனது பளிச்சென்றேகி
தேறுகின்ற கீழ்நோக்கி தள்ளும்பாரு
கிருபையென்ற பாலகனும் கிரிவிட்டேகி
ஊறுகின்ற பூமிதனி லுதைத்துதள்ளும்
உகாரம்விட்டு அகாரமதி லுற்பவித்ததாமே. 25

ஆமப்பா பூமிதனில் விழுந்தபின்பு
ஆதியென்ற பூருவம்போ யசதியாகி
போமப்பா முன்னறிவு நிலைவிட்டேகி
மூதண்ட திரோதாயி மாய்கைக்கப்பி
காமப்பா காவென்று வமுதுகொண்டு
கருவியென் றரைத்து மத்தின்பாசமாகி
மாமப்பா மதிமயங்கி மாயாசத்தி
மகத்தான கிரியாசத்தி மயக்கமாமே. 26

ஆமென்ற நல்வினை தீவினையுமாகி
அம்புசரந் தொடுத்தார்போல் பாவமாகி
வேமென்ற வியாதிவந்து கர்மமாகி
விசனமில்லாப் பாலனுக்கு விதங்கொண்டேகி
கோமென்ற குணந்தப்பி மனம்வேறாகி
கோர்வையாய் வியாதிவந்து சூழ்ந்தங்கேகி
சேமென்ற சுரையதுபோல் படர்ந்தங்கோடி
செணப்பொழுதி லுற்பவித்த செனனங்காணே. 27

காணுநீ புலத்தியனே சொல்லக்கேளு
கணக்காக சொல்லுகிறோம் தேகக்கூறு
தோணுநீ வுடல்கருவின் கூர்தானப்பா
தொண்ணூற்றா ரங்குலந்தான் தொகுதியாகும்
ஆணுநீ செடலத்தி - ஙங்குலந் தான்சொன்னோம்
ரவரவர்கை தன்னாலே யளந்துபாரும்
மேணுநீ மிரசமிரத்த மாங்கிஷமேதை
மேலான சதைமச்சை சுக்கிலந்தானேழே. 28

நேறாக நீகேளு புலத்தியனேயையா
நிகழ்ந்துகிறோ முருவென்ற சரீரமாகும்
ஊறாக வுருகருதான் சட்டையாகும்
உருவான சட்டையது ரசந்தானாகும்
சேறாக விதுமூன்றும் சேர்ந்துவோங்கி
செனனத்து கழுவாகி சேதமாகும்
வாறாக ரோகமதா யுற்பவித்து
வாதபித்த சிலேத்மனமாய் வணந்தவானே. 29

வானான செடலத்தின் வுடலைக்கேளு
வண்மையென்ற வாதமது முப்பத்திரண்டு
மானான வதினுடைய வாறைக்கேளு
மகத்தான கால்மட்டும் வளர்க்கும்பாரு
பேனான நீரப்பா பித்தக்கூறு
பேசுகிறோ முப்பத்தி மூன்றதாகும்
ஆனான வதின்கால மத்தியந்தான்
அப்பனே வளர்க்குமப்பா அடவதாமே. 30

அடவான சிலேத்துமந்தான் முப்பத்தேழு
அமர்ந்தமதி காலமட்டும் வளர்க்கும்பாரு
நுடவான சடலமப்பா நூறேயாண்டு
நூற்றுக்குள் ளுற்பவித்த வுண்மையாலே
அடவான கடலப்பா வுகாந்தகாலம்
வூர்க்கருவி வுறுதிபெற்று பிரிதிவிகண்டு
கடலான காயத்துக் கழிவில்லாமல்
கற்பூர தீபமதில் சோதிகாணே. 31

சோதியாம் பூதாதி யுரைக்கக்கேளு
சொல்லுகிறோ மென்மகனே துகையாகந்தான்
ஆதியாம் பூதாதி மைந்தாதாகும்
அறையுறோம் பொரியைந்து புலனைந்தாகும்
காதியாம் கர்மயிந்திரிய மைந்து
கருவான ஞானயிந்திரிய மைந்து
சோதியாம் திசையொன்று கரணம்நாலு
தெளிவாக சொல்லுகிறோ மறிவொன்றாமே. 32

ஒன்றாக பஞ்சறிவு மைந்ததாகும்
ஓகோகோ வைந்தறிவு மொன்றிற்சேரும்
நன்றான யறிவொன்றுக் கிரண்டுநாலு
ஆகதிசை யென்றதொரு பத்தாகும்பார்
பன்றான நாடியொன்றுக் கொன்றேவாயு
பாலகனே வாயுவது பத்தாகும்பார்
வொன்றான விஷையமென்ற தஞ்சதாகும்
விளங்குகிறோம் கோசமஞ்சு வாதாரமஞ்சே. 33

அஞ்சான மண்டலந்தான் மூணதாகும்
அறையுறோம் மலமூன்று தோஷமூணாம்
குஞ்சான யெட்சனைதான் மூன்றதாகும்
குணமூன்று வினைரண்டு ராகமெட்டாம்
கஞ்சான வவத்தையஞ் சிதுகைதானா
கருவி கரணாதிகள்தான் தொண்ணூற்றாராம்
வெஞ்சாக விரித்தப்பா வொவ்வொண்ணாக
விவரமுடன் காவியத்தில் விளங்குவோமே. 34

விளங்குகின்ற பூதமைந்தின் தொகுப்பைக்கேளு
விதமான பிரிதிவுதா னப்புதேயு
அளங்குகின்ற வாய்வதுவோ டாகாசமாகும்
ஆகதொகை வைம்பூத மைந்தாகும்பார்
புளங்குகின்ற பூதமைந்தின் தொகுப்பைச்சொன்னோம்
புகழான பொரியென்ற தஞ்சுங்கேளு
தொளங்குகின்ற தோத்திரந்தான் தொக்குசட்சு
சூட்சமென்ற சிங்கிவை யாக்கிராணமஞ்சே. 35

அஞ்சென்ற தோத்திரந்தான் செவிதானாகும்
அறையுறோம் தொக்கதுதா னுடல்தானாகும்
கஞ்சென்ற கசடதுதான் கண்தானாகும்
கண்மணியே சிங்குவைதான் நாவதாகும்
மஞ்சென்ற வாக்கிராண மூக்கதுதானாகும்
ஆகதொகை வைந்தாகு மைப்புலனைக்கேளு
பொஞ்சென்ற புலனைந்தின் கூறேசொல்வோம்
புலத்தியனே செவியுற்றுப் புகழ்ந்திடாயே. 36

புகழ்ந்திடாய் சத்தமென்ற பரிசரூபம்
புகழான ரசமென்ற கெந்தமாகும்
மகிழ்ந்திடாய் மேகசத்தம் கேழ்வியாகு
மகத்தான செவியினிட மாற்கமாகும்
செகழ்ந்திடாய் செகபரிச துக்கமறிதல்
தேசத்தின் கூறினிட தெளிவுமாகும்
ககழ்ந்திடாய் கண்சருபமாவதுதான் கேளு
காட்சியெல்லாம் தன்கூறால் காணலாமே. 37

ஆகுமே வதன்கூர்மை கண்ணதாகும்
அறியலா மறுசுவையாற் சந்தானாகும்
நாகுமே நாவதுதா னதின்கூறாகும்
நற்கெந்தம் துற்கந்த மிடவலமேயாகும்
மூகுமே மூக்கின்கூர் மூலமாகு
முறையிற னோடாக தொகைவஞ்சாகும்பார்
போகுமே பொரியஞ்சின் கூரைச்சொன்னோம்
புகழான கற்மயிந்திரியங் கேளே. 38

கேளப்பா புலத்தியனே யின்னங்கேளு
கிருபையுடன் சொல்லுகிறோம் கேட்டிடாய்நீ
காளப்பா கர்மயிந்திரிய மைந்து
கணக்காகச் சொல்லுகிறோம் கண்டிடாய்நீ
வாளப்பா வாக்கதுதான் பாதம்பாணி
வகையான பாயுறுதான் னுபஸ்தங்கேளு
வேளப்பா விரித்துநன்றா யொவ்வொண்ணாக
விளங்குகிறோம் விவரமதாய் விதமாய்காணே. 39

காணுகின்ற வாக்கதுதான் வாய்தானாகும்
கண்மணியே பாதமது கால்தானாகும்
பாணுகின்ற பாணியப்பா கைதானாகும்
பாயுறுதா னபாநனென்று பகருவோம்யாம்
ஊணுகின்ற வுபஸ்தமதி லிங்கமாகும்
உபருகின்ற கர்மயிந்திரிய மைந்தாம்
காணுகின்ற கர்மயிந்திரியஞ் சொன்னோம்
ஞானயிந்திரிய மதைநவிலக் கேளே. 40

கேளடா ஞானயிந்திரிய மைந்து
கிருபையுடன் சொல்லுகிறோம் கேளுமைந்தா
வேளடா வசனமென்ற கெவனதானம்
விதமான விசற்கரண மிதுவோடைஞ்சாம்
ஏளடா யிதுவைந்தும் ஞானயிந்திரியம்
இயம்புகிறோம் நன்றாக வொவ்வொன்றாய்க்கேள்
வாளடா வாக்கதின்கூர் வசனிப்பாகும்
வளமான பாதந்தா னடைத்தலாமே. 41

ஆமப்பா பாணியென்ற கையாகும்பார்
அப்பனே வழங்கிவிக்கு மதுவாகும்பார்
பாமப்பா யுருத்தான வவத்தைதள்ளும்
பரிவான வுபஸ்த மூத்திரங்கொண்டுாத்தும்
சோமப்பா சுத்தமதாய் சுபஸ்தமாக்கும்
சூட்சமென்ற ஞானயிந்திரிய மைந்தாம்
நாமப்பா ஞானயிந்திரியம் சொன்னோம்
நளினமதாய் கரணமதை நவிலுவோமே. 42

ஓமென்ற கரணமதை நவிலக்கேளு
ஓகோகோ நாவது வாகுமப்பா
ஆமென்ற மனம்புத்தி ஆங்காரம்சித்தம்
மாகயிது நாலினிட வடவைகேளு
மாமென்ற மதியினிட கூரைக்கேளு
மனமான தொன்றைதானினைக்கும்வோராம்
தாமென்ற புந்தியது தனைவிசாரிக்கும்
தருவான வாங்காரங் கொண்டெழும்புங்காணே. 43

காணப்பா சித்தமது கனிந்துநின்று
கருதியே முடிப்பிக்குங் கல்விபேசும்
ஆணப்பா கரணமது நாலதாச்சு
அந்தகரண மென்றிதுக்கு பேருண்டாச்சு
மாணப்பா வந்தகரணம் நாலுஞ்சொன்னோம்
மதியென்ற மறிவினிட மாண்மைகேளும்
ஏணப்பா யிந்தபடி யிந்நூல்சொன்னோ
மெழிலான பன்னீராயிரத்தி லியம்பினோமோ. 44

ஆத்துமதத்துவ முப்பது

இயம்பினதோ ரென்னவெனில் சொல்லக்கேளு
இன்பதுன்ப விசாரணையை யென்னகூர்வேன்
முயம்பினதோர் முப்புரத்தை வென்றகர்த்தன்
வுரைத்தபடி யான்கண்டு முமக்குசொன்னோம்
அயம்பினதோ ரறிவொன்றின் விசாரணையைக்கேளு
அண்டமென்ற சகலத்தை யறிவார்பாரு
மயம்பினதோர் கண்டமதாய் குருவதாக்கி
மகத்தான தத்துவங்க ளாக்கும்பாரே. 45

பாரேநீ பலகோடி தீவினையுமாகி
பகர்ந்தநல்ல வினையாகி பாவமாகி
ஆரேநீ யாண்பெண்ணாய் பெண்ணாணாகி
அஷ்டநவ பிரபஞ்ச வரவமாகி
நேரேநீ ராதார நிர்மலமுமாகி
நிற்குணத்தின் சிவனாகி சீவனாகி
சேரேநீ சோதியொளி சுடரொளியுமாகி
சுடர்கதிரின் முனைநுனிபோல் தோன்றாதாமே. 46

தானான தத்துவந்தான் முப்பதாகும்
திருவான தத்துவ மாத்துவமேயாகும்
ஆனான வாத்துமந்தான் யறிவேயாகும்
அறிவுமதி புத்தியொன்றி லடக்கமாகும்
மானான மதியறிவே மயக்கமாகும்
மயக்கமென்ற மாய்கையது மயமேயாகும்
ஏனான யிக்கூறை நன்றாய்ச்சொன்னோம்
என்மகனே நாடிதிசை பத்துங்கேளே. 47

வாதகுணம்

பத்தான யிடைகலை பிங்கலையுமாகும்
பகருகின்ற சுழிமுனைதான் பருவமாகும்
அத்தான யத்திசிங்குவை தான்கேளு
வரையுரோ மயிர்ந்த வலம்புருடனாகும்
குத்தான குகுதன் சங்கினியுமாகும்
கூறுகிறோம் வயிரவன்றான் குறிப்பாய்கேளு
சித்தான திசைநாடி பத்துங்கூடி
திரிமூன்று நாடியிலே வொடுங்கும்பாரே. 48

பாரப்பா யிடையதுதான் பிங்களைதான்மைந்தா
பகர்ந்தசுழி முனையதுதான் பண்பாய்க்கேளு
வாரப்பா யிதுமூன்று மோடிப்பாய்ந்து
வாதத்தி லொடுங்குமென்று வசனித்தோம்யாம்
மாரப்பா யிதன்கூறின் குணத்தைக்கேளு
மந்தமென்ற குலுத்தி மலங்கட்டும்பாரு
ஆரப்பா வாதத்தின் கூறதாகும்
அப்பனே அறையுறேன் அடவுகேளே. 49

பித்தகுணம்

அடவுகேள் பித்தமென்ற குணந்தான் சொல்வோம்
அறையுறோ மென்மகனே யசடில்லாமல்
மடவுகேள் காந்தாரியத்தி சிங்குவைதான்
னலம்புருட னிவைகளிட மாற்கங்கேளு
நடவுகே ளிதுநாலும் பித்தத்தின்கூறு
நாம்சொல்வோ மதின்குணங்கள் நன்றாய்மைந்தா
ஒடவுகேள் ஊஷணிந்தான் மிகுதியாகும்
உசிதமென்ற மோகமதை உண்டாக்கும்பாரே. 50

பாரடா முழலையென்ற மூலங்கப்பி
பகருகின்ற வாய்வெழும்பி மேலேநோக்கும்
நாரடா நாடியது படபடவென்றோங்கி
நாபியதை தூஷணித்து நாசமாக்கும்
காரடா பயமென்ற கோபமாகி
காலாக்கினியின் சுடர்போல கருதும்பாரு
ஆரடா பித்தமென்ற குணங்கள்சொன்னோம்
மறையுறோம் சிலேற்பனத்தி னடவைக்கேளே. 51

சிலேட்டுமக்கூறு

கேளடா சிலேத்துமத்தின் கூறைநாமும்
கிருபையதாய் சொல்லுகிறோம் கேளுமைந்தா
கோளடா குரோதனென்ற சங்கினிதான்கேளு
கூறுகிறோம் பயிரவன்றான் குறிப்பாய்நாமும்
சேளடா யிவர்மூன்று பேருங்கூட்டி
சிலேட்டுமத்தி லடங்குமென்று செப்பினோம்யாம்
ஏளடா யிதின்குணங்கள் சொல்லக்கேளு
இயம்புகிறோம் நன்றாக யின்னங்கேளே. 52

இன்னங்கேள் வாயுதனிலே யனல்கொண்டேகி
யென்மகனே பரித்திடுங்காண் வாறுகேளு
மன்னங்கேள் மலர்க்கனந்தான் குழிந்திருக்கு
மலர்முகமும் வேர்த்ததுதான் வேர்வைதட்டும்
சொன்னங்கள் நெஞ்சடைக்கும் செவிகேளாது
திசைகலங்கி கிறுகிறென்று சேட்டுமங்கட்டும்
முன்னங்கள் மூக்காலே தண்ணீர்வூத்தும்
வுடல்தடித்து சடலமூதி விக்குந்தானே. 53

சிலேத்துமக்கட்டு

தானான விக்கலது தருகாதப்பா
 தன்மதிதான் றனக்கு தெரியாதுபாரு
வானான விதின்குணங்கள் வளப்பமாகும்
 வயித்தியன்தான் செய்வதற்கு வருமையாகும்
ஏனான யிடையது பிங்கலைதானாகும்
 ரெண்டுமது கூடிநண்ணாய் குய்யத்தேகும்
மானான மடிமூலத் துருவாய்நின்று
 மறுவனையை தான்பற்றி மலருங்காணே. 54

பிராணவாயு கூறு

காணடா மல்ரூபமாய் கீறிமாறி
 கருவான சுழிமுனையில் நெட்டிட்டேறும்
தோணடா திருவனைக்காலது போல்பாய்ந்து
 சிரசில்நின்று மூடியே யெகிரும்பாரு
மூணடா மூக்கதுவி னடுவிலோங்கு
 முனைபுருவம் நெற்றிதனில் முடிவில்பாய்ந்து
மேணடா மூண்டுவது திரும்பிச்சென்று
 மேலான மூலமதி லேகும்பாரே. 55

ஏகுமப்பா காந்தாரி யென்றநாடி
 இருக்குமப்பா நாபிதனி லதினிடமேயாகி
நாகுமே நாபினின்ற வுயிரைப்பற்றி
 நரம்பென்ற பெரும்நரம்போ டேகும்பாரு
சேருமே ரூபமதா யுருவாய்நின்று
 தேகத்தின் மேலொட்டி சிரசில்நின்று
சாகுமே கண்டமதி லொட்டிநிற்கும்
 சனிந்தெழும்பி குமிடியிலே செமந்துபோமே. 56

போமென் றுயத்தி சிங்குவைதானிரண்டு
 புலம்பியே மூலத்தி லட்டிநிற்கும்
சாமென்ற கபாலத்தில் மேலேயேறி
 தகர்ந்துனின்ற விரண்டுசெவி தனிலேபாய்ந்து
நாமென்ற நரம்பெலா மொன்றாய்கூடி
 நளினமதாய் கலந்தோடி நயந்தேயேகி
காமென்ற மிரண்டுகன்ன மிடத்தில்நிற்கும்
 கண்மணியே சங்கினியும் குகுதனாமே. 57

பிராணவாயுக்கட்டு

நாமேதா னாடியிருப்பிடத்தி லேகி
நலமான தத்துவத்தில் நின்றுநவிலதாகும்
வாமேதான் வாதபித்த சிலேத்துமத்தின்
வகையெல்லாம் சொன்னோமப்பா வரிசையாக
மூமேதான் மூன்றினிட கூறைச்சொன்னோம்
மூர்க்கமதா யின்னமொரு சேதிகேளு
மாமேதான் பித்தகுண மேதென்றாக்கால்
வாயுவிட மூலமதை மாட்டக்கேளே. 58

பிராணவாயு

மாட்டுகிறோம் பிராணவாயு விபரங்கேளு
மறையாம லுரையாக முறையாய்ச்சொல்வோம்
பேட்டுகிறோம் குருவுருவாய் சொல்வோமைந்தா
பிராணனென்ற வபானனப்பா வியமன்றானும்
சாட்டுகிறோ முதானனென்ற சமானநாகன்
தருவான கூர்மனப்பா திரிகரந்தான்
தேட்டுகிறோம் தேவதத்துவந் தானென்ற
செயலான தனஞ்செயனாம் தெளிந்தவானே. 59

மேலெழுத்தின் விபரம்

வானான விதின்விபரம் சொல்லக்கேளு
வளமான பிராணவாயு யிதுதானப்பா
பேனான பெருமூலாதாரத்தில் நின்று
பேணியே துடங்கியது பிர்மமாகும்
மானான மவையென்று மொருமையாக
மந்திர பஞ்சாட்சரம்போல் மலர்ந்துவோங்கி
மூனான வோங்கார மென்றேயோது
முன்போல வொடுங்குமப்பா முணந்தோம்நாமே. 60
நாமென்ற மேலெழுத்தின் விபரங்கேளு
நளினமதாய் சொல்லினோம் நன்மையாய்தான்
பானென்ற வங்கலந்தான் பனிரண்டிலோடி
பரந்துமே யெட்டங்குலம் தன்னிற்பாயும்
வாமென்ற மங்கலம்நால் பாழிற்போகும்
மற்றகுண மென்றதொரு பிராணவாயு
ஆமென்ற நீலவர்ணன் தேவதைதான்சந்திரன்
அடிக்கடிக்குள் பொசித்ததெல்லாம் சீரணந்தானாமே.61

சுவாசக்கூறு

ஆமேதா னங்குலத்தின் விபரஞ்சொன்னோம்
அறைகின்றேன் சுவாசத்தி னடவேகேளு
மூமேதா னாழியொன்றீன சுவாசங்கேளு
முந்நூற்றி யறுபதான சுவாசமாகும்
நாமேதான் நாளொன்றின் சுவாசமப்பா
நவிலுகிறேன் மாணாக்களறிய வேண்டி
தாமேதான் பதினாயிரத் தொண்ணூராகும்
தகமையுடன் சுவாசத்தி னியல்புகாணே. 62

அகத்தியர் பெருமை கூறல்

இயல்பான விந்நூல்போ லாயுறுவேத
மெடுத்துரைத்தார் தன்வந்திரி பகவான்தானும்
செயலான சிந்தாமணி யென்னும்நூலாம்
செப்பினார் தன்வந்திரி பகவானப்பா
பயலான பன்னிரண்டு காண்டஞ்சொன்னேன்
பாலகனே வாயிரத்திற் கொடுகாண்டந்தான்
மயலான காண்டம் பன்னீராயிரத்தை
மகாநுட்ப பெருநூலாய் சொன்னோம்பாரே. 63

ஆயுள் வேதமாகிய சிந்தாமணி இதற்கு எதிர் நூல் கோர்வை

சொன்னோமே யிந்நூலுக் குற்றகோர்வை
சொற்பெரிய காவியமாயிரந் தானிந்தநூல்
என்னோமே யிதற்கடுத்த கோர்வைநூலாம்
யெடுத்துரைத்தோ மந்நூறு யசுவகாண்டம்
முன்னோமே முந்நூறு சதுர்காண்டஞ்சொன்னோ
முரைத்தோமே யிருநூறு பற்பகாண்டம்
ஒன்னோமே ஒருநூறு ஞானகாண்டம்
ஒடுக்கமெலா மிந்நூலி லுரைத்தோனாமே. 64

காவியக் கோர்வை

உரைத்தோமே யன்பதுதா வைகாண்டந்தான்
முணர்ந்தோமே முப்பதுக்குள் ளஷ்டயோகம்
பரைந்தோமே பதினாறில் சூட்சம்சொன்னோம்
பாடினோம் பஞ்சபூத மைந்தில்சொல்வோம்
கரைத்தோமே கருவியது மூன்றில்சொன்னோம்
கண்டோமே யெட்டதிலே பிண்டவாழ்வை

இரைந்தோமே யிந்நூலி லாகக்கோர்வை
ரண்டாயிரத்து யிருநூற்றி வைந்ததாமே. 65

இந்நூலில் சகலத்திற்கு முதற்பீடம்

ஆமேதா னகத்தினென்று பேருண்டாச்சு
இந்நாயிரத்தைப் பாடினபின் ஸரைஞ்சொன்னார்பார்
நாமேதான் வயதஞ்சி லிந்நூல்சொன்னோம்
மகத்தான காவியந்தான் காண்டம்பத்து
ஏமேதா னிதன்பிறகு பொதிகைசேர்ந்து
யெடுத்துரைத்தோம் மூன்றுலட்ச முடிவிலாச்சு
கோமேதான் சூத்திரத்தில் கோடாகோடி
கூறினதோர் நூற்கலெல்லா மிதற்கொவ்வாதே. 66

ஒவ்வாத காவியந்தா னிந்நூலாகி
ஓகோகோ முதல்மொழியாம் காவியமாமிந்நூல்
மவ்வாத மவுனிகள்தான் யோகஞானி
மகத்தான சித்தரென்ற முனிவர்தாமும்
நவ்வாத ரிடிகளென்ற சன்னாசியோகர்
நலமான தபோதனர்கள் பரதேசநேசர்
அவ்வாத வனவோரு மிந்நூலிற்றோ
தோராயிரத்தின் கருக்காணா ராருந்தானே. 67

பஞ்சகாவியப் பெருமை

தானான விந்நூல்தான் முதநூலாகி
தாக்கான ஞானகாவியந் தானாப்பா
தேனான விரண்டாம் நூலென்னலாகும்
தெளிவான புலத்தியரே செப்பக்கேண்மோ
மானான பூரண காவியந்தானப்பா
மகத்தான மூணாங் காவியந்தானாகும்
பானான யிலட்சண காவியந்தானப்பா
பாலகனே நாலாங் காவியந்தானாமே. 68

ஆமேதான் மாந்திரிய காவியந்தானப்பா
வப்பனே வைந்தாங் காவியந்தானாகும்
போமேதான் புலத்தியனே சொல்லக்கேளு
பொலிவான யிந்நூலின் முறையைக்கேளு
மாமேதான் பொதிகைமலை சேர்ந்தகால
மகத்தான துவாபுரிய னுகத்திலப்பா

மூமேதா முடிந்தயுகம் குகையில்மாற்கம்
முந்நூறு கோடியோகம் யேகும்சித்தே. 69

அகத்தியர் வரலாறு

ஏகினதோ ரென்னவெனில் சொல்லக்கேளு
ஏகவுப தானென்ற சதாசிவந்தானப்பா
சாகினிதோ ரென்னவெனில் மைந்தாகேளு
சதாசிவந் தானென்று சிவன்சபித்தாரை
ஆகியதோ ரதுவேது வென்னிற்கேளு
ஆதிசிவன் பிரமனுக்கு தர்க்கம்வந்து
ஊகியதோ ரெனையழைத்து பிரமதேவ
னுபதேசம் தந்தெனக்கு உருசொன்னாரே. 70

உருவான யண்டரண்ட பகிரண்டத்திற்கும்
ஓகோகோ புவனமென்ற சாகரத்திற்கும்
அருவாக வட்டநவ திசைகளுக்கும்
அகமகத்தும் பிர்மமென்று வபிஷேகித்து
பருவாக பட்டமதை யீய்ந்தாரையா
பவனமெல்லா மொருநொடிக் குள்ளேயாச்சு
மருவாக மதினாலே சதாசிவந்தா
னகத்தியர்மேல் கோபித்து செபித்தார்பாரே. 71

செபித்தாரே சிவன்தானும் புலத்தியாகேள்
சிவனென்ற சதாசிவனை வணங்கிநாமும்
எபித்தாரே விமோசனந்தா னெப்போவென்றேன்
எந்தனுக்கு வவர்சொன்னா ரியம்பக்கேளு
கவித்தாரே கலியுகம்போய் மறுயுகத்தில்
கண்மணியே திரேதாயுகம் வரும்போதப்பா
அபித்தாரே வகத்தியரிருப்பிட மெங்கென்றேன்
அருளினார் தென்பொதிகை யமர்ந்தார்பாரே. 72

சிவசாபம் திரேதாயுகத்தில் நிவர்த்தி

பாரப்பா யென்னுடைய சீடாள்நாமும்
பாலகனே பொதிகைவந்து சேர்ந்தோம்பாரு
ஆரப்பா ஆதிசிவன் சாபத்தாலே
அடைந்தோமே பொதிகைதனி லப்பாகேளு
நாரப்பா நாம்சொன்னோ முண்மையாக
நளினமதாய் நீகேளு நன்மைவானே

வாரப்பா யிந்தவிதம் சொன்னோம்நாமே
வாயுநின்ற சுவாசத்தின் சொச்சங்கேளே. 73

பொதிகை சேர்ந்தவிபரம் சுவாசம் யெழும்புதல்

கேளப்பா நாளொன்றுக் கெழும்புஞ்சுவாசம்
கிருபையதாய் சொல்லுகிறோம் கேளுமைந்தா
ஏளப்பா யிருபத்தோராயிரத்து வறுநூறுசுவாசம்
யெழுந்திருக்கு மென்மகனே யியம்பக்கேளு
பாளப்பா பதினாயிரத்து நாநூறுசுவாசம்
பகர்ந்த முதலாதாரத்தி லொடுங்கும்பாரு
நாளப்பா யேழாயிரத்து யிருநூறுசுவாச
யென்மகனே பாழற்போ மென்றியம்பினேனே. 74

இயம்பினதோ ரிதனையே கும்பித்தாக்கால்
யேகவுப சதாசிவன்போ லிருக்கலாம்பார்
எயம்பினதோ ரிதனைதான் தம்பித்தாக்கா
லெப்போதும் பாலகரா யிருந்துவாழ்வார்
அயம்பினதோ ராத்துமத்தின் சுவாசந்தன்னை
அக்கமுதல் கண்டமதில் வருளிநோம்யாம்
பயம்பினதோர் சுவாசத்தி னொடுக்கஞ்சொன்னேன்
பாலகரே பிராணவாயு சொச்சங்காணே. 75

அபானவாயுவின்கூறு

காணவெனி லின்னமொன்று சொல்வேன்கேளு
கண்மணியே யபானத்தின் கருவேனாமும்
கூணவெனில் சொல்லுவோம் சுவாதிஷ்டானம்
கூர்ந்துநின்ற யுற்பத்தி யாகுமப்பா
மாணவெனி லிவ்விபரம் நலமாய்சொல்வோம்
மைந்தனே கீழ்நோக்கும் சலத்தைதள்ளும்
ஆணவென்றால் யதினிறந்தான் பச்சையாகும்
அசனத்தை சுருக்குமப்பா அரிவாய்த்தானே. 76

அரிவான வன்னமதை செறும்பும்பாரு
அதிசார மென்றதுவை யடக்குமப்பா
தெரிவான தேவதைத்தான் வரதுராசன்
தெளிந்தவனாம் வியாகனப்பா சிவனாம்பாரு
தரிவான வியானனப்பா தொப்புளிலே நின்று
தகுத்தெழுபத் தீராயிரம் நாடிதனிலோடி

சரிவான சர்வசங்கந் தன்னில்நின்று
தான்முடக்கல் பரிசனங்கள் தபறுண்டாமே. 77

வியானன்கூறு

ஆமேதா நன்னறச் சாரமப்பா
அங்கங்கே மதுவிறுக்கு மாய்கைகண்டு
மாமேதா நெற்ச்சித்து மதுவாலோங்கி
மறுபடியும் கனகமென் றபானம்பாய்ந்து
பாமேதான் வியானனுட வயணங்கேளு
பசும்பாலி நிறமதுவாய் பகருங்காலே
தேமேதான் திசையெட்டு புவனத்திற்கு
தேவந்தா நெமனென்ற திவனாம்பாரே. 78

பாரேநீ யுதானனென்ற கூரைக்கேளு
பகருகின்ற வுதானனப்பா பாய்ந்துயோங்கி
ஆரேநீ யக்கினியை மிகுதியாக்கி
அனைரச சாரத்தை யதனமாக்கும்
சாரேநீ சமீபத்துச் சார்பாய்நின்று
சமர்த்தாக நிறுத்தியே யெழும்பும்பாரு
காரேநீ கலக்கியே வகுத்தம்பாரு
கண்மணியே யிதனுடைய கூரதாமே. 79

கூரான வுதானனுக்கு யுயிரைக்கேளு
கூர்மையென்ற வக்கினிதான் தெய்வமாகும்
ஆரான விதின்கூரை நன்றாய்ச்சொன்னோம்
அறைகின்றேன் சமானனென்ற வாண்மைகேளு
காரான மடிநாபி பாதமட்டும்
காக்கமதாய் சமன்கொண்டே யேகும்பாரு
வாரான வாய்வென்ற மதுவேயெல்லாம்
மார்க்கமாய் மடக்கி சமன்மருவுங்காணே. 80

காணுகின்ற வறுசுவையை யடக்கமப்பா
கனிந்த தண்ணீர் அன்னமதை சமனாய்ச் செய்யும்
சாணுகின்ற சீரமெல்லாம் சார்வாய்னின்ற
சாதுரிய மபானனப்பா சார்பாய்கேளு
வாணுகின்ற வதின்வரணம் புட்பராகம்
மகத்தான தெய்வமாதித்தன் சொல்வோம்
ஏணுகின்ற விதன்கூரை நன்றாய்ச்சொல்வோ
மியல்பான நாகனென்ற கூறைக்கேளே. 81

கேளப்பா நாகனென்ற கூரைச்சொல்வோம்
கிருபையென்ற சகலகலை யுண்டாக்கும்பார்
பாளப்பா பாடியது கண்ணுமுக்கு
பாலகனே கண்சிமிட்டல் ரோமமெல்லாம்
ஆளப்பா அசையுமது நடக்கும்பாரு
அதினுடைய வரணந்தான் பொன்போல்காணும்
தேளப்பா வதுக்கு தெய்வமனந்தனாகும்
தெளிவான கூர்மனிட குணத்தைக்காணே. 82

காணுகின்ற கூர்மனிட கூரைக்கேளு
கடியமனந்தனில் நின்று சிங்குவாகும்
நேணுகின்ற திமைகொட்டு மனம்பதைக்கும்
நேராக விழிசிமிட்டும் நடைவோட்டம்பார்
தேணுகின்ற கொட்டாவி கொள்ளுமப்பா
தேறினதோர் மனமதுவும் கூச்சலாகும்
ஆணுகின்ற யதரமது யசையும்பாரு
அடங்காத வாண்மைதகு மடவாய்பாரே. 83

பாரப்பா வாய்மூடும் பசியுண்டாக்கும்
பசியென்ற பிலனுண்டாம் பகர்ந்தோம்நாமும்
காரப்பா நிமைக்கொட்டும் கண்முழிக்கும்
கண்ணென்ற விழியதுவை மூடப்பண்ணும்
தாரப்பா தறுக்காத வாண்மையாக்கும்
தரிவான காட்சியெல்லாம் காண்பிக்கும்பார்
வேரப்பா விமைகொட்டும் விழிநீரோடும்
விதனுடைய வரணமது வெளுப்பதாமே. 84

வியானன் கூறு

வெளுப்பான தெய்வந்தான் விட்டுணுவாகும்
விதனுடைய கூரெல்லாம் விளம்பினோம்யாம்
கொளுப்பான விட்டுணுவுடைய கூறைச்சொன்னோம்
கிறுகிறுத்தன் கூரைநன்றாய் கருத்தில்மைந்தா
நளுப்பான நாசிதனில் சலந்தானோடும்
நாவுதனில் கசிவாகும் நடைகொடாது
களுப்பான கடும்பசிதான் வெகுசாய்நோக்கும்
கறுமமென்ற கன்னியைத்தான் புணர்ச்சலாமே. 85

ஆமென்ற போகமது மிகுதிகாணும்
அடங்காத தும்மல் மிகுமீளைகாணும்
தேமென்ற யிதனுடைய வரணங்கேளு
தேகமெல்லாம் கறுத்திறுகும் தேம்பல்போலே
சேமென்ற யிதற்குவுயிர் தெய்வங்கேளு
சிவனென்ற வரனப்ப தெளிவாய்சொன்னோம்
சோமென்ற திரேதாயின் கூறதாகும்
சொல்லுகிறேன் தேவதத்தன் கூறைக்கேளே. 86

கேளேநீ தேவதத்தன் கூறைக்கேளு
கிருபையதாய் சோம்புமுறி யதிகமதாயாகும்
மூளேநீ கண்முழிக்கும் நிமைப்போதப்பா
முகிழிதமாய் தைரியங்கொண் டெழும்பும்பாரு
ஊளேதான் கண்தனையே விழித்துப்பார்க்கும்
ஓடியே யுலாவியது குலாவிப்பேசும்
சாளேநீ சண்டைகொள்ளு மிடும்புபேசும்
தர்க்கமதை பண்ணிவைத்துச் சாடுந்தானே. 87

சாடுகின்ற கோபத்தை யுண்டுபண்ணும்
சண்டாள ரோகமதை செய்யலாகும்
கூடுகின்ற குய்யமதின் மூலந்தன்னில்
கூர்ந்திருக்கு மிதுக்குவுயிர் தெய்வங்கேளு
தேடுகின்ற தேவனப்பா தேவேந்திரன் றானாகும்
தெளிவாக நாம்சொன்னோம் தேகவுபசாரங்கள்
பாடுகின்ற கூரதுதான் படிகவர்ணம்
பாலகனே தனஞ்செயனை பகரக்கேளு. 88

பகரக்கேள் தனஞ்செயன்கூர் சொல்வோமைந்தா
பாடினார் தன்வந்திரி யிந்நூல்போலே
உகரக்கேள் வுடற்கூறு நன்றாய்ச்சொன்னார்
ஓகோகோ தத்துவந்தான் தொண்ணூத்தாறும்
அகரக்கே ளப்படியும் மறைத்தாரையா
அந்நூலுக் கின்னூலைப் பார்க்கவேண்டும்
பெகரக்கேள் பிண்டமென்ற சடலக்கூறை
பேசினோம் காவியத்தில் சாத்தினோமே. 89

சாத்தக்கேள் தனஞ்சயனை சொல்வோமைந்தா
சரமென்ற மூக்கடைக்கும் தடிக்கும்பாரு
ஊத்தக்கேள் வுடம்பெல்லாம் வீக்கங்காணும்
வுதித்தசலம் சமுத்திரம்போல் குளிர்ச்சியாகும்
சேத்தக்கேள் சிரசென்ற கபாலந்தன்னில்
திரண்டுமது துஞ்சிவிடுந் தீபம்போலாம்
கோத்துக்கேள் கோசமென்ற பீசத்தேகி
கூட்டமிட்டு வாயுவெல்லாங் குதிக்குந்தானே. 90

தானான சதாகால மறியாமல்நின்ற
தருவான வாயுவெல்லா மடித்தங்கேகி
ஆனான சடலம்விட்டு அப்பால்போகும்
ஆதியென்ற வாயுவிட போனபின்பு
மானான மரணமது துடரும்பாரு
மாண்டபின்பு தலைவெடிக்கு மைந்தாசொன்னோம்
மூனான நாளப்பா மூன்றாம்நாளில்
முடியென்ற சிரசுவெடித் தப்பால்போமே. 91

விசையம் நாபின்கூர்

போமென்ற வதன்கூறு வரணங்கேளு
புகலுகிறேன் வரியெலை நீலம்போலாம்
ஆமென்ற வதற்குயிரின் தெய்வங்கேளு
அறையுறேன் தன்வந்திரி தனஞ்செயனேயாகும்
மாமென்ற வாகதொகை பத்ததாகும்
மாத்தியென்ற வாயுவப்பா வதுவேயாகும்
வேமென்ற விதின்கூறை நன்றாய்ச்சொன்னோம்
விளம்புகிறோம் விசையமஞ்சின் விபரங்கேளே. 92

கேளப்பா விசையமஞ்சின் கூரைச்சொல்வோம்
கேள்மகனே புலத்தியனே கிருபைகூர்ந்து
வாளப்பா மாவசியம் புருவசியத்தோடு
மகத்தான மகத்தான மல்வசியம் சவ்வசியமாகும்
சோளப்பா சுக்கிலத்தோ டஞ்சாகும்பார்
சொல்லுகிறோ மிதின்கூறை சூட்சமாக
மாளப்பா அன்னமென்ற அன்னந்தண்ணீர்
மதினுடைய யிடமறிந்து மாட்டுறேனே. 93

மாட்டுகிறோம் பருவசிய மதின்கூர்கேளு
மன்னவனே சலமதுவும் நன்றாக்கூட்டி
பேட்டுகிறோ மிரண்டுமொன்றா யிருக்குமாகில்
பிரிந்து தப்பாமல் வசியம் பேணிப்பாரு
பூட்டுசிறோம் பொசித்தவன்னம் சலந்தானெல்லாம்
புகழாக மலமாக்கும் புதுமைபாரு
சாட்டுசிறோ மெலிப்புழுக்கை மதுபோல்தள்ளும்
சலவசைய மதின்வண்ணம் சாற்றக்கேளே. 94

கேளடா சவ்வசிய முண்டநீரன்னம்
கிருபையுட னதுவிருக்கும் தடாகத்தின்கீழ்
சாளடா சலவசிய மதுவேயாகும்
தடாகமென்ற சலப்பையு மதுவேயாகும்
சோளடா சுக்கிலத்தின் விசையங்கேளு
சொல்லுகிறோ மொடுங்கியது நிர்க்குமாகில்
ஆளடா சுக்கிலப்பை தடாகத்தின்மேல்
அங்கலத்தின் பிரமாண மடங்கும்பாரே. 95

கோசம் நாவின் வளமை

பாரேநீ விசையமைந்தின் வளமைச்சொன்னோம்
பகருகின்றேன் காவியத்தில் கோசமஞ்சும்
ஆரேநீ யன்னமய மாவதென்னில்
அருவான பிராணமய மனத்தோடொக்கி
வேரேநீ விக்கியான மயந்தானப்பா
விளங்கியதோ ரானந்த மயத்தோடைந்து
சேரேநீ கோசமைந்தின் தொகுப்பைகேளு
சொன்னோமே யொவ்வொன்றாய்க் குறிப்பாய்த்தானே.

தானென்ற கோசமது மெய்வாய்க்கண்ணு
தாக்கான மூக்கோடு செவிதானாகும்
மானென்ற வைம்பொறியி னிதுவோடைஞ்சு
மகத்தான பிரிதிவியின் வண்மைதன்னாலே
ஆனென்ற கோசமய மவனமாகில்
அதில்வந்து அப்புவது அணைத்தாலப்பா
வேனென்ற வூனதுதான் விளங்குமாகில்
விதிஉதித்த பிராணமய கோசமாமே. 97

ஆமேதா னதிலுதித்த தேய்வின்வண்ணம்
அதினுடைய வண்ணமதி லறிவுண்டாகும்
மாமேதான் மதியென்ற புத்தியுண்டாம்
மனமென்ற பலபுத்தி நினைக்காதப்பா
வாமேதான் கோசமனோ மயந்தான்கேளு
வாயுவதி லுடன்சேர்ந்தால் விகாரத்தாலே
பாமேதான் மதிமயங்கி பயித்தியம்போலாம்
பாடினோம் கோசமய மெய்ஞ்ஞானப்பேரே. 98

பேரான மதுவுடனே யாகாசம் சேர்ந்தால்
பிரிதிவியோ டஞ்சாகும் பிராணவாயு
ஆரான யானந்த மயத்தோடைஞ்சு
ஆகதொகை கோசமைந்து மருளினோம்பார்
மாரான கோசமைந்தி லெடுத்தவண்ணம்
மாட்டினோம் புலத்தியனே மகிழ்ந்துபாரு
ஏரான விதன்வண்ணம் நன்றாய்ச்சொன்னோம்
யெடுத்துரைப்போம் ஆதார மாறுங்கேளே. 99

ஆதாரம்

கேளப்பா மூலாதாரம் சுவாதிஷ்டானம்
கெடியான பூரகந்தா னனாகத்தோடாகும்
வேளப்பா விசுத்தி யாக்கினையாதாரம்
விரிவில்லாப் பொருளப்பா விதின்மூலங்கேள்
ஆளப்பா யாதார மடுக்காய்சொன்னோம்
அரையுகிறோம் அதின்வண்மை யறிவால்மைந்தா
கோளப்பா வாராது ரவரவர்மூலாதாரம்
குளித்திட்டோம் குய்யத்தின் மேலேபாரே. 100

மேலான குய்யமப்பா குதத்தின்மேலே
விளங்கினோம் கொடிக்கம்பம் நடுக்கம்பம்பார்
ஆலான வதன்மேலே அபானமப்பா
அபானத்தினது நடுவில் வினாகதந்தான்
வேலான வினாதனடி மேல்கீழ்மேலும்
விளங்கினோம் நடுவோரங் குலத்துக்கப்பால்
பேலான பிரமான முக்கோணமாகி
பிரிந்துதப்பா நாலிதழாய்ப் பேணிப்பாரே. 101

பேணியே பார்க்கவெனில் சொல்லக்கேளு
பேரான தாமரையின் கமலம்போலாம்
நாணியே நாலிதழின் வளப்பங்கேளு
நாம்சொன்னோம் நாலாட்சரத்தை மாறிமாறி
ஆணியே அதற்குநடு முக்கோணமாகி
அதுநடுவில் இரிங்கார மடைந்தோமாறு
காணியே கணபதி வல்லபையாஞ்சத்தி
வசனித்தோ மவளிருந்து பீடமாச்சே. 102

பீடமாம் வடகலைதான் முக்கோணத்தில்
பிரிந்துதப்பா சிரிங்கார மந்திரந்தானாகும்
வேடமா மதற்குயிர் தெய்வங்கேளும்
விக்கினேஸ் வரனென்று விளங்குமாகில்
வாடமா மதுநடுவி வங்கென்றம்பி
வாசியைநீ வரவழைத்து கும்பித்தேகு
மாடமா மறவாமல் மௌனஞ்சாதி
மவுனத்தில் கவனமதாய் மாட்டியேறே. 103

ஏறடா யென்மகனே யொருமனதாய்நின்று
யிருத்தடா நவகோடி மூலத்தன்கீழ்
ஆறடா வங்குநின்று கும்பித்தாக்கால்
அறியலா மோங்கார கம்பம்காணும்
காறடா கம்பத்தில் கணேசபீடம்
காணலா மிடகலை வடகலைதான்மைந்தா
மாறடா மங்கிருந்து கும்பித்தாக்கால்
மதியாவி நின்றவிட மறியலாமே. 104

அறியலாம் கணேசனொடு வல்லபைதான்மைந்தா
வங்குநின்று தியானித்துக் கப்பால்செல்லு
இறியபர மிருவரையும் பூசித்தாக்கால்
யேறலாம் வரையாறு மப்பால்தாண்டி
எறியலாம் பரம்பிரம்ம சொரூபம்போலே
யிறுத்துமப்பா தேகவச்சிர மெழுகுபோலாகும்
பறியலா மங்குநின்று கும்பித்தாக்கால்
பளிச்சென்று மூலத்தில் சோதிகாணே. 105

சுவாதிஷ்டானம்

சோதியாம் செகச்சோதி மின்னல்காணும்
சொக்கியே வங்குநின்று மவுனம்சாதி
ஆதியா மங்கிருந்து மவுனமாகி
அறியலாம் கணேசபதி பீடந்தன்னை
ஏதியா மிவ்வண்ணம் நலதாய்சொன்னோ
மிதற்கடுத்த வங்கலமே மிரண்டாம்வீடு
பாதியாம் பரப்பிரம்ம சக்கரநால்வட்டம்
பாடுகிறோம் சுவாதிஷ்டான பதியைத்தானே. 106

பதியான பரப்பிரம சக்கரந்தான்கேளு
பாடுகிறே னல்சதிரம் வட்டமொன்று
அதியான யாறிதழு வாசல்நாலு
அமர்ந்ததொரு பீடம் சுவாதிஷ்டானந்தான்
சொதியான சோதிமின்னல் பிரகாசம்போல்
தோன்றுமடா யத்தலத்தி லட்சரந்தானாறு
மதியான வட்சரத்தை மாறிமாறி
மகத்தான பிரிதிவியில் மவுனங்காரே. 107

காரேநீ நவப்பிரம சொரூபத்தாலே
கலையான பதிரண்டு கருத்தால்காணும்
வேரேநீ கலையதுவை கண்டால்மைந்தா
வேதாந்தம் விளங்குமடா விரிவோயில்லை
நாரேநீ நான்மறைக்கு ளுதிக்குமாகில்
நகாரமென்ற அட்சரத்தி னண்மைகேளு
ஏரேநீ யிவ்வெழுத்தில் சதுர்முகந்தானப்பா
யிருப்பிடங்காண் விதன்பீசம் பிரிதிவுதானாமே. 108

மணிபூரகம்

ஆமேதா னுகாரமது நாதவிந்து
அவ்விந்தில் பஞ்சாட்சரத்தை வறிவால்காணு
மாமேதான் மந்திரமாய் மாறிமாறி
வாகரமென்ற வாயுவதி லறிவேகொண்டு
சேமேதான் வாயுவைநீ செயலாய்த்தம்பி
சிகாரமென்ற யெழுத்ததுவி லடவாய்கும்பி
மூமேதான் முப்புரிநூல் முடியைகாணு
முடியான சிரசதுவில் நாலைக்காணே. 109

நாலான சிரசதுவில் சொல்லக்கேளு
நால்வேத நான்மறையின் நடுவிலப்பா
சாலான சரஸ்வதிதான் பிரசன்னமாகி
கடாட்சிப்பாள் தெளிந்தவற்கு சாதிப்பாளங்கே
பாலான யங்குநின்று நங்கென்றேதம்பி
பழக்கமதாய் நாள்தோறு மப்பாகும்பி
ஏலான யிருவரையும் பூசித்தாக்கால்
இருக்கலாம் சதாசிவம்போ லிருக்கலாமே. 110

ஆமேதான் சுவாதிஷ்டான நிலையுஞ்சொன்னோ
மறையுறோ மணிபூரகத்தி னடவைக்கேளு
மாமேதா னாறானங்குலத்தின் மேலே
மகத்தான பூரகந்தான் பிறைபோல்வீடு
சோமேதான் தினபிறை சுத்திநிற்கும்
சூட்சயிதழ் பத்தாகி துருகமேவும்
பாமேதா னிதழ்பத்தில் பத்தட்சரந்தானிற்கும்
பாலகரே யவ்வெழுத்துக் குயிர்தானப்பே. 111

உயிரான அட்சரமா மிடகலையுமாகி
ஓங்கிநிற்கு மதற்குள்ளே தெய்வம்விஷ்ணு
வயிரான வலபாகம் விஷ்ணுலட்சுமி
வசனித்தோ மகாரமப்பா மதின்பீசன்தான்
அயிரான விஷ்ணுவுக்கு யிவ்வட்சரந்தானாகு
மருளினோ வவ்வதுவு மப்பின்மூலம்
வெயிலான தேவமது நாலதாகும்
விளங்குகிறோம் சர்வேச மிதுதானாமே. 112

பூரகம்

ஆமப்பா புலத்தியரே சொல்லக்கேளு
மதினிறைந்த சலத்தம்ப மணியோசைதான்
பாமப்பா பஞ்சறிவின் வாய்வாநிற்கும்
பாலகனே லட்சுமிதா னிடபாகத்தில்
ஏமப்பா யவ்விடந்தா நிடமேயேகி
யிழுத்துறி வாசியைத்தான் கும்பித்தாக்கால்
வாமப்பா வாயுவேநீ வங்கென்றேத்தி
வருடிப்பாய் தம்பித்து மவுனத்தாலே. 113

வருட்சிப்பாய் நந்திபதம் உந்தியாலே
மகத்தான வுலகுக்கு காத்தனீயே
உருட்சிப்பா யொருநொடியில் வுலகவாழ்க்கை
உந்திநரம்பு களவா லறுத்தேபோடு
வெருட்சிப்பா யவ்வரத்தா லறுத்தால்மைந்தா
வெளியாகு முகப்புவன மரைநொடியிற்காணும்
மருட்சிப்பாய் பூரகத்தி னொடுக்கஞ்சொன்னோ
மகத்தான யனகதத்தின் மகிமைபாரே. 114

அனாகதம்

பாரப்பா பூரகத்தின் மேலேகேளு
பாடுகிறோ மெட்டங்குலந்தா னனாகதத்தின்வீடு
தேரப்பா திரிகோண சக்கரந்தான்மைந்தா
தேர்ந்தயிதழ் பனிரண்டாய் சுத்திநிற்கும்
ஆரப்பா யவ்விதழில் யட்சரந்தான்கேளு
அவ்விதழே பனிரெண்டா மிதழாமைந்தா
ஏரப்பா தேயுவது யிருப்பிடமாய்நிற்கு
மிருப்பிடத்தில் சிகாரமென்ற யெழுத்ததாமே. 115

எழுத்தான பூதமதின் பீசங்கேளு
இயம்புனோ மவ்வதுவு மிடமேயாகும்
செழுத்தான யவ்வெழுத்தில் ருத்திரன்றான்ருத்திரி
செயலாகி ருந்தாரதன் செய்கையாலே
வழுத்தான யங்குநின்றேகும்பி மாருதிபோல்
வாகாயமெல்லாம் வச்சிரம் போலாகும்
கழுத்தான காயமெல்லாம் பாலையாகும்
காரன குருவினிட கருத்ததாச்சே. 116

விசுத்தி

ஆச்சப்பா வனாகதத்தி னொடுக்கஞ்சொன்னோம்
அறையுகின்றேன் விசுத்தியி னடவைக்கேளும்
மாச்சப்பா வதற்குமேல் பனிரண்டங்குலந்தான்
மகாகோடி விசுத்தியது கோணமாகும்
பாச்சப்பா பதினாலு யிதழ்தானாகும்
பாலகனே வதுநடுவில் அட்சரம்யெட்டு
வாச்சப்பா வறுகோண மகாரமாகும்
வதுநடுவில் மயேஸ்பரனு மயேஸ்பரியுமாமே. 117

ஆமேதான் முந்திருந்தார் யிருவரொன்றில்
அருளினோம் அதர்வனவேதத்தோ டொக்கும்
வாமேதான் வாசியென்ற வாயுவைக்கேளு
வளமான யிதழுக்குள் மருவிநிற்கும்
போமேதா னதற்குயிரு பீசமல்லால்
புனிதமுட னங்குநின்று கும்பித்தாக்கால்
மாமேதான் வங்கின்று தம்பித்துநின்றால்
மகத்தான கோடியுகம் வாழலாமே. 118

ஆமப்பா வயதுஒரு நாழிக்காணும்
அடிநாவி லமுர்தங்கக்கி சிவாயப்பாயும்
ஓமப்பா யோகத்தில் மவுனஞ்சாதி
யோகோ யமுர்தமதை வுண்டுதேறு
காமப்பா லோடாது வாமப்பாலால்
கட்டுமப்பா யுலகமதை முழுக்கட்டாச்சு
யேமப்பா லிதற்குநிக ருண்டோவுண்டோ
யீரேழு வுலகமெல்லாம் நீயாள்வாயே. 119

ஆக்கினை

ஆள்வாயே யாதாரஞ் சொச்சங்கேளு
அருளினோம் விசுத்தியின் வீடாக்கினியைக்கேளும்
பாள்வாயே யிதற்குமேல் பதினாரங்குலந்தான்
பாலகனே கண்டமார் புருவமாகும்
மாள்வாயே மளவாகி யளவாலோங்கி
மகத்தான யிரண்டிதழாய் பிரிந்தேநிற்கும்
யேள்வாயே வட்சரந்தா னிரண்டதாகும்
இதனடுவில் யகார மாக்கினைவீடாமே. 120

வீடான வாக்கினைதான் விளம்பக்கேளு
விதமான பூதத்தின் பீசம்யவ்வாம்
மாடான மாணிக்கம் பிழைபோல்வட்ட
மதுக்குள்ளே யவ்வட்டம் சதாசிவமுஞ்சுத்தி
ஆடான மாகாசமங்கே நிற்கும்
அங்குநின்று தம்பித்தால் கண்டந்தோற்றும்
தேடான சித்தியதாம் தேகசித்தி
செப்பரிச மானந்தம் தெளிவால்காணே. 121

காணுவாய் கருவி கரணாதியாகி
கருவிதற்குள் குருவிதுவாய் களித்தேயோங்கி
ஏணுவா யிரண்டுமதி னிடமதாகி
யேகமாய் சூழ்ந்ததொரு யுகமதாகி
ஆணுவாய் நீகேளு வைம்புலனைச்சாதி
அடவுட னறிவுகொண்டு நினைவாய்தம்பி
மாணுவாய் மவ்வுக்குள் பரத்தேயேகி
மாய்கையெல்லா மடித்துநீ மாட்டிடாயே. 122

மாட்டிடாய் என்மகனே புலத்தியாகேள்
மகத்தான திரேதாயின் மாய்கைவிட்டால்
ஊட்டிடாய் நாதமப்பா வுகாரவாழ்க்கை
உலகபிரபஞ்சங்க ளொன்றிலாச்சு
தேட்டிடாய் திரேதாயின் மாய்கையாச்சு
செகமெல்லாம் சீவசெந்தாய் பிறக்கலாச்சு
கேட்டிடாய் யவ்வுமென்ற யூனதாச்சு
கேள்மகனே யதிபதியாய் நடக்கலாச்சே. 123

மண்டல மூன்றின் கூர்

நடக்கலாம் நவப்பிரம குருவேயாச்சு
நாதாந்த குருவெழுத்து பிரசன்னமாச்சு'
அடக்கலா மாதார மாறுமாச்சு
அருளினோம் தத்துவங்கள் முப்பத்தாறு
தெடக்கலாம் சிவமாச்சு சீவனாச்சு
தெளிவான தத்துவத்தின் செயலினாலே
மடக்கலா மாதார மாறுஞ்சொன்னோ
மண்டலங்கள் மூன்றினிட மாற்கங்கேளே. 124

கேளப்பா காவியந்தா னிரண்டாங்காண்டம்
கேள்மகனே அண்டசரா சரங்களெல்லாம்
ஆளப்பா மண்டல மக்கினிதானாகும்
ஆதித்த மண்டல சந்திரனேயாகும்
மாளப்பா மதிரவியு மிரவியாலே
மண்டலங்க ளண்டநவ கண்டமாச்சு
மூளப்பா மும்மூல முக்கண்ணதாச்சு
மும்மண்டல மென்றிதற்கு பேர்தானாச்சே. 125

மூன்றின் வளமை

ஆச்சப்பா யக்கினி மண்டலத்தோடொக்க
வாதித்த மண்டலந்தான் சந்திரமண்டலமேயாகும்
ஏச்சப்பா யிதின்தொகுப்பை நன்றாய்ச்சொன்னோம்
யென்மகனே யிதின்விரிவை வொவ்வொன்றாய்கேள்
மேச்சப்பா மேல்மூலத் தடியின்கீழே
மேலான சுவாதிஷ்டானத்தின் கீழே
நாச்சப்பா நலமாக நாம்சொன்னோம்கேள்
நடுமைய மக்கனி மண்டலந்தானாமே. 126

அக்கினி மண்டலத்திரிகை சோடசமூனதாகி
யாதியந்தம் சோதியிது மூன்றுமாச்சு
சொக்கியே நீதிரியாதே முச்சுடராநிற்கும்
சொல்லுகிறேன் மும்மூல மிதுவேயாகும்
மக்கினீ மடியாதே யிதின்வீடாகி
மகத்தான சுவாதிஷ்டான மட்டுவோங்கி
மக்கிநீ போகதே பூரகத்தைகேளு
புகழான யனாகதமா மதினருகேகாணே. 127

காணப்பா அதுநடுவில் விளையம்போலாம்
கருதியென்ற மண்டலந்தான் சூரியவீடாகும்
மாணப்பா மணிபூர மனாகதத்தைச்சுத்தி
மகிழ்ச்சியுடன் பிரகாசிக்கு மண்டலந்தான் சூரியன்
சோணப்பா அதில்மனதை சொக்கிநீயும்
சூட்டடா யாயிரத்தெட் டிதழ்தன்னாலே
வாணப்பா வாசியைநீ கும்பித்தேரு
மாட்டினால் ரவிமதியு மாளுந்தானே. 128

தானென்ற அப்பியாச மில்லாமல்தான்
சாதிக்கப் போராயடா சவமேயாவாய்
சோனென்ற சும்மாய்த்தான் கும்பிக்காதே
சொல்லுகிறேன் உனதுசிரம் வெடித்துப்போகும்
ஏனென்ற விசுத்திமே லாக்கினையின்கீழே
இருக்குமப்பா சந்திர மண்டலந்தான்பாரு
நானென்ற நாவுகுன்றாதே தம்பி
நவப்பிரம்ம சுடரொளியின் நலங்காண்பாயே. 129

காணுதற்கு மனக்கண்ணால் கண்டாயானால்
கண்மணியே சோதியொளி பிரகாசங்காணும்
ஆணுதற்கு வத்தலத்தில் வாசியொட்டி
அங்குனின்று கும்பித்தா லனேகசித்து
மாணுதற்கு மண்டலங்கள் மூன்றுசித்து
மகத்தான பிறப்பையொளி மாய்கைபோகும்
மூணுதற்கு மும்மண்டல மூன்றுஞ்சொன்னோம்
மும்மூல முள்மூல உள்மூலங்கேளே. 130

மல மூன்றின் கூறு

கேளேநீ மலமூன்றின் விபரஞ்சொல்வோம்
கெடியாகநீ கேளுயாணுவந்தான் மாய்கை
காளேநீ காமியத்தோ டிதுநான்காகும்
கண்மணியே யிதின்விரிவு வொவ்வொன்றாய்க்கேள்
கேளேநீ யாணுவந்தா னிறந்தான்செம்பு
செப்புகின்றேன் களிம்பதுபோல் சிறுமாகல்
ஆளேநீ அருமணி நெல்லுமியைப்போலும்
ஆத்மாவின் கூறதுதா னடவுகேளே. 131

தோஷ மூன்றின் கூறு

அடவான வாத்மாவின் மேல்கீழ்மட்டு
மப்பனே கீழ்முடி மேல்முடியைக்கார்க்கும்
முடவான மூலத்தை முடிவித்தேகு
மும்மூலந் தன்னுதென்றே முடிக்கும்பாரு
மடவான மடந்தையர்மேல் கோபங்கொண்டு
மாய்கையது ஆணுவத்தை வரவிக்கும்பார்
கொடவான கோபத்தை கொண்டேயேகும்
குருமொழிசொல் கேளாமல் குலைக்குந்தானே. 132

தானான தன்மதிபொய் தவருண்டேபோம்
தவறுதலை வருகுமப்பா தன்நிலைகாணாது
மானான மனமதுதான் தெரியாமலோடி
மதிமயங்கி வாய்குளறி மடிக்கும்பாரு
வானான வசனம்போம் மாய்கைவீசும்
மாய்கையது காமியந்தான் மகிழ்ந்தேநிற்கும்
கானான கனவுகண்டாப் போலேகாணும்
கண்டதுக் கெல்லாமாசை கொண்டுபோமே. 133

போமென்ற மாய்கையது முதுந்துவோங்கி
புகழ்பெரிய மனம்நீத்து துடிக்கும்பாரு
மாமென்ற மனமதுவே சஞ்சரிக்கும்
மகத்தான மலமூன்றின் கூறைச்சொன்னோம்
தோமென்ற மும்மூல மொன்றுமாச்சு
சொல்லுகிறோம் தோஷமூன்றின் தொகுப்பைநாமும்
வாமென்ற வாதமதில் பித்தஞ்சேத்மம்
வளமான துகையதுதான் நாலதாச்சே. 134

வாதக்கூறு

ஆச்சப்பா யிதன்கூறை நலதாய்ச்சொன்னோம்
ஆகாகா யிந்நூல்தான் காவியகாண்டத்தில்
வாச்சப்பா வாதத்தின் கூறைச்சொன்னோம்
வாதமதின் வாயுநிலை மயங்கிப்போகும்
காச்சப்பா கலங்கியது தியங்கிப்போகும்
கண்மணியே வதுக்குமத்திபந்தான் கேளு
மாச்சப்பா மக்கினிதான் மதுவோடொக்க
மார்க்கமதாய் கூடிவிளை யாடும்பாரே. 135

பித்தக்கூறு

பாரப்பா சொல்லுகின்றேன் பித்தக்கூறை
பகல்போலே 'காவியத்தில் பண்பதாக
ஆரப்பா வறிவார்க ளிந்நூல்ஆதி
அருளிருந்தா லபிக்குமடா அமிஷைகிட்டும்
மாரப்பா வாதத்தின்மே லங்குலத்துக்கப்பால்
மகத்தான பித்தமது சூழ்ந்தே நிற்கும்
வாரப்பா வதினிடமே அக்கினிதான் சேர்ந்து
மாராட்டம் பண்ணுமடா வகைசொன்னோமே. 136

சொன்னோமே சொல்னிலை சொல்தவறிபோமே
சோதிசுடர் பிறவியைதான் சொக்கி ஆட்டும்
மன்னோமே மசக்கியப்பா மாய்கைதப்பும்
மகத்தான வாய்வுடலை வறுத்தும்பாரு
அன்னோமே வதிசாரம் தனைகொள்ளாது
அசாத்தியம்போல் சாத்தியத்தி லழுத்திநிற்கும்
கொன்னோமே நாவதுதான் குளறிப்போகும்
கூறினோம் பித்தமதின் சேத்துமங்கேளே. 137

சேத்துமக்கூறு

கேளப்பா சேத்துமத்தின் குணத்தைச்சொல்வோம்
 கேள்மகனே பித்தத்தின்மே லங்குலத்துக்கப்பால்
காளப்பா சலமிகுதி யாகும்பாரு
 கலந்துநவ துவாரங்க ளோடியுலாவி
ஏளப்பா யிடயதுதான் விடவுடாமல்
 இருக்குமப்பா நவத்துவார மெங்கும்நிற்கும்
சாளப்பா சற்பம்போல் சீறும்சீறும்
 சமத்தான சேத்துமத்தின் குணந்தான்பாரே. 138

புத்திர ரெட்சைக்கூறு

குணமான சேத்துமத்தின் கூறைச்சொன்னோம்
 கூறினோம் தோள்மூன்றின் குணந்தானப்பா
எணமான யெட்சனைதா னதுவேயாகும்
 என்மகனே சொல்லுகின்றேன் மியல்பாய்கேளும்
புணமானப் புட்பமலர் புத்திரெட்சை
 புனிதமாம் லோகரெட்சை அத்திரெட்சை
அணமான யிதினுடைய குணமூன்றாச்சு
 அறையுகின்றேன் மொவ்வொன்றால் அறிவால்தேரே.

லோக ரெட்சை

தேரடா யென்மகனே புத்திரெட்சை
 திவ்விய சொர்ணகளஞ்சியமா மதிகவாஞ்சை
ஆரடா அதரமென்ற பொருள்மேலாசை
 அதிகமிக வேறாசை அறியப்பண்ணும்
மாரடா மனையாசை யாண்பெண்ணாசை
 மகத்தான சகலாசை கொடுக்கும்பாரு
போரடா புத்திர - ரெட்சையிதின் குணந்தான் சொன்னோம்
 புகழான லோகரட்சை அருளுமாமே. 140

அத்திர ரெட்சை

அருளுவோம் லோகரட்சை சொல்லக்கேளு
 அப்பனே தன்னிலம்போல் மறுயினந்தான்தேடும்
உருளுவோ மொருவருடக்காலந் தேடி
 ஓகோகோ வுறவாகி வுகந்தேபோகும்

கருளுவோம் காரியங்கள் கணமேயாகும்
 கனத்த மிகவாசைபடும் கனகம்வேண்டும்
மருளுவோ மறுவாக ரட்சைமதின் கூறைச்சொன்னோம்
 மகத்தான அத்திரெட்சை மாற்கங்கேளே. 141

இராட்சத குணம்

மாற்கமென்ற யத்திரெட்சை சொல்லக்கேளு
 மகத்தானக் காமியத்தை மதுவேயாகும்
ஆற்கமென்ற யாசையதை மிகுதியாக்கும்
 அப்பனே பெண்டுமேலே மோகிக்கும்பார்
வாற்கமென்ற வதுளைவால் தரிக்கும்பாரு
 மைந்தனே கடூரமதை வரவிக்குந்தான்
மூற்கமென்ற அத்திரெட்சை குணந்தான்மூன்று
 முறையாக சொன்னமப்பா வறையக்கேளே. 142

அறையக்கே ளின்னமொரு குணந்தான்சொல்வோம்
 அருளுவோம் ராட்சத தாமிஷந்தான்கேளு
சறையக்கேள் சாத்துவமா மூன்றதாச்சு
 சமர்த்தாக விதின்குணங்கள் வொவ்வொன்றாய்க்கேள்
வெறையக்கேள் வெகுளியென்ற பொய்பேசா்து
 விளங்கியதோர் பகைவகைதான் வேண்டும்பாரு
புறையக்கே ளொருவருக்கும் தனங்கொடுக்கும்
 பொல்லாத பாவிகளோட நம்பேசாதே. 143

தாமிசத்தின் குணம்

பேசாதே செய்தநன்றி மறவாதப்பா
 பேராக தன்னாணைத் தன்னைச்சார்ந்தேகும்
காசாதே ஒருவருக்கு சகாயம்கார்க்கும்
 கண்மணியே யாண்மைவிட்டு தண்மைபேசும்
பாசாதே தம்முயிர்போல் பேசவெண்ணல்
 பகைத்தவரை வென்றுவிடும் தடைவிலக்கும்
மாசாதே பல்கலைகள் மனதாலென்னும்
 மகத்தான மவுனமதில் மருவும்பாரே. 144

பாரேநீ பாரினிலை மாண்பருக்கு
பகர்ந்தேவோர் உறுதிசெய்யும் வாழலாகும்
நாரேநீ நன்மைதனை மறியப்பண்ணும்
நல்லமனம் பூரிக்கும் புகழுண்டாக்கும்
தாரேநீ யாண்மையென்ற மேற்பாடெல்லாம்
தருவிக்கும் சொல்குணங்கள் தவறிடாது
ஆரேநீ அருளினதோர் குணங்களெல்லாம்
அரக்ரா ராசதத்துக் கருளினோமே. 145

அருளினோம் ராசதத்தின் குணந்தான்சொன்னோ
மறையுறோம் தாமிசத்தின் குணந்தான்கேளு
வருளினோம் தாமிசமாவது வேதென்னில்
மகாப்பாவ வஞ்சனைகள் வரவிக்கும்பார்
மருளினோ மதிவரும்பா டொழிந்தேபோகும்
மகத்தான தீவினையின் வாத்மாவாகும்
பெருளினோம் பெரியோர்க்கு யிணங்காதப்பா
பேதமிக வணக்கமில்லா பேசுந்தானே. 146

சாத்துவகுணம்

தானான வொருநன்றி செய்தோருக்கு
சண்டாள மானுதிபோல் தலைக்கேடாகும்
சேனான செய்தநன்றி மறந்தேபோகும்
செயலான கல்வியது சேர்ந்தேபேசும்
ஏனான ககடுறங்க ளிழுக்கந்தாக்கும்
இருவழி நேர்தெரியாம லிடும்பைபேசும்
கோனான குலப்பாவ மதுவேசெய்யும்
குணமொன்று வசனமொன்றாய் கூறும்பாரே. 147

பாரப்பா பகையதுவை வகையாய்க்கொள்ளும்
பகைத்தோரே நெகத்ததுவால் வாழும்பாரு
கோரப்பா குலகாமம் பொய்பேசும் பார்
குடிலமாய் களவுகன்னம் கொண்டேபோகும்
காரப்பா காமமென்ற பொல்லாப்பாலே
கரையேற மாட்டாது களம்போலாகும்
ஆரப்பா காமத்தின் குரோதந்தன்னால்
ஆச்சுதப்பா தாமசத்தின் குணந்தானாமே. 148

ஆகுமே தாமசத்தின் குணங்கூர்சொன்னோம்
அறையுகின்றேன் சாத்துமத்தின் குணந்தான்கேளும்
காகுமே கமழக்கடி காட்சிசாந்தம்
கனமென்ற வாய்பொறுமை தருமேநன்மை
தாகுமே தயவதுதான் வொடுக்கவன்மை
தருவாகத் தகர்ந்திடு தன்னளிந்தார்க்கன்னம்
நாகுமே நவசெலந்தான் பற்றிஅன்பு
நலமானகுணம் பெருமை பூரிப்பாமே. 149

பூரிப்பாம் புவனமெல்லாம் புகழுண்டாகும்
புகன்றதொரு நால்மறைகள் புலமாய்ப்பேசும்
மாரிப்பா மனமதுவும் சஞ்சரித்திடாது
மவுனநிலை யுண்டாக்கும் மாய்கைசிக்கா
வாரிப்பாம் தன்னிடத்தில் வறிஞ்ஞோருக்கு
வாரியள்ளி யன்னமிடும் சொர்ணவித்து
நாரிப்பாம் புல்லோர்க்கு கெனகமீயும்
நவப்பிரம சிவறுதமே நமஸ்துண்டாமே. 150

உண்டான பராபரத்தை பணிந்துபோற்றும்
உசிதமுடன் நலமறியு முறவுண்டாக்கும்
நண்டாமே நல்லோர்களிடமே சேரும்
நல்லவாக்குப் பொருளீயும் அகமேதேடும்
ஒண்டோமே முறைவுறவின் சுத்தங்காணும்
முன்னோர்கள் வரமதுவால் முப்பொருளேகாணும்
பண்டாமே பரதேசி யேழையோர்க்கு
பாலமுர்தம் யன்னமதை பகுந்ததாமே. 151

ஆமென்ற யாதியந்தம் சோதிகாணல்
அரகரா தேவரிடியோரைப் போற்றும்
தேமென்ற தேவதைக்கு வுபசாரஞ்செய்யும்
தேவதையைத் தனைக்கண்டு சிந்தைபேசும்
போமென்ற புலயருக்கு புத்திசொல்லும்
புண்ணியங்கள் நாள்தோறும் புகழாய்ச்செய்யும்
சாமென்ற சத்தியொன்பது பேருக்கும்
சகலபெலி ஆகுதிகள் தருகுந்தானே. 152

நல்வினை தீவினை

தானென்ற யிக்குணந்தான் நற்குணமதாக
சாத்தினோம் சாந்திபத்தின் குணங்கூரெல்லாம்
மூனென்ற முக்குணமும் சற்குணமாய்ச்சொன்னோம்
மூதண்ட குருவமுஷை முறையாய்ச்சொன்னோம்
காமென்ற காவியமாம் சத்தாம்நூலு
காட்சிதரு முந்நூலு யிந்நூல்பாரும்
வேனென்ற சாந்திபத்தின் விபரமெல்லாம்
விளங்கினோம் வினைரண்டின் விபரங்கேளே. 153

கேளப்பா புலத்தியனே யோகவானே
கிருபையென்ற நல்வினைதீவினை யிரண்டேயாகும்
வேளப்பா வினைரண்டின் விபரஞ்சொல்வோம்
விளங்கியதோர் நல்வினை புண்ணியந்தானாகும்
தேளப்பா தீவினைநல்வினை தானாகும்
தெளிவாக யிதுரண்டால் சொர்க்கம்நன்மை
போளப்பா புண்ணியந்தான் செய்தவர்க்கே கேளும்
புகழான நல்வினைதான் புனிதமாமே. 154

காமத்தின் குணம்

புனிதமென்ற நல்வினையைச் சொன்னோம்சொன்னோம்
புகழான தீவினைதான் சொல்லக்கேளு
பனிதமென்ற தீவினைதான் பாவமாகும்
பாடினோம் யென்மகனே பண்மையாக
பொனிதமென்ற பாவிகள்தான் பொல்லாதாற்கு
புகழ்ந்தோமே தீவினையென் றருளினோம்யாம்
தெளிதமென்ற தீவினையின்கூறைச் சொன்னோம்
தெளிவான ராகமெட்டின் செயலைக்கேளே. 155

இராகமெட்டின் குணம்

கேளேநீ யிராகமெட்டைச் சொல்லக்கேளு
கீர்த்தியென்ற காமமது குரோதம்தானும்
ஊளேநீ லோபமென்ற மோகமாகு
மோகோகோ மதமாச்சரிய மிடும்பை வேழ்க்கை
தோளேநீ ஆகதொகை தொகுப்பைச்சொன்னோம்
சூட்டுகின்றே னொவ்வொன்றா யிதின்குணந்தான்
காளேநீ காமமென்ற கருத்தைக்கேளும்
கனயாசை மிகுதியதாம் கண்டுகொள்ளே. 156

கொள்ளவே குரோதமென்ற கூறைக்கேளும்
கூறினோம் பிணக்கென்ற கோபமாகும்
உள்ளவே லோபமென்ற கூறைக்கேளும்
உசிதபிடி பாடாகும் உண்மைஉண்மை
பெள்ளவே மோகமென்ற கூறைக்கேளு
பிரியமா யொருவரின்மே லாசைவாஞ்சை
மள்ளவே மதமென்ற கூறைக்கேளும்
மதியதுதான் நிலைதவறி கெருவங்காணே. 157

காணப்பா மாச்சரியஞ் கூறைக்கேளும்
கணக்கில்லா யாங்கார மதிகமாகும்
ஏணப்பா யிறாகமது கூறைக்கேளுங்
கரித்து வொருவனிட முதாசினந்தான்பேசும்
வேணப்பா வேழ்க்கையதின் வளமைக்கேளு
விவேகமில்லா கடுாரமதாய் விருவாய்பேசும்
ஆணப்பா ராகமதின் வளமைச்சொன்னோம்
அரகரா அவத்தையஞ்சி னடவுகேளே. 158

அவத்தை ஐந்தின் குணம்

அடவான அவத்தைவைந்தின் கூறைக்கேளும்
ஆத்திரந்தான் சாக்கிர சொற்பனமேயாகும்
சொடவான சுழுத்தியதாம் துரியந்தானும்
சொற்பெரிய துரியாதித்தோ டஞ்சாம்
மடலான மவத்தை யைந்தின் தொகுப்பைச்சொன்னோம்
மாட்டுகிறோ மெவ்வொன்றாய் மாட்டக்கேளும்
சடலான சாக்கிரந்தான் நெற்றிநேர்கீழ்
சமைந்திருக்கும் கருவியுட லருவியாமே. 159

ஆமப்பா சாக்கிரத்தை சொன்னோம்பாரு
அறையுகின்றேன் சொற்பனத்தின் அடவேகேளும்
காமப்பா கண்டமதின் நேர்கீழாகும்
கலந்திருக்கும் கருவியது கடினமாகும்
சோமப்பா சொற்பனத்தை சொன்னோம்பாரு
சுழுத்தியதின் வளமைநன்றாய் சொல்வோமைந்தா
ஏமப்பா யிருதயத்தின் கீழ்மேலாக
வியங்கிநிற்கும் கமலத்தி னியம்பிடாயே. 160

இயம்பிடாய் கருவியென்ற சுழுத்திசொன்னோம்
இயல்பான துரியமென்ற கூறைக்கேளும்
நயம்பிடாய் நாபியதின் கீழேயப்பா
நற்கமலக் கருவியுட னடந்தேநிற்கும்
துயம்பிடாய் துரியமதின் கூறைச்சொன்னோம்
சொல்லுகின்றேன் துரியாதித்த கூறைக்கேளும்
முயம்பிடாய் மூலாதார மாதாரமாரல்
மூலமாங் கருவியதின் அருகேகேளே. 161

கேளப்பா கருவியுடன் நமர்ந்தெதிர்க்கும்
கிருபையென்ற கருவிகள்தான் தொண்ணூற்றாறாம்
காளப்பா தேகவச்சிரகாயந் தன்னில்
கணக்காகக் காத்துநிற்கும் கருவாய்க்கேளும்
மூளப்பா முப்பது தத்துவத்தோடொக்க
மும்மூல வேதமென்ற நாதமாகும்
வேளப்பா விளங்கினின்ற விபரத்துக்கு
வித்தியானந்த தத்துவமென் றிதற்குப்பேரே. 162

தத்துவக் கருவி

பேரான தத்துவந்தான் கருவியாகும்
பேசினோம் கருவியது தொண்ணூத்தாறாம்
சேரான செடலமதி னெங்குமோடி
செயலாக வூடாடி செமந்துநிற்கும்
ஊரான வுடல்கூறு செடலமாகி
உதிரமதின் மாங்கிஷத்தோ டுற்பவித்து
ஆரான வதின்பிறகு வுள்ளித்தாளாய்
அப்பனே பூபூர்த்து மலர்ந்தப்பால்காணே. 163

காணடா யென்மகனே கருவியாகி
கருவென்ற வுருவாகி திருவாநிற்கும்
ஆணடா அருவாகி குருவுமாகி
அவ்வென்று மட்சரந்தா னதுக்குள்ளாகி
மாணடா மட்சரத்தில் நாடியாகி
மன்னாடி மதுதனிலே தத்துவங்களாகி
ஏணடா யெலும்போடு சதையுமாகி
இயல்பான புடைநரம்பு வீரெட்டுபளுவதாமே. 164

தாமென்ற கொடுங்கையு மிரண்டுமாகி
    தாக்கான முட்டுக்கா லெட்டுவளையுமாகி
மூமென்ற மும்மூல முடிகியாகி
    மூதண்ட வருவாகி முருவுமாகி
சேமென்ற யிடையதுதான் பிங்கலையுமாகி
    சேர்ந்தசுழி முனையதுவும் துளையுமாகி
வாமென்ற வழியாகி வாசலாகி
    வதுவினிட சடலமெனும் வழுத்தலாமே. 165

ஆமேகேள் வளையமது வாலேயோங்கி
    அவ்வதுவா லாடிநின்ற யடவேயெல்லாம்
காமேகேள் சலமாகி கழிவொன்றாகி
    கணக்கில்லா காளவாய் காந்தலாகி
ஏமேகேள் சலமதுவா லெரித்தலோடி
    என்மகனே பாய்ந்துமடி யெருவுமாகி
சோமென்ற சுழியாகி சூளையாகி
    தூராத குழியாகி துறப்பாவைகாணே. 166

காணுகின்ற நிணமாகி கருவமாகி
    கருவான பத்திரவாகி காளிதமேயாகி
நாணுகின்ற நாபியது பித்துவாகி
    நலமான பொருமலென்ற செருமலாகி
சேணுகின்ற கிருமியதாய் வகைதோராகி
    கிறுபையென்ற வாயுவைத்தான் நீருத்திருவாய்
மாணுகின்ற கண்ணாகி மரூவமாகி
    மகத்தான முந்நூற்றார் முழக்குடலுமாமே. 167

ஆமேதான் கற்குடலின் வுறுதிகேளு
    அரகரா முப்பத்திரண்டு குடல்தானாகும்
ஓமேதான் ஒருமையாய் உறவுமாகி
    ஒன்பதுவாயோ மடிந்து யுதிரமாகி
ஊமேதான் வுதிர சுக்கிலமுமாகி
    உதித்தசல மலமூன்று முறுட்சியாகி
வாமேதான் தேகவச்சிர காயமாகி
    வச்சிரதோ லுருவாகி வழியுமாச்சே. 168

ஆச்சென்ற யடவிடவாய் வழிபலவுமாகி
அருளுமொழி குருவின்வழி சத்துமாகி
மூச்சென்ற ரோமமதின் துவாரமாகி
மூன்றறைகோடி நவதுவார ரோமமாகி
நாச்சென்ற வுறுப்பு முப்பத்திரண்டுமாகி
நலமான விரலிருப தென்றுமாகி
ஓச்சென்ற வுயிரு யிருவதுவேயாகி
வோகோகோ சடலமெட்டுசாண் தான்காணே. 169

காணுகின்ற பறுமன் னால்சாணுமாகி
கண்மூக்கு மெய்வாய்கள் கருவதாகி
சேணுகின்ற செவியாகி வுடல்தானாகி
செயமான பிரிதிவியோ டுறவதாகி
ஊணுகின்ற வதினுடைய வுருவமாகி
வோகோகோ கால்ரண்டு பாதமாகி
பாணுகின்ற கையிரண்டு அருவமாகி
பதினாறு சுவராகி வினோதமாமே. 170

ஆமப்பா யாறுதெறு பாதையாகி
அமுர்தசத்த கடலாகி யேழுமாகி
ஏமப்பா தானெட்டு பாரமாகி
என்மகனே சந்து முப்பதுவேயாகி
பேமப்பா பேரெழும்பு யெழுபதுதானாகி
பேறான யெலும்பு முச்சாணுமாகி
மூமப்பா யெழும்பு முச்சாண்சதையுமாகி
மூர்க்கமென்ற யீரலென பலமாமென்னே. 171

யென்றான வுதிரனா கடிகையாகி
என்மகனே நார்பத்து வாசலாகி
உன்றான வாசலதை வுடைத்ததாகி
உதிர மாங்கிஷத்தோடே மேதையாகி
அன்றான வத்தி சுக்கிலந்தானாகி
அருளான மச்சையென்ற வருவமாகி
பன்றான தாது சத்ததாதுமாகி
பாடுகிறே ஆகதொகை முப்பத்திரண்டே. 172

ரெண்டான பழுவெலும்பு பதினாறாகி
நேரான முதுகுதண்டு பனிரண்டுபூட்டுமாகி
மெண்டான தாளச்சூத மசைவையஞ்சு
மேலான நரம்பெலும்போ டேழ்சவுங்கூடி
நன்றான அதின்மேலே சதைகளாகி
நலமான சலமாகி நரம்புமாகி
கன்றான கணக்கில்லா சுரூவமாகி
காயமதாய் தேகமதின் கருவிதென்றே. 173

கருவியென்ற னாடியது கணக்கதாகி
கழுத்ததுவின் பிடரிதனில் பின்னலாகி
எருவியென்ற நரம்புயேழாயிரமதாகி
யியல்பான அசைவையது வுடல்தானாகி
நருவியென்ற ஆறுயிரும் நாற்பதாகி
நலமான வுடலுயிரும் மாறலாகி
அருவியென்ற தொழுதையது யிரண்டாயிரமதாகி
அளவில்லா மதுவளரு மடவுகேளே. 174

கேளடா புலத்தியனே யோகவானே
கிருபையென்ற மெய்யதுதா னாயிரந்தானாகி
பாளடா கோணம் பதினாறதாகி
பகருகின்ற சேட்டுமத்தி னுறவதாகும்
கோளடா வுயிரு வுற்பத்தியாகும்
குண்டலத்தின் அனலெலும்பு பிண்டமாகும்
ஆளடா அவ்வனல்தா னதுவேயாகி
அப்பனே யனலெழும்பி வாயிதாமே. 175

ஆமென்ற வாயுவது னாபியில்சேர்ந்து
அன்னா பிசுருக்கி யல்லலத்து
வாமென்ற வாசலொன்பதுக்கும் மைந்தா
வளமான கதவாகும் வோர்பூட்டாகும்
ஓமென்ற கதவொன்று திரப்பொன்றாகி
ஓகோகோ சிவாலயந்தா னொன்றதாகும்
தேமென்ற சிவாலயத்தின் திறப்பதாகி
தெள்கலையின் வடகலையின் தேவனைபோற்றிடே. 176

போற்றியே புனிதனாதனையே நோக்கி
புகழான வன்பனென்றும் சொரிந்துநெய்பால்
ஆத்தியே அமுர்தமதை திரியாய்செய்து
அப்பனே தீபமென்ற விளக்கிலேத்தி
வாத்தியே அமுர்தப்பால் விளக்கில்வார்த்து
மாணிக்கத் திரியேத்தி சொதியிலேநின்று
மாத்தியே வாயுவைத்தான் கும்பத்தேகி
வாசியினால் தம்பித்து மவுனமாமே. 177

மவுனமென்ற வாசியைநீ வரவழைத்து
மகத்தான ஐம்புலனை கொளுத்திசுட்டு
நவுனமென்ற யைம்புலனை அறிந்துஅப்பால்
நவப்பிரம்ம கோஷ அக்ஷரத்தைகண்டு
அவுனமென்ற அக்ஷரத்தி னொடுக்கம்பாய்ந்து
அளவில்லாத் தியானமதை அறிந்துயேகி
வவுனமென்ற வன்பத்தோ ரட்சரத்தைக்கண்டு
வளமான வாதாரம் பூசைசெய்யே. 178

செய்யப்பா தராதரமாம் நிராதாரத்தின்பூசை
செயமான முப்பூசை தியானம்செய்து
மையப்பா மண்டலங்கள் மூன்றுங்கண்டு
மதிரவியின் யிறவிவளம் வளமாய்சுத்தி
வையப்பா வமுர்தம் தீப்பாச்சல் பாய்ந்து
மகத்தான அண்டரண்டம் வலமாய்வந்து
உய்யப்பா சஞ்சரமாம் மண்டலத்தையேகி
உதிரமண்டலந் தாண்டி வோகோகோயேரே. 179

ஏரடா யேமப்பால் யிமைப்பாலுன்னு
யியல்பான காமமதை யடித்துத்தள்ளு
வேரடா வெகுளி வோடாதேபாரு
வெகுளியது வோகுநின்றால் வெடித்துப்போவாய்
காரடா கர்மமெனும் சத்துருவின்மேலே
கடும்புரவி யதுமேலே யேறிக்கொண்டு
சாரடா வெண்சாரை அதுபோல்சீறிச்
சச்சுதானந்த வெளிதாண்டி போகுவேனே. 180

தாண்டியே போகச்சே சொல்லக்கேளும்
தாக்கான பாதையது வழியாய்த்தோன்றும்
ஏண்டியே வாடாதே யிருமூன்றாறு
யெமகண்ட தெருதோய்த்து மிகவாய்க்கேளும்
தொண்டியே திரியதே அத்தெருவேசுத்தி
தூரடா அசுவதெரு தோன்றும்பாரு
அண்டியே அத்தெருவில் அசுவம்ரெண்டு
அத்தெருவின் வாசலிலே அகண்டுபாயே. 181

அகண்டுநீ பாயயிலே சொல்லக்கேளு
அளவில்லா யேழாயிரத்து யிரனூறுவாயுவு
எகண்டுநீ வோடையிலே யிரவுபகலாக
யென்மகனே வாயுவுயெல்லா மியம்பில்லாமல்
முகண்டுநீ வோங்கியது ஒன்றாய்க்கூடி
மூர்க்கமென்ற வோங்காரத் துருவத்தேகி
நகண்டுநீ நவமூல நாடியாகி
நற்க்கமல மோருறுதி நலமாய்க்காணே. 182

காணப்பா எழுபத்தி னாயிரந்தானாடி
கண்மணியே ஆகதொகை அதுக்கெல்லாந்தான்
ஓணப்பா ஒன்றுன்று மகத்தாம்நாடி
வோகோகோ ராசாங்க மென்றநாடி
ஊணப்பா அன்னாடி உறுதிகாணும்
உத்தமனே கண்டதனால் உருமையாச்சு
ஆணப்பா யன்னாடி தனிலேகேளு
ஆதித்த னென்றதொரு நாடியாமே. 183

ஆமப்பா அன்னாடி அதுபோல்நாடி
ஆபத்து நாடியது யதில்பிறக்கும்
நாமேதா நாற்காலாய் கைரெண்டாகில்
நடுத்தாமரை மெலத்தளித்து நடுவிலேகி
மேமப்பா யீராகி மெய்யிலோடி
மேறுனாற் பாவெலும்பாய் பிணைப்பிசைந்து
போமப்பா லதிலோடி புக்குமாகில்
புக்கியதி லடங்கிநிற்கும் புதுமைகேளே. 184

கேளடா மூலத்தி லந்நாடிபத்து
    கிருபையுடன் முந்திநிற்கும் கேளுமைந்தா
ஆளடா யன்னாடி யதிலேகேளு
    வாதிசிவ வுந்திமுத லாகிநிற்கும்
ஊளடா மும்மூல முருவாய்தோன்றி
    உத்தமனே கீழ்மேலு முறவாய்நிற்கும்
தாளடா தடாகமென்ற யமுர்தத்தப்பால்
    தலைதனிலே யீஸ்வரன்தான் தவஞ்செய்வாரே. 185

செய்வாரே செய்வினை நல்வினைதானாகும்
    செறிவினை தான்மூன்று மறிந்திடமதாகும்
மைவாரே மயேந்திர யிந்திரமான்றல்கண்டு
    மவுனத்தி லமுர்தமுண்டு மருவிப்பாரு
சைவாரே சத்தமொடு பரிசரூபம்
    சரமான ரசகெந்தம் வகைதோர்கண்டு
முய்வாரே முத்தசித்தி யிரண்டுமறந்து
    முன்வினையை தானறுத்து முடிவிப்பாரே. 186

முடிவிப்பார் தொண்ணூற்றார் தத்துவந்தான்மைந்தா
    மோர்கருவி தந்து ரட்சிப்பார்பாரு
அடிவிப்பா ரன்னாடி நர்ம்பேகேளு
    அப்பனே யெழுபத்தி னாயிரந்தானாகும்
வெடிவிப்பா ரந்நாடிதனிலே மைந்தா
    விர்த்தாந்த மென்றதொரு விஷ்ணுநாடி
எடிவிப்பார் யமருத்திர னாடியாகும்
    யிடையதுவின் பின்கலைதான் யிரண்டதாமே. 187

ஆமேகேள் புலத்தியனே மவுனவானே
    அறையுறோம் முதுவெலும்பு பதினாறாகும்
மூமேகேள் முடியதுதான் துவாரம் சொல்வோம்
    முப்பத்தோர்க் குழித்துவார முறையேயாகும்
மாமேகேள் மையெழுக்கு வுதிரமாகும்
    மைந்தனே னானாழி வாதமாகும்
கேமேகேள் முன்னாழி பித்தமாகும்
    யேரான னானாழி சேத்துமமாமென்றே. 188

என்றான மூனறைகோடி ரோமத்துவாரம்
இயல்பான மலத்துவார மிருபத்தென்கோடியாம்
மூன்றான ரெத்தஐயம் பலமுமாகும்
மூதண்ட மாங்கிஷந்தா நூறுபலமாகும்
கென்றான கெந்தமது யென்பலமுமாகும்
கேள்மகனே ரோமமது நூத்தெட்டுகோடியாகும்
மென்றான மேதைபல மிரநூறாகும்
மேல்வைத்த தோலதுதான் முந்நூத்தாறுபலமாமே.189

ஆமப்பா னெணந்தானு மாறுபலமாகும்
அப்பனே குடலதுதான் முந்நூத்தேழு பலமாகும்
வாமப்பா வழுக்கைநால் பலந்தானாகும்
மகத்தான கண்கள்ரெண்டு மைங்களஞ்சனாகும்
நாமப்பா நாக்கதுதா நால்களஞ்சதாகும்
நாம்சொன்னோம் மூக்கதுதான் முக்களஞ்சதாகும்
காமப்பா கன்னமது நாக்களஞ்சதாகும்
கருவான யெழும்புநூத்திபத்து னென்பலங்காண்பாரே.

பாரடா யெறச்சியது நூத்தருவத்தஞ்சு
பாலகனே மூளையது முப்பலந்தான்பாரு
தாரடா தாமரை பொர்க்கமலங்கேளு
தருவான ஐங்களஞ்சி யாகுமாகும்
சாரடா சலப்பையிதான் முழந்தான்நீளம்
சடத்தான கருகள்தான் தொண்ணூற்றுயாறாம்
ஆரடா வாகதொகை செடலக்கூறு
அப்பனே அறைந்து பலமாக்கினோமே. 191

ஆக்கினோ மகத்திய னான்மறைகளுக்கு
மங்கங்கே ரூபமாகி மனமறிவால்கண்டு
போக்கினோ மனமதுவில் குணந்தான்மூன்று
பொருளினிட மூலமெல்லாம் போற்றிச்செய்தோம்
தேக்கினோ மளவில்லாச் செடலக்கூறை
தெளிவான காவியந்தான் காண்டம்ரெண்டில்
நூக்கினோம் பாடல்நூத்தி தொண்ணூறுக்குள்
நுண்மையதாய் சொல்லிவிட்டோம் காண்டம்ரெண்டே.

காண்டமாம் முதல்காண்டம் யோகசித்தி
கருவரியாப் பாலகர்க்கு கருவாய்ச்சொன்னோம்
வாண்டமாம் வாசியென்ற வாயுஸ்தம்பம்
வகையாகச்சொன்னமப்பா அப்யாசந்தான்
மூண்டமாம் முதல்காண்டம் தெரிசனம் பெற்றோர்க்கு
மூலவகை யாறுபனிரெண்டுங் காணும்
ஆண்டமா மண்டசராசரங்கள் கண்டோர்
அவற்றுவாத காவியத்தின் காண்டமொன்றே. 193

ஒன்றான யோகபதி வாழ்வைகண்டால்
ஓகோகோ பூரணத்தின் வருளைக்காண்பார்
ரெண்டான காண்டமிதின் கூறைச்சொன்னோம்
நெறியுள்ளோ ரறிந்துகொள்ளும் நேர்மைகூர்தான்
அன்றான புலத்தியனே யென்கண்ணேகேளு
ஆதிமுதல் லிந்நூல்தான் வுபதேசங்காணு
முன்றான வுபதேசம் மூன்றாங்காண்டம்
முடிந்துதப்பா மூன்றாங்காண்டங் காணே. 194

காணுகின்ற பரப்பிரம்மப் பருவந்தன்னை
கண்டறிந்தோம் புலத்தியனே முழுதும்சொன்னோம்
ஆணுகின்ற அகமஞ்சி விந்நூல்பாடி
அகண்ட சராசரங்களெல்லா முற்பவித்தோம்
வாணுகின்ற வரைபாடில் துறையாய்க்கண்டோம்
மாறல் பனிரண்டாக் கரைகண்டோம்பார்
மாணுகின்ற பரப்பிரம பருவங்கண்டோ
மயேந்திர சிறுபருவமதி யாதிகேளே. 195

இரண்டாங் காண்டம்
பரப்பிரமப்பருவம் மு ற் றி ற் று.

மூன்றாவது காண்டம்

ஆதிபரப் பிரமம்

ஆதிபரப் பிரமசர சோதியின்பாதம்
அன்பதினால் பூசித்து தெரிசித்தப்பால்
சோதிபரை தேசிவுமை பாலையம்பாள்
சொர்ணபரி பூரணத்தின் கமலங்கண்டு
வேதிபர னாதவிந்தி னமுர்தமுண்டு
வேதாந்த நாதவெளி வொளியுங்கண்டு
வாதிபர தேசியென்று முற்பவித்தோ
மாணாக்க ளறிவதற்கு வசனித்தோமே. 1

வசனித்தோம் காவியந்தா னிந்நூல்பாரீர்
வாதியென்று முற்பவித்தோர் வறிந்துகொள்வீர்
அசனித்தோம் காண்டமிதின் முப்பொருளைகண்டோம்
அறிவுள்ளோ ரறிந்துகொள்ளும் திரிகாண்டந்தான்
தசனித்தோம் கருவிகரணாதி யந்ததாரணியில்
நாதாக்கள் மறைத்தார் கண்டீர்
தெசனித்தோம் கருக்குருவும் திருவுறுவுமநந்தம்
தெளிவான யாதியென்ற திரங்கண்டாயே. 2

திரமான பராபரமாம் சின்மயத்தின் சோதி
தெளிவாக வ்ருளுகின்றேன் செயமாகத்தான்
பரமான பாலையப்பா வாலையந்தான்
பதிந்த பதிபாச உபநிடமதின்கூறை
வரமான னாறப்பா சரந்தான்அம்பு
மகத்தான மண்டரண்ட வமுர்தம்நீராம்
கரமான நாணிசரமிழுத்து வொன்று
கண்மணியே மார்பான கறைகாண்பாயே. 3

காணுவாய் புலத்தியனே கருவின்வாரை
கலியுகத்துக் காகவல்லோ கிரந்தகத்தை
வேணுவாய் தெளிந்தறிவால் கரையேறினாய்
விசையமென்ற அஞ்சறிவால் பஞ்சங்கண்டோம்
வாணுவாய் யாணுரெண்டின் கலைதானுத்தி
மதிநடுவி கருவிமகியுமிர்வு மூன்றால்
ஏணுவாய் யிடகலையின் சந்திரயோக
மிடகலையின் வடகலையால் யிடவூடாமே. 4

ஊடான சூரியகலை ரவிவீடாகும்
    உத்துநின்ற சந்திரகலை மதிவீடாகும்
ஏடான யிதுநடுவி லக்கினிதான்கூட
    யிரவிகரு பரப்பிர்ம்ம மிருந்தபீடம்
காடான மலைமூலி பூட்டின்பூடு
    கருவுதித்த உருவுறு திரிகாண்டந்தான்
பூடான உயிர்களுட குருவாய்நின்ற
    பூரணத்தின் மூலவொளி ஓதங்கேளே. 5

கேளப்பா புலத்தியனே அண்டமேரு
    கிரிமேரு துருககிரி வடவால்க்காணு
ஆளப்பா வதுக்கப்பால் கேசரியைக்கண்டு
    அருள்பெருகி அருளறிவி லதீதங்காணு
வேளப்பா வேதாந்த சகஸ்த்திரத்தைக்காணு
    விந்துநாதத் துணியைத்தான் அறிவாலொட்டு
போளப்பா பூரணமாங் கமலபிண்டம்
    புகழ்கெவுன வண்டரண்ட குறுவைக்காணே. 6

குறுவான சுருவத்தை புலத்தியாகேள்
    கூறுகிறோம் மகாதெளிவாய் கூர்ந்துகாணீர்
அறுவான ஆலையந்தா னாதியாதி
    அண்டசரா சரங்களெல்லாம் ஒன்றேவீதி
சுறுவான வண்டமெல்லா மந்தம்மந்தம்
    சோதினாதத் துளியாம் பிரகாசந்தான்
கறுவான அந்தமெல்லாம் மெங்கும்யெங்கும்
    கறுங்காக மதுவினிடக் கருத்தைக்காணே. 7

காணுகிற பொருளெனவே தொத்துவாறு
    கபாலமென்ற வகண்டமதின் கருவேயெல்லாம்
வாணுகின்ற காவியந்தா னிந்தநூலில்
    வசனிக்கும் வார்த்தைதனை மைந்தாகேளும்
ஏணுகிற யிடமிருப்பு நாமமந்தவாறு
    விரிவில்லாப் பொருளாக விரித்துநாமும்
ஓணுகின்ற காண்டமிதின் சருக்கந்திரியாம்
    உதித்தவிதியதைத் தவருள் உரைசெய்வோமே. 8

உரையான பொருளினது துறையேகேளு
ஓகோகோ ஆற்றிவா ரகத்தினென்வாக்கு
பரையான துரைதிரியில் வரையார்கண்டோம்
பாடினோம் பஞ்சைமதி லஞ்சைவிண்டோம்
கரையான வரையில்நின்று வமுர்தமுண்டோம்
கருவமுர்த கனிபழத்தை கருத்தாலாண்டோ
மரைவான புஷ்பமல ரிதழ்தன்னாலே
மாயிரத்தெட் டிதழ்தன்னால் அர்ச்சனைசெய்தோமே.

செய்தோமே தொண்ணூத்தார் தத்துவமுங்கண்டோம்
செடலத்தி னாதார பூசைசெய்தோம்
அய்தோமே ஆதார வறிவையெல்லாம்
மகத்திவர்க கைலாச முடியைக்கண்டோம்
கைதோமே கயிலாச முடியைக்கண்டோம்
கணக்கில்லா வட்சரத்தி நிலையுங்கண்டோம்
மைதோமே வயதஞ்சில் நவகோடிசித்து
மாடினோம் புலத்தியரே நாட்டினோமே. 10

நாட்டினோ மெனைக்கண்டு யீசன்சொன்னார்
நாம்கண்டு வஷ்டதிக்கு விசயம்செய்தோம்
எட்டினோ மிதின்பிறகு மிந்நூல்பாடி
அகண்டரண்டம் பேரண்டம் வகண்டமூன்றில்
காட்டினோம் கருக்குறுவுதனில் வீண்டோடு
கைப்பாகம் செய்பாகம் கனக்கலாபம்
மூட்டினோ சிவசிந்துவதனில் சொல்வோம்
முதண்டமும் முலமுணர்வோ னாமே. 11

முணர்வதற்கு காவியந்தா னிந்நூலாதி
முப்பொருளின் மூலமெல்லா மிந்நூல்விள்ளும்
வணர்வதற்கு வழலையென்ற வாதங்காண
வசனிப்போம் வாதியப்பா திரிகாண்டந்தான்
ஆதிசிவ மெச்சிமகிழ்ந் தருளுஞ்ஞானம்
அப்பனே வுணர்வதற்கு வழலைகாண்பீர்
பாதிமதி சடையணிந்தோ னன்பினாலே
பகர்ந்ததொரு சோதிவொளி மறிவாய்க்காணே. 12

சந்தந் திருப்புகழ்

காணும்மனமதுவே புகலஓணும் குருசெயலைதிருஓணுந்
திருகருவேபுரி ஊணும்வுரு வேறுபட அமைப்பாமே
ஆணுமனமிதுவே யகல்பேணுமதி லுறவியொளிஓணும்
பொருளிதுவே கதிகாணுங்கதிர் குருவேசாலும் நகையா
வாணுமனமதுவே கூசும் கூணும் குருடாய் லபிக்கும் (மே
ஊணும் வடவாசலாகி ஏணுமதுவா லுருளைகூர்மாதே
தோணுமனமறிவே யரிஆணு வெண்மருவிவீடும்
தூணுதுரும்பா லதுவேமுணு மதுகூடியுறமனதாலே. 13
(யம்
ஆலையமைந்தாரமைந்த ஆதாரங்காணில் மிகுவாலை
சூழ்ந்தபர ஞானவொளி ரவியிரவி மிகவாலே
காலையங்கரங்கண்டு காரணக்கேசரியில் பாலையாம்
பத்துமடு பகருவோம் குருவின்மொழி
சாலையாம்கருவி கரணாதியாம் பவக்கடலை
மாலையாம் விட்டகல மரசுகளை நீக்கிநடுபுவிமானே.

வேறு

காணப்பா புலத்தியனே பதனமின்னூல்
காட்டாதே சித்தருக்கு கருவிள்ளாதே
வாணப்பா வெகுபதன மாகவல்லோ
வகத்தியனான் சொன்னபடி குகையில்வைத்து
பூணப்பா யோகதெரிசனமே செய்து
பூசைசெய்வாய் மனோன்மணியைப் புகழ்ந்துநீயும்
வேணப்பா வருள்புரிவா ளாத்தாள்கண்டு
வேதாந்த நாதவிந்தை விளம்புவாயே. 15

விளம்பினதோர் சற்குருவை யார்தான்கண்டார்
விதமான காவியந்தா னறியாசித்தர்
ஒளம்பினதோ ரின்னூல்தான் பார்க்காவிட்டால்
வொன்றுந்தான் பலியாது வுற்றுக்கேளும்
எளம்பினதோ ரிந்தநூல் கண்டாரானால்
யெடுத்ததுறை சகலமுந்தா னிதினால்சித்தி
குளம்பினதோர் முதற்குருவா மூன்றாங்காண்ட
முரையறியா ரறிந்துகொள்ளு முணர்வோம்நாமே. 16

முணர்வோ நாமின்னமொரு சேதிகேளு
மூதண்ட ரவிமதியின் பிரகாசத்தை
அணர்வோம் நாமறிந்துமட்டும் புலத்தியாகேள்
அண்டபிண்ட யிரவியதின் அடவுனாலே
பணர்வோம் நாம்சின்மயத்தைப் பூசைசெய்தோம்
பராபரத்தி னருள்புரிந்து மணிந்தோம்பாரு
உணர்ந்தோம் நாம்வுரைபடா மணியைக்கண்டு
ஓகோகோ வதில்தெளிந்தோ முரைக்கக்கேளே. 17

உரைக்கக்கேள் புலத்தியனே கேசரியைச்சொல்வோம்
உண்மையதாய் சிவன்சொன்னார் வுகந்துநாமும்
விரைக்கக்கேள் வசனித்த கருவேதென்றால்
வையகத்தி லரிதான மரங்களெல்லாம்
கரைக்கக்கேள் காதனப்பா ஆகங்கண்டு
கார்மேகம் புவன கேசரியினாலே
அரைக்கக்கே ளதுனளவில் கோடாகோடி
அகண்ட நவகோடி சித்துமாடலாமே. 18

ஆடலா மகண்ட சராசரங்கள்காண
அதிதமென்ற பொருள்களெல்லா மதினால்கண்டோம்
பாடலாம் பரமண்டலங் கொண்டேயாகும்
பாலகனே கேசரத்தில் பாயலாகும்
ஓடலா மோங்கார மூலத்தேகி
ஓகோகோ வாதமென்ற வொடுக்கங்காணும்
ஏடலா மிமகிரியின் பூட்டைதாமு
யின்னூல்தான் காவியத்தி லிருப்பிடஞ்சொல்வோமே.

சொல்லவொண்ணா மூலமெல்லாஞ் சொல்வோமைந்தா
சோதியென்ற வாதிமகன் வயித்தியற்கேநாமும்
வல்லவொண்ணா வயித்தியம் பொய்வாளுமற்றான்
வசனிப்போம் சகலத்திற்கும் குருதான்சொல்வோம்
அல்லவொண்ணா ஆதியிது னாலேயப்பா
அகண்டம்வரை அந்தந்தொட்டு ஆடுதற்குச்
சொல்லவொண்ணா குருவசனம் சொல்வோம்நாமும்
சொல்மொழியின் னூலிதுதான் கூர்ந்துகேளே. 20

கூறக்கேள் வுள்மூல மூலாதாரம்
குவிந்துநின்ற வுள்மூல மாளுதாரம்
ஆறக்கே ளடிமூலம் நிராதாரந்தான்
வதுநடுவில் நடுமூல மண்டபிண்டம்
மூலக்கேள் வுள்மூல முடிவில்நின்று
மூர்க்கனாந் தத்துவத்தின் முறைமையெல்லாம்
மாறக்கேள் புலத்தியனே வழலையாதி
வசனிப்போ மாணாக்கள் மகிழ்ந்துபாரே. 21

காரசாரம்

பாரப்பா நடுமூல மண்டரண்டம்
பரப்பிரமம் நாதவிந்து காரசாரம்
ஆரப்பா வறிவார்க ளண்டக்கூறை
அழுந்துதப்பா அகாரவிந்தா லனேகமாச்சு
சாரப்பா காரசாரம் விந்துவாச்சு
சமர்த்தான காரமது நாதமாச்சு
மாரப்பா வண்டோடு பிண்டமாச்சு
மகத்தான பரப்பிரம மதுவேயாச்சே. 22

ஆச்சப்பா அகாரமது விந்துவாச்சு
அப்பனே வுகாரமது நாதமாச்சு
மாச்சப்பா வோங்கார வட்டமாச்சு
வட்டத்தில் பரப்பிரமம் அண்டோடாச்சு
ஓச்சப்பா ஓர்விட்ட ரீங்காரமாச்சு
ஒகோகோ ரீங்கார மிதுவேயாச்சு
பாச்சப்பா பரமண்ட கேசரிதானாச்சு
பாலகனே கெவுனஅண்ட குளிகையாச்சே. 23

குளிகையென்ற அண்டத்தால் பிண்டமாச்சு
கூறுகிறோ மூன்றெழுத்து மொடிங்கிப்போச்சு
அளிகையென்ற வண்டமதா லெல்லாமாச்சு
அப்பனே சவுக்கார மிதுவேயாச்சு
பெளிகையென்ற பேரண்ட மனிதராச்சு
பேசுகிறோ பேரண்டம் கேசரிதானாச்சு
மளிகையென்ற மவுனஅண்டம் நாடிலாச்சு
மைந்தனே யிதுமூன்றால் வழலையாச்சே. 24

வழலையென்ற மும்மூன்றா லொன்பதாச்சு
மகத்தான குருவருளால் பத்ததாச்சு
அழலையென்ற கேசரியைத் தொட்டு
ஆடலா மறுபத்து நான்குசித்து
கழலையென்ற செவிகொண்ட புருடர்களேகேளும்
கடையில் விற்குமருந்ததுவால் காரசாரம்
சழலையென்ற காரமது காரசாரம்
சமர்த்தான அண்டமதா லறிந்துபாரே. 25

கேசரி

அறிந்துபார் அஷ்டநவ கோணமைந்தா
அண்டத்தை சூழ்ந்துநிற்கு மதுவானக்கேளு
முறிந்துபார் மும்மூலஞ் சொல்லக்கேளு
மூதண்ட மாதியந்தங் கேசரியைக்கேளும்
கறிந்துபார் காகனென்ற கேசரியைக்கேளும்
கரிமேக கதிர்கெவுன கல்லேகேளும்
மறிந்துபார் மகத்தான கெவுனக்கல்லா
மாட்டுகிறோ மாணாக்கள் மயங்கிடீரே. 26

மயங்காமல் நீகேளு புலத்தியனேயையா
மகத்தான மூன்றாவது காண்டந்தன்னில்
தயங்காத கேசரிதா னாகாசத்தில்
தவஞ்செய்யும் விடையதனைச் சாற்றக்கேளும்
அயங்காத ஆண்பெண்தான் பிறந்தநாள்
மேலாராவ மாதத்தில் பிடித்துவந்து
கெயங்காமல் கேசரியின் விடைரெண்டுக்கும்
கேள்மகனே கெஞ்சாவின் வித்தைக்கேளே. 27

வித்தான விரைபலந்தான் கொண்டுநீயும்
விளங்கவே சிலைதனில் கிளிதான்கட்டி
புத்தான பூனீரு பலமைந்தாக
புகழாகப் பாண்டத்தி லாண்நீர்விட்-டு
எத்தான யின்னீரைக் கலக்கிமைந்தா
யெடுத்ததனை வடித்திடுவாய் படிரெண்டாக
சுத்தான பெருஞ்சட்டி தன்னிலூற்றி
கார்மேக மதுபோலே புளிவிறகால்சாடே. 28

சாடுகிற வகையென்ன செல்லக்கேளு
　　சமர்த்தான கிளியதனை வதனிற்போட்டு
ஆடுகிற யிரண்டுநாழிகை மட்டாக
　　அப்பனே தீயெரிப்பாய் அப்பால்கேளும்
ஏடுகிற தீயொத்த சட்டிவாங்கி
　　யிறக்கிவைத்துக் கிளியதனை யெடுத்துப்பாரு
சூடுகிற சுத்தியிட மகத்தாஞ்சுத்தி
　　சூட்சமதாய் சொல்லிவிட்டோ மின்னங்கே ீள. 29

கேளப்பா கிளியதனை அவிழ்த்துப்பாரு
　　கிருபையென்ன பருப்பதனின் விடந்தான்போச்சு
ஆளப்பா மவுனஅண்ட விடமுங்கொண்டு
　　அப்பனே வித்தெடுத்து சொல்லக்கேளு
போளடா பூனீர்தன் னீரில்மைந்தா
　　புகழாக வடித்திருநீ பலம்நூல்கொண்டு
வேளப்பா விந்ததுவைப் பீங்கான்றன்னில்
　　விளங்கவே யிட்டுமைந்தா பூனீர்வாரே. 30

வாரப்பா யிரண்டையுந்தான் கூட்டிமத்தி
　　மதியென்ற யிடம்வைக்க ரவியில்வைத்து
ஏரப்பா யிரண்டுநாழிகை மட்டாக
　　யிந்தபனி நீரையல்லோ தெளிவைவாங்கி
காரப்பா கல்வத்தில் வித்தைபோட்டு
　　கல்வத்தில் நீர்விட்டுச் சாமமாட்டு
மாரப்பா வழித்தெடுத்து பிசனிபோல
　　மைந்தனே மெழுகதனை திரியாய்ப்பண்ணே. 31

பண்ணப்பா நாகனென்ற விடைரெண்டுக்கும்
　　பன்னீரைக் கொண்டுநீ மெழுகரைத்து
அண்ணப்பா சுன்னமதில் பிசரிநீயும்
　　ஆண்பெண்தான் கருங்காகம் விடைரெண்டுக்கும்
பொண்ணப்பா வாரியள்ளி அன்னம்போட்டால்
　　பொரிக்கியுண்ணும் விடைரெண்டும் புகலக்கேளும்
வண்ணப்பா வாரமட்டு மிம்முறையாய்ப்போட்டால்
　　மைந்தனே வதின்வர்ண மாதளைபோலாமே. 32

ஆமெனவே ஓம்சிவாயநம வென்றோதி
அகாரவிந்து உகாரமதி னாதம்காகம்
ஓமெனவே மயநவ சிவ்வென்றுமாறி
வுட்சாடித்து லட்சமுரு வரையிராறில்
ஊமெனவே கேசரியின் விடைரெண்டுக்கும்
உத்தமனே சுக்கிரமதில் பொலியேசெய்து
நாமெனவே ரோமமெல்லாம் யெட்டெரிந்து
நடுபாதி மார்பிரளப் பிளந்திடாயே. 33

பூனீரு சுத்தி

பிளந்திடா மணிபூர்வ முற்பவிக்கும்வீடு
புகழான நடுவீடு கேசரியின்பீடம்
அளந்திடாய் அவ்வீட்டில் பூர்வக்கல்லு
அதிலுதிக்கு மணியதனை அடவாய்ச்சொல்வோம்
தளந்திடா யாண்பெண்ணு விந்துநாதம்
தகமையென்ற யிரண்டுவிடைப் பையைவாங்கி
எளந்திடாய் பூநீறு மாண்ணீறும்கூட்டி
யேகசரிப்படி ரெண்டில் கரைத்திடாயே. 34

கரைத்திறுத்துப் பாண்டத்தில் தெளிவைவாங்கி
கண்மணியே பெருஞ்சட்டி தன்னில்வார்த்து
அரைத்திறுத்த சட்டியதில் மேல்கையைக்கொண்டு
அப்பனே கிளிகட்டி வதனிற்போட்டு
மரைத்திருந்த சட்டிமேல் சட்டிமூடி
மைந்தனே வடுப்பில் வைத்து புளிவிறகினாலே
தெரைத்திறுத்து யெரித்திடுவா யிரண்டுநாழி
செயலான வணிக்கல்லின் விழந்தான்போச்சே. 35

தயிலசுத்தி

விழமான வுடற்கல்லு வதிகசுத்தி
விளம்பினோ மதையிறக்கி வூறவைத்து
அழமான பூநீறு மகத்தானசுத்தி
ஆநீறு காட்டாக்கா லசடாய்ப்பாரும்
புழமான பூநீறு சுத்தியாச்சு
புகலுகிறோம் அண்டோடு தயிலசுத்தி
பெழமான பேரண்ட மனிதரோடு
பேரான பச்சோடு முதுதானெஞ்சே. 36

அஞ்சான பேரண்ட மப்பால்கேளு
அரையுறோ மேரண்டம் கேசரிதான்காகம்
பொஞ்சான வதின்னடை மஞ்சுகொண்டு
போக்கோடே நாதவிந்தை வெ்வ்வேறேவாங்கி
மெஞ்சான பீங்கானில் பதனம்பண்ணு
மேலான பேரண்டம் சவ்வைப்போக்கி
பஞ்சான யிவ்வோடே பதனம்பண்ணு
பாலகனே அகண்டஅண்டம் பாடுறோமே. 37

சகலசரக்கும் இத்தயிலத்தில் சுத்தி

பாடுகிறோம் பரப்பிரம்ம வண்டக்கூரை
பதிந்தவைந்து பச்சையைந்து முழுதாய்க்கொண்டு
மூடுகிறோ முன்போல விந்தெடுத்து
முனையான பீங்கானில் பதனம்பண்ணு
ஆடுகிறோம் அண்டோட்டின் சவ்வைப்போக்கி
அப்பனே நரிமண்டை அழகாய்க்கொண்டு
நாடுகிறோம் நாலையுந்தான் பாண்டத்திட்டு
நாதாந்தக் கருமத்தம் படிசாற்றாலே. 38

அஞ்சுறு

நாலான வைந்துருவா மிதுதானப்பா
நாளாக மட்டாக ரவியிற்காய்ந்தால்
ஆலான வைஞ்சுருவு மெடுத்துக்கொண்டு
அழகான கல்லுரலி லண்டம்போட்டு
சாலான சற்குருவை ஓம்மறியென்று
சகலஉப நயவசிம தியானஞ்செய்து
ஊலான யிருப்புலக்கை அளவாய்க்கொண்டு
ஓகோகோ சாடுவாய் தூளதாக்கே. 39

தாக்கடா யிருசாதி விந்துநாதம்
தனதாக பதனம்பண்ண சருகெடுத்து
நோக்கடா மாவுதனி லின்னீரைவிட்டு
ஓபாயமாய் சாடிவர மெழுகுபோலாகும்
வாக்கடா பழம்பாண்டந் தன்னிலிட்டு
பாலகனே மேல்சட்டி பதமாய்மூடி
சேக்கடா மண்சீலை பலுவாய்ச்செய்து
செயமான அண்டமதை ரவியில்வையே. 40

இரவியான ரவிதனிலே பதமாய்க்காய்ந்தால்
நவப்பிரம வண்டமதால் எல்லாஞ்சுத்தி
அரியான பாண்டமதை யெடுத்துக்கொண்டு
அரையளவாய்க் குழிளயவு அளவாய்த்தோண்டி
பரியான பழங்கவசம் குழியில்வைத்து
பாண்டத்தை தானெடுத்து வதின்மேலப்பா
வரியான காட்டுமுட்டை குழிக்குமேலா
மதுவாகக் கொண்டுவந்து வைத்திடாயே. 41

வைத்திடாய் புலத்தியனே காளமேக
மகத்தான சதாமேகம் வீசினாப்போல்
குத்திடாயக் குழித்தயில மிறங்கும்பாரு
குருவான சற்குருதான் சொன்னநீதி
அத்திடாய் ஓம்ஆம் ஊம்அறிம்
சரவணபவ வென்று அடவாய்நீயும்
எத்திடாய்க் குழித்தயில மெடுத்துக்கொண்டு
யிம்மூல தியானமதை யிருத்திப்பாரே. 42

இருந்திப்பா ரரன்சொன்னா ரிந்தமூலம்
யெடுத்தனப்பா முதல்மொழிதா னுபதேசமின்னூல்
அருத்திப்பா ரத்தயில மகிழ்வாய்க்கொண்டு
அரகரா பதனமதா யடவாய்வைத்து
பொத்தியடா யிம்மூலந் தியானபூசை
புகழாக வாரமட்டும் தியானபுசை
வர்த்திப்பா யமுர்தவாலை தயிலங்கொண்டு
மணிநீர மென்றதொரு பையைவாங்கே. 43

வாங்கியே கத்திகொண்டு நடுவேகீறி
மாணிக்க பூரகத்தின் மணியைவாங்கி
ஆங்கியே மணியெல்லாம் பீங்கான்கொண்டு
அம்மணியே அதிலிட்டு சலந்தான்வார்த்து
சோங்கியே அம்மணியை சுத்திசெய்து
சூட்சும சடாதரப்பீடந் தயிலங்கொண்டு
பேங்கியே பீங்கான்றன் னதனிலிட்டு
பேரான தயிலமதை வார்த்திடாயே. 44

வார்த்திடாய் மேற்பீங்கான் வலுவாய்மூடி
மகத்தான ரவிதனிலே பத்துசாமம்
ஏர்த்திடாய்ப் பீங்கானும் ரவியிற்காய்ந்தால்
யென்னவென்று நினையாதே யிரண்டரைமாத்தி
மாத்திடா யிந்தபடி முறையாய்வந்தால்
மக்களே மெத்தநன்று நிறையைக்கொண்டு
காத்திடாய் காகனென்ற பேரண்டந்தான்
கண்மணியே யிரண்டதுதா னீள்சார்வாங்கே. 45

வாங்குதற்கு கேசரியின் பேரண்டத்தை
மக்களே கொண்டுவந்து பீங்கான்நாலில்
ஊங்குதற்கு வுடைத்ததனை பீங்கான்தன்னில்
ஓகோகோ வெவ்வேறே வார்த்தாயானால்
ஏங்குதற்கு விந்ததுவில் தயிலம்விட்டு
யென்மகனே சரியெடையா யெடுத்துக்கொண்டு
பாங்குதற்குக் கல்வமதில் மணியேபோட்டு
பாச்சடா யித்தயிலம் கொண்டுஆட்டே. 46

ஆட்டுவாய் சாமமைந்து வித்தாலாட்டு
அப்பனே யிதைவழித்து நாதம்கொண்டு
தாட்டுவாய் தயில்மதை வதனில்விட்டு
சரியிடையாய் கொண்டுநீ வழித்துமையை
காட்டுவாய் வழித்தமையைக் கல்வத்திட்டு
கார்மேக மித்தயிலங் கொண்டுஆட்டு
மாட்டுவாய் சாமமைந்து விடாதேயாட்டு
மகத்தான வுடல்மெழுகை வழித்திடாயே. 47

வழித்ததனை வுண்டைசெய்து பரணியில்வைத்து
மகத்தான தயிலமதை பதனம்பண்ணு
பழித்ததனை யிச்சுத்தி யார்தான்செய்தார்
பாலகனே காவியந்தான் பார்த்தோர்செய்வார்
எழித்தான வின்னூல்தான் புலத்தியாகேள்
யில்லத்தி விதைவைத்துப் பூசைசெய்தால்
அழித்ததனை யிச்சுத்தி யான்தான்கண்டு
அருளினோ முடல்க்கல்தான் சுத்தியாச்சே. 48

அண்டசுத்தி குகை

சுத்தியா மகாசுத்தி சகலத்திற்கும்
சொன்னபடி செய்தாக்கா லெல்லாஞ்சுத்தி
முத்தியா மும்மூலம் சுத்தியாச்சு
மூதண்ட வண்டசுத்தி குகைதான்கேளு
அத்தியாம் பேரண்டம் பச்சையாக
அப்பனே முழுவோடு வொன்றுகொண்டு
பத்தியா மேரண்ட மைந்துகொண்டு
பாங்கான மவுனஅண்ட மைந்துகொள்ளே. 49

கொள்ளடா மூன்றையுந்தான் முழுதாய்க்கொண்டு
குருபரணைத் தியானித்து ஓமறிஓம்சிறியோமென்று
சள்ளடா யிரண்டுவிந்தை யுடைத்துவூத்தி
சமர்த்தான சவ்வெடுத்து கிளிதான்கட்டி
பெள்ளடா பேரண்ட மிடித்துத்தூளாய்
பேரான சீலையிலே கிளிதான்கட்டி
முள்ளடா மூன்றையுந்தான் பீங்கான்தன்னில்
மும்மூல விந்தைவிட்டு ஊரப்போடே. 50

குளிகையில் சுத்தி

போடப்பா யிரண்டரைநாழி கைமட்டாக
புனிதமென்ற கிளிமூன்றுூ மூறிற்றானால்
ஏடப்பா யெடுத்ததனை தயிலத்திட்டு
யிரண்டரை நாழிகைதா னிருந்துதானால்
ஓடப்பா கிளியதனை யெடுத்துக்கொண்டு
ஓகோகோ முன்சொன்ன பூனீர்சுத்தி
ஆடப்பா அந்நீரில் பூநீர்போட்டு
அப்பனே கரைத்திறுத்து அடுப்பிலேற்றே. 51

ஏத்தப்பா கிளிமூன்று வதனிற்போட்டு
யெறியடா யிரண்டரை நாழிகைமட்டாக
வேத்தப்பா தீயாற்றி யிறக்கிவைத்து
விளங்குகின்ற கிளிமூன்று மெடுத்துக்கொண்டு
காத்தப்பா பீங்கானில் சலந்தான்வார்த்து
கழுவியதைக் கல்வத்தில் அவித்துப்போட்டு
ஆத்தப்பா முன்னாத விந்தெடுத்து
அப்பனே தயிலமதைக் கூடச்சேரே. 52

மூலஅண்டகுகை

சேரடா பீங்கானில் மத்தித்தேதான்
செயலான அண்டோட்டில் தயிலம்வார்த்து
ஆரடா வொருசாமம் விடாதேயாட்டு
அப்பனே மெழுகதுபோ லாகும்பாரு
மாரடா ஆட்டியதை வழித்துக்கொண்டு
மகத்தான தென்குலைபோல் குகைதான்செய்து
மூரடா முன்பதன வுண்டைவாங்கி
மூதண்ட குகையில்வைத்து சீலைசெய்யே. 53

செய்யப்பா மண்சீலை யேழும்செய்து
திறமாக ரவிமுகத்தில் சாமமூன்று
வையப்பா கடும்ரவியில் சித்திரையிலப்பா
மைந்தான காய்ந்தகுகை யெடுத்துக்கொண்டு
செய்யப்பா காட்டுமுட்டை வலுவாய்க்கொண்டு
கெசபுடந்தான் போட்டை யென்றால் மகத்தாம்நன்று
அய்யப்பா புடமாறி யெடுத்துப்பாரு
ஆச்சுதப்பா பூர்வக்கல் சுண்ணந்தானே. 54

பூர்வமென்ற வுடற்கல்லு சுண்ணமாச்சு
புலத்தியனே ஓம்நம சிவாயவென்று
அருவமென்ற சுண்ணத்தை சித்தியானதாலே
யப்பனே பூசைசெய்து பதனம்பண்ணு
நருவமென்ற சுண்ணத்தால் நவகோடிசித்து
நளினமதா யாடுதற்கு முறையேகேளும்
உருவமென்ற நீருவரத் தழைகளுக்கு
வுருக்கமதா யொருகடுகு வீதம்போடே. 55

உடற்கற்சுண்ணம்

போட்டையென்றால் புலத்தியனே சொல்லக்கேளும்
புறப்படுங்காண் மதுசலம்போ லாறாயோடும்
ஆட்டையென்றா லிச்சுண்ணம் பட்டுதானால்
ஆலகால விஷம்போல நீர்களோடும்
பாட்டையென்றால் பரிட்சையது பாருபாரு
பழுதில்லாச் சுண்ணமடா பதிவாய்க்கேளு
வாட்டையென்றால் வாலைமனோன் மணியின்பூசை
மகத்தான பூசைசெய்து வைத்துக்கொள்ளே. 56

வைத்துக்கொள் புலத்தியனே ராசயோகி
வளமான சுண்ணமதால் யெல்லாமாளும்
அத்துக்கொள் ளண்டபிண்டம் நீரிப்போகும்
யப்பாலும் சராசரங்க ளெல்லாம்நீரும்
கொத்துக்கொள் கொடிமுடிகள் நீரிப்போகும்
குருவான சற்குருதா னிதற்கீடுண்டோ
முத்துப்போல் சொரிந்திடுங்காண் வானமெல்லா
மும்மாரி யாகவல்லோ பொழியுங்காணே. 57

காணுதற்கு யிச்சுண்ண மின்னூல்சொன்னோம்
காவியத்தைப் போலேயொரு நூலுமில்லை
ஆணுதற்குப் பெருநூல்தான் பனீராயிரந்தான்
அப்பனே சுண்ணமது போக்கனந்தம்
வாணுதற்கு சித்தரோ டிணங்காதப்பா
வணங்காதே யொருவரோ டிணங்கவேண்டாம்
ஏணுதற்கு யிம்முறைதா னறியவேண்டி
யிருந்தோமப்பா குருவருளால் தவஞ்செய்தோமே.58

தவமான பெருந்தவமா மனேககாலம்
தவறுதலுமில்லாமல் தனதாய்ச் செய்தோம்
அவமான மில்லாமல் சிவன்தான்சொன்னார்
ஆதிசிவன் சொன்னமுறை யாலுங்கண்டோம்
முவமான மூலியடா அண்டமூலி
முப்புரத்தை வென்றசிவன் முணர்ந்தமூலி
எவமான மூலியதால் வழலையாச்சு
யெடுத்தனப்பா யிம்முறையா லெல்லாமாச்சே. 59

ஆச்சுதே வுடற்கல்லு பூர்வச்சுண்ணம்
அமுர்தமென்ற வண்டமதா லானசுண்ணம்
போச்சுதே குருவருளா லமைந்தசுண்ணம்
பூலோகம் பிரபஞ்சம் புகழும்சுண்ணம்
காச்சுதே கருவியதா லானசுண்ணம்
கற்சுண்ண மிதன்பெருமை காணொண்ணாது
ஏச்சுதே யிச்சுண்ணம் சகலத்திற்கும்
யிடைவிடாய் சற்குருவைப் போற்றிசெய்யே. 60

செய்யப்பா யின்னமொரு செய்திகேளு
செயமான கேசரியி னண்டமைந்து
பொய்யப்பா பீங்கானி லுடைத்துவிந்தை
போடடா விராகனிடை யிச்சுண்ணமைந்தா
மையப்பா யிச்சுண்ணம் பட்டபோதே
மகத்தான மதியமுர்த மிறங்கும்பாரு
அய்யப்பா வந்தமுதம் தேனுங்கூட்டி
அப்பனே மண்டலங் கொண்டருளுவாயே. 61

அருளுவா யென்மகனே புலஸ்தியனே அய்யா
அமுர்தமதை யுண்ணும்போ தடங்காவாசி
பருளுவா யிந்தமுர்தங் கொண்டாயானால்
பரப்பிரம சித்தியடா வழலைசித்தி
வருளுவாய் வாசியென்ற பீடங்காணு
மகத்தான யோகமதில் மருவலாம்பார்
தெருளுவா யிந்தமுத மூலங்கொண்டு
தெரிசிப்பாய் பராபரத்தைப் பூசிப்பாயே. 62

பூசிப்பா யாதார மூலாதாரம்
புகழான நிராதாரம் தராதரமுங்காணும்
மாசிப்பா சிவயோகஞ் செய்யும்போது
மதியமுர்த மிதைக்கொண்டு வாழ்வாய்நீயும்
ஏசிப்பா யிந்தமுர்தம் விளையாட்டல்ல
யேரண்ட கேசரியின் மகிமையாலே
ஆசிப்பா யதினாலே வனேகங்காலம்
ஆதியப்பா யதினாலே யோகவாழ்வே. 63

யோகவாழ் விதினாலே தெரிசினமாமப்பா
யுகங்கோடிக் காயமதுக் கழிவேயில்லை
அகங்கோடி பிரண்டாலும் யுகமாளாது
அளவற்ற சதாகோடி காலம்வாழ்வாய்
சுககோடி தினமளவில் வயதுண்டாகி
சூரியகலை மென்மேலும் பெருகுவாய்நீ
ஓகங்கண்டோ ராறுமில்லை புலத்தியாகேள்
ஓகோகோ நாமுமினி வென்றதாமே 64

ஒன்றான பூரணந்தா னாதியாதி
    ஓகோகோ பூரணமே அந்தம்அந்தம்
அன்றான பஞ்சறிவே சோதிசோதி
    அம்பரமா யாடிநின்ற யாலையந்தான்
நன்றான நாயதுவு பாலைவாலை
    நவச்சக்கிரப் பரப்பிரமஞ் சொரூபம்சொரூபம்
வன்றான வடவாலை மேருமேரு
    மாணாக்கள் கொஞ்சுகின்ற மதுவோடாமே. 65

ஓடான கேசரியாள் பீடம்பீடம்
    ஓங்காரம் ஓங்காரம் அரிங்காரகோசம்
வீடான பரப்பிரமம் ஓடேமூலம்
    வேதாந்த ஓம்ஆம்ஊ மிதுவேபீஜம்
ஆடான அண்டமதை பிண்டம்பிண்டம்
    ஆஆஉ ஓஓவிதுவே வாகி
மூடான மும்மூலம் தியானமந்திரம்
    மூர்க்கமுட னவ்வும்கிலியும் சவ்வோடாமே. 66

ஆமென்ற கருக்குருவு திருமூன்றாலே
    அண்டரண்ட பகிரண்ட புவனமெல்லாம்
வாமென்ற வடவாகி சுருபங்கொண்டு
    வளர்ந்துதப்பா வஷ்டதிக்கும் திசைபத்தாகி
மாமென்ற மண்டல சலமறுமூன்றாகி
    மமுர்தவண்ட கேசரியாய் வாகனமேயாகி
கேமென்ற கௌனமதாய் பட்சியாகி
    கிரியாகி மலையாகி துருகமாச்சே. 67

ஆச்சப்பா வத்துருக மேலேயேறி
    அங்குநின்று தியானித்து யோகம்பார்த்தால்
தாச்சுருவ மாகுமடா பிரசன்னதியானம்
    தாமன மனோன்மணியைத் தெரிசிப்பாய்நீ
வாச்சப்பா மவள்பீடம் பூசையாச்சு
    மகத்தான வாதமென்ற வழலையாச்சு
காச்சப்பா காய்கனியும் பூவுமாச்சு
    கருக்குருவு வுருவுமுதல் காணலாச்சே. 68

காணுகின்ற சோதிசுடர் பிரபையைத்தான்
காணரிதுகாணரிது யார்தான் கண்டார்
ஆணுகின்ற அகமதுவை யார்தான்கண்டார்
அகத்தியனான் கண்டறிந்தே னறிவினாலே
வேணுகின்ற வேதமதை யார்தான்கண்டார்
வேதநாதத் துணிவை யானுங்கண்டேன்
தேணுகின்ற முப்பொருளின் முறையார்கண்டார்
தேவியென்ற கேசரியின் திருவடிகண்டேனே. 69

கண்டதொரு புலத்தியனே சொல்லக்கேளு
கருவியென்ற பருவமெல்லா மறிவால்கண்டேன்
விண்டதொரு கண்டவிதி காட்சியெல்லாம்
வேதாந்த மென்றதொரு காவியத்தில்
அண்டதொரு பரப்பீட மாயிரந்தானின்னூல்
அமுர்தசறு வேதமென்ற மூன்றாங்காண்டம்
கொண்டதொரு முதற்பீடம் வுபதேசந்தான்
குருபரனே குருவருளால் மொழிதான்காணே. 70

காணுமதி விதியமைப்பால் எல்லாங்கண்டோம்
காவியத்தைக் கண்டவர்க ளறிவுள்ளோர்கள்
வேணுமென்று யின்னூலை வெகுநாள்தேடி
விவேகமென்ற பொருளெல்லா மிதுக்குத்தந்து
வாணுமதி வரமதற்கு ஆயிரத்தைவாங்கி
மவுனசித்த ரனைவோரு மகிழ்ந்தார்பாரு
ஓணுமதி யாவதற்கு ஓகோகோவாதம்
உருக்கமடா புலத்தியனே வுறுதியாச்சே. 71

கேசரி உருவு அஷ்டமாசித்துக்கு

உறுதியென்ற மூலமெல்லா மொடிக்கிச் சொன்னோம்
வுண்மையதாய் வழலையென்ற வுருவேகேளும்
குருதியா மகேசரியின் விடைரண்டப்பா
கூறியதோர் முன்சொன்ன பெலியேகொண்டு
மருதியாம் ரோமமதைக் கயட்டெரிஞ்சி
மட்டநவ தயிலமதி லூறப்போட்டு
கருதியாம் தியானமதை வுறுதியாகக்
கண்மணியே கிறிம்மறிம் நறிமென்றோதே. 72

ஓதப்பா லட்சமுரு தியானஞ்செய்து
ஓகோகோ நல்லுறலில் திருவேபோட்டு
தாதப்பா அஷ்டநவ தயிலங்கொண்டு
தனதான யிருப்புலக்கை கொண்டேசாடு
சாதப்பா தயிலமதை விட்டுவிட்டு
சாடுவாய் முச்சாமம் சார்வாய்மைந்தா
ஆதப்பா சாடிவர மெழுகுபோலாகும்
ஆதியென்ற மெழுகதனை வழித்துக்கொள்ளே. 73

கொள்ளப்பா மெழுகெடுத்து திரியாய்ச்செய்து
குருவான கேசரியின் விடைபோல்செய்து
உள்ளப்பா உருவாக வாண்பெண்ரெண்டு
உச்சிதமாய் உண்டுபண்ணி உயிர்களாக்கி
ஒள்ளப்பா கேசரியின் தலைமண்டோடு
உச்சியென்ற உருவினிட சிரசில்வைத்து
சொள்ளப்பா கைதனிலே கபாலம்வைத்து
செயலாகச் சிலையதுபோல் பதுமையாச்சே. 74

ஆக்குவாய் கேசரியின் முதுகெலும்பு
அப்பனே கையெலும்பு காலெலும்பு
ஏக்குவாய் கால்நிகங்கள் கைநிகங்கள்
இயலான தோல்நரம்பு ரோமமெல்லாம்
'பாக்குவாய் பாதம்நடு புட்டெழும்பு
பல்லுகடவா உதடுமூக்கு நாவு
காக்குவாய் கண்புருவம் உள்நாவோடு
கல்க்குடல் யீரல்பிச்சு கலந்தோடாமே. 75

ஆமேதான் மணிக்குடலு சவ்வோடாகும்
அப்பனே கேசரியி னுருவேவாங்கி
வேமேதான் விடைரெண்டு குருவாய்ச்செய்து
விவேகமுள்ள விஷச்சுண்ணம் பலந்தான்கொண்டு
கேமேதான் கேசரியின் யேரண்டமிரண்டு
கிருபையதாய் விந்தெடுத்து நாதத்தாட்டி
பாமேதா னிச்சுண்ணம் விராகன்போட்டால்
பனிநீர் போலாகுமப்பா பதத்தில்வாங்கே. 76

வாங்குவது நாதவிந்து பனிநீர்தன்னில்
வளமான சுண்ணமதில் பலந்தான்போடு
ஓங்குவாய் மெழுகதுவால் கூட்டிமத்தி
உருவான திருவுமே குருவால்பூசு
மாங்குவாய் மதிதனிலே யெட்டுசாமம்
வைத்ததனை நிழலுலர்த்தி வளமாய்க்கொண்டு
ஆங்குவாய் உருவதுக்கு வாசம்பூட்டு
அப்பனே கதம்ப கஸ்தூரிதானே. 77

தானென்ற சவ்வாது புனுகுவாசம்
தயவான வாசமெல்லா மிடித்துத்தூளாய்
மானென்ய தயிலமதில் பொடியேபோட்டு
மகத்தான சுண்ணமதில் பலந்தான்போட்டு
தானென்ற கழுயிளவால் கூட்டிமத்தி
கருவுருவின் தேகமெல்லாம் பூசிநன்றாய்
ஆனென்ற மதிதனிலே நிழலில்வைத்து
அறிவான சீலையது பதனம்பண்ணே. 78

பண்ணப்பா பனிரண்டு சாமங்காய்ந்தால்
பரிசுத்த மாகுமடா பண்புள்ளானே
அண்ணப்பா அஞ்சுருவா மிதனாலப்பா
அஷ்டசித்தி யாகுமடா மோட்சமெய்தும்
உண்ணப்பா பதுமைரெண்டும் பதனம்பண்ணு
ஓகோகோ வதன்சித்து முரைக்கக்கேளும்
நண்ணப்பா நவப்பிரமஞ் திருவாயிந்த
நாடதிலே சித்தர்செய்யப் போறார்காணே. 79

காணுதற்குப் புலத்தியனே பாகம்பாகம்
கைபாக மிதுவையப்பா கருத்தாய்காணு
ஆணுதற்கு யிருப்பதுவும் சகலத்திற்கும்
அட்டமா சித்தி விளையாடும்பாரு
வாணுதற்கு வாதியென்ற வயித்தியர்க்கேநாமும்
வசனித்தோம் கேசரியின் பதுமைரெண்டு
ஓணுதற்கு ஓகோகோ நவகோடிசித்து
ஒருநொடியி லாகுமடா உருவாய்த்தேரே. 80

தேரடா சுசிவயது நாட்டங்கேளு
தெளிவான கேசரியின் காகத்தாலே
ஆரடா யிதையறிந்து செய்யப்போறா
அகத்தியனா னறிந்தனப்பா செய்துபாரு
கூரடா குருசொன்ன மூலமூலம்
குருபரனை குருவென்று தியானம்செய்வாய்
வாரடா கேசரியின் உருவேசொன்னோம்
மகத்தான மந்திர சக்கரங்கள் கேளே. 81

கேளப்பா தியானமென்ற பூசைநேமம்
கெடியான வனுஷ்டான முபதேசங்கள்
ஆளப்பா அட்டநவப் பிரமபூசை
ஆத்துமத்தின் குருபூசை பஞ்சபூசை
கூளப்பா கும்ப ரேசகத்தின்பூசை
கூறுகிறோம் திசைஅண்ட அகண்டபூசை
வாளப்பா திருவாட குருவின்பூசை
மகத்தான பூசையெல்லாம் கேசரிதானாமே. 82

வாலைதிரிகோணத் தொகுப்பு

ஆமேதான் கேசரியின் வித்தையெல்லாம்
அறையுறோம் புலத்தியனே காண்டமூன்றில்
தேமேதான் திசையெட்டும் புவனத்திற்கும்
திரிகோணம் நவகோணம் செயலெண்கோணம்
மாமேதான் மறுகோண மைங்கோணந்தான்
மகத்தான சர்க்கோணம் பலகோணந்தான்
ஊமேதான் உடற்கோணம் மேருகோணம்
ஓகோகோ வாகவொன் பதுவேயாமே. 83

ஆமேதான் ஆகதொடுப் பாகச்சொன்னோம்
அருளினோம் கோணமதை அப்பால்கேளு
ஓமென்றசத்தி வொன்பதுபேர் சித்தி
உரைக்கிறோம் புலத்தியனே உண்மையாக
வாமென்ற வாலைபரா பரியின்பீடம்
மகத்தான திரிகோண மாலையந்தான்
மாமென்ற வப்பீடம் திரிகோணத்தில்
மாதுகொலு யிருப்பிடங்காண் மகத்தாஞ்சோதி. 84

சோதியென்ற பூரணந்தான் திரிகோணத்தில்
தோகையிள மாமயிலின் சொருபங்காணும்
ஆதியென்ற அப்பீடம் விந்துநாதம்
அகாரமென்ற உ.கார ஓங்காரங்கூடில்
நாதியென்ற பீசமப்பா கோசங்காணும்
நகார பிரதிஷ்டையிலே யிருகோணந்தான்
ஏதியென்ற வாசல்நால் பக்கங்காணும்
என்மகனே வுள்ளறையில் யிதழைக்காணே. 85

புவனை நவகோணம்

இதழான யிதழதனில் ரேசகமேசெய்து
யின்பநவ கும்பமதை யிசைவாய்வைத்து
அதழான ரேகைவொன்பதுக்குத் தானும்
அடவான அய்யுங்கிலியு சவ்வோடாகும்
முதழான மூலமதை வொன்பதாக
மும்மூல மாறிநன்றா யடைத்துக்கொள்ளு
பதழான திசையெட்டு அட்டதிக்குப்
பரஞ்சோதி மகிமைதனைப் பாருபாரே. 86

பாரப்பா வாலைதிரி கோணம்சொன்னோம்
பாடுகிறோம் நவகோணம் புவனைஆதி
போரப்பா புனிதசவுந்தரி மாசத்தி
புகழான அமுர்த அக்கியானரூபி
நாரப்பா நவகோணம் பீடமாலி
நாயகியாள் கொலுவிருக்கும் நவபீடந்தான்
ஆரப்பா அறிவார்க ளப்பீடத்தை
அகத்தியனா னறிந்தனப்பா வடவாய்க்காணே. 87

காணப்பா நவகோண மகத்தாமூலம்
கருததறிந்தா லம்மூலம் திசைமூலந்தான்
ஆணப்பா அப்பீடம் தன்னில்மைந்தா
ஆதிதிரு புவனையம்பாள் கொலுவின்பீடம்
வாணப்பா அப்பீடம் நாற்கோணத்தில்
மணிவிளக்கின் தீபம்போல் பிரசன்னமாகி
ஏணப்பா யெழுத்தோங்கி வோங்கலாகி
யிந்தரவி சோதியென்று யெழுந்தான்பாரே. 88

எழுந்திருந்த புவனைசவுந்தரியின் பீடம்
யென்னசொல்வே னவள்பீடம் நாற்கோணத்தில
அழுந்திருந்த அறிஉறி மறிமூலந்தான்
ஆகயிது மூன்றினிட மும்மூலந்தான்
எழுந்திருந்து பீசநவ கோணமாறி
ஓங்காரம் சீங்காரம் கிரிங்காரங்கொண்டு
நழுந்திருந்த நாதவிந்து உறிமறிம்
நவப்பிரமம் நடுமையம் நகாரங்காணே. 89

காணடா புலத்தியனே நவகோணத்தில்
கண்மணியே யிதழாறு யிட்டுத்தீறு
வாணடா யிருவளையம் வாசல்நாலு
மகத்தான ரவிசூரியன் சோதிகாணும்
மூணடா மும்மூல மிதழாறுக்கு
மூர்க்கமென்ற அட்சரத்தை மாறுமாறு
ஆணடா அட்டதிக்கு மேடைபோடு
அம்மேடை நடுமையம் அருளைப்பாரே. 90

பாரேநீ புலஸ்தியனே நவகோணத்தில்
பரப்பிரம்ம கும்பக ரேசகமுஞ்செய்து
ஆரேநீ அப்பீட பிரசன்னதியானம்
அங்கினி யாசனமீதில் அமர்ந்தாள்பாரு
தேரேநீ திசையெட்டும் உருவமாகி
தேன்கனிபோ லொளிவாகி திருவுமாகி
காரேநீ கனியதுபோ லெழுந்துவோங்கி
காட்சிதந்து மோட்சமெனக் களித்தாள்பாரே. 91

திருபுரை வெண்கோணம்

பாரடா புவனநவகோணம் சொன்னோம்
பாடுகிறோம் திரிபுரையின் யெண்கோணந்தான்
வாரடா யிதையறிந்து தியானஞ்செய்வார்
ஆயிரத்தி லொருவனுண்டு மவுனசித்தன்
போரடா பூட்டறிந்து தீர்ப்பான்மன்னா
புலத்தியனே நீகேளு புனிதமாக
நேரடா யின்னூல்தான் காவியந்தானப்பா
நேரறிந்தோ மாயிரத்தில் நெறிகண்டோமே. 92

நெரியான திரிபுரையி னெண்கோணத்தை
நிசமாக சொல்லுகிறோம் நீகேளுமைந்தா
எரியான யிந்திரவி மாசனத்தின்பீடம்
யெல்லோரும் பூசிக்கு மவுனபீடம்
அரியான சுந்தரிமாதிரி சூரிப்பெண்
அமுர்ததிரு புரையிருக்கும் அண்டபீடம்
நரியான யெண்கோண திக்குகாணு
நவதிக்குப் பிரகோண நாதவிந்தே. 93

விந்தான நடுவிந்து உகாரம்ஓஆ
விளங்கியதோர் மேல்விந்து சிகாரம்காணும்
அந்தான அடிவிந்து ஓஉவாவா
அருளினோம் நகாரங்கொண்டு உடனேகாணும்
நந்தான உள்ளரையில் யிதழ்தானெட்டு
நறிநம உவென்று நகாரங்காணும்
எந்தான மேலரையில் யிறீம்சிறீம்உம்
யென்னசொல்வேன் மகாரமென்ற யெழுத்தைக்காணே.

காணுவா திசையெட்டு தமிழைக்காணு
கண்மணியே யிருகோணம் சுத்திப்போடு
நாணுவாய் நால்வாசல் கிரகங்காணும்
நாற்றிசையு மஷ்டதிக்கு மேடைபோடு
ஊணுவாய் நடுவிந்தில் கோசபீசம்
ஓகோகோ ரேசக கும்பகமுங்காணும்
மாணுவா யெண்கோண நடுப்பக்கத்தில்
மகத்தான கரணியாசம் பீடம்போடே. 95

சவுந்தரி அறுகோணம்

போடப்பா அப்பீடம் நடுவிற்சேதி
பொறிபோல யெழும்புமடா அண்டரண்டம்
ஆடப்பா அண்டரண்டஞ் சுரூபங்கொண்டு
அச்சுரூப மின்னொளிபோ லப்பீடத்தில்
தேடப்பா திருபுரைமா தரிசூலித்தான்
தேவிகொலு விருக்கின்றதிசை யெண்கோணம்
ஓடப்பா எக்கோணம் சிம்மாசனத்தில்
ஓகோகோ பூசித்து தெரிசித்தேரே. 96

தேரப்பா யிருபுரையின் யெண்கோணஞ்சொன்னோம்
தேவி சவுந்திரியினிட அறுகோணங்கேள்
ஆரப்பா சவுந்தரியின் பீடங்காண்பார்
அகத்தியனா னறிந்தனப்பா அவள்பீடத்தை
ஏரப்பா யிருப்பிடத்தை யிருந்தாள்பாரு
யென்னசொல்வே னவள்பெருமை வறுகோணந்தான்
நாரப்பா நாயகியாள் சவுந்தரிதேவி
நான்பணிந்தேன் வெகுகோடி காலந்தானே. 97

தானென்ற சவுந்தரியை தாயைக்கண்டேன்
தந்தமுர்த மெந்தனுக்குத் தருவித்தாள்பார்
ஊனென்ற நாவுகொண்டு உண்டேனாத்தாள்
ஒருமுலைப்பா லமுர்தமதை ஊட்டினாள்பார்
நானென்னும் தெரிசித்துப் பூசித்தேன்பார்
நவகோடி காலமட்டு மவளால்வாழ்ந்தேன்
யானென்ற பாலமுர்தம் புகட்டியிந்த
அறுகோண சக்கரத்தை அருளினாளே. 98

அருளினா ளருகோண மென்னசொல்வேன்
அரகரா அமைப்பிருந்தா லெல்லாஞ்சுத்தி
மருளினாள் மறுகோண மாந்திரீகம்
மஷ்டசித்து வாமென்றுவாக்கியந்தான்பார்
வருளினாள் திரிவுறுவை யெனக்கீய்ந்தாளப்பா
வசனித்தேன் காவியந்தான் சகலசித்தும்
சறுளினாள் சகலகலைக் கியானமெல்லாம்
சாற்றினாள் சௌந்தரியை போத்தினேனே. 99

போத்தினதோர் மறுகோணம் விந்துநாதம்
புகழ்விந்து நாதமதில் கோசபீசம்
யாத்தினதோர் அறிங்காரம் சிறிங்காரங்காணு
அழகான நடுவிந்தில் உறிங்காரந்தான்
கோத்தினதோர் கோசமிது பீசங்கேளு
கூறுகிறோம் ஓம்அம்ஊம் குறிப்பார்நாமும்
வத்தினதோ ரிவ்விந்தி லிதழ்தானாறு
இஇ உஉ எஎஎன்னே. 100

என்னவே ஐஐ ஓஓ வென்று
இறிமென்ற வட்சரத்தோ டாறதாச்சு

நுன்னவே வட்டமது யிரண்டுகாணும்
வட்டத்தின் மேலேயல்லோ வாசல்நாலு
நன்னவே நாற்பக்கம் திசைகள்காணும்
நகாரபிரதிஷ்டை வஷ்டகோணங் காணும்
மென்னவே மேயைது திரணைபோடு
மேலான திக்கேளில் கிரகங்காணே. 101

வராகி ஐங்கோணம்

கிரமென்ற நவக்கிரகம் விந்திலூணும்
கீழ்திசையில் நாதவிந்து மேலேகாணும்
குரகமென்ற கும்பகரே சகந்தான்காணும்
கும்பகத்தில் நவரத்ன கினியாசபீடத்தேறு
அரகமென்ற வறுகோண சிமாசனத்தில்
அப்பீடம் நடுவிந்தில் சவுந்திரியின்பீடம்
புரகமென்ற பீடத்தில் செகசோதிமின்னல்
பிரகாசமா யிடுங்காண் புகலக்கேளே. 102

கேளடா சோதியிலே ஆதிகண்டேன்
கிருபையென்ற சவுந்தரியைப் பூசித்தேன்பார்
வாளடா அவளெனக்கு சொன்னாள்தியானம்
,அறுகோண சக்கரத்தில் வறிந்தேன்மைந்தா
ஃோளடா வாராது சவுந்தரியின் பீடம்
குருசொல்ல யான்கண்டே னறிவால்விண்டேன்
சாளடா சவுந்தரியி னறுகோணத்தை
சாற்றினோம் வராகியிட வைங்கோணங்கேளே. 103

கேளடா புலஸ்தியனே மயிடர்சத்தி
கேசரிதா னவள்பீடம் ஐங்கோணத்தில்
யாளேநீ அவளமுர்த மூட்டியிந்த
ஐங்கோண சக்கரத்தி னாட்டமெல்லாம்
வாளேநீ வசனித்துப் போதித்தாள்பார்
வராகியிவள் கிருபையினால் வரமேபெற்றேன்
தேளேநீ தேவியிட வாக்கினாலே
செயம்பெற்றேன் ஐங்கோணம் வரம்பெற்றேனே. 104

வரமான அ[illegible]பமதை தந்தெமக்கு
வழிபாதை கரிக்குறுவு மருளுந்தந்தாள்

திரமான திசையெட்டும் சாபந்தந்தாள்
திக்குநவகோண சக்கரத்தைத் தந்தாள்
வரமான ஐங்கோண மூலந்தந்தாள்
வட்டநவ அபினியாச மருளினார்பார்
மரவானமது விந்துநாதந் தந்தாள்
மகத்தான அண்டமதை மருவினாளே. 105

மருவிநின்ற ஐங்கோணம் வராகிபீட
மகத்தான பூதமைந்தி லெடுத்தபீசம்
அரிவினின்ற அடிமூலஞ் சிமாசனத்தி
லழுத்தடா மும்மூல மூன்றெழுத்தைநாட்டு
வரிவினின்ற ரீங்காரம் சிங்காரங்காணு
மைங்கோண சக்கரத்தி லழுத்துவாநீ
ஒரிவினின்ற ஓம்றீயு மூன்றெழுத்துமாச்சு
ஓங்கார பூரணமே ஒன்பதுவாய்மாறே. 106

மாரடா ஐங்கோணம் நடுமூலத்தில்
மாட்டடா மற்றெழுத்தால் நாதவிந்தை
யாரடா வுள்ளறையில் ரேகைவைந்து
அறிமிறி மிறியென்று அடவாய்த்தீறு
நேரடா வறிம்கிறிம் ஒமென்றூணு
நேராக யிரிவட்டம் சுத்திக்கீறு
நாரடா நால்வாசல் திக்குகாணும்
நவப்பிரமம் பிரணவத்தில் கும்பகந்தான்காணே. 107

காணப்பா ரேசகந்தான் மேடைகாணும்
கண்மணியைக் கறுத்துவைத்துக் கறுவைங்காணு
வாணப்பா அக்கரிவில் சற்குருவைக்காணு
ஐங்கோண சக்கரத்தி லதீதங்காணும்
மாணப்பா மவுனசிவ யோகங்காணு
மவுனசிவ யோகத்தில் வாசிகாணும்
நாணப்பா நவப்பிரம நிட்டைகாணும்
நவப்பிரம நிட்டையிலே பீடங்காணே. 108

சர்க்கோணம் சாமளை

காணுகின்ற வைங்கோண மகத்தாம்பீடம்
கரிவான குரிபிடர் வைங்கோணத்தில்

வாணுநீ வராகிதுற்சத்தி மாலி
மாயிகொலு விரிக்கின்ற மகத்தாம்பீடம்
தேணுநீ மப்பிட மைங்கோணத்தில்
தெளிந்தேனப்பா புலத்தியனே செயம்பெற்றேனான்
மோணுநீ யெனைக்கண்டு மோட்சமீய்ந்தாள்
மேலான ஐங்கோண மருளினாளே. 109

அருளினதோர் வைங்கோண வராகிதீட்சை
ஆச்சுதப்பா சர்க்கோணம் சாமளையின்பீடம்
சருளினதோர் சர்க்கோண பீடங்கேளு
சாமளா தேவிகொலு விரிந்தபீடம்
மருளினதோ ரப்பீடம் நாதவிந்தால்
மகத்தியனா னறிந்தனப்பா யிப்பீடந்தன்னில்
மருனிளதோர் சாமளா தேவியாலே
மகத்தான வித்தையெல்லா மருளுவோமே. 110

சாமளாதேவி சர்க்கோணம்

மாளுவோ மவளுடைய திறத்தையெல்லா
மவுனிப்போம் புலத்தியனே சற்கோணத்தில்
அருளுவோ மப்பீடம் தப்பியோகம்
அவியோக மதனில்நின்ற லெல்லாஞ்சித்தி
தறுளுவோம் கிரகசன்னி யாதனத்தின்மீது
தாயான சாமளா தேவிபீடம்
வறுளுவோம் சோதியொளி விந்துநாத
மவளிறுக்கு முறிவதான மாட்டுறோமே. 111

ஓமப்பா சாமளா தேவிதேவி
ஓகோகோ கிறதன்னியாம் சத்திசத்தி
மாமப்பா மவள்மூல சர்க்கோணத்தில்
மறீஅறீமவ றீமென்ற கோசபீசம்
கேமப்பா சர்க்கோண மிதழ்தானாறு
சிறியறி ஓறிமூன்று மாராதாரமாச்சு
ஏமப்பா யிதற்கடுத்த பீசங்கேளு
யிறிம்கிறிம் அறிம்மென்று யியம்பிடீரே. 112

இயம்பிடீர் சர்க்கோண மாறாதாரம்
யிதழான நாதவிந்தின் மேலேகேளு

வயம்பிடீர் யிருவட்ட மேலேவாசல்
வளர்துளசி மாடமது மேடைகாணும்
அயம்பிடவே வஷ்டதிசை பீடங்காணும்
அங்கார கேசிமாசனத்தின் மேடைபோடு
தெயம்பிடா திசையெட்டு கிரகங்காணும்
திறமாக சோடசத்தின் கும்பந்தான்காணே. 113

காணேநீ ரேசகந்தான் பீடத்தேகி
கருவாரு சர்க்கோணம் பூசித்தப்பால்
நானேநீ நவப்பிரம்ம அமுர்தமுண்டு
நவப்பிரம பரவாசர்த்தினி யாசனத்தில்
ஏணேநீ னியாசித்து தெரிசித்தாக்கால்
நீலம்போல் சோதிவொளி நிகரரொவ்வாது
ஆணேநீ அப்பீடம் பிரசன்னியாசத்தில்
அவள்சுரூவ மென்சொல்வோ மறிந்திடாயே. 114

அறிந்திடுவாய் புலத்தியனே அகத்தியனென்வாக்கு
அஷ்டநவ திசைகளுந்தா ணமுர்தமாகும்
மறிந்திடுவாய் மயாசனத்தில் சாமளாதேவி
மாதுகொலு விருக்குமப்பா சுரூபங்காணும்
தெரிந்திடுவா யவன்சுரூபம் கண்டபோது
தெளிவாச்சு வறிவாச்சு செயந்தானாச்சு
முறிந்திடுவாய் மூலமெல்லாம் விதிப்பாழாச்சு
மெஞ்ஞான மென்றதெல்லாம் விளக்கமாச்சே. 115

விளக்கமாஞ் சர்க்கோண மறுகோணத்தில்
வேதாந்தம் விளங்குமப்பா யிவ்விதிநூலாலே
சளக்கமாம் சர்க்கோணம் சாமளையின்சித்தி
சாதித்து வொருமனதால் தலத்தைக்கண்டால்
ஒளக்கமாம் சத்திலொன்பது பேரமைந்தால்
ஒன்றாக வசியமதா யுகந்தேநிற்பார்
நளக்கமாம் நாம்சொன்னோம் புலத்தியனேபிள்ளாய்
நவப்பிரம சித்தியடா காவியந்தானாமே. 116

ஆமென்ற காவியந்தான் மூன்றாங்காண்டம்
ஆதியப்பா சித்தறுக்கு கொடுக்கவேண்டாம்
வாமென்ற வாதிகளி னுறவுவேண்டாம்
வயித்தியத்தின் சஞ்சலத்தோ டுறவாகாது

தேமென்ற விசனமில்லா தார்க்குக்கிட்டும்
சிவயோகி வனாதியென்ற தவர்க்குக்கிட்டும்
சாமென்ற சர்க்கோணம் சாமளாதேவி
சாற்றினோம் யாமளையின் கோணங்காணே. 117

சாமளாதேவி பவனெண்கோணம்

காணுகின்ற சாமளாதேவிமாலி கபாலி
திருசூலி யுமைபவ னெண்கோணம்
வாணுநீ சாகரத்தோ டீறாய்நின்ற
மகத்தான வண்டபகி ரண்டமெல்லாம்
தேணுநீ தெய்வமயமான ருத்திரி
தேவி சடாதாரி கவியுகாந்தவாணி
மாணுநீ மவள்கோணம் கீடந்தன்னில்
மாத்தினியாம் சிமாசனத்தில் மகிழ்ந்தாள்பாரே. 118

மகிழ்ந்துநின்ற யாமளா பவனெண்கோண
மாட்டுகிறோம் புலஸ்தியனே மறுளுகின்றோம்
அகிழ்ந்துநின்ற மக்கோணம் பீடந்தன்னில்
ஆதியந்தம் சோதியொளி பிரகாசிக்கும்
வெகிழ்ந்துநின்ற வேதாந்தம் பரிமளிக்கும்
மிக்கநாதத் துளிதான் மிகுந்தேசாகும்
வகிழ்ந்துநின்ற நாதவிந்து ஊறும்ஊறும்
அமுர்தமென்ற ரசச்சிந்தும் பீடந்தானே. 119

தானென்ற பவகோண சக்கரத்தைக்கேளு
தகுவான யெண்கோண மாலையந்தான்
ஏனென்ற அக்கோணம் சவுக்கங்காணும்
ரேகை பதினாலுமைந்து விருபத்தொன்றாய்
ஆனென்ற அகாரவிந்தை நாதத்தாட்டி
அப்பனே வகாரவிந்தை அதுக்குள்வைத்து
தேனென்ற மும்மூலம் தருவேமாறு
திருவான கருக்குருவைச் சினத்தில்காணே. 120

காணடா ஓமறியும் அரிவோமறியும்
கருவான கிறிமறியும் மிரியோகிறியும்
மாணடா உரிஓம் இரியும்மாரடா
ஊம்ஓம் ஆம்மறிம் வறிமென்றேதான்

நாணடா கிறியும் கிலியும் சவ்வோடாகும்
நலமாக இரியும்ஐயும் ஐஔமாகும்
ஏணடா யிருபத்தொன் றிதழுக்குந்தான்
யிப்பீசம் அட்சரத்தை யிருத்திப்பாரே. 121

பாரப்பா புலஸ்தியனே யிதழ்பீசத்தின்
பரிவெல்லாஞ் சொன்னோமப்பா பண்மையாக
ஆரப்பா நாதவிந்து வுள்ளரைமூலத்தி
லருந்திநிற்கு மூலமதி னடவேகேளும்
தேரப்பா ரவிமதியும் யிரவிமூன்றும்
தெளிந்தசுத்த பரிமளங்காண் கோசபீசம்
மாரப்பா மம்மூலம் ஓம்றிஉஉ மகுத்துவந்தா
னிம்மூலம் இறிஇறிம் யேயேயென்னே. 122

என்னவே யிம்மூலம் நவமியாசம்
யிப்பீட மிதினருகே யெண்கோணந்தான்
அன்னடா வதினருகே யிருவட்டந்தான்
அதின்மேலே நால்வாசல் பீடம்போடு
கன்னவே அஷ்டதிசை திக்குகாணும்
கருவான நவக்கிரக கோணங்காணும்
பொன்னவே பூரணாதி விலாசங்காணும்
பூரணத்தில் கும்பக ரேசகந்தான்காணே. 123

காணுதற்கு நாற்றிசையு மேடைபோடு
கருவியென்ற நவகோணம் சோடசமாய்வந்து
தேணுதற்கு திசையெட்டு தெரிசனமேகாணும்
தேவநவ சந்தமதில் பீடங்காணும்
ஆணுதற்கு அப்பீடம் வலமேகாணும்
அகாரஉகார விந்துமே நாதங்காணும்
சாணுதற்குச் சாமளா சத்திபிடம்
சாதுரிய மாகவல்லோ தெரியும்பாரே. 124

தெரியும்பார் தெரிசனமோ வுடனேகாணும்
சித்தியல்லா லமுர்தசித்தி சிணத்திலாகும்
அரியும்பார் யாமளா பவனெண்கோணம்
அப்பனே தெரியும்பார் தெரிந்தால்மோட்சம்
செரியும்பார் சித்தரெல்லா மவளால்சித்தி
தெளிந்தவளை பூசித்தோம் செயம்பெற்றோம்நாம்

வரியும்பார் வாதசித்திதுவே வாகும்
வாய்யிவினிட அப்பியாச மவளால்சித்தே. 125

சித்தான யாமளையின் பவனென்கோணம்
செயலாகச் சொன்னமப்பா சத்தமாச்சு
முத்தான மயேந்திரையி னுடல்கோணந்தான்
மூலமெல்லா மருளுகிறோ முண்மையாக
அத்தான அவள்பீட மயேந்திரசானம்
அபிசான சிமோசனமா மதற்குள்ளேதான்
லெத்தான வேதசறு நாதவிந்து
விளங்கியதோ ரவள்பிடம் விதமேகாணே. 126

காணுமதி யென்றரவி யிரவியாலே
கனகசுட ரக்கினியின் கபாலத்தப்பால்
வேணுமதி நதியிலொரு பீடங்காணும்
வேதாந்த நவப்பிரமப் பீடத்தப்பால்
ஆணுமதி பெண்கூடி மருவிநின்ற
அண்டரண்ட வாசல்கடந் தருகேசேர்ந்தால்
ஓணுமதி ஓர்வட்டம் ஓங்காரபீடம்
ஓரிதழின் மும்மூலம் உறுதிகாணே. 127

உறுதியென்ற மயேந்திரியாள் பீடம்பீடம்
ஓகோகோ முடற்கோண மொன்றேகோணம்
அறுதியென்ற கோணத்தி லறியிம்யிறீம்
ஆகயிது மூன்றுமோ ரெழுத்தைக்கேளு
வறுதியென்ற வறிம்வுறிம் அறிவொன்றாச்சு
வளர்யிதழின் உயிரெழுத்தை வழுத்தக்கேளு
தெறுதியென்ற அறுதியப்பா சிறிங்கொன்றாச்சு
செயலான சக்கரத்தின் மேலேகேளே. 128

மயேந்திரவுடல் கோணம்

மேலெட்டு வாசலடை திசைகள்காணு
மேலான கும்பகரே சகமுங்காணும்
காலெட்டு வாங்கியிரு கையைக்காணு
கருவான திக்குநவ கோணம்காணும்
மாலெட்டு மேடையிரு பீடங்காணு
மாதுவிந்து நாதமதில் சோதிகாணும்.

நாலெட்டு பூரணமு மொன்றேகாணும்
நாதாந்த பேரொளியின் மேருகாணே. 129

மேருவென்ற வுடல்கோண மயேந்திரையம்பாள்
மேலான பீடமதில் கொலுவிருந்தாள்
அருவென்ற வுடற்கொண்டு சூட்சசித்தி
ஆச்சுதப்பா மயேந்திரையாள் தெரிசனமேகண்டோம்
வாருமென்ற மேருவப்பா துநிகமேரு
மாணாக்கள் பணிந்திருப்ப மௌனமேரு
குருவென்ற குருவப்பா மேருகோணம்
கூறுஞ்சதா சத்தினிட கோணமாச்சே. 130

கோணமாம் சதாசத்தி மேருகோணம்
கூறுகிறோம் வகையென்ன சொல்வோம்பிள்ளாய்
ஓணமாம் ஓர்வளையம் உறிம்இறிம்
ஓகோகோ ஓஐஆஆ வென்று
வாணமா மோரெதழின் நடுவேறீயும்
மாட்டடா புலஸ்தியனே மயேந்திரகோணம்
தேணமாம் திசையெட்டும் வடவாசல்காணும்
தெளிவான நூல்வாசல் மேடைகாணே. 131

மேடையாம் நாற்றிசையுங் கிரகங்காணும்
விளங்குமந்த மேடைநடு மையங்காணும்
ஆடையாம் பஞ்சவர்ணநிலை முன்சொன்னேன்
ஆதிபரி பூரணத்தி னடவுக்காக
ஓடையா மாடையென்ற கேசரிதன்பீடம்
ஓகோகோ நடுமையம் கெவுனபூசை
தேடையாம் திருவுருவின் கிரகசத்தி
தேவியொன்பது பேருமெண்பத் தொன்றே. 132

ஒன்றான பிள்ளையடா புலத்தியனேநீதான்
ஓகோகோ செகத்குருவு வருவேநீயே
கென்றான கேசரியின் விடைரெண்டாட்டம்
கீறினோ கோணமொன்று சத்தியொன்று
நன்றான அச்சரங்க ளெண்பத்தொன்று
நடுமேடை பிரணவங்க ளென்பத்தொன்று
வன்றான கோசங்க ளெண்பத்தொன்று
மாறினோ மதுக்குள்ளே பீசங்கேளே. 133

கேளடா பீசங்க ளெண்பத்தொன்று
    கீறினோம் கிரகங்க ளெண்பத்தொன்று
ஆளடா ஆதிவிஷக் கல்லின்சுண்ணம்
    அபிசத்தினின்ற பிறவியுயிர் மூன்றாங்காண்டம்
வாளடா காவியந்தான் மகாசித்தாடும்
    வசனித்த முப்புவது முடிந்துதானால்
ஏளடா அப்போவல்லோ சிலையை
    நாட்டியிந்த வொன்பதுபேரின் கோணங்காணே. 134

காணுவாய் கோணங்கள் கோசபீசம்
    கருவான முப்புசுண்ண மாகும்போது
நாணுவாய் நாற்காண்டம் அஷ்டயோகம்
    நாம்சொல்வோம் புலத்தியனே நன்மையாக
மூணுவாய் காண்டமதில் தேவிபூசை
    முக்கியமாய் தெளிவாக வுணர்வோமைந்தா
ஓணுவான யொன்பதுபேர் சத்திபூசை
    உரைக்கிறோம் வாதத்தின் தொழிலைக்காணே. 135

தானென்ற யென்தாயே வாலைப்பெண்ணே
    தருவான புவனைதிரிபுரையின் பெண்ணே
தானென்ற சவுந்தரி வராகிப்பெண்ணே
    சாமளையின் யாமளையா மயேந்திரப்பெண்ணே
நானென்ற சதாசத்தி வொன்பதுபேர்கோணம்
    நாமளித்தோம் புலத்தியனே வுண்மையாக
ஆமென்ற அட்டமா சித்துக்காக
    அருளினோம் பதுமைவிழச் சுண்ணந்தானே. 136

தானாதி புவனமெல்லாம் சோதியாகி
    சராசரங்க ளண்டமெல்லாங் கோணமாகி
நானாகி அகமாகி அண்டமாகி
    நவசரா சரங்களெல்லாம் பிண்டமாகி
மானாகி தீபவொளிக் கப்பால்நின்ற
    மகத்தான கேசரியின் குருவைக்காண
தேனாகிக் காவியத்தின் · காண்டமூன்று
    தெளிந்தவுரை நூற்றிமுப்பத்தேழா முற்றே. 137

மூன்றாவது காண்டம் முற்றுப்பெற்றது.

நான்காவது காண்டம்

திருவுருவாம் கருவுருவின் குருவின்பாதம்
சென்னி சடாமுடியமுர்தம் சிரசின்மேலே
மருவுருவி னருள்தெளிந்து கருவேகண்டு
வசனித்தோம் அமுர்தகவி காண்டமின்னூல்
அருவுருவின் பொருளிதுதான் நாலாங்காண்டம்
அப்புவென்ற முப்பினிடக்காவே யெல்லாம்
குருவுருவும் திருவுமடா மூன்றுங்கூடி
குருவழலை யறிவதற்கு வழியேகாணே. 1

அரிவிலே வைந்தறிவு வதிகங்கேளு
ஆதியந்த வறிவப்பா நாலாங்காண்டம்
திரிவிலே அறிவிலொரு குருவினாலே
திரிமூன்று புவனமெல்லா மடங்கிப்போச்சு
குருவிலே யிதுவல்லோ வழலையாதி
கோடிமதி பிரகாச மண்டத்தாலே
கருவிலே விதைப்போல மொழியுண்டாமோ
காவியத்தின் கடலமுர்தைக் காணுகாணே. 2

காணப்பா புலஸ்தியனே யோகவானே
கண்டமுர்த மென்றத்தை விளம்பிடாய்நீ
ஏணப்பா கனிவில்லாக் கிட்டுமோதான்
யென்மகனே கனிபழத்தால் யெல்லாஞ்சித்தி
நாணப்பா அஞ்சுபஞ்ச பூதமாகி
நவரசத்தின் பருவமதில் நாட்டங்கண்டு
தேணப்பா வமுர்தரச வாலையைத்தான்
தெரிசித்து வழலைமுறை தெளிவைக்காணே. 3

தெளிவான தேவியென்ற மாதைக்கேளு
தேனமுர்தமுண்டு தெளிந்தவனே கேளு
களிவான கேசரியின் குருவேகேளுங்
கண்ணிசிறு பெண்ணிவளின் கருவேகேளும்
முளிவான முத்தியென்ற சித்திகேளு
மூதண்ட மும்மூல முருவேகேளும்
வளிவான வாமப்பெண் னிவளேகேளும்
மாதுகேசரி யிவள்தான் வழலையாச்சே. 4

மானாபட்சிக்கு

ஆச்சுதென்ற கேசரியின் சாதியாலே
    ஆச்சுதப்பா கருக்குருவு மிதற்குள்ளாச்சு
கோச்சுதென்ற கேசரிதா னாலுண்டப்பா
    கேள்மகனே திசைபுவன மெட்டுக்குந்தான்
மேச்சுதென்று வுலாவிவரும் கெவுனம்பாயும்
    மேல்கீழாய் பறக்குமப்பா சனிதான்பாரு
மாச்சுதென்று நினையாதே மவுன
    மண்டரண்டங் கொண்டோடி வருகுந்தானே. 5

மருவுகின்ற மானாதி பட்சியப்பா
    மதிரவிபோல் கண்கள்ரெண்டு மொளியினாலே
தருகின்ற நவநீத மமுர்தமேகம்
    தருவிக்கும் கருங்காக முலகிலுண்டு
அருகுகின்ற அதுசாதி நாலுக்குந்தான்
    ஆய்ந்தெடுத்தோம் கருங்காகம் நாலாம்சாதி
குருகுகின்ற வதின்பேறு கேசரிதான்மைந்தா
    கூறுகிறோ மவளுடைய கூறைத்தானே. 6

மானாதிபட்சிவிடை

கூறான அருவமப்பா சுருவத்தாலே
    கூட்டுறுதிப் பருவமதாய் கூர்ந்துஓங்கி
ஆறான அண்டரவி பிண்டக்கூறா
    லாச்சுதப்பா யிரவிமதி யானவாறு
மாறான வதுபோலே கூவும்கூவும்
    மானாதி பட்சியென்று மதற்குப்பேரு
நாறான நவசரா சரங்களெல்லாம்
    நால்சாதி மகிமைதனை நாட்டக்கேளே. 7

நாட்டக்கேள் மானாதி பட்சிக்கூறு
    நாம்சொல்வோம் புலஸ்தியனே சொல்லக்கேளும்
ஆட்டக்கேள் ஆதிபட்சி யுலகமெல்லாம்
    அனேகமுண்டு முதல்சாதி அத்தினிப்பேரு
கேட்டக்கேள் ரூபமென்ற யிரண்டாம்பட்சி
    கிடையாது மெத்தவுண்டு கேளுமைந்தா
மூட்டக்கேள் மூலரவி மூன்றாம்பட்சி
    மூவுலகம் சித்திவரும் உண்மைதானே. 8

முண்மையென்ற மானாசி பட்சியோடே
மூவெதுதா னாலாகு முருவைக்கேளு
ஆண்மையென்ற அனாதியப்பா மானாதியாகும்
அல்லவரு மறிவார்கள் கேசரிதானப்பா
வண்மையென்ற காகமப்பா கறுப்புமேக
மதத்தான விடையப்பா ஆண்பெண்ரெண்டு
உண்மையதாய்க் கூண்டிலிது மருவிச்சென்று
ஓகோகோ சதிபுருஷர் சுகந்தான்காணே. 9

எரண்டமரிய

காணடா யிரண்டுகுளம் கூடிற்றானால்
கருத்திரண்டு வுருவாகி நாமமுத்தி
ஆணடா பிண்டம்போ லண்டமாகி
அண்டத்தில் விந்துதித்து நாதமாகி
மாணடா அச்சுகத்தோ டாராமாத
மருளினோம் சித்திரைநாள் சுக்கிரம்தன்னில்
ஏணடா தபோபலத்தா லேரண்டத்தை
யெடுத்துநீ கேசரியை தெரிசிப்பாயே. 10

தெரிசிப்பா யேரண்ட தொழிலேகேளு
தெளிவாக முன்சொன்ன தயிலங்கொண்டு
பரிசிப்பாய் பீங்கானில் பலம்நால்விட்டு
பரிவான யேரண்ட மதிலேபோட்டு
நெரிசிப்பாய் சாபமெட்டு பூரித்தானால்
நேராக யதையெடுத்து கழத்தக்கேளு
அரிசிப்பாய் வெண்கோழி அண்டவோடு
அப்பனே கொண்டுவந்து அறையக்கேளே. 11

பூனீறு சலம்

அறையக்கேள் பூனீறு படிதான்கொண்டு
அழகான பாண்டத்தி லடவாய்ப்போட்டு
சறையக்கேள் சலமப்பா ஆனீர்கொண்டு
சரிசரியாய்க் கரைத்ததனை தெளிவைவாங்கி
மறையக்கே ளேறண்ட மிரண்டுமப்பா
மைந்தனே யெடுத்ததனை மருவக்கேளு
வறையக்கே னச்சலத்தி லிரண்டுநாழி
மைந்தனெ ஊறினபின் னெடுத்துக்கொள்ளே. 12

அண்டோடு

கொள்ளப்பா கருங்கோழி அண்டவோடு
    கூறுகிறோம் நாலுபல மிடையாய்க்கொண்டு
அள்ளக்கேள் நற்சலத்தில் கழுவிநன்றாய்
    அண்டோடே சீலையிலே கிளியாய்க்கட்டி
மொள்ளப்பா கிளியதனை யெடுத்துக்கொண்டு
    மேலான பூனீரில் விட்டிடாய்நீ
பள்ளப்பா பாண்டமதை வடுப்பிலேற்றி
    பாலகனே புளிமரத்து விறகால்த்தீயே. 13

விரகாலே நீயெரித்துப் பதந்தப்பாமல்
    வெண்ணிறம்போல் மஞ்சள்நிற மாகும்போது
கரவாலே பாண்டமதை யிறக்கிவைத்து
    கருவான கிளியதனை யெடுத்துக்கொண்டு
அரவாலே கிளியதனை அவிழ்த்தெடுத்து
    அரகரா கல்வமதி லடவாய்ப்போட்டு
இரவாலே யேரண்ட மண்டநீரால்
    இருசாம மாட்டிநீ நாதத்தாட்டே. 14

ஊட்டியே யிருசாம மதுவாலாட்டு
    வுருளையென்ற மெழுகது போலாகும்பாரு
தாட்டியே யிதன்பிறகு தயிலங்கொண்டு
    தனதாக நாற்சாமம் சாடுவாய்நீ
மேட்டியே மெழுகதுபோல் வாகும்பாரு
    விநாயகனைப் பூசித்து வழித்துக்கொள்ளு
ஆட்டியே கேசரியின் முன்சொன்னஅண்ட
    மப்பனே யிரண்டதனை யறையக்கேளே. 15

அண்டமெழுகு

அரையக்கேள் விஷச்சுண்ணம் பலந்தான்கொண்டு
    அப்பனே நாதவிந்து தயிலமூன்றும்
செரையக்கே ளிதுமூன்றுஞ் சுண்ணத்திலிட்டு
    செயலாக யிதனைநன்றாய் கூட்டிமத்தி
கரையக்கேள் மேற்கவச மண்டத்துக்கு
    கண்மணியே விரல்தளம்போல் பூசிநன்றாய்
மறையக்கேள் மதிதனிலே நிழலுலர்த்தி
    மண்டமெழுகதனை யெடுத்து மாட்டக்கேளே. 16

சுண்ணம்

மாட்டக்கே ளிம்மெழுகை குகைபோல்செய்து
மதியில்வைத்த அண்டமதை கையில்வைத்து
சேட்டக்கேள் முக்கருவும் தயிலங்கொண்டு
சீரான சீலையிலே மேல்கீழாடி
ஏட்டக்கே ளிச்சீலை யேழும்செய்து
யென்மகனே சாமமது ரவியில்வைத்து
மாட்டக்கேள் சுடலைகரியாலே மைந்தா
கண்மணியே குகையெடுத்துக் கரிக்குள்வையே. 17

வையப்பா துருத்திகொண்டு காளமேக
மதுபோலே புகைவிலக்கி சாடுவாய்நீ
அய்யப்பா சாமம்ரெண்டு விடாதேசாடு
ஆகுமப்பா கடுஞ்சுண்ணக் குகையெடுத்து
மெய்யப்பா குகையெடுத்து உடைத்தாயானால்
வெகுசுறுக்காம் சுண்ணத்து யிதுபோலுண்டோ
வையப்பா யிச்சுண்ணம் சீஷர்கொண்டு
மகத்தான சுண்ணமதை பதனம்பண்ணே. 18

பதனமப்பா யிச்சுண்ணம் வாலைபூசை
பரிவாரங் கொண்டுடனே சாடுசாடு
அதனமப்பா யிச்சுண்ணங் கால்கோட்டி
ஆலகால விஷமப்பா யார்தான்செய்வார்
விதனமப்பா யிச்சுண்ணம் பட்டபோது
வீறிடுங்கா ணறுபத்து நாலுமைந்தா
சதனமப்பா சராசரங்கள் நீறிப்போகும்
சண்டமாருதம் போலே சாடுந்தானே. 19

சாடுகின்ற யேரண்டம் கேசரியின்சுண்ணம்
சாற்றினோம் சாற்றினோம் சார்ந்துபார்
ஏடுகின்ற கேசரியின் வித்தையப்பா
யென்னசொல்வேன் புலத்தியனே யின்னங்கேளு
ஆடுகின்ற தொழிலெல்லா மவள்தன்னாலே
அறுபத்து நாலுசித்து மவள்தன்னாலே
கூறுகின்ற கூத்தல்லா மவள்தன்னாலே
கூறுகிறோ மாதியென்ற குருவைக்கேளே. 20

சவுக்காரம்

குருவான வாதியப்பா வாலையாதி
    கோடிரவி மதியாலே யுருவுமாகி
அருவான ஆதியென்ற பதியுமாகி
    அகிலமெலாஞ் சுழன்றுநின்ற தத்துவமுமாகி
திருவான பருவமெல்லாம் துருவமாகி
    தெளிவான மேருவெல்லாம் திறமேயாதி
வருவான வண்டமெல்லா மாதியாதி
    வழலையென்ற சவுக்காரம் வசனிப்போமே. 21

காரசாரம்

வசனிப்போம் சவுக்கார மேதென்றாக்கால்
    மகத்தான அண்டவிந்து மதுவேயாகும்
உசனிப்போம் பிண்டவிந்து நாதமாகும்
    ஓமக்காள் காரமென்ற தத்துவேயாகும்
அசனிப்போ மதுரெண்டு சிவமேசத்தி
    ஆச்சுதப்பா வதனாலே அனேகம்வித்தை
ஓசனிப்போ முருவாகி முள்ளோடாகி
    உலகமெல்லாம் பிர்ம்மமென்று உரைத்தோநாமே. :2
உரைத்தவிதி யென்னவென்றால் ஊமைஊமை
    ஓகோகோ உருளைநடு வட்டம்வட்டம்
கரைத்தகரு காரமது சாரம்சாரம்
    கருவான வெண்கருவா லனேகம்வித்தை
அரைக்க மெழுகானவித மேதென்றாக்கால்
    அண்டமென்ற தனாலே பிண்டமாச்சு
முரைத்தவிதி பரப்பிரம மூன்றுங்கூட்டி
    முக்கருவினாலே யல்லோ முடித்தவாறே. 23

அடிமூலம்

வாறான நாதவிந்து விந்துநாதம்
    வளமான நாதமது விந்துவாச்சு
வீறான விந்துவால் நாதமாச்சு
    விளங்கியதோர் நாதமதால் பிண்டமாச்சு
ஆறான அகண்டமெல்லாம் கண்டமாச்சு
    அடிமுடியு மொன்றாச்சு முடிவேறாச்சு
தேறான திருவுருவே அகாரமாச்சு
    தெளிவான கருக்குருவே யுகாரமாச்சே. 24

மேல்மூலம்

ஆச்சுதென்ற அந்தமெல்லாம் ஓங்காரமாகி
அண்டரண்ட புவனமெல்லாம் வீடுமாகி
தோச்சுதென்ற தொழிலாகி சதாநந்தமாகி
துருவமென்றும் பருவமென்றும் உருஒன்றாகி
காச்சுதென்றும் பூவாகிப் பிஞ்சுமாகி
கனியாகி யொருநொடியில் பழமுமாகி
வாச்சுதென்றும் வடுவாகி சுரூபமாகி
மகத்தான பிறவியென்றும் வழுத்தலாமே. 25

ஆமேதா னடிமூல வாறுசொன்னோம்
அறையுறோம் புலஸ்தியனே மேல்மூலங்கேளு
மாமேதான் மதுவிர துவாலையாகி
வண்டரண்ட ரண்டபுவனமெல்லாம் பாலையாகி
தேமேதான் திசைகளெல்லாம் திக்குமாகி
திக்குநவ கோணமதாய் திரண்டொன்றாகி
நாமேதான் வப்பிரமம் சுரூபமாகி
நளினமதாய் பிறவியொன்று சாதினாலே 26

சித்தினியின் வரணம்

நாலான நாலுரெண்டு பத்தேயாகி
நால்மூன்று பதிமூணாய் நதிகளாகி
தோலான சரிகலம்போ லெங்குமாகி
தோன்றினதோர் பிறவி செனனமதுவேயாகி
ஆலான அதிருப பட்சியாகி
அண்டமெனும் பிண்டமதா யருவமாகி
மாலான வத்தினி சங்கினியுமாகி
மகத்தான சித்தினி பத்மினிதானாமே. 27

சங்கினி

ஆமென்ற நால்சாதி தொகுப்பைக்கேளு
அறையுறோம் புலஸ்தியனே நாலாங்காண்டம்
மாமென்ற மத்தினிதான் முதற்சாதிகேள்
மகத்தான கேசரிதான் வர்ணம்வெள்ளை
வேமென்ற மூலத்தி கிடையாதப்பா
கிட்டாத பொருளப்பா யெட்டுமோதான்
நாமென்ற சாதிரெண்டு சங்கினியேகேளு
நா[illegible]ன்ற மஞ்சள்வர்ணம் நவிலுவோமே 28

நவிலுவோம் சங்கினியின் கூரைச்சொன்னோம்
நண்ணாகப் புலஸ்தியனே வாறேதென்னில்
மவிலுவோ மாளாத பொருள்தானப்பா
மாண்டாலு சாவில்லை வயதோகோடி
அவிலுவோ மாராலுந் திறவாய்ப்பூட்டு
அதன்செயலால் நான்திறந்தேன் சத்தியனென்றன்
பவிலுவோம் பதரிகின்ற சித்தினியின்வர்ணம்
பச்சைமஞ்ச லுள்ளிருக்கும் பசுமைகாணே. 29

காணுகின்ற சித்தினியின் வர்ணங்காந்தி
கண்பொரியின் நேத்திரத்தின் சூரியன்போலாம்
ஏணுகின்ற யெரித்தெரிந் தெரியுமீச
ளிகழ்ந்தருள்வான் கண்டுமிக யியமபினேன்பார்
ஆணுகின்ற சிவப்புநிறம் சித்திரம்போல்ரத்னம்
ஆணிமுத்து மாணிக்கம் சொரூபங்கோடி
ஊணுகின்ற சித்னியா ரோகோவன்ளம்
உசிதரத்ன செலையதுபோ லுயர்தான்பாரே. 30

பாரேநீ புலஸ்தியனே யின்னங்கேளு
பாடுகிறோம் காவியத்தின் காண்டம்நாலில்
நேரே சித்னியின் வர்ணம்காந்தி
நீழ்த்திசையி லாற்றிவரநீ கேள்மைந்தா
ஆரேநீ சிவன்சொல்ல நாமுஞ்சொன்னோம்
அறிவறிந்தா லெய்துமடா எல்லாஞ்சித்தி
வாரேநீ சித்திரையின் கூரைச்சொன்னோம்
வசனிப்போம் பத்மினியின் வயணங்கேளே. 31

வயணமென்ன புலத்தியனே சொல்லக்கேளு
மகத்தான பத்மினிதான் நாலாஞ்சாதி
அயணமென்ன கறியுரித்தோன் சொன்னமூலம்
அகத்தியனா னறிந்துணர்ந்து மயனேமேவி
கயனமென்ன சகலநால் வேதமாகி
சத்தகர்த்தி னாறுடனே பதினெண்பேராய்
செயனமென்ன சித்தரென்ற வறிவினாலே
செயம்பெற்றோம் தபோபலத்தால் மயமானோமே. 32

மயமான வைந்ததிலே பாவுமாகி
மருவியிரு பிண்டமதாய் பிஞ்சுமாகி
கயமான காயாகி பழமேயாகி
கன்னிசிறு கனியமுதாய் அமுர்தமாகி
நயமான ரவியாகி மதியுமாகி
நாதவிந்து உடன்சேர்ந்த கருவுமாகி
அயமான உருவாகி சுரூபமாகி
அண்டபிண்ட மிரண்டாகி அமைத்தவாறே. 33

கல்வியறிவது

வாரான மேலண்ட மூலமாகி
மகத்தான சுகிமாண்டம் பூமியாகி
மேரான மேகமதாய் மச்சமாகி
மேல்கீழா யடிமுடியும் கீழ்மேலாகி
பாரான பயிராகி பூண்டுமாகி
பரப்பிரம்ம கபாலமதாய் சிவமுமாகி
ஆரான அஸ்தியிரு கையுமாகி
அண்டமுடி கொடிமுடியு மாதியாமே 34

ஆதியென்ற சித்தமதால் சத்தமாகி
ஆகாச அண்டமதால் மவுனமாகி
சோதியென்ற நாதவொளி அந்தமாகி
துருவுவட்ட மேறாகி கிரியுமாகி
ஓதியென்ற உயிராகி பட்சியாகி
உடன்சேர்ந்த கருவாகி வாயுமாகி
மாதியென்ற ஐப்பாசமதால் வாதமூதி
மகத்தியனாம் யோகமதில் மருவினோமே. 35

மருவியதோர் கல்வியது கத்தாலென்ன
மதிரவிபோல் ரவியொளியை அறிந்தாலென்ன
நருவினதோர் நால்வேத மறிந்தாலென்ன
நவப்பிரம சந்திரமார் கண்டாலென்ன
பருவினதோர் பதினெண்பேர் புராணமென்ன
பலகலைக ளறுபத்து நாலுமென்ன
துருவினதோர் தத்துவங்கள் பிறந்ததென்ன
தொண்ணியத் தாறுமென்ன துதிசெய்வீரே 36

துதிசெய்வீர் யென்குருவே யெனக்குத்தானும்
தோணத கருவையெல்லாம் சொல்வீரையா
மதிசெய்வீர் பதியெழந்தவா றெங்கேது
மதியொளியை யறிந்ததினா லாரைங்கேது
பதிசெய்வீர் பரமொடுங்கும் விலையங்கேது
பகலேது ராவேது பதியங்கேது
அதுசெய்வீ ரண்டங்க ளானதேது
அரகரா துதிசெய்து வருளுவீரே. 37

துதியென்ன புலத்தியனே சொல்லக்கேளு
தூயபதம் பொன்னறிந்தால் துயரம்போச்சு
விதியென்ன வதீனளவா லெல்லாமாச்சு
விசனமெல்லா முத்தியடா சீவரத்தினம்
மதியென்ன வாமிதுவெல்லா மப்பா
மகத்தான லோகமதால் வாழ்வேவாதம்
செதியென்ன செடலத்தில் வாயுவுநின்றால்
செயம்பெறலாம் தேகவச்சிர மிச்சணமதாமே. 38

ஆமப்பா யோகமதை வாய்வால்காணு
ஐப்பாச நிலைகண்டால் வாதஞ்சித்தி
ஓமப்பா புலஸ்தியபுலஸ்தியனே யெல்லாஞ்சித்தி
ஒன்றான வாய்வுநின்றால் ஒன்றேபுத்தி
நாமப்பா உள்ளபடி சொன்னோம்சொன்னோம்
நலமான முப்பூவை தீடித்துக்கொள்ளு
காமப்பா காவியத்திற் கெதிர்நூலில்லை
கண்டுகொள்ளு மானாதி கருவைக்காணே. 39

கண்டுகொள்ளு மானாதி யதுவேயாதி
கருக்குருவும் சிவம்சத்தி உருவேசோதி
வண்டுகொள்ளும் விண்டவீதி தோட்டம்நேர்மை
மயங்காமல் தியங்காமல் மதியொன்றாக
கொண்டுகொள்ளு மண்டபங்கான் கேசரிதானப்பா
கீழ்த்திசையு மேற்றிசையுங் கெவுனம்பாயும்
அண்டுகொள்ளு மொருவரா லறியப்போமோ
வறிந்தாக்கா லவன்சித்தன் யோகவானே. 40

யோகவா னாவதற்கு வயணங்கேளு
　　ஒருபுத்தி யறிவுடைய புலத்தியநாதா
பேகவா ணாவதற்கு ராசி யோன்றான்
　　விந்துதுதி லெக்கணந்தான் துலாமுமாவான்
நீயேகவா னானாக்கா லருவிப்பாயும்
　　நீடுாழி சதாகாலம் அமுர்தம்சிந்தும்
அநேகவா னாயிருந்தா லழிந்தேபோவார்
　　அறிந்தவரே அறிவுள்ளோர் அவர்தானமே. 41

அவறான யிவராலே சவரால்கொண்டு
　　அந்தரம்ப மண்டமதால் கல்லைப்பேர்த்து
பவறான குகைக்குள்ளே கல்லைவைத்து
　　பாரைமண்ணு சீலைசெய்து ரவியில்போட
நவரான நாதவிந்து காரசாரம்
　　நன்றாக யிருகியது கட்டிப்போகும்
எவறான குகையெடுத்துப் புடந்தான்போட்டால்
　　யிந்த்ரகோபச் செந்தூரப் பொட்டதாமே. 42

காரசாரம்

இந்திரக் கோபமென்ற தலால்
　　சொல்லக்கேளு யியம்பினதோர் மானாதிவாகனந்தான்
சந்திரபிறை பதினாறுகலை போலான
　　சவுந்தரிதான் பத்மினியின் சரித்திரத்தாலே
வெந்துவிடும் அடிமுடிதான் நீறிப்போகு
　　மதுளைவால் தெளிந்தே போகும்
நொந்துவிடு மெதிரியொரு நெகருண்டோதோ
　　னுண்மையப்பா கருங்காக முறைமைதானே. 43

காணப்பா சதாமேக மிருபத்தொன்றும்
　　காமகேசரி யிதனால் சண்ணுண்டேபோம்
நாணப்பா நாம்சொன்னோம் நாலாஞ்சாதி
　　நரர்களிதை யறிவார்களோ நவப்பிரமத்தை
ஏணப்பா யிந்தரவி மதியினாலே
　　எடுத்ததொழில் சதாகோடி யியம்புவோநாம்
ஓணப்பா அளவறிந்தா லவனேபுத்திரன்
　　அறியாட்டா[illegible] [illegible]மால[illegible] க[illegible]தையென்னே. 44

என்னபுத்தி யிருந்தாலு மறுவுக்கீடோ
யிடம்புத்தி வலம்வருமோ கிலைரெண்டாலே
சொன்னபுத்தி தவறாத புலத்தியாகேள்
சொர்னமதைக் காணவென்றால் வாயுவைக்காணு
மன்னபுத்தி மிடமெல்லப் பொருள்மேலாசை
வைத்தவொரு மடையருக்கு வருமோவாதம்
அன்னபுத்தி தவறாத புத்தியள்ளோர்க்கு
அருள்தருகு மானாதி மகிமைபாரே. 45

பாரப்பா சாதியிலே மகத்தாம்சாதி
பரிசுடைய சூத்திரனாம் பேரேஅண்டம்
ஆரப்பா அறிவார்கள் அண்டங்காகை
அப்பனே அக்காக முதல்க்காகமைந்தும்
நேரப்பா கொண்டுவந்து பாதனம்பண்ணு
நிமிஷத்தில் காடாத நாக்கரிதான்கொண்டு
ஏரப்பா நரிமண்டை பச்சையாக
யெடுத்ததனைக் கொண்டுவந்து யியம்பக்கேளே. 46

கேளடா புலஸ்தியனே பூனீர்பண்ணு
கிருபையுடன் கொண்டுவந்து ஆனீர்விட்டு
காளடா கரைத்திறுத்துத் தெளிவைவாங்கி
காளைமேகம் படியஞ்சும் கல்ப்போல்க்காய்ச்சி
ஏணடா பத்துமுறை பொங்கித்தானால்
பெளமண்டை நரியோடு மெலும்புங்கூட்டி
ஆணடா கல்லுரலி லிடித்துக்கொண்டு
அப்பனே காகனுட வித்தைகானே. 47

காணடா கேசரியி னண்டம்ரெண்டு
கண்மணியே வுடைத்ததனை பீங்கான்தன்னில்
ஓணடா வித்தெல்லா மோர்பீங்கானில்
உத்தமனே நாதமதை ஓர்பீங்கானில்
ஏணடா யேரண்டஞ் சவ்வெடுத்து
யிம்மூன்று ஓடதனைக் கிளியாய்க்கட்டி
வேணடா விந்ததிலே யிரண்டுநாழி
விநமுடன் கணக்காக ஊரப்போடே. 48

போடப்பா சுந்தரமே நாதத்தாட்டி
பொங்கமுட னன்றாக யெடுத்துக்கொண்டு
சாடப்பா சலம்விட்டுக் கழுவிப்போடு
சமர்த்தாக யெரிகிறதோர் பூனீர்சட்டி
ஏடப்பா தீர்ந்துநன்றாய் கிளியேபோட்டு
யிரண்டு நாழிகைமட்டாய் தீயெரிப்பாய்
தேடப்பா தெளிந்துபொங்கி வருகும்போல
தெளிவான கிளியெடுத்துக் கழுவிப்போடே. 49

கழுவினதோர் கிளியதனைக் கல்வத்திட்டு
காளமேகத் தயிலமது பலந்தான்விட்டு
கழுவினதோர் சாடப்பா சாமந்தானும்
சமர்த்தான அண்டவிந்தால் சாமமாட்டு
நழுவினதோர் நாதவிந்தில் சாமமாட்டு
நாதாந்தக் கிளிமெழுகு நலமாயோடும்
வழுவினதோர் மெழுகெடுத்து முன்னண்டமைந்து
மார்க்கமதாய் சொல்லுகிறோ மகிழ்ந்திடீரே. 50

மகிழ்ந்திடுவீர் வுடற்கல்ஓசுண்ணங்கொண்டு
மகத்தான விந்ததினால் மத்தித்தப்பா
அகழ்ந்திடுவீர் நாலதுக்கும் கவசம்செய்வாய்
அப்பனே நெற்கனம்போ லடவாய்நீயும்
கவழ்ந்திடுவீர் கவசம்மேல் சீலைசெய்து
கண்மணியே ரவிதனிலே காயப்போடு
வெகழ்ந்திடா யிரண்டுநாழிகை காய்ந்தாக்கால்
யேரண்ட மெழுகெடுத்து குகைபோல்செய்யே. 51

செய்யப்பா அஞ்சுகுகை பருமாங்காய்போல்
செயலாகச் சீலைசெய்து அண்டமைந்தும்
அய்யப்பா வைந்ததிலே அய்ந்தேவைத்து
அப்பனே வெழுசீலை வதன்மேற்செய்து
மெய்யப்பா வதையெடுத்து ரவியில்சாமம்
மேலாகக் காய்ந்தஅதை யெடுத்துக்கொண்டு
நய்யப்பா வதின்மேலே தயிலத்தாலே
நலமான சீலையது யேழுஞ்செய்யே. 52

செய்துநன்றாய் ரவிதனிலே யெண்ணாறுசாமம்
செயலாகக் காய்ந்ததென்னில் யெடுத்துக்கொண்டு
கொய்துநன்றாய்க் கொடிக்கள்ளி மரங்கள்தேடி
குகையெடுத்து மரந்தோண்டி வதுக்குள்வைத்து
எய்துநன்றாய் யெண்ணாறுசாமஞ் சென்றா
லிடையதுதான் குறையாது யியம்பக்கேளும்
ஐய்துநன்று குகையெடுத்து ரவியில்சாமம்
அப்பனே காய்ந்துதென்னில் குகையைத்தட்டே. 53

குகையெடுத்துக் காயதனை வுடைத்துப்பார்த்தால்
குருவண்டு நாபியது யிதற்கீடுண்டோ
துகையாக வகையறிந்தோ ரிம்மெழுகைச்சொன்னார்
துதிசெய்தே னவர்பதத்தில் மதியால்நின்று
வகையான மெழுகதுதான் சகலத்திற்கு
மகத்தான முதற்குருத்தான் வண்டோநாபி
திகையாதே மெழுகெடுத்த செப்பில்வைத்து
செயவாடை பொடிவாசம் செய்வீர்தாமே. 54

தாமென்ற கதம்பகஸ்தூரி மஞ்சள்
சவ்வாது புனுகுடனே சாம்பிராணிதூபம்
காமென்ற கல்வத்தில் தூளதாக்கி
கண்மணியே கிளிகட்டி செப்பில்வைத்து
வேமென்ற மேற்பரணி வலுவாய்ச்செய்து
மேலான மாந்தோ லாசனத்தின்மீது
சேமென்ற கிழக்கு முகமாச்சுத்தி
நமசிமநயவ ஓமென்ற சிரிமென்றோதே. 55

ஓங்கடா பூமியின்கீழ் சாதுகட்டி
ஓங்கார சீடரவர் வாசல்விட்டு
தாங்கடா லெட்சமுரு தம்பித்தாக்கால்
தற்பரத்தின் கிருபையினா லிம்மெழுகுசித்தி
ஆங்கடா யிம்மெழுகை செய்துகொண்டு
அறிவாக சிவயோக மிருந்தாயானால்
ஏங்கடா குருவண்டு யிதற்கீடுண்டோ
யென்ன சொல்வோம் பூவிதற்கீடாகாதே. 56

ஈடாகா சரக்கெல்லாம் சுண்ணமாகு
மியலான சுண்ணமெல்லாஞ் செந்தூரமாகும்
காடாக கட்டெல்லாம் பற்பமாகும்
கருவான பற்பமெல்லாஞ் செயநீராக்கும்
நீடாக நீரெல்லாம் நீறாதார்க்கு
நிமிஷத்தி லண்டரண்டம் நீறிப்போகும்
தேடாக குருகொண்டு கவராகும்பார்
தெரிசிப்பார் மெழுகெடுத்துப் பூசிப்பாயே. 57

தெரிசிப்பாய் செம்பெடுத்து பூனீர்சுத்தி
செயலாக யெடுத்துஅதை அடுத்துக்கொண்டு
உரிசிப்பாய் உடற்சுண்ணம் விராகன்ரெண்டு
ஓர்பலந்தான் செம்பதிலே கவசஞ்செய்து
எரிசிப்பாய் முன்சொன்ன மெழுகாலப்பா
மேலான குகைசெய்து ரவியுலர்த்தி
அரிசிப்பாய் குகைக்குள்ளே செம்பைவைத்து
அதன்மேலே விந்ததனால் சீலைசெய்யே. 58

செய்யப்பா சீலையது யேழுஞ்செய்து
செயமான துருத்திகொண்டு குகையையூத
அய்யப்பா நாழிகைதான் வைத்துசெண்ணாலும்
ஆலவிஷம் போலுருகி அமரும்பாரு
மெய்யப்பா சிமிழ்திறந்து மெழுகெடுத்து
மேலான வுளுந்தினிட பிரமாணந்தான்
கொய்யப்பா குருவதனை குகையிற்போட்டால்
கொதிக்குமடா வெகுசத்த மாகத்தானே. 59

தானான குகையில்நின்ற செம்பெல்லாந்தான்
மாகுவோர் பலத்திற் கொன்றரைதானப்பா
ஆனான் ஜீவரத்தின மிதற்குப்பேரு
ஆகுமடா சக்கரப்போ லப்பாகாணு
ஏனான யெட்டெட்டு மறுபத்துநாலு
யியம்பினோம் சூரியகளை யெண்பத்தொன்று
கோனான கொடிரவியும் பிரகாசம்போல்
குறிக்குமப்பா யெடுத்ததனைச் சாய்த்திடாயே. 60

சாய்த்திட்ட யேமமதை சிவயோகத்தில்
சார்வாக சிலவுசெய்து சாய்த்திடாய்நீ
காய்த்திடா யிம்மெழுகா லிவ்விதமாய்ச்செய்தால்
கனகமது வாகுமடா கருத்தாய்கேளு
மோய்த்திட்ட முப்புவு மிதற்கீடுண்டோ
மூதண்ட யிம்மெழுகை பத்னம்பண்ணு
ஆய்த்திட்ட யிம்மெழுகு சூட்சாசூட்சம்
அரன்சொன்னா ரெந்தமக்கு வறிந்திடீரே. 61

அறிந்திடீ ரண்டத்தின் மெழுகேசொன்னோம்
அறைந்ததோமே மகிமைதனை யார்தான்செய்வார்
மறிந்திடீ ரொருபலந்தான் அயந்தான்கொண்டு
மகத்தான பூனீரில் சுத்திசெய்து
முறிந்திடீர் முன்சொன்ன பாகமாகா
முறைதவரா செய்கையென்னில் யெல்லாமாகும்
புறிந்திடீர் புலத்தியனே உனக்காய்ச்சொன்னோம்
புனிதமுள்ள கல்களெல்லாம் தங்கமாமே. 62

ஆமேதா னண்டமது மெழுகதாச்சு
அறைகின்றேன் முப்புனிட முறையைக்கேளும்
நாமேதான் காவியத்தின் நாலாங்காண்டம்
நாதாந்தத் தெளிவுள்ளோர் தேறும்பேர்க்கு
காமேதான் கருக்குருவாய் நாமேசொன்னோம்
கருத்துள்ள புத்திரரை நலமாய்க்கேளு
தேமேதான் சிவயோகம் சித்தியாகும்
தெளிவான மெழுகதனை செய்துபாரே. 63

கருங்காகம் அண்டம் கோழி அண்டம்

பாரப்பா வாசியிலே வாழ்வோர்க்கப்பா
பரிசுடைய வாதமதை பகரக்கேளு
கேரப்பா கேசரிதான் அண்டங்காகா
கிருபையென்ற சாதியது சொல்லக்கேளு
நாரப்பா நாள்வேண்டாம் கிரகம்வேண்டாம்
நட்சத்திரக் குறிப்பனைத்தும் பார்க்கவேண்டாம்
வேரப்பா சித்திரைநாள் கடுரமான
வெய்யில்ரவி காயுகின்ற விபரங்காணே. 64

காணுகின்ற கேசரியின் அண்டம்பத்து
கண்மணியே நரித்தலைதான் சதையோடாகும்
கோணுகின்ற கருங்கோழி அண்டம்பத்து
கூறினோம் செம்பருந்து வண்டம்ரெண்டு
ஆணுகின்ற வள்ளாமை அண்டம்பத்து
ஆகதொகை முப்பத்து மூன்றைக்கொண்டு
தாணுகின்ற முன்சொன்னத் தயிலமிட்டு
தயவாக வோர்சாம மூதவையே. 65

செம்பருந்து அண்டம்

ஊறினதோ ரஞ்சுருவு எடுத்துக்கொண்டு
உபாயமதாய் காடாற்ற யெலும்புங்கொண்டு
காறினதோர் சலம்விட்டுக் கழுவிப்போட்டு
கல்வத்தில் தயிலம்விட்டு சாடுவாய்நீ
ஆறினபின் ஓர்சாமம் விந்தாலாட்டு
அப்பனே நாதமதில் சாமமாட்டு
வாறினதோர் வழித்தெடுக்க மெழுகாய்ப்போகும்
வழித்த மெழுகெடுத்ததனை வகையாய்க்கேளே. 66

வகையான மெழுகெடுத்துக் கலசம்செய்வாய்
மகத்தான வைந்ததுவு மதின்மேலப்பா
துகையாக ரவிதனிலே சாமங்காய்ந்தால்
துருவமென்ற வைந்துருவும் சுத்தியாச்சு
பகையான வைந்துருவை யெடுத்துக்கொண்டு
பாலகனே கவசமதை மெதுவாய்வாங்கி
சிகையான சிரோன்மணியைப் பூசைசெய்வாய்
சிவயநம ஓமென்று செபித்திடாயே. 67

செபித்திடுவாய் லட்சமுரு தம்பித்தாக்கால்
சித்திக்கு மித்தொழில்தான் செய்துபாரு
அவித்திடுவா யஞ்சுருவும் பீங்கான்தன்னில்
அப்பனே வெவ்வேறே விந்தெடுத்து
உவித்திடுவா யோர்பலந்தான் உடற்கற்சுண்ணம்
உத்தமனே யிரண்டுதற்குப் பவ்வாதிபோடு
மவித்திடுவாய் மதியென்ற பனியில்வைத்தால்
மகத்தான சுத்தசல மிறங்கும்பாரே. 68

மாக்கரு

பாரப்பா தெளிந்தவிந்து சீஷாகொண்டு
பக்குவமா யதிலிட்டு பிரடையோடு
நாரப்பா நாதவிந்து வெவ்வேறதாக
நலமான சீஷாவில் பதனம்பண்ணு
சோரப்பா சுத்தசல முடிந்ததாச்சு
சொல்லுகின்றே னாகாகா சோதித்தேறு
ஆரப்பா அறிவார்க ளைந்துபூதம்
ஆடுமடா நினைந்தபடி அண்டக்கூறே. 69

கூறான வைந்துருவி னண்டங்கொண்டு
கூர்மையுள்ள முன்முறைபோல் சுத்திசெய்து
வேறான சுக்கிரன்நா ளதிகாலத்தில்
விவேகமுள்ள பாலகனே வைகைமேவி
தானான ஸ்தானபான நேமநிட்டை
சத்திசிவ தபத்துடனே தயவாய்வைத்து
ஆறான அகோரகிறீம் ஓறிம்சிறிம்மய
சிவமசிவ ஓமென்று ஆடுவாயே. 70

எங்கும் அகத்தீசர்

ஆடவென்றால் புலத்தியனே சொல்லக்கேளு
அறியிறிஓம் நறிவறி ஊ மடவாய்ச்சேவி
மாடவென்றால் மம்அங்குசா ஐஓமென்று
மைந்தனே சிவசிவா வாவாவென்று
தேடவென்றா லென்மகனே மகத்தியன்வாக்கியம்
தேசமதில் சித்தர்களும் அதிகமாகும்
நாடவென்றா லுலகமெல்லா மென்மகிமைபாரு
நாதாந்த சித்தர்கள்பேர் னாமேயாமே. 71

நாமென்ற பதினெண்பேர் நாமேயாகும்
நவசராசரங்க ளெல்லாம் நாமேயாகும்
பூவென்ற புவனமெல்லாம் நாமேயாகும்
பூச்சக்கிர நவதிசையு நாமேயாகும்
தேனென்ற திரிபுவன மேழுநாமே
திசைகண்ட மும்முண்ட பதியுநாமே
ஆமென்ற அட்டதிக்குப்பரமாய் நின்று
ஆடுவாய் புலத்தியனே அகத்தியனாமே 72

ஆடுவாய் லட்சமுரு தியானஞ்செய்து
அஞ்சுருவு முடைத்ததனை சவ்வுதன்னி
ஓடுவாய் கல்லுரலி லுருவேபோட்டு
உத்தமனே சுத்தசல முணர்வாய்விட்டு
ஏடுவா யிருப்புலக்கை சாணெட்டாகும்
யிந்திரமென்ற விந்தைவிட்டுச் சாமஞ்சாடு
நாடுவாய் நாதமதா லிரண்டுசாமம்
நளினமதாய் சாட்டிவரமாப் போலாமே. 73

மாவான மாவதிலே உடற்கறிசுண்ண
மகத்தான மெழுகதிலே உளுந்தின்வீதம்
கூவான குண்டுமணிப் பிரமாணந்தான்
கூராக மிதுவிரண்டு மாவிற்போட்டால்
மேலான நீரதுதான் களிவாமாவில்
மேலான உலக்கைகொண்டு சாடுசாடு
ஆவான மெழுகதுபோ லாகும்பாரு
அஞ்சுருவின் மெழுகெடுத்து வரையக்கேளே. 74

சூரிய செபம்

அரையக்கேள் வைந்துருவின் மெழுகெடுத்து
அரகரா பழம்பாண்ட மதனிற்போட்டு
சொரையக்கேள் சுத்தசல மதனில்விட்டு
சொற்பெரிய கரமதனால் கலக்கிக்கொண்டு
தெரையக்கேள் கலக்கினதை யிறுத்துக்கொண்டு
தெளியவைப்பா யன்னாள்தான் முழுதும்போனால்
மரையக்கேள் மறுனாள்தா னருக்கநாளில்
மைந்தனே சூரியசெப மருவிடாயே. 75

மருவிடாய் ஓம்சிறிமறி மென்றேதான்
மனயவசி ஓஆஊ மாட்டுலெட்சம்
புருவிடாய் பூசைசெய்து தெளிந்தநீரில்
புகழான அண்டக்கல் வெள்ளைச்சுண்ணம்
அருகிடாய் மெழுகதிலே உளுந்துவீதம்
அப்பனே யிரண்டுஞ் சரியாகக்கொண்டு
கருவிடா யிரண்டுஞ் சரியாய்ப்பிசைந்து
கண்மணியே அன்னீரில் போடுவாயே. 76

போட்டுநன்றாய் ரவிதனிலே மேற்சட்டிமூடி
புகழாக சாமம்வைத்து பார்த்தாயானால்
நாட்டினிலே நாம்சொன்னோ மிதுதான்சாபம்
நளினமென்ற சாரையைப்போல் சீறிற்றானால்
காட்டுநன்றாக கருக்குறிக ளெல்லாம்சித்தி
கைபாகம் செய்பாகம் கண்டேகொள்ளும்
போட்டு நன்றாய்போகாமல் போனாலப்பா
புனிதமென்ற வாதசித்திப் பலியாதென்னே. 77

பலித்திடுங்காண் தெளிவுள்ளோர் கருவோர்க்கப்பா
பயப்படுங்காண் ரசவாதி யவனேயாவான்
கெலித்திடுங்கா ணதையெடுத்து அடுப்பிலேற்றி
கிருபையென்ற காலாக்கினி யதுபோற்சாடு
வலித்திடுவாய் தெண்ணலது திரும்பினாற்போல்
வருகுமப்பா பொங்கியது செம்மேகம்போல்
சலித்திடுவாய் சாமஞ்சென் றெடுத்திறக்கி
சாடியென்ற பெருங்சாடி யதனிற்சாயே. 78

சாய்த்திடுவா யிறக்கிநீர் யிருந்துகொண்டு
சட்டியென்ற பழஞ்சட்டி யதனில்வார்த்து
காய்த்திடுவா யடியில்நின்ற மாவைக்கொண்டு
அப்பனே கெடல்தேங்கா யோட்டில்வைத்து
நாய்த்திடுவாய் ரவிதனிலே சாமங்காய்ந்தால்
நாதாந்த ரவிமெழுகாம் பதனம்பண்ணு
தாய்த்திடுவாய் முன்சொன்ன தயிலங்கொண்டு
தருவான யிம்மெழுகைக் கல்வத்தூட்டே. 79

ஊட்டியே கற்சுண்ணம் விராகன்போடு
உற்றதொரு அண்டவிந்தால் சாமமாட்டு
தாட்டிகமாய் தயிலமதால் சாமமாட்டு
தருவான நாதமதால் சாமமாட்டு
ஆட்டியே யிம்மெழுகை வழித்துப்பின்னை
அடவான வோட்டில்வைத்துச் சீலைசெய்து
தூட்டியே துருத்திகொண்டு சாமஞ்சாடு
தோகையிள வாய்மயிலே தொழுதிடாயே. 80

தொழுதிடாய் சாமமது சாட்டினாக்கால்
 துதிபெருங்கான் சூரியன்றான் காந்திவீசும்
பழுதிடாய் போகாது மகத்தாம்புன்னம்
 பத்மினியின் உடற்கல்லு யிதற்கீடுண்டா
வழுதிடாய் வாதிமகனீர்னால் செய்வான்
 மத்தொருத்தர் செய்குவரோ மதியுள்ளோர்கள்
எழுத்திடா யிறுத்தநீர் தன்னிலப்பா
 யிச்சுண்ணம் விராகனெடை யியம்புவாயே. 81

இயம்புவா யிந்தநீர் வந்திட்டாலே
 யிடமதிலே ரவிகாய்ந்து புகழ்ந்திடாய்நீ
புயம்பவே சுண்ணமதைப் போட்டபோதே
 பொங்குகடல் நுரைபோல் புனிதமாக
அயம்புவாய் பொங்கியது அமரும்பாரு
 அப்பனே நாளொன்றுக் கிருநேரங்காய்ந்தால்
தெயம்புவாய் யின்னீரில் ரெத்தம்போலே
 தேசிநீ ரிறங்குமப்பா யிறுத்துக்கொள்ளே. 82

கொள்ளப்பா தேசிநீர் தேனுங்கூட்டி
 கொண்டை யென்னும் யோகமதில் கூறக்கேளு
தெள்ளப்பா யிந்தநீர் மண்டலமேகொண்டால்
 தேகவச்சிரக் காயமடா தெளிந்தபேர்க்கு
செள்ளப்பா சிவயோகம் செய்யும்போது
 சிவசிவா யிந்தமுர்தம் தினமுங்கொள்ளு
மொள்ளப்பா செடத்தில் நோய்வராது
 மோட்சமுனக் கெய்துமடா முத்திகாணே. 83

பொட்டிலுப்பு

காணுகின்ற யிந்தமுர்தம் சீஷர்கொண்டு
 கண்மணியே வெகுபதனம் கருத்தாய்வைத்து
மாணுகின்ற மயேஸ்பரியை பூசைசெய்து
 மவுனசிவ யோகத்தில் மருவிடாய்நீ
ஆணுகின்ற யிவ்வமுர்தம் விளையாட்டல்ல
 அமுர்தவிந்து கற்பமடா அரன்கொண்டார்பார்
தோணுகின்ற சடலத்தின் நாடெல்லாம்போம்
 சொற்பெரிய தேகமெல்லாம் குளிர்ச்சியாமே. 84

ஆகுமே முன்சொன்ன தெளிவுநீரை
அப்பனே ரவிதனிலே யிரண்டுசாமம்
வேகுமே விதமதாய் வைத்தாயானால்
வீறிடுங்கா னெண்ணெய்கக்கி விஷமாயோடும்
ஏகுமே யிறுத்ததனை பத்துநாள்தான்
யிந்தவித மாகவல்லோ செய்தாயானால்
மாகுமே விதிலிருந்த விடமெல்லாம்போம்
மகத்தான சாரையுப்புப் படரும்பாரே. 85

படாந்தவுப்பை தானெடுத்து பீங்கான்தன்னில்
பாலமுர்த சுத்தசலம் தாமும்விட்டு
கடந்தவுப்பைக் கையினால் பிசைந்தேமைந்தா
கருவான பனியில்வைத்து யெடுத்துப்பாரு
அடந்ததொரு அவ்வுப்பு சந்திரன்போல்பொங்கி
ஆகுமடா பொட்டுலுப்பு வதற்குப்பேரு
செடந்ததொரு வுப்பதனை சீஷாகொண்டு
செயம்பெறவே பதனமதாய் செய்திடீரே. 86

செய்திடுவா யிந்தவுப்பு யிருந்தசட்டி
செயலான சட்டியிலே சுத்தசலம்விட்டு
கைதிடுவாய் கலக்கியே வேருகட்டி
கனரவியில் வைத்ததனை கலங்காமல்த்தான்
சைதிடுவாய் சாமஞ்சென் றெடுத்துப்பாரு
சலனுரைபோல் பொங்கியது தளும்பிநிற்கும்
எய்திடுவாய் பீங்கான் கொண்டிறுத்தாயானால்
யேரண்டத் தெண்ணையைப்போ லிறங்கும்பாரே. 87

இறங்கினதோ ரிவ்வமுர்தப் பசும்பால்கூட்டி
சேகரியாய்க் கலந்து சர்க்கரைதான்போட்டு
மறங்குகின்ற யோகத்தில் மண்டலேமேகொண்டால்
மகத்தான பித்தமெல்லா மாண்டேபோகும்
சலங்குகின்ற சலகற்ப மிதற்குப்பேரு
சவுந்தரியைப் பூசைசெய்து பதனம்பண்ணு
முறங்குகின்ற முன்சொன்ன குளம்பெடுத்து
முறையாகப் பத்துநாள் ரவியில்வையே. 88

வையப்பா நாளொன்றுக் கிரண்டுசாமம்
மைந்தனே காய்ந்தபிற கிறுத்துப்போடு
கையப்பா கக்கியல்லோ விடமாய்ப்போகும்
கண்டிடாய் செலவுப்பு படரும்பாரும்
பெய்யப்பா பீங்கானி லெடுத்துப்போடு
பேரான உப்பதனைப் பிரியமாக
மெய்யப்பா சுத்தசல முப்பில்விட்டு
விளங்கவே பிசைந்ததனைப் பனியில்வையே. 89

பழச்சாறு

வைத்ததொரு உப்பதனை பனியில்வைத்தால்
வளமான சலவுப்பு கல்லுப்பாகும்
கைத்ததொரு கல்லுப்பை சீசாகொண்டு
கண்மணியே வதில்போட்டு பதனம்பண்ணு
ஐத்ததொரு யிந்தவுப்பு பூர்த்தசட்டி
அழகான சட்டியிலே சுத்தசலம்விட்டு
கைத்தவித மாகவல்லோ கலக்கிநீயும்
தயவான வேடுகட்டி ரவியில்வையே. 90

ரவியில்வைத்த சட்டியது சாமங்காய்ந்தால்
நலமான கடல்நுரை போலெழும்பிச்சீறும்
அரவில்நின்று மீறியது அமுர்தம்பொங்கி
அமருமப்பா கம்பியுப வடியிற்நிற்கும்
பிரவில்நின்று பீங்கான்கொண் டிருத்துப்பாரு
பேரான அமுர்தவாலைப் பால்போல்காணும்
இரவில்நின்று யிந்தமுர்த முலைப்பால்விட்டு
இன்பமென்ற சர்க்கரைதேன் வீதங்காலே. 91

விதமான அமுர்தமதை சிவயோகத்தில்
விளங்கவே கொண்டிடவே சிலேத்துமமெல்லாம்
மதமான மேகமிருபத் தொன்றும்போகும்
மகத்தான பித்தநாற்பதுவும் போகும்
வதமான மண்டலமோர் போதுண்டாக்கால்
வாதமெண்பது போகு மமுர்தவாலை
கதமான கற்பமடா மண்டலமேகொண்டால்
காயமதை வெங்காயமதாய் கலம்போலாச்சே. 92

ஆச்சப்பா கம்பியுப்பு பாரைகேளு
அடியில்நின்ற குழம்பதுவில் சுத்தசலம்விட்டு
பாச்சப்பா பழச்சாறு யிதற்குப்பேரு
பரிசடைய வெங்காய மிதற்குப்பேரு
ஏச்சப்பா கலக்கியதை வேடுகட்டி
யேழுநாள் கடுரவியில் காய்ந்ததானால்
மூச்சப்பா மும்மூலம் நடுமூலந்தான்
மூச்சடங்கிச் சாகுமடா மெழுகாய்ப்போமே. 93

போமப்பா வெங்காய மெழுகெடுத்து
புனிதமென்ற சுரைப்பாணி வதற்குள்வைத்து
நாமப்பா மேற்பீரடை வாசங்கட்டி
நாதாந்த சற்குருவைத் தியானஞ்செய்து
ஆமப்பா வஷ்டநவ சித்துமாட
வெங்காய மெழுகெடுத்துப் பதனம்பண்ணு
ஓமப்பா மூன்றுப்பும் சீசாகொண்டு
உத்தமனே வெகுபதன மாகவையே. 94

பதனமென்ற மூன்றுப்பு முடிந்ததாச்சு
பாலகனே வெங்காய மெழுகதாச்சு
அதனமென்ற சுத்தசல வமுர்தமாச்சு
அய்ந்துருவின் பூதமைந்து வதனாலாச்சு
முதனமென்ற மூன்றுப்பு முடிந்ததாச்சு
மூதண்ட வண்டசுன்ண மெழுகதாச்சு
விதனமென்ற பாடெல்லா மொழிந்தேபோச்சு
விளங்கினதோர் நாலான காண்டமாச்சே. 95

ஆச்சப்பா காவியத்தின் நாலாங்காண்டம்
ஆதிசிவன் சொன்னமொழி யானுங்கண்டு
மாச்சப்பா மயேஸ்பரத்தின் கிருபையாலே.
மகத்தான சித்தியெல்லா மறிவால்பெற்று
ஏச்சப்பா யிந்தநூல் சகலத்திற்கும்
இயம்பினோ முதற்குருதா னிதற்கீடுண்டோ
வாச்சப்பா புலத்தியனே பதனமின்னூல்
மகத்தான விந்நூலு பூசிப்பாயே. 96

பூசிப்பாய் காவியத்தை யறிந்தேவப்பா
புனிதமுள்ள சித்தியெல்லா முத்தியாகும்
வாசிப்பா யோகதரிசனத்தைக் காணு
வளமான தரிசினத்தால் மருவியாடு
பாசிப்பா பலகலைகள் கலைக்கியானம்
பாடுபடா தெரிசனமா மப்பியாசம் சித்தி
ஆசிப்பாய் காண்டமிது நாலுக்குள்ளே
ஆடலாந் தொண்ணூற்றேழ் பாடல்முற்றே. 97

நாலாங்காண்டம் முற்றுப்பெற்றது.

ஐந்தாவது காண்டம்

பதிப்பான பராபரனைத் தொழுதுபோற்றி
பத்திசித்தி முத்திபெறு நித்தம்பூசி
அதியான புலஸ்தியனே வைந்தாங்காண்டம்
அருளுகிறோ மரன்செயலா லறிந்திடாய்நீ
கதியான கருவுடையோ ரறிந்துகொள்ளும்
காவியந்தா னின்னூல்போ லொருநூலுண்டோ
நதியான நான்முகனைப் பணிந்தோமப்பா
நலம்பெற்றோ மின்னூலில் வரம்பெற்றோமே. 1

வரமான நதிக்கருவை யறிந்தோம்பாரு
மானாதியென்றும் பேர்குறித்தோம் பாரு
பரமான பஞ்சகரு வைந்துங்கண்டோம்
பஞ்சபொரு ளஞ்சுருவின் பாகங்கண்டோம்
அரமான அண்டத்தை அறிந்தோம்பாரு
அண்டத்தி னதிசெயங்க ளெல்லாங்கண்டோம்
குரமான கொடியரவி மதியுங்கண்டோம்
கும்பமெழு வாசியினால் தம்பித்தோமே. 2

ஓமப்பா ஒன்றான கர்த்தன்சொன்னார்
உணர்வறிந்த அகத்தியனான் உலகம்பிரமன்
நாமப்பா கண்டறிந்தோம் புவனமேழும்
நவசராசரங்க ளெல்லாம் விடையம்செய்தோம்
வேமப்பா வேதாந்தக் குருவைக்கண்டோம்
வெண்சாரை கருநெல்லி விளம்பினோம்யாம்
ஆமப்பா அறிவரோ அறியாரப்பா
அறிவறிந்தால் தெளியுமடா அப்புபாரே. 3

பாரப்பா அப்புவந்து சலமேயாச்சு
பனிநீரு அமுதமதை அறிவேயாச்சு
ஆரப்பா வறிவாலே யெல்லாமாச்சு
அட்டமா சித்துவிளை யாடலாச்சு
நேரப்பா அண்டவுப்பு முடிந்தேயாச்சு
நிமிஷத்தி லைங்காய மெழுகதாச்சு
மாரப்பா வதைக்கொண்டு மாற்றோகோடி
மாறினால் வெகுவேதை யாகும்பாரே. 4

ஆமப்பா அண்டஉப்பு சுண்ணமாக
    அறையுறோம் புலத்தியனே வைந்தாங்ககாண்டம்
ஏமப்பா காண்டம்நாலில் சொன்னோம்உப்பு
    யெடுத்ததனை பீங்கானில் பலரெண்டிட்டு
மாகுமப்பா மண்டலத்தின் மெழுகேகேளு
    மகத்தான நான்காவது காண்டந்தன்னில்
பாகுமப்பா மெழுகினிடை உளுந்தின்வீதம்
    பசுமையுள்ள வைங்காயம் சரியெடையாய்ப்போடே.5

போடப்பா உடற்கல்லுச் சுண்ணமப்பா
    புனிதமுடன் விராகனிடை போட்டாயானால்
ஏடப்பா யிதுமூன்று மொன்றாய்க்கூட்டி
    யிந்துப்பு நடுவில்வைத்து மதியில்வைத்தால்
மாடப்பா மதிசெயநீ ரருவிப்பாய்ந்தால்
    மைந்தனே யதையெடுத்துப் பார்த்தாயானால்
தேடப்பா தெளிந்தமுர்தம் வென்னீராச்சு
    தெளிவான மூன்றுப்பும் பலமூன்றாச்சே. 6

ஆச்சுதிந்த செயநீரு சீசாகொண்டு
    அடக்கமதாய் வைத்ததனைப் பணிந்தாயானால்
காச்சுதப்பா விந்தினிட விந்துனாலே
    கனிபருத்து அமுர்தரச செயநீராச்சு
வேச்சப்பா வெண்சாரை செயநீர்பேரு
    வேதாந்த சிரோண்மணியே பூசிப்பாய்நீ
ஏச்சப்பா ஏச்சல்ல காவியமின்னூலில்
    யெடுத்ததொழில் முறைக்கெல்லா மேனியாமே. 7

ஆமப்பா சாரைசெய நீரைச்சொன்னோம்
    ஆதியென்ற சசிசெயநீர் ஞானங்கேளு
மோமப்பா முதலுப்பு பிரமமாச்சு
    மூர்க்கமென்ற திரண்டாவது உப்பைக்கேளு
நாமப்பா உப்புபல மூன்றேயாகும்
    நலமான பீங்கானி லிந்துப்பிட்டு
காமப்பா வைந்துருவின் தயிலங்கொண்டு
    காய்பதமா யிந்துப்பில் வறைப்பலந்தான்வாரே. 8

வார்த்துநன்றாய் தயிலமதை பிசைந்துநீயும்
மகத்தான உடற்சுண்ணம் விராகன்போடு
வேர்த்துநன்றாய்ப் பராபரத்தை தியானஞ்செய்து
வேதாந்த உப்பெடுத்து ரவியில்வைத்தால்
சார்த்தமுர்தம் போலேநன்றா யருவிப்பாய்ந்து
சலநீராய்ப் பெருகியது செயநீராகும்
பேர்த்தமுர்த நாதசெயநீர் தானாகும்
புகழ்மஞ்சள் நிறமதுபோல் புகையதாமே. 9

ஆமேதான் செயநீரு செலமேயாகும்
அச்சலத்தை சீசாவிற் பதனம்பண்ணு
வாமேதான் வாமவாலை சகோதரியேமைந்தா
மவுனசிவ யோகமதி லர்ச்சிப்பாய்நீ
நாமேதான் சலசெயநீர் சொன்னோமப்பா
நாடதிலே வாதிகளோ நலமாய்ச் செய்வீர்
ஓமேதான் ஒவ்வொரு செயநீர்தன்னில்
ஓகோகோ கோடிதொந்தம் ஒடும்பாரே. 10

ஓடுமப்பா ஓர்செயநீர் செய்தாயானால்
ஒன்றான விஷ்ணுவடா நீதானாவாய்
ஆடுமப்பா அச்செயநீர் கோடாகோடி
அறுபத்து நாலுவைப்பு வதிலேயாகும்
நாடுமப்பா நாடதிலே செய்யும்வைப்பு
நலமான வெண்கருவால் நளினமாச்சு
வாடுமப்பா வச்சரக்கு வைப்பாமோதான்
வைத்தோம்நா மமுர்தஉப்பி லனேகம்வைப்பே. 11

ஆமப்பா செயநீரு முப்புங்கொண்டு
அரகரா வைங்காய மிதுமூன்றாலே
வாமப்பா வைப்பெல்லாம் வைக்கலாகு
மகத்தான தீனவைப்பு வாகாதப்பா
ஏமப்பா சலசெயநீர் பதனம்பண்ணு
யின்னமொரு செயநீரு மியம்பக்கேளு
நாமப்பா கல்செயநீர் சொன்னோம்சொன்னோம்
நளினமதாய்க் கல்செயநீர் நவிலக்கேளே. 12

நவிலக்கேள் கம்பியுப்பும் பலமூன்றாக
நளினமதாய் பீங்கானி லவ்வுப்பிட்டு
பவிலக்கேள் காண்டம்நாலில் சொன்னோம்
செய்வீர் பரிவான வுடற்சுண்ணம் விராகண்கொண்டு
தவிலக்கேள் கைபாகம் பிசகிடாமல்
தகைமையுடன் செய்தவர்க்கு யெல்லாஞ்சித்தி
முவிலக்கே ளண்டமதின் மெழுதானப்பா
மூர்க்கமதா யுளுந்தினிட வீதம்சேரே. 13

சேர்த்துநன்றா யுப்புதனி லுசரக்கொண்டு
தீர்பெறவே பிசைந்துநன்றாய்ப் பரணில்வைத்து
ஆர்த்துநன்றாய் பனியோடே வாரதாச்சு
அப்பனே வதிலிறங்கும் செயநீர்கேளு
கார்த்துநன்றா யெடுத்ததனைப் பார்த்தாயானால்
கள்ளிசிறு நாதமடா கலங்கவேண்டாம்
பார்த்துநன்றா யன்னீர்தா னென்னசொல்வோம்
பாலகனே முருக்கம்பூ வர்ணமாமே. 14

ஆகுமே சலசெயநீர் புட்டிகொண்டு
அடக்கமதாய் வைத்ததனைத் தாயேபூசி
பாகுமே மூன்றுப்பு மொன்றாய்ச்சேர்த்து
பாலகனே வில்வம்போல் குகைதான்செய்து
பூகுமே யோகமது செய்யும்போது
ஒன்றான மண்டலத்தில் நிலைக்கும்வாய்வு
நாகுமே வப்பியாசம் செய்துகொண்டு
நலமான வைங்காய மெழுகைக்கேளே. 15

கேளப்பா மெழுகெடுத்துப் பீங்கான்றன்னில்
கிருபையா யோர்பலந்தா னதனிலிட்டு
சேளப்பா முச்செயநீர் தயிலங்கூட்டி
செய்யலா வடிமெழுகைக் கூட்டிமத்தி
நாளப்பா ரவிதனிலே யோர்நாழிவைத்தால்
நலமானமெழுசெயநீ ரிறங்கும்பாரு
ஆளப்பா வதையெடுத்து உப்பிலிட்டு
அழகாக வதைப்பிசைந்து உண்டைபண்ணே. 16

பண்ணப்பா உண்டைதனை தேங்காய்போலே
பண்ணியதைப் பீங்கானில் பதமாய்வைத்து
உண்ணப்பா சுத்தசலம் செயநீர்கூட்டி
உண்டையது யமரும்படி யாகச்செய்து
அண்ணப்பா விந்ததினால் சீலைசெய்து
அழகான ரவிதனிலே வாரம்வைத்தால்
எண்ணப்பா நாளொன்றுக் கிரண்டுசாமம்
யிந்தமுறைப் பாகமதா யெடுத்துவையே. 17

வைத்ததொரு வுண்டையது வாரஞ்சென்றால்
மைந்தனே யெடுத்ததனை பேர்த்தாயானால்
ஆய்த்ததொரு கடல்நுரைபோல் பொங்கிநிற்கும்
அழகான பீங்கானில் நீரைமுப்பாம்
சாய்ந்ததொரு சந்திரன்போல் நிறந்தானாகும்
சமாதிமுப்பு மகிமைதனைச் சாற்றொண்ணாது
மாய்த்ததொரு பீங்கானில் நடுவிற்கேளு
மகத்தான வுண்டையது நீறிப்போமே. 18

நீறினதோர் நீரெல்லாம் உப்பாய்ப்போகும்
நீலமணி போலேயொரு குளிகைதட்டும்
மாறினதோர் மணியதனை யெடுத்துப்பார்த்தால்
மன்னசிவ யோகமணி யிதுதானப்பா
சேறினதோ ரிம்மணியைச் செயநீரில்போட்டு
செயலாக காரமட்டு மூறிற்றானால்
கூறினதோர் குளிகையிது கற்போல்கட்டும்
கூறினோம் சமாதிசிவ யோகத்தோர்க்கே. 19

ஓறான வைப்பியாசம் செய்வோரையா
ஒன்றான கேசரியின் ரம்பேவாங்கி
நாளான மணியதனை நரம்பால்கோர்த்து
நயவசிம யென்றதொரு உபதேசத்தால்
வேறான லட்சமுரு தியானஞ்செய்து
வேதாந்த சிரோன்மணியைப் பூசைசெய்து
ஆறான உண்டையதைக் கழுத்தில்கட்டி
அப்பியாச சிவயோக மடவாய்ச்செய்யே. 20

செய்யப்பா சிவயோகம் குளிகைகட்டி
சிறப்புடனே வாயுஸ்தம்ப மஞ்செய்தானால்
அய்யப்பா வாயுவெங்கும் செதராதப்பா
அப்பியாசம் சித்திக்கும் குளிகையாலே
குய்யப்பா குளிகைசெய்ய தம்பிக்காதே
குடிகெடுத்த மாய்கையது கெடுத்தேபோகும்
சையப்பா சமாதி ரசமணிதானப்பா
சண்டாள மானிடர்கள் மயங்கினாரே. 21

மயங்காதே நீகேளு புலத்தியனேயையா
மணிகுளிகை முடித்தாச்சு மயங்கவேண்டாம்
பியங்காதே பீங்கானி லிருந்தவுப்பு
பேராக யெடுத்ததனை குகைதானேகி
முயங்காதே மூன்றுப்பில் செயநீர்மூன்று
மூதண்ட வைங்காயம் செயநீர்மூன்றும்
நயங்காதே நால்செயநீர் முப்பில்விட்டு
நன்மையாய்ப் பாத்திரத்தில் பிசைந்திடாயே. 22

பிசைந்ததனைப் பாத்திரத்தில் பதனம்பண்ணு
பேராக வதையெடுத்துக் குகையில்சென்று
அசைந்தத்னை வட்டதிக்கு மேடைபோடு
அழகான நடுமேடை சிமாசனத்தில்
மிசைந்ததனை தும்பையென்ற செடிதானாலு
மிலங்கவே நாற்பக்கம் செடிதானாட்டு
மசைந்ததனை மாந்தோலாசனத்தின் மேலே
மைந்தனே வுளுக்கார்ந்து மருவிடீரே. 23

மருவினதோ ருப்பெடுத்து மேடைமீதில்
வைத்திடாய் மேற்பாண்டம் வளமாய்மூடு
ஒருவினதோர் ஓம்நயவசிம யென்றேதான்
ஒருநிலையாய் தும்பமலர் கொண்டேசேவி
அருவினதோர் தும்பமல ராலேயப்பா
அர்ச்சனைதான் லட்சமுரு அடைவாய்ச்செய்தால்
வருவினதோர் மண்டலங்கொண் டுருவாய்ஸ்தம்பி
மயேஸ்பரனைப் பூசைசெய்து மவுனமேவே. 24

மவுனசிவ யோகத்தின் சித்தியாலே
மண்டரண்ட சராசரங்க ளதனால்சித்தி
தெவுனமதின் மாய்கையதால் தினந்தோரப்பா
செயநீர்தான் மூன்றதுவு மொன்றாய்க்கூட்டி
அவுனமுடன் உப்பதின்மேல் மண்டலந்தான்கொண்டு
அடவாகச் கெடுத்தவராய் அப்பாநீயும்
செவுனமென்ற செயநீரின் வேகம்பட்டு
செயலாக முப்பதுவும் பூர்க்கும்பாரே. 25

பாரடா புலஸ்தியனே யின்னூல்பார்க்க
பலவிதமாய் செய்தார்கள் சித்தர்தாமும்
காரடா காவியத்தின் முறைதப்பாமல்
கருவுடையோ ரதுவறிந்து செய்தாரானால்
ஆரடா மண்டலத்தில் முப்புபூர்த்து
அணியணியாய் பூபூர்த்து பிஞ்சதாகி
வாரடா காயாகி பழமேயாகி
மதியொளியின் சந்திரன்போல் முப்புவாகும்
போரடா பூர்த்ததொரு முப்பெறித்து
புகழாக சீசாவில் பதனம்செய்யே. 26

செய்யப்பா முன்சொன்ன தியானத்தாலே
சிவபூசை லட்சமுரு தியானஞ்செய்து
பையப்பா பதனமதால் வைத்துநீயும்
பராபரிதன் சிரோன்மணியை தெரிசிப்பாய்நீ
மெய்யப்பா முப்பதுவு முடிந்தேயாச்சு
மேலான வப்பியாச முடனேயாச்சு
அய்யப்பா சமாதியுப்பு யிதற்குப்பேரு
அரகரா வின்னமொரு சேதிகேளே. 27

கேளப்பாமுப்புதன்னைச் சொன்னோம்பாரு
கிருபையென்ற சுண்ணமடா வழலைசுண்ணம்
ஆளப்பா ஆதியென்ற சுண்ணந்தன்னை
அரன்செய்வ தல்லாது யார்தான்செய்வார்
தாளப்பா தபோபலத்தால் நாமேசெய்தோம்
தாயான சவுந்தரியின் தன்மையாலே
நாளப்பா நாமிதுவின் கருவைக்கண்டு
நளினமதா யுந்தமக்கு நவிலுவோமே. 28

நவிலுவோம் சமாதிதனில் யோகம்செய்ய
நளினமென்ற காலமதில் முப்புகொண்டு
பவிலுவோம் வைந்துருவி னண்டமைந்தும்
பாலகனே வதைக்கொண்டு பாண்டந்தன்னில்
யொவிலுவோ முடைத்ததனை விந்தைபூத்தி
யோரான நாதமதை வெவ்வேறேவாங்கி
சவிலுவோ மண்டோட்டின் சவ்வேதள்ளி
சமர்த்தான பூணிகொண் டருகுவாயே. 29

சருகுவாய் அண்டங்கள் விற்றுவாச்சு
சாரந்த விந்து பூமியி னாதமாச்சு
புருகுவாய் பூமியின்கீழ் விந்துவீழ்ந்து
பூமியிட நாதவிந்தாய் புவினீராச்சு
அருகுவா யந்நீரா லெல்லாமாச்சு
அண்டரண்ட சராசரங்க ளதனால்சுத்தி
விருகுவா யிதுனளவில் யெல்லாமாளும்
வேதாந்த சித்தருக்கு விழமதாமே. 30

விழமான யிந்நஞ்சை யுண்டோர்க்குத்தான்
விஷம்பட்டு சோர்ந்துநன்றாய் விதனங்கொண்டார்
அழமான அரன்வீழ்வார்க் கமுதமாகி
அருளினா ரகத்தியற்கு யானுங்கண்டேன்
வழமான வண்டமப்பா புவிநீராலே
மாண்டுதடா மகாசத்தி பூனீர்காரம்
மழமான பாண்டமதில் மண்ணைக்கொட்டி
மகத்தான வன்னீர்விட் டருகுவாயே. 31

சருகுவாய் கலக்கியதை தெளிவைவாங்கி
சட்டிதனி லூற்றியதை தனதாய்நீயும்
அருகுவா யஞ்சுருவி னண்டோடெல்லாம்
அப்பனே சலம்விட்டுக் கழுவிக்கொண்டு
நருகுவாய் விந்ததிலே சாமமூற
நளினமதாய் நாதமதில் சாமவீதம்
பருகுவாய் சலம்விட்டுக் கழுவிக்கொண்டு
பாலகனே துணிதனிலே கிளியாய்க்கட்டே. 32

கட்டிநின்ற கிளியதனை யெடுத்துக்கொண்டு
கண்மணியே முப்புமண்ணி லன்னீர்விட்டு
வட்டிநின்ற வடுப்பேற்றி தீயைமூட்டி
மகத்தான சட்டிதனை யதன்மேல்வைத்து
அட்டினின்ற விரண்டறைநாழி கையெரிப்பாய்
அரகரா யெரிந்தவுடன் கிளியெடுத்து
மட்டிநின்ற கிளியவிழ்த்து சலம்விட்டப்பா
மார்க்கமதாய் கழுவியதை யெடுத்துக்கொள்ளே. 33

கொள்ளடா வண்டோட்டைக் கல்வத்திட்டு
குறிப்பான விந்தைவிட்டு சாமமாட்டு
அள்ளடா அவ்விந்தா லாட்டிப்பின்பு
அரகரா நாதமதால் சாமமாட்டு
மொள்ளடா வாட்டியதை வழித்துநீயும்
மூர்க்கமென்ற மெழுகதனை குகைபோற்செய்வாய்
கள்ளடா கலசம்போல் குகைதான்செய்து
கண்மணியே ரவிதனிலே காயப்போடே. 34

போட்டகுகை ரவிதனிலே சாமங்காய்ந்தால்
புகழாக மெத்தநன்று புனிதமாச்சு
எட்டக்கேள் முப்பெடுத்துக் குகைக்குள்வைத்து
யேழுதிரம் விந்துவால் கவசம்செய்து
நாட்டக்கேள் ரவிதனிலே சாமம்வைத்து
நலமாக குகையெடுத்து சமாதியேகி
ஆட்டக்கேள் துவரங்கரி யிரண்டுகூடை
அப்பனே கொண்டுவந்து அறையக்கேளே. 35

அறையக்கேள் துருத்திகொண்டு வலுவாய்ச்செய்து
வதுநடுவில் கரியைவைத்து வுமியைக்கொட்டி
குறையக்கேள் குகையெடுத்து வதனில்வைத்து
குருஓம் சிவநயவ வென்றேசாடு
கறையக்கேள் காலாக்கினி மூன்றுசாமம்
கைபாக மிதையறிந்து கருவாய்ச்செய்வாய்
வறையக்கேள் செம்மேகம் போலேகவ்வும்
வாணுமதி ரவியொளிபோ மதிபோலாமே. 36

ஆமப்பா யிதையறிந்து பாகமாக
அகத்தியனென் கைமுறைபோ லடவாய்ச்செய்தால்
மூமப்பா முப்புவந்து சுண்ணமாச்சு
மூலகவரை யீராறுபனிரண்டு நாலுமாச்சு
தேமப்பா தெரிசினமாம் பதினாலுஞ்சித்தி
திசைமுகனைப் போல்வாழ்வா யிக்கருவினாலே
காமப்பா கருக்குருவா யிருந்தநூலை
கருவறிந்து குருவருளால் கரைகண்டோமே. 37

கண்டோமே வண்டரண்ட பதியாறுமாறும்
கருவான மேலாறு வரையுங்கண்டோம்
பண்டான பதினாலு கலையுங்கண்டோம்
பாருலகி லெந்நாளும் பதிவாய்வாழ்ந்தோம்
கொண்டோமே தொண்டரென்றும் பேரும்பெற்றோம்
குருவான வழலைசுண்ணம் கருவைக்கண்டோம்
மொண்டோமே முடிந்தாச்சு வழலைசுண்ணம்
மோட்சமுள்ளோர்க் கெய்துமப்பா முறையைப்பாரே

முறையான துறைகண்டோம் புலத்தியாகேள்
மூன்றுப்பும் சுண்ணமதாய் முடிந்தேரப்பாரு
துறையான வரையாறு மிதனாலெய்தும்
துருவறைய ராறுமேலாறு மெய்தும்
பறையான கரையிதுவோ டாறுமெய்தும்
பனிரெண்டுக் கப்பாலு னாலுமெய்தும்
மறையான வேதமெல்லா மிதனாலெய்து
மானாதி யென்றகரு வறியலாமே. 39

அறியலாம் சிவயோகம் சமாதியோகம்
அறிந்தாக்கா லிச்சுண்ண மவர்க்கேயெய்தும்
வறியலா யோகதெரிசனம் பெற்றோர்க்கு
மதியில்நின்று வாடுமடா மகத்தாஞ்சுண்ணம்
கறியலாம் கல்வியது யிந்நூல்பார்க்கும்
காசினியில் மானிடரே கறுத்தாய்நில்லும்
ஒறியரை ஒன்றைபிடி பிசகாதப்பா
ஒகோகோ தன்மைபடு மனமகிழ்ந்தாய்பாரே. 40

பாரப்பா யிச்சுன்னம் கல்லுச்சுன்னம்
பாறைசுன்னம் காரைசுன்னம் சாரைசுன்னம்
ஆரப்பா வறிவார்க ளண்டசுன்னம்
ஆதியிலு வாதிகட்டு அமுர்தசுன்னம்
நாரப்பா சிவயோகம் சமாதியோகம்
நளினமதா யப்பியாச யோகங்கண்டோம்
மாரப்பா மதுவாகி அதிர்ச்சுன்னங்கண்டு
மனமகிழ்ந்த பெரியோரங்கு வருமைதானே. 41

தானென்ற யோகமதை செய்யும்போது
தருவான சுன்னத்தை பேய்சுரைபரணியில்
பானென்ற பதனமதாய் பிரடைபோட்டு
பாலகனே யோகதெரிசனமே செய்வாய்
நானென்ற வகமறிந்து சொன்னோமப்பா
நவப்பிரம னாகையினால் நலம்பெற்றோரை
போனென்ற பூசைசெய்து பதனம்பண்ணு
புனிதமென்ற சற்குருவைப் புகழ்ந்திடாயே. 42

புகழ்ந்திடாய் புலஸ்தியனே யுனக்குப்பின்தான்
புனிதசெய பூபதிகள் தேரினோர்கள்
அகழ்ந்திடா யாவர்களு மின்மொழிபோற்காதே
அல்லலற்று பலவழிகள் அளவாயோட்டி
தெகழ்ந்திடாய் தேறினோர் நால்கிருகையோரும்
சிவபதமே கெதியெனவே யின்மொழியேபார்த்து
மிகழ்ந்திடாய் மீறினபேர்க் கெதிருண்டோபார்
மேலான காவியத்தை யறிந்துபேரே. 43

அறிந்தோர்கள் மானிடர்க ளனவோருந்தான்
ஆருமறியாத பொருளறிந்த பண்போர்
தெறிந்தோர்க ளெனைப்போல மனமாய்வாழ்ந்து
தெரிசிப்பீ ரின்மொழியை சிவயோகத்தில்
மறிந்தோர்க ளொருநாளு மறவாமல்தான்
மனமகிழ்ந்து வாசியதைக் குருவாய்க்கும்பி
வறிந்தோர்கள் மானிடரிலனவோ ரென்னமாயகற்றிக்
கர்மமதை மடிந்தோர் நல்லே. 44

நல்லோர்கள் சொல்லதுவே அமுர்தவாக்கியம்
நவசதுர் பிரமநிஷ்டை யதுவேநிஷ்டை
புல்லோர்க ளாவதெல்லாம் நல்லோர்க்கெய்தும்
புகழ்மன மொன்றானகுணம் பெற்றோர்க்கல்லோ
சொல்லவெம துன்வாக்கிய மாருமறியாமல்
சொற்றுணிவாய் புகழ்மனமொன்றான குணம்பெற்றோர்
அல்லோர்கள் சொல்லதுவு மன்புடனகைக்க
ஆனபதி மாண்பரெல்லா அகமகிழுவாரே. 45

மகிழுவார் முத்திசித்தி வாதியவர்வழலை
மண்டலத்தில் சுண்ணமதை மகிழ்ந்தேமிகச்செய்வார்
அகழுவார் அண்டவித்தை மாடுமாடும்
எவர்க்கெதிரி யொருவருண்டோ யிந்நூல்பார்த்தோர்
வகழுவார் வாதசிவ யோகசித்தி
மகத்தான சமாதிசித்தி குறைகள்சித்தி
தெகழுவார்க் குருவை வறிந்தோரெல்லாம்
செய்தியென்ற வல்லலற்று சிவமாவாரே. 46

ஆவாரே யோர்செபம் யநமசிவசிவ்வாவா
அறிமருந்தீர் அகோறாய அங்குழாழா
மாவார்கள் மசிவயந ஓம்றீயு
மகதேவா வாவாசிம கோரத்தியானா
நாவார்க ளிரண்டையுந்தா னொன்றாய்மாறி
நவப்பிரம மந்திரத்தா லட்சம்சேவி
தூவாரே சுண்ணமதை சிவயோகத்தில்
துலங்கவே வைத்தனை பூசிப்பாயே. 47

அட்டவசியம் செந்தூரப்பொட்டு

பூசிப்பாய் அஷ்டசித்து வுருவைக்கொண்டு
புனிதமுடன் சிவயோகம் புகழாய்ச்செய்தால்
ஓசிப்பா ரொன்பதுபேர் சித்திமாரும்
வுந்தமக்குத் துணைவருவா ருண்மையுண்மை
ஆசிப்பாய் வழலைசுண்ண மப்போசுத்தி
அரநொடியி லட்டமாசித்தி யாடும்
வாசிப்பா வாசியது பிரளாதப்பா
வாய்வுநிலை யொடுங்கியது மாண்டுபோமே. 48

மாண்டுபோம் சிவயோகம் செய்யும்போது
மகத்தான செந்தூரப் பொட்டேகேளு
வாண்டுபோம் வாதிமகன் வயித்தியாகேள்
மானிடரே வுங்களுக்கு வகத்தியனான்
ஆண்டுபோம் வஷ்டநவ வசியங்கேளு
அரகரா சுண்ணமது வுளுந்தின்வீதம்
முண்டுபோ முன்சொன்ன மொழியேகொண்டு
மூர்க்கமதாய் விராகனெடை முறையாய்த்தானே. 49

தானான உடற்சுண்ணம் கல்லுச்சுண்ணம்
தருவான வண்டசுண்ணம் காயாதிசுண்ணம்
மூனான முப்புசுண்ண மெழுகோடாறு
மூர்க்கமென்ற பிடைவுளுந்தின் வீதமாக
நானான வாறையுந்தா னொன்றாய்ச்சேர்த்து
நலமான தயிலமொன்று செயநீர்மூன்றும்
ஆனான அப்பூவி வுப்புவொன்று
அமுர்தசல மதுவோடே வாறதாமே. 50

ஆறான யிடையதுதான் விராகன்வீதம்
அப்பனே முன்னாறோ டொக்கச்சேர்த்து
காறான பனிரண்டுங் கல்வத்திட்டு
கணபதியே தியானித்து முச்சாமமாட்டி
ஏறாக யெடுத்ததனை வழித்தெடுத்தால்
யென்னசொல்வேன் மஞ்சள்வர்ணம் போலேகாணும்
பேறான பில்லைசெய்து ரவியில்சாமம்
பேசுகிறோம் காய்ந்தபின்பு யெடுத்துக்கொள்ளே. 51

கொள்ளப்பா வெண்கருவை சுத்திசெய்து
கூறுகிறோ யிடைகுறையா தெடுத்துக்கொண்டு
எள்ளப்பா வெண்சீலை யேழுஞ்செய்து
யியலான பில்லைக்கு கவசங்கட்டி
மள்ளப்பா ரவிதனிலே யிரண்டுசாமம்
மைந்தனே கரியவைத்து யெடுத்துக்கொண்டு
அள்ளப்பா வாமம்வைத்துப் பூசைசெய்து
அருளுகிறோம் செந்தூரப் பொட்டைக்கேளே. 52

கேளப்பா பாஷாணம் கொண்டுவந்து
கிருபையுடன் சலம்விட்டுக் கரைத்துக்கொண்டு
ஆளப்பா பாண்டத்தில் வடித்தெடுத்து
அழகாக வோர்சாமம் ரவியில்வைத்தால்
சோளப்பா வாறாது குழம்புபோலாம்
குழம்பான பாஷாணம் ரவியிற்சாமம்
மூளப்பா மெழுகதுபோல் கட்டிப்போகும்
மேலான மெழுகெடுத்துக் குகைபோல்பண்ணே. 53

பண்ணியதோர் குகையெடுத்து ரவியில்வைத்தால்
பாலகனே காயாதுமல்லோ கல்போலாகும்
குண்ணியதோர் குகையெடுத்துப் பார்த்தாயானால்
குண்டுமணி போலேயொரு நிழலேயாடும்
பெண்ணியதோ ரிதுபாகம் பில்லைகொண்டு
பேரான குகையில்வைத்து சீலைசெய்து
நண்ணவே ரவிதனிலே காய்ந்தபின்பு
நலமான குகையெடுத்து வைத்துக்கொள்ளே. 54

வைத்ததொரு பில்லையது செந்தூரமாக
வசனிக்க வயணமதை மாட்டக்கேளு
ஐத்ததொரு காட்டுமுட்டை யிரண்டுகூடை
அப்புனே கொண்டுவந்து செப்பக்கேளு
தைத்ததொரு முட்டையெல்லாம் நிலத்தில்கொட்டி
கருணைதர வேண்டுமென்று குகையேகொண்டு
மைத்ததொரு வுமிநடுவில் குகையைவைத்து
மகத்தான அக்கினியை மூட்டுமூட்டே. 55

மூட்டியே கார்மேகம் போலேசாடு
மேலான அளவுகொண்டு புகைவிலக்கு
ஆட்டியதை யாதிதனில் புடம்போடப்பா
அப்பனே காலமதி யெடுத்தாயானால்
நாட்டியதோர் செந்தூரம் சகலத்திற்கும்
நாடதிலே யாவரையும் வசியமாகும்
ஏட்டியதோர் குகையெடுத்துக் கவசமெல்லா
மென்மகனே தட்டியதை யெடுத்திடாயே! 56

எடுத்ததொரு பில்லையது கலம்போலாகும்
யென்ன சொல்வேன் பரணிதனி லதைத்தான் போட்டு
துடுத்ததனை சுத்தசலம் பலங்கொண்டப்பா
துலங்கவே பரணிதனில் விட்டாயானால்
நெடுத்ததொரு ரவிதனிலே நிமிஷம்வைத்தால்
நேரான பில்லையது நீறிப்போகும்
கடுத்ததொரு சதாமேகம் குவிந்தாப்போலே
கனரவியின் சித்திபெற்ற செந்தூரந்தானே. 57

தானென்ற செந்தூரம் விளையும்பாரு
தாயான மனோன்மணியின் தவத்தினாலே
நானென்ற செந்தூரம் வர்ணம்காந்தி
நாடதிலே விதுவதிக மிந்திரகோபம்
கானென்ற கஸ்தூரி புனுகுசட்டம்
கருவான மஞ்சளது மூன்றுங்கொண்டு
ஆனென்ற கல்வமதில் தூளதாக்க
அப்பனே வடிகட்டி யெடுத்திடாயே. 58

எடுத்தனை சீசாவிற் செந்தூரமிட்டு
யின்பமுடன் வாசமது பொடியேகொண்டு
தெடுத்ததனை வேட்டிதனில் பொடியேபோட்டு
தெரிவை யம்பாள் கிருபையதாய் கிளியாய்க்கட்டி
பொடுத்ததனை கிளியெடுத்து செந்தூரத்திட்டு
புனிதமுடன் வாசமதை புகட்டிநீயும்
தடுத்ததனை குத்திரசிவம் சிவயோகத்தில்
தயவாகி சிமநயவ சிகிநாம்மென்னே. 59

என்னவே அரியுமிறியு மங்கிமாயா
யியலான ஐயும்சவ்வும் கிலியாமென்னு
வென்னவே லெட்சமுரு சிவயோகத்தில்
விளங்க யவ்வாரம் விபரமாக
அன்னலே அகோரசெபம் சீசாகொண்டு
அப்பனே தம்பித்து மவுனங்கொண்டால்
ஒன்னவே யோகசித்தி முத்தியாகும்
ஓகோகோ புவனமெல்லாம் வசியமாமே. 60

செந்தூரமை

வசியமாம் யோகசித்தி மவுனசித்தி
மகத்தான குளிகைசித்தி கும்பசித்தி
பசியமாம் கெவனசித்தி சருதைசித்தி
பாலகனே கிருதைசித்தி அகோரசித்தி
அசியமாம் அஷ்டசித்தி ஆதாரசித்தி
அறுபத்து நாலுசித்தும் செந்தூரமாகும்
பொசியமாம் செந்தூர முளுந்தின்வீதம்
புகழான காய்மெழுகு கடுகுதானே. 61

தானான யிரண்டையுந்தான் பசும்பால்விட்டு
தனதான யேரண்ட ஓட்டில்நீயும்
ஆனான ரவிதனிலே நிமிஷம்வைத்தால்
அப்பனே யிளகியது மைபோலாகும்
ஏனான யிந்திரகோபம் நிறந்தானப்பா
யீசுவரன் நெற்றிதனி லிட்டபொட்டு
தேனான செந்தூரம் பொட்டேயிட்டு
தெருவுதனில் போவதற்கு சேதிகேளே. 62

கேளடா புலஸ்தியனே யுனக்காய்ச்சொன்னோம்
கீழ்திசையும் மேல்திசையும் கீர்த்தியாவாய்
தேளடா தென்திசை வடதிசையைக்கேளு
தீர்க்கமென்ற நாற்றிசையு வசியமாகும்
நாளடா நாயகிமார் கன்னிமார்கள்
நலமாக உன்முகத்தைப் பார்த்தாரானால்
கோளடா வாராது வுன்மேல்வீழ்ந்து
கொஞ்சுவார் கேட்டதெல்லாம் கொடுப்பார்பாரே. 63

கொடுப்பார்க ளானைவிட்டும் பிரியாரப்பா
கூறினா ராதிசிவன் சொன்னவாக்கியம்
அடுப்பாரே யாண்பெண்ணும் வசியமாகும்
ஆரணியில் வாழுமுயிர் அனேகமெல்லாம்
தடுப்பாரே தனவசியம் தனக்குள்ளாகும்
சராசரங்க ளண்டமுதல் வசியமாகும்
செடுப்பாரே செந்தூரம் பொட்டுபோலே
சிலமைக ளிதுக்குநிக ரில்லைதானே. 64

அஞ்சனம்

தானான செந்தூர மிதிலேகோடி
சதகோடி வேதையெல்லா மிதிலேயாடும்
ஏனான செந்தூரப் பொட்டேசொன்னோ
மியம்புகிறோ மஞ்சனத்தின் மையைக்கேளு
கோனான செந்தூரம் விராகன்ரெண்டு
குருவான வெங்காயம் விராகன்கொண்டு
ஆனான காய்மெழுகு விராகன்கொண்டு
அப்பனே ம்ப்புசுண்ணம் விராகன்கொள்ளே. 65

கொள்ளவென்றால் அடற்சுண்ணம் விராகன்கொண்டு
கூராக வைந்தையுந்தான் கல்வத்திட்டு
அள்ளவென்றால் அய்ந்துருவின் தயிலந்தானு
அப்பனே யிரண்டு பலமாகக்கொண்டு
வெள்ளவென்றால் முச்சாமம் விட்டதிலேயாட்டி
மேலான செயநீரில் சாமமாட்டி
எள்ளவென்றால் சுத்தசலம் சாமமாட்டி
யின்பமுடன் வழித்துப்பார் மெழுகாய்ப்போமே. 66

மெழுகான மெழுகெடுத்து சொல்லக்கேளு
மேலான பால்பச்சை மண்டையோடு
பழுகான முழுவோடாய் கொண்டுவந்து
பாலகனே சதுரமா யகலத்தட்டி
அழுகான வோடதிலே மெழுகைவைத்து
அப்பனே மேல்கல்லு அளவாய்மூடி
தெழுகான விந்ததினால் சீலைசெய்து
செயலான ரவிதனிலே முச்சாமம்வையே. 67

வைத்ததனை முச்சாமம் சென்றுதானால்
மகத்தான மெழுகதுவும் கல்போல்கட்டும்
எத்ததனை அகாலத்துக் காட்டுமுட்டை
யியலாகக் கூடைகொண்டு யிரவாய்த்தானும்
பொத்ததனைப் பூமிதனில் முட்டைகொட்டி
புனிதமென்ற மூட்டைதனி லுமியேவைத்து
அத்தனையு மிக்கநடுவி வகலைவைத்து
அரகரா காளமேகத் தீயைமூட்டே. 68

மூட்டியே புடம்போட்டு அந்திசாம
முக்கியமாய் காலையிலே யெடுத்தாயானால்
ஆட்டியே செந்தூரம் விளையும்பாரு
அருணநீர் வாலதுபோ லதுபோற்காணும்
நாட்டியே அகலெடுத்து வுடைத்தாயானால்
நவப்பிரம செந்தூர மிதற்கீடில்லை
போட்டியே யிந்தமுறை யரன்சொன்னாரப்பா
பொங்கமுடன் செந்தூர மெடுத்துக்கொள்ளே. 69

கொள்ளப்பா செந்தூர மிதுவால்கேளு
கோடானகோடி சதாவேதை யாடும்
மெள்ளப்பா யெடுத்ததனை புட்டிகொண்டு
மேலான செந்தூர மதனிலிட்டு
கள்ளப்பா கஸ்தூரி கதம்பமஞ்சள்
கருவான புனுகுசட்ட மிம்மூன்றுங்கொண்டு
அள்ளப்பா கல்வமதில் தூளதாக்கி
அப்பனே யெடுத்ததனைக் கிளியாய்க்கட்டே. 70

கட்டியதை கிளியதனை யெடுத்துக்கொண்டு
கருணைதர வேணுமென்று மாயைபூசி
அட்டியொன்றும் செய்யாதே அமுர்தபாலை
அருள்தருக வேணுமென்று சீசாவில்போடு
தொட்டியுறும் வாசமதாய் கலந்தேவீசும்
செகமெல்லாம் வாசமதாய் பரிமளிக்கும்
நட்டியென்றும் பிரடைகொண்டு மூடிப்போடும்
நலமான வித்தைகட்டு சொல்லக்கேளு. 71

சொல்லகேள் செந்தூரம் விராகன்மூன்று
துதிபெறவே யிடைவிதமா யெடுத்துக்கொண்டு
அல்லக்கேள் முன்சொன்ன செயநீர்மூன்றும்
அப்பனே கயிலத்தோ டஞ்சுங்கொண்டு
வல்லக்கேள் சுத்தசலம் சரியிடையாய்க்கொண்டு
மகத்தான கபாலவோட்டி லாறும்வைத்து
கல்லல்கேள் கரமதுவால் கூட்டினாக்கால்
கருநாகம் பழமதுபோல் காணுங்காணே. 72

காணப்பா ரவிதனிலே வைத்தாயானால்
கருமேக மென்றதொரு மையிறங்கும்
ஏணப்பா சாமஞ்சென் றெடுத்துப்பாரு
யென்னசொல்வேன் மையினிட பெருமைதன்னை
நாணப்பா நாம்சொன்னோ மஞ்சனாதேவி
நாயகியாள் கிருபையினால் மையைத்தானும்
ஆணப்பா வஞ்சனத்தின் மைவழித்து
அனாதி குருவஃருளதனைப் பூசிப்பாயே. 73

பூசிப்பாய் செம்பரணில் மையைவைத்து
புகழாக முன்சொன்ன வாசங்கூட்டி
வாசிப்பாய் சிவயோக மஞ்சைசெய்து
வாயுவென்ற வாசியைநீ ஸ்தம்பித்தாக்கால்
ஓசிப்பா ஓமயந மசிவாயாவென்று
விபரமதாய் லட்சமுரு வொன்றாய்ச்சேவி
ஆசிப்பாய் வாரமட்டும் செபித்தாயானால்
அஞ்சனா தேவி பிரசன்னந் தானே. 74

தானென்ற வஞ்சனாதேவி ருத்திரி
சதாசிவத்தின் பிரசன்ன வதனதேவி
வேனென்ற விழலி வித்தியாறைத்தேவி
வேதாந்த சிரோன்மணியே கிரீயும்றியும்
பானென்ற பரணி வித்தியானந்தரூபி
பைரவியே யுனைத்தொழுதேன் யென்பங்ககில் வாவா
ஆனென்ற சிவயோக சித்திபெற்று
அஞ்சனத்தின் மையெடுத்து ஆட்டக்கேளே. 75

ஆடக்கேள் பரணிவித்தை யிதுவாமப்பா
ஆடலாம் சகஸ்திரமா மட்டசித்து
நாடக்கே ளிம்மையை யீசன்சொன்னார்
நாம்கண்டு புலஸ்தியனே வுமக்காய்ச்சொன்னோம்
தேடக்கே ளின்னூல்தான் காவியமின்னூல்
சிக்காது முலகமதில் சிக்கினாக்கால்
பாடக்கேள் பலகலையும் கண்டுதேறி
பதம்பெறுவார் காண்டமைந்தில் தேறும்பேரே. 76

விந்துநாதப் பெயர்

பேரான பேர்வந்த வகையைக்கேளு
பேசுகிறோம் புலத்தியனே விந்துநாதம்
ஆரான காரமடா வதிககாரம்
அதற்குப்பேர் விந்துவப்பா சீனக்காரம்
நாரான காரமதால் அகாரமாச்சு
நாதசித்திக் காரமென்றும் உகாரமாச்சு
ஊரான உலகாச்சு பூமியாச்சு
உயர்ந்தசல சமுத்திரம் போலுருளையாச்சே. 77

ஆச்சுதப்பா விந்தாச்சு அண்டமாச்சு
அண்டத்தில் பிண்டமெனும் கண்டமாச்சு
ஏச்சப்பா யெனமாச்சு தனமேயாச்சு
யேரண்ட கேசரியாய் மிருக்கலாச்சு
மூச்சப்பா ரவியாச்சு மதியுமாச்சு
மூதண்ட ரவியென்றும் பேருண்டாச்சு
மாச்சப்பா மஞ்சனா தேவியாலே
மாது சவுந்தரியினிட மகிமைகாணே. 78

காணுதற்கு வகையென்ன சீனக்காரம்
கடையில்விற்கும் காரமல்ல சாரகாரம்
வேணுதற்கு வேண்டுமப்பா யாண்பெண்ரண்டு
விந்துவதில் ரசமாச்சு ரசத்தில்கெந்தி
வாணுதற்கு யிதுமூன்று மும்மூலமாச்சு
மதிரவியு மிரவியதாய் வளர்ந்தேபோச்சு
நாணுதற்கு நாதமப்பா மஞ்சளாச்சு
நளினமென்ற பிறவியப்பா தாளகந்தானாச்சே. 79

ஆச்சுதென்ற தாளகத்தை யெவர்தான்கண்டார்
ஆதியென்ற சிவயோகி அறிவார்கண்டார்
காச்சுதென்றும் களிகண்டார் அமுர்தங்கண்டார்
கலியுகம்போல் யுகம்வரைகள் யோகம்கண்டார்
மாச்சுதென்று மண்டலத்தி லமுர்தங்கண்டார்
மகத்தான பிண்டமதை யுண்டார்பாரு
மூச்சுதென்று முறைகண்டார் மூலங்கண்டார்
முல்மூலம் கல்மூல முயிர்கண்டாரே. 80

முயிரான வைந்துருவின் சரக்கின்பேரு
மூலகத்தில் கிடையாத பெருளின்பேரு
அயிரான வைந்துருவால் வீரம்பூரம்
அருளான சாதிலிங்கம் கரடாம்சிங்கி
மயிரான கல்லாறு வெண்காரசிட்டம்
மனோசிலை படிகாரம் கெவுரிநாபி
பயிரான பாஷாண மரிதாரம்சூதம்
பசுமையுள்ள சலாசத்துப் பகருவோமே. 81

பகருவோ நிமிளையென்ற நாகன்சூடன்
பரிவான சவுக்காரம் காரம்தொட் டிருபத்தைந்தும்
அகருவோ மண்டமதால் பிண்டமாகி
அவ்வண்டத் தமுர்தமதால் சுண்ணமாகி
முகருவோ மூலமதால் வைப்பதாகி
முச்செயநீ ரிறுந்ததனால் சுருவமாகி
மகருவோ மைந்துருவின் கருவியாலே
மாண்டுதடா சராசரங்களெல்லாம் வைப்பே. 82

வைப்பான சகலகலைக் கியானபீட
மகத்தான காவிய மாயிரந்தானின்னூல்
முப்பான உப்பாலே செயநீராச்சு
முச்செயநீ ரிதுவாலே் முடிந்தேபோச்சு
அப்பான சலத்தாலே அமுர்தமாச்சு
அமுர்தமென்ற நீராலே யெல்லாமாச்சு
செப்பான பளிங்கதுவால் செம்புமாச்சு
செயமான வைப்பெல்லாம் தங்கமாச்சே. 83

தங்கமா மெங்கெங்கும் சங்கமாச்சு
சாரசெயநீ ரதுவால் காரமேறி
அங்கமாம் பொங்கியது வரைபோலோங்கி
அண்டவுப்பு பூர்த்ததுபோல் பூர்க்குமாகில்
வங்கமாம் வைப்பெடுத்து தங்கஞ்சேர்த்தால்
வசிகரமாம் அகங்கோடி மாத்தொவ்வாது
சங்கமா மூலகமெல்லாம் பொன்னாய்ப்போகும்
சதாசிவன்றான் சொன்னமொழி தவறாதன்றே. 84

தவறாத வாக்கியந்தான் அமுர்தவாக்கியம்
சகலகலைக் கியானமென்று யிதற்குப்பேரு
கவறாத கனகமப்பா அமுர்தவாலை
காசினியி லின்னூலைக் கண்டபேர்கள்
புவறாது புஷ்பமலர் அர்ச்சனை/கொண்டேகி
பூசித்தால் சகலசித்தும் புரிவார்பாரு
அவறாத காண்டமப்பா ஐந்தாங்காண்டம்
ஐக்கியமா மிரண்டுலட்சங் காப்பாமுற்றே. 85

முத்தான காண்டமிது வைந்துக்குள்ளே
முடிந்துதப்பா யென்பாட லிரண்டுலட்சம்
சத்தான சதகோடி நூல்கட்கெல்லாம்
சமர்த்தான சுரைவிரைதான் கொடியாய்ப்போச்சு
பத்தான பலநூலு மிதிலுண்டாச்சு
பலகலையும் பரிபாஷை உரையாய்ப்போச்சு
அத்தான அடிமுடியும் கொடியாயோடி
அளவில்லா சாத்திரங்க ளானவாறே. 86

வாறான யோகமடா மவுனவாழ்வு
வளமான மான்யோக சித்தியானால்கேளு
மாறான வாக்கமுர்தஞ் சித்தியாச்சு
வரமென்ற யோக பிரதிட்டையாச்சு
ஆறான காவியத்தி னைந்தாங்காண்டம்
அருள்போலாம் சித்திமுத்தி யதிகங்காணும்
நாறான நவப்பிரம முடிந்தேயாச்சு
நாலுமாண்டு மிராதார மதுவேயாச்சு. 87

ஆச்சுதப்பா வைந்தான காண்டமுற்று
மாகதொகை பாடல் கணக்கருளக்கேளு
ஏச்சப்பா யெண்பத்து யேழுமாச்சு
யிதற்குள்ளே சத்திசிவ மிருபதாச்சி
நாச்சப்பா யெண்பத்து யேழுக்குள்ளே
நளினமென்ற வன்பத்தொன் றருளக்கேளு
மாச்சப்பா காண்டமஞ்சி பாடலுக்குள்
வசனிப்போ மறுநூற்றி வைந்தாமுற்றே. 88

ஐந்தாங்காண்டம் முற்றிற்று.

ஆறாவது காண்டம்

ஆறான மயேஸ்பரரின் பொருளேபோற்றி
அதிநவ சதுர்முகன்வா ழருளேபோற்றி
பேறான பரப்பிரம சிரசோதிபோற்றி
பீடநவ சத்தியருள் கம்பம்போற்றி
மாறான மச்சேந்திரப் பருவமாறு
வசனிப்போ வாலைமனோன் மணியேபோற்றி
நீறான நிர்க்குணமே பரமெய்ஞ்ஞானம்
நிராதார மயேஸ்பரியின் சோதிகாப்பே. 1

சோதிமதி நிறைந்தரவி வெளிக்கப்பாலே
சுடரொளியைக் கண்டவற்கு துயரமெத்த
ஆதிமறை வேதமெல்லாம் விளக்கமாகும்
நாலுரெண்டு ஆறுமது பாலேயாகும்
பாதிமதி ஒளிவெளியில் சொருபங்கண்டால்
பாலையடா பதினாறு பசும்பொன்தேகம்
ஆதியோ டைந்தருள் காணும்பாசங்காணும்
அண்டரவி வொளிகாணும் ஆதிகாணே. 2

காணடா ஆதியென்ற சவுக்காரத்தை
காணரிது காணரிது ஆர்தான்கண்டார்
ஆணடா பெண்வேணும் பெண்ணானாலே
ஆச்சுதப்பா உலகமெல்லாம் சத்திமாய்கை
வீணடா விதுரெண்டும் விட்டபேர்க்கு
வெளிபாழு வொளிபாழு விதிதான்பாழு
சாணடா வயிறுனக்குப் புலத்தியாகேள்
சவுக்கார வைப்பதனை சார்புக்கேளே. 3

கேளப்பா காவியந்தா னின்னூலாலே
கெடியான பூடடெல்லாம் தீர்க்கம்பாரு
நாளப்பா வெகுகோடி காலமட்டும்
நன்றாக வின்னூலை பூசித்தேன்பார்
கோளப்பா வாராது குருநூலின்னூல்
குமரகுரு பரனெனக்கு உபதேசித்தார்
ஆளப்பா ஆறாவது காண்டஞ்சொன்னார்
அறுமுகவன் குருவருளா லகத்தியனாரே. 4

அகமான ததுவாலே யுகங்களாச்சு
    அண்டப்பா லமுர்தப்பா லெல்லாமாச்சு
யுகமான தவசியென்றும் யோகியென்றும்
    உண்மையென்ற ஞானியென்று மவுனியென்றும்
முகமான சித்தரென்று முனிவரென்று
    மூதண்ட ரிஷிகளென்றும் பரதேசரென்றும்
நகமான நாதாந்த வேதாந்தியென்றும்
    நவமூல மொன்பதுபேர் நாமேயாமே. 5

நாமென்று மதியென்று மவர்தானென்று
    நல்லமதி யறிவுடையோர் யிவரேயென்றும்
ஆரென்று மண்டபிண்ட மதினால்தேறி
    அறிவறிந்தோர்க் கென்னகுறை செல்வமெய்தும்
வாமென்று சற்குருவை யெடுத்துக்கொண்டு
    வாதமென்ற காடெல்லா மிவ்வாளால்வெட்டி
வோமென்று யிந்நூலைப் போற்றிசெய்து
    விருதுகட்டி வைப்பதனை விளங்குவாயே. 6

விளங்குவா யென்குருவே குருபரனேநீயும்
    விள்ளுவாய் காரியத்தில் வைப்பெல்லாந்தான்
வளங்குவாய் வைப்புமுறை நன்றாய்ச்சொல்வோ
    மகத்தான வாளுவகாண்டந் தன்னில்
நிளங்குவா யின்னூலில் வைப்பெல்லாந்தான்
    நிசமாகத் தோன்றுமடா வமுஷைதோன்றும்
அளங்குவாய் சவுக்கார மின்னூல்ஒன்றில்
    அருளுகிறோம் புலத்தியனே அருளைக்காணே. 7

காணுதற்கு சவுக்காரங் கடையிலேது
    கண்மணியே மறைத்துவைத்த கருவேகேளு
ஒணுதற்குக் காவியத்தில் வெளியாய்ச்சொல்வோம்
    ஒகோகோ வொருநூலு மிதற்கீடில்லை
ஆணுதற்குச் சிவன்சொன்னா ரிந்தவைப்பு
    யான்கண்டேன் நீகேளு புலத்தியாநீ
ஊணுதற்கு உரைப்பாயோ நீதிக்கெல்லாம்
    உயிர்போனா லிந்நூலை விடாதேபாரே. ೮

பாரப்பா ஆதிசிவன் சொன்னவாக்கியம்
பார்தனிலே யாரறியப் போரராரப்பா
மாரப்பா மானாதி கெவுனபட்சி
வையகத்தில் சேனையுண்டு வளமாய்க்கேளு
ஆரப்பா அறிவார்கள் அண்டபிண்டம்
அஞ்சுருவின் பிண்டமதை யெடுத்துக்கொண்டு
பேரப்பா பீங்கானி லுடைந்துவிந்தை
பேரான நாதவிந்தை வெவ்வேறேவாங்கே. 9

வாங்கியந்த காரமடா சாரம்ரெண்டு
வளமான பஞ்சபூத சுண்ணங்கொண்டு
மூங்கியந்த முன்சொன்ன நாலாங்காண்ட
முறையான முப்புசுண்ணம் விராகன்ரெண்டு
தாங்கியந்த வெண்கருவு மஞ்சள்விந்து
தருவாக விரண்டையுந்தா னொன்றாய்க்கொண்டு
தூங்கிநீ திரியாதே சவுக்காரவைப்பு
துடியான வைப்பப்பா முதல்முறைதான்பாரே. 10

பாரேநீ நாதவிந்தி லிச்சுண்ணம்போடு
பாலகனே சாமஞ்சென் றெடுத்தாயானால்
ஆரேநீ தெளிந்ததுவும் பன்னீர்போலாம்
அன்பான சீசாவி லிறுத்துக்கொண்டு
மாரேநீ வைந்துருவி னண்டங்கொண்டு
மகத்தான பீங்கானி லுடைத்துக்கொண்டு
தாரேநீ வண்டோட்டின் சவ்வுவாங்கி
சமர்த்தான வண்டோட்டை உரலில்போடே. 11

போடப்பா வண்டோட்டில் வெண்கருவைவிட்டு
புகழாக உலக்கையோர் நாழிமட்டும்
சாடப்பா சாடிவர மைபோலாகும்
சமர்த்தாக பதம்பார்த்து நாதம்விட்டு
ஏடப்பா யிரண்டரைநாழி கைமட்டாக
யிருப்புலக்கை யதினளவால் சாடுசாடு
மாடப்பா மெழுகதுபோல் வருதல்கண்டு
மகத்தான பாண்டத்தில் தோண்டிடாயே. 12

தோண்டிடாய் முன்சொன்ன செயநீர்விட்டு
துப்புரவாய் கலக்கியதை தெளியவைத்து
ஏண்டிடா யத்தெளிவை யிறுத்துக்கொண்டு
யென்மகனே யிறுத்துநிரை யடுப்பிலேற்றி
ஒண்டிடாய் வொருமரத்தின் விறகினாலே
ஒருசாம மக்கினியை மூட்டிப்பின்னும்
ஆண்டிடா யோர்சாமம் சென்றபின்பு
அழகான கடல்நுரைபோல் பொங்குந்தானே. 13

பொங்குகிற பதம்பார்த்து முன்னடிநீரோடு
புகழாக யெடுத்ததனை உரலிலிட்டு
பங்குகிற பனிநீரை விட்டுசாடு
பாலகனே யிரண்டுநாழிகை மட்டாக
புங்குகிற பிசினியைப்போல் வருதல்கண்டு
புகழாக வதையெடுத்து பாண்டத்திட்டு
துங்குகிற சுத்தசலம் விட்டுமேதான்
துப்புரவாய் கரைத்ததனை யிறுத்துக்கொள்ளே. 14

கொள்ளப்பா யிறுத்தசலம் நீரைக்கொண்டு
கொதிக்கிறதோர் குருநீரி லின்னீரைவிட்டு
சள்ளப்பா சாமஞ்சென் றெடுத்தாயானால்
சதாமேகப் பாறையைப்போல் கட்டும்பாரு
மொள்ளப்பா முன்சொன்ன மூன்றுப்புந்தான்
முறையாகப் பலமறைதா னுணர்ந்தாயானால்
அள்ளப்பா முன்சொன்ன செயநீர்மூன்றும்
அளவுபடி வின்னீரா லறைத்துப்போடே. 15

அரைத்துப்போ டெரிகிறதோர் சவுக்காரநீரில்
அப்பனே யிப்பொடியை அளவாய்ப்போட்டு
மரைத்துப்போம் பொங்கியது செம்மேகம்போல்
வருதல்கண்டு அஞ்சுசுண்ணம் விராகன்வீதம்
பரைத்துப்போ மஞ்சையுந்தான் பதனமாய்ப்போடு
பாகமதாய் போட்டையென்றால் பாறைபோலாம்
எரைத்துப்போ மிளநீரின் வழுக்கைபோல
யிறுகியதோர் பதம்பார்த்து யிறக்கிடாயே. 16

ஐந்துருவின் சவுக்காரம் வைப்புசலம்

எறக்கியிந்த சவுக்காரம் துடுப்புகொண்டு
யென்மகனே கிளரியதை கொடுத்தாயானால்
நரக்கியிந்த நரர்போலே சரமாய்த்தொங்கும்
நலமான பரிட்சையடா நன்றாய்ப்பாரு
உரக்கியிந்த சவுக்காரம் தேங்காய்ப்போலே
உணருமுன்னே உண்டையதாய் பிடித்திடாய்நீ
கரக்கியிந்த கல்போலே மணியாய்க்கட்டும்
கவடில்லா சவுக்காரம் வைப்பதாமே. 17

ஆமப்பா யிந்தஉண்டை சவுக்காரத்தால்
யாடலாங் கோடானகோடி தொந்தம்
மாமப்பா சதாசிவன்தா னிம்முறையைச்சொன்னார்
மைந்தனே நானறிந்து உனக்காய்ச்சொன்னேன்
போமப்பா சவுக்கார உண்டையேதான்
புகழாக பஞ்சாட்சரத்தால் பூசைசெய்து
ஏமப்பா யெடுத்ததனைப் பதனம்பண்ணி
யேகசிவ யோகமதி லிருந்திடீரே. 18

அண்டசவுக்கார வைப்புசுத்தி

இருந்திடுவாய் சவுக்கார மைந்துருவா லாச்சு
யிந்தமுறை யெவர்செய்தார் யாருங்காணார்
சருத்திடுவீர் ஐந்துருவின் வைப்பதாச்சு
சராசரங்கள் முழுதுமிதி லடங்கிப்போச்சு
அருந்திடீர் சிவமாச்சு சத்திகேளு
அண்டத்தின் சவுக்கார வைப்பேகேளும்
மருந்திடீர் வண்டத்தின் சவுக்காரவைப்பு
வசனிப்போம் புலத்தியனே வகையாய்த்தானே. 19

தானென்ற பூரணமா மிரண்டாம்வைப்பு
தாரணியில் கேசரியி னண்டமைந்து
வானென்ற வெண்கோழி யிரண்டாம்வைப்பு
மைந்தனே வைந்தண்ட மடவாய்க்கொண்டு
கோனென்ற புளுவப்பா கோயில்பட்சி
குணமான வைப்பப்பா வைந்தண்டம்பார்
கானென்ற வண்டமப்பா கழுவினண்டம்
கண்மணியே வைந்தண்டம் கருத்தாய்பாரே 20

பாரப்பா கருங்கோழி யிரண்டாம்வைப்பு
பாலகனே அண்டமது வஞ்சுங்கொண்டு
யாரப்பா வாகதொகை யிருபத்தைந்தும்
அப்பனே கொண்டுவந்து அறையக்கேளு
பேரப்பா பீங்கானோ டஞ்சாகக்கொண்டு
பேராத அண்டமதை உடைத்துவிந்தை
மாரப்பா மண்டோட்டி சவ்வேபோக்கி
மகத்தான கல்லுப்பி வோட்டைப்போடே. 21

போடப்பா அண்டோட்டில் செயநீர்விட்டு
புகழாக யிருப்புலக்கை யதனால்சாமம்
யாடப்பா யிடித்ததனை சாமஞ்சென்றால்
அப்பனே சுத்தசல மடவாய்விட்டு
ஏடப்பா சாமம்ரெண்டு யிடித்தாயானால்
யென்னசொல்வேன் மாப்போலே யிருக்கும்பாரு
வேடப்பா வெண்கருவு நாதமொன்றால்
விபரமதாய் மாவுதனில் விட்டிடாயே. 22

இட்டிடா யிருப்புலக்கை யதனால்சாமம்
யென்மகனே யிடித்ததனை யெடுத்துக்கொண்டு
பட்டிடாய் பாண்டத்தி லிம்மாவைப்போட்டு
பாலகனே சுத்தசலம் பன்னீர்விட்டு
கட்டிடாய்க் கரமதுவால் கலக்கியேதான்
கண்மணியே தெளியவைத்து தெளிவைவாங்கி
வெட்டிடாய் வேறொரு பாண்டந்தன்னில்
விளங்கவே யின்னீரை யதனில்வாரே. 23

வார்த்தனை விந்ததினால் சீலைசெய்து
மகத்தான சித்திரைநாள் ரவியில்வைக்க
யார்த்ததனை யிருசாமம் ரவியில்காய்ந்தால்
அப்பனே பொங்கியது நுரைபோல்சீறும்
பார்த்ததனை யிப்பாகங் கண்டாயானால்
பலவிதமாய் மூன்றுப்பு மெடுத்துக்கொண்டு
மார்த்ததனை மைங்காய விராகன்கொண்டு
மகத்தான வைந்துசுண்ணம் விராகன்காலே. 24

காலான முச்செயநீர் மூன்றுங்கொண்டு
　　கருவான வொன்பதையு மரைத்துக்கொண்டு
நாலான வரைப்பொடிபோ லாகும்பாரு
　　நலமான பொடியெடுத்து அன்னீரில்போட்டு
தூலான துடுப்பதனால் கிண்டிக்கிண்டி
　　துயிலான சீலையதை கயட்டெரிஞ்சி
ஆலான ரவிதனிலே நிமிஷம்வைத்தால்
　　அண்டசவுக்கார மென்று விதற்குப்பேரே. 25

பேரான சவுக்கார மண்டக்காய்போல்
　　பிரியமதா யுண்டையது செய்தாயானால்
கோரான குளிகையது மணிபோல்கட்டும்
　　கோடான கோடிதொந்த மிதனாலாகும்
சாரான சதாசிவந்தான் சொன்னவைப்பு
　　சமர்த்தான சத்தியவள் செய்தாள்பாரு
நாரான நமக்கீய்ந்தா ளுமக்குச்சொன்னேன்
　　நலமான அண்ட சவுக்கார வைப்பே. 26

வைப்பா காசினியோர் மனிதர்தாமும்
　　வகையாக செய்பவரோ செய்யார்பாரு
ஐப்பான யோகசிவ பூசைசெய்து
　　அண்டசவுக்கார வ்வைப்பை பதனம்பண்ணு
ஒய்ப்பான சவுக்கார வைப்பினாலே
　　ஓகோகோ சரக்கெல்லாம் வைத்துப்பாரு
மெய்ப்பான வண்டசவுக்காரந் தன்னால்
　　மேலான சிவயோகி செய்வார்பாரே. 27

பிண்டசவுக்காரம்

பாரடா புலஸ்தியனே யின்னங்கேளு
　　பாடினோ மண்ட சவுக்காரந்தன்னை
பேரடா யித்தனையு மறைத்தாரப்பா
　　பிண்ட சவுக்காரமதின் சேதிகேளு
தேரடா ரெண்டாச்சு மூன்றேகேளு
　　செயலான வைப்பப்பா மூன்றாம்வைப்பு
ஆரடா யிதையறிந்து வைப்போ செய்வார்
　　ஆறான கான்[illegible]தின் அறி[illegible]ப்பாரே 28

அரிவான வைப்பப்பா மூன்றாம்வைப்பு
ஆச்சரியம் ஆச்சரியம் கேசரியின்பிண்டம்
கருவான கேசரியின் மூன்றாம்பிண்டம்
கருப்பற்றி யிருக்குமப்பா பத்தாம்நாளில்
மருவான காண்டமப்பா பட்சணிதானாச்சு
மகத்தான வித்தையெல்லாம் பட்சணியேயாச்சு
கருப்பான கேசரியி னண்டமூன்றும்
தருவான வெண்ணாமை அண்டமூன்றே. 29

மூன்றான செம்பருத்தி னண்டமூன்று
மூர்க்கமுள்ள காடையதி னண்டமூன்று
வின்றான விச்சுளியி னண்டமூன்று
விபரமதாய் பதினைந்து மெடுத்துக்கொண்டு
அன்றான பீங்கானி லுடைத்துவிந்தை
அப்பனே நாதவிந்தை வெவ்வேறேவாங்கி
குன்றான கோரையென்ற சவ்வேதள்ளி
கூறுகிறோம் கல்லுரலில் அண்டம்போடே. 30

போட்டுயிந்த அண்டடோட்டை உரலிலிட்டு
புகழான சுத்தசலம் பனிநீர்விட்டு
ஆட்டுமிந்த நாற்சாம மிருப்புலக்கைகொண்டு
அழகான யிரண்டுநீர் விட்டேசாடு
நாட்டவே நாற்சாமம் சாடினாக்கால்
நளினமென்ற மஞ்சள்வர்ணம் காணும்பாரு
பாட்டுமிது பாகமப்பா வவ்வேளைகண்டு
பாங்கான நாதவிந்தை யெடுத்துஊத்தே. 31

ஊத்தினதோர் நாதவிந்தை யிருப்புலக்கைகொண்டு
மோர்சாம மிடித்ததனை யுணர்வாய்நீதான்
மூத்தினதோர் முச்செயநீர் மூன்றுசாம
மூர்க்கமுட னதுவிடைக்கும் பாதிசேர்த்து
ஆத்தினதோ ரெழுகுலக்கை கொண்டேசாடு
அப்பனே சாடினபின் மாவாய்ப்போகும்
மாத்தினதோர் மாவெடுத்துப் பாண்டந்தன்னில்
மகத்தான சுத்தசல மறு.

மறுவிடாய் சுத்தசலமதனில் பாதி
மைந்தனே விட்டதிலே கரைத்துக்கொண்டு
தெறுவிடாய் தெளியவைத்து யிறுத்துமைந்தா
செயலாக வேறுமொரு பாண்டந்தன்னில்
அறுவிடா யைந்துசுண்ண மூன்றுப்புந்தான்
அழகான வைங்காய மெழுகோடைந்தாம்
கறுவிடா யஞ்சுருவின் தயிலம்விட்டு
கண்மணியே பத்தையுந்தான் சாமமாட்டே. 33

ஆட்டிவர மெழுகதுபோ லாகும்பாரு
அப்பனே யோர்சாம மடவாய்ப்பாரு
மூட்டிவர முச்செயநீர் முச்சாமமாட்டி
முறையாக வழித்ததனை யன்னீரில்போட்டு
காட்டிதரக் கரமதுவால் கலக்கிப்பாரு
கண்மணியே முருக்கம்பூ வர்ணங்காணும்
நாட்டியிதை சொல்லாதே ரவியில்சாமம்
நலமாகக் காய்ந்துதெனில் நளினமாமே. 34

நளினமென்ற நாளொன்றுக் கொன்றேசாமம்
நாலுநாள் பாகமதாய் நலமாய்க்காய்ந்தால்
பெளினமென்ற பிண்டநீர் நுரைபோலோங்கி
பேரான வெண்சாரை யதுபோல்கீறி
அளினமென்ற அவ்விதங்காண் பாகம்பார்த்து
அப்பனே துடுப்புகொண்டு துளாவிந்தான்
மளினமென்ற மதிதனிலே நிமிஷம்வைத்து
மாதளங்கா மதுபோலே உண்டைபண்ணே. 35

பண்ணியதோர் பிண்ட சவுக்காரமாச்சு
பராபரனைப் பூசித்துப் பதனம்பண்ணு
அண்ணியதோர் சிவம்சத்தி அண்டபிண்டம்
அரகரா பிண்டசவுக்காரம் சொன்னோம்
வண்ணியதோர் பிண்டசவுக்கார வைப்பு
வசனித்தோம் கார சவுக்காரங்கேளு
கண்ணியதோர் காரசவுக்கார வைப்பு
கண்மணியே சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளே. 36

காரசவுக்கார வைப்பு

கேளப்பா புலத்தியனே யின்னங்கேளு
கிருபையதாய் சொல்லுகிறோம் காரவைப்பு
ஆளப்பா கார மிக் காரத்தாலே
அண்டரண்ட புவனமெல்லாம் வைப்பாய்போச்சு
காளப்பா கருங்கோழி வைப்பண்டங்கேள்
கன்னிமுட்டை வைப்பதுதான் வைத்துதானால்
ஏளப்பா யேரண்ட மிள்சாய்கொண்டு
யேரண்ட கேசரியின் வைப்பேயாமே. 37

ஆமேதான் வெண்கோழி நாலாம்வைப்பு
அரகரா யேரண்ட மடவாய்க்கொண்டு
வாமேதான் வெண்காகம் நாலாம்வைப்பு
மைந்தனே யேழண்டம் வளமாய்க்கொண்டு
ஏமேதான் செம்போத்தின் நாலாம்வைப்பு
யேழண்ட மெடுத்ததனை யிரவாய்க்கேளு
மூமேதான் சாதிதொகை முப்பத்தைந்தும்
முறையாக யெடுத்ததனை மூட்டுவாயே. 38

மூட்டுவாய் முப்பத்தைஞ் சண்டங்கொண்டு
மூர்க்கமென்ற பீங்கானி லுடைத்துவிந்தை
நாட்டுவாய் நாதவிந்தை வெவ்வேர்வாங்கி
நளினமதா யண்டோட்டின் சவ்வுபோக்கி
காட்டுவாய் கல்லுரலி லண்டோடிட்டு
கருணைபெற நாதவிந்தை யதனில்விட்டு
ஏட்டுவா யிருப்புலக்கை யதனால்மைந்தா
யிருசாமம் சாட்டிவர யிளகிப்போமே. 39

காரமெழுகு

போமென்ற வைந்துருவின் தயிலந்தானும்
புகழான முச்செயநீர் கூடச்சேர்த்து
மூமென்ற முச்சாமம் சாடினாக்கால்
மூதண்ட காரமெழுகாகும் பாரு
சோமென்ற சத்திசலம் பனிநீர்விட்டு
சுகமாக விருசாம மூலக்கைகொண்டு
நாமென்ற யிருப்புலக்கை யதனாற்சாடி
நவப்பிரம காரமடா யிதற்கொவ்வாதே. 40

ஒவ்வாத பூரணந்தான் மெழுகாய்ப்போடும்
ஓகோகோ அதையெடுத்துப் பாண்டந்தன்னில்
சொவ்வாத சுத்தசலம் பனினீர்காணும்
சொற்பெரிய யிருநீரும் சொகுசாய்விட்டு
கவ்வாது காரமதால் கலக்கியேதான்
கண்மணியே தெளிவையப்பா காரத்தேதான்
சவ்வாது சாமஞ்சென் றெடுத்திருத்து
சமர்த்தாக வடுப்பேற்றிப் பாண்டம்வையே. 41

வைத்ததொரு பாண்டமதை விந்தாலேசீலை
மகத்தான சீலைசெய்து வடுப்பிலேற்றி
பத்ததொரு பலவிறகால் தீயைமூட்டு
பரபூசை குருபூசை பண்பாய்ச்செய்து
கைத்ததொரு காளமேகம் போலேயப்பா
கருணைபெற தீமூட்டி கருவாய்ச்செய்தால்
பொத்ததுவும் பொங்கியது வெள்மேகம்போல்
புகழாக வருதல்கண்டு பூசிப்பாயே. 42

'பூசிப்பாய் கடல்நுரைபோல் பொங்கும்பாரு
புகழாக பொங்கினின்ற சமையம்பார்த்து
ஆசிப்பா யைந்துசுண்ண முப்பூகூட்டி
அண்டமெழுகு ஐங்காயத் தயிலங்கூட்டி
பாசிப்பா முச்செயநீர் பலமூன்றிட்டு
பனிநீர்தான் சுத்தசலம் பண்பாய்க்கொண்டு
காசிப்பாய் கல்வமதில் பத்தும்போட்டு
கடுதிரள வேண்டுமென்று வதினாலாட்டே. 43

ஆட்டுதற்கு யாரையும்விட் டறுசாமந்தான்
அப்பனே ஆட்டையிலே மெழுகுபோலாகும்
போட்டுதற்குப் பொங்கிநின்ற காரநீரில்
புனிதமுடன் சுத்தசல புகழாய்விட்டு
பேட்டுதற்குப் பீங்கானில் கறைத்திருத்து
பேரான பாண்டத்தில் விட்டுநீயும்
மாட்டிமிக மயங்காதே அடுப்புகொண்டு
மகத்தான மறத்தினால் கிண்டிடாயே. 44

நன்றிசொல்

கிண்டடவே பிசின்போல வருகல்கண்டு
கிருபையதாய் பாண்டமதை யிறக்கிநீயும்
மண்டிடவே மதிதனிலே நிமிஷம்வைத்தால்
மகத்தான கிளிபோலே வருகும்பாரு
எண்டிடவே யிறுகியது கல்போலாகும்
மென்னசொல்வேன் வில்வக்காயது போலுண்டை
உண்டிடவே வேண்டுமட்டும் வுண்டைசெய்தா
உப்புமணியது போலே உறுதியாச்சே. 45

உறுதியென்ற காரம்வைப்பு யார்தான்வைத்தார்
உண்மையென்ற காவியத்தில் நாமேசொன்னோம்
கறுதியென்ற காரவைப்பு யிதனால்மைந்தா
கல்மலைகள் தங்கமப்பா கனகமாச்சு
அறுதியென்ற ஆதிசிவன் பரைக்குச்சொன்னோம்
அம்மையுமே நந்திக்கு அருளிச்செய்தார்
நறுதியென்ற நந்தியுமே தன்வந்திரிக்குச்சொன்னார்
நலமான தன்வந்திரி பகவான்பாரே. 46

சிவன் கேள்வி

பாரப்பா வசுவனியாம் தேவருக்கு
பாலித்தார் தன்வந்திரி பரிவாய்த்தானும்
ஆரப்பா வகஸ்தியர்க்கே உபதேசித்தார்
அசுவனியாம் தேவரவ ரருளினார்பார்
நாரப்பா நாம்கண்டு உனக்குச்சொன்னோம்
நல்லமன மானதினால் காரம்வைப்பு
மாரப்பா வைப்பெடுத்து பூசைசெய்து
மகத்தான காரவைப்பை பதனம்பண்ணே. 47

பதனமப்பா மகாதெளிவு உரையாய்ச்சொன்னோம்
பாடினோம் காவியத்தில் பசும்பொன்னாக
அவனமப்பா நூல்களுக்கு குருநூல்பாரு
அடக்கமப்பா வெகுஅடக்கம் பதனம்பண்ணு
விதனமதா யிராதேநீ செய்துபாரு
விதிப்பயன்தான் யிருந்ததலால் விளையும்வந்து
மதனமப்பா காரவைப்பே சொன்னோம்சொன்னோ
மகத்தான சாரவைப்பு மாட்டக்கேளே. 48

சாரவைப்பு சுத்தி

மாட்டக்கேள் சாரவைப்பை யார்தான்கண்டார்
மகத்தான சதாசிவத்தின் மகிமையாலே
ஆடக்கே ளஞ்சுபஞ்ச பூதத்தாலே
ஆச்சுதப்பா வறுபத்து நாலுவைப்பும்
நாடக்கேள் புலஸ்தியனே சிவபோகிக்கு
நாம்சொன்னோம் தவறாது உண்மைஉண்மை
காடக்கேள் காரசார மிதுரெண்டாலே
கணக்கில்லா வைப்புமுறை யினிமேல்தானே. 49

தானான வைப்பெல்லாம் பெருங்காடாக
சாற்றுகிறோம் காவியத்தில் சாற்றக்கேள்
ஏனான யின்னூலுக் கெதிர்நூலுண்டோ
யெடுத்ததொரு வைப்பெல்லாஞ் செயமாஞ்சித்தி
பானான பலகலைகளறிந்த பண்போர்
பார்த்தாக்கால் காவியத்தின் பயனெல்லாந்தான்
தேனான வமுர்தவாலை தெரிந்தேபேர்கள்
தெளிவுள்ளோர் காவியத்தை தெரிசிப்பாரே. 50

வாசித்த ஆயிரம்பேர்

தெரிசிப்பீர் வாழ்வதற்கு யோகவாழ்வு
தெளிந்த பண்போர் யோகசிவசித்தராவார்
அரிசிப்பீ ராத்துமத்தின் செடலக்கூறை
அறிந்தோர்கள் வாசித்தா ராயிரம்பேர்
வரிசிப்பீர் சிவனெற்றி லனேககாலம்
வரம் பெறுவதற்காக யிருந்தார்கோடி
புரிசிப்பீர் மனமகிழ்ந்து வஷ்டயோகம்
புகழ்பெற்றார் வாசிசித்தர் மகிழ்பெற்றாரே. 51

மகிழான வவருடைய திறத்தைநாமும்
வசனிக்க நாவுமுண்டோ மகத்தாம்யோகி
அகிழ்ந்தாரே யோக சிவயோகம்செய்து
அண்டரெண்ட புவனமெல்லாம் பாய்ந்தார்
தகிழ்ந்தாரே வாசியென்ற சித்தரப்பா
தவயோக மதிலிருந்து கடாட்சம்பெற்றார்
நிகிழ்ந்தாரே வவருடைய திறத்தைக்கண்டு
நிகழ்பந்தமாயி னின்ற கருசொன்னோமே. 52

கருவான கருவப்பா வஷ்டயோகம்
கருவறிந்தா லெய்துமடா வைப்பெல்லாந்தான்
அருவான பொருள்களெல்லா மவர்க்கேசொன்னேன்
அண்ட சவுக்காரமதை யளித்தேன்பாரு
வருவான சித்தரப்பா வாசிதேவர்
வசனிக்கப் போகாது யெந்தன்சீடா
துருவான சவுக்கார வைப்பெல்லாந்தான்
சொல்வமப்பா காவியத்தில் சொல்லுவோமே. 53

சொல்லுவோம் புலஸ்தியனே யிரண்டாம்சீடா
சொற்பெரிய சாரவைப்பை உரையாகத்தான்
அல்லுவோ மண்டபிண்ட மாதியந்தம்
அண்டரத்துக் கப்பாலிருக்கு மமுர்தநீரை
மல்லுவோ மானாதிபட்சி யண்ட
மகத்தான வைப்பதில்தா னஞ்சில்கேளு
ஒல்லுவோ மொன்பதென்ற வண்டங்கொண்டு
ஓகோகோ செம்பருத்தி னண்டங்கேளே. 54

கேளப்பா வதினண்டம் நவமூலங்கேள்
கெடியான கரும்பருந்தி னண்டங்கேளு
வாளப்பா நவமூல மண்டம்பாரு
மகத்தான கருவினிட னண்டங்கேளு
ஊளப்பா நவமூல மதினண்டந்தான்
ஓகோகோ குயிலன்ன முரைப்போம்யாமும்
ஆளப்பா நவமூல மதினண்டம்பார்
வாகதொகை நாற்பத்து வைஞ்சதாமே. 55

அஞ்சான காயெல்லா மடவாய்கொண்டு
அருள்பெறுகும் சின்மயத்தைப் பணிந்துபோற்றி
செஞ்சான முச்செயநீர் தயிலங்கூட்டி
செயலான சுத்தசல பனினீர்கூட்டி
மஞ்சான வாறையுந்தா னன்றாய்சேர்த்து
மகத்தான பீங்கானி லின்னீர்விட்டு
துஞ்சான பீங்கான்தா னைந்தேயாகும்
துருவமென்ற வைந்தையுந்தான் பருந்துபோடே. 56

போடப்பா நவமூல மொவ்வொன்றுக்கு
புகழாக பீங்கான்மேல் விந்தாசீலை
சேடப்பா செய்துரவி முகத்தில்சாமம்
செயலாகக் காய்ந்துதென்றால் சாரம்சாரம்
ஆடப்பா லூரினதோ ரண்டத்தேதான்
அப்பனே ஒவ்வொன்று யெடுத்துக்கொண்டு
சாடப்பா சட்டிதனில் உடைத்துவிந்தை
சமர்த்தான நாதவிந்தை வெவ்வேறேவாங்கே. 57

வாங்கடா நீரெல்லாம் பரிசுத்தமாக்கி
வளமான அண்டமெல்லாம் எடுத்துக்கொண்டு
சாங்கடா கோறையென்ற சவ்வைப்போக்கி
சமர்த்தான வண்டமெல்லா முரலிலிட்டு
ஊங்கடா ஊசினின்ற நீரைவிட்டு
ஓர்சாம மிருப்புலக்கை யதனால்சாடு
ஆங்கடா வதின்பிறகு நாதவிந்தை
அப்பனே விட்டுவதில் சாமஞ்சாடே. 58

சாடப்பா சாடினதோ ரண்டந்தன்னில்
சமர்த்தாக சுத்தசலம் பனினீர்விட்டு
நாடப்பா நாற்சாம மிருப்புலக்கைகொண்டு
நளினமதாய் சாட்டிவர மெழுகுபோலாகும்
ஏடப்பா யெடுத்ததனைப் பாண்டத்திட்டு
இன்பமென்ற சுத்தசலம் பன்னீர்விட்டு
ஆடப்பா கரமதுவால் கரைத்தாயானால்
அப்பனே நுரையதுபோல் வருகுங்காணே. 59

காணப்பா நிமிஷம்சென் றெடுத்தாயானால்
கண்மணியே தோய்ந்துதிர முருவிப்பாயும்
ஏணப்பா தெளிந்தநீர் பாண்டத்திட்டு
யியலான விந்ததினால் சீலைசெய்து
வாணப்பா ரவிதனிலே சாமம்வைத்து
வளமாக எடுத்ததனை வடுப்பிலேற்றி
காணப்பா சதுரகள்ளி விறகாலப்பா
கண்மணியே யெண்சாம மெரித்திடாயே. 60

எரித்திடா யொருசாமம் காடாக்கினிபோல
    யென்ன சொல்வேன் சாரவைப்பு யிதுபோலுண்டோ
கரித்திடுவாய் பொங்கியது நுரைபோல்மீறும்
    கருநாகப் பழமதுபோல் காணும்பாரு
பரித்திடாய் பாகமது யிதுவேபாகம்
    பரமசிவ னருளியது பழுதோயில்லை
அரித்திடாய் வஞ்சுசுண்ணம் வைங்காயந்தான்
    அழகான முப்பூவு மளந்துபோடே. 61

போடப்பா வண்டத்தின் மெழுகுதானும்
    புகழான முப்பூவதில் பலந்தான்ரெண்டு
சூடப்பா சுண்ணமது வஞ்சுங்கேளு
    சூட்சமுடன் விராகனிடை நாலுங்கொண்டு
மேடப்பா மெழுகதனில் விராகன்ரெண்டு
    மேலான வைங்காயம் விராகனொன்று
பாடப்பா பத்தையுந்தா னொன்றாய்க்கூட்டி
    பண்பான கல்வமதில் பண்பாய்ப்போடே. 62

பண்பான கல்வத்தில் பத்தும்போட்டு
    பரிவான முச்செயநீர் தயிலங்கூட்டி
துண்பான சுத்தசலம் பனிநீர்விட்டு
    துலங்கவே யிடையதுதான் சரியாய்ச்சேர்த்து
அண்பான நிமிஷத்துக்குள் ளரைத்துசாடி
    அப்பனே வழித்ததனை யெடுத்துக்கொண்டு
பெண்பான பீங்கானில் சத்தசலம்பனிநீர்
    பேராக யிம்மெழுகை யதனில்போடே. 63

போட்டதனைக் குழம்புபோல் கூட்டிமத்தி
    புகழாகக் கொடுக்கிறதோர் பாண்டத்திட்டு
ஆட்டதனை போட்டுபில்லை கொதித்துதானால்
    அப்பனே துடுப்புகொண்டு துழாவிகிண்டி
நாட்டதனை பாண்டமதை யெடுத்திறக்கி
    நாதாந்த சாரவைப்பைத் துடுப்பினாலே
மாட்டதனை யெடுத்துண்டை பின்னைக்காய்போலே
    மணிக்குளிகை யதுபோல பிடித்திடாயே. 64

பிடித்தமணி கல்போலே கட்டும்பாரு
பேரான மணியெடுத்து யோகபூசை
படித்தமணி பரபூசை தியானத்தாலே
பணிந்துதிரு பதம்போற்றிப் பதனம்பண்ணு
வடித்தமணி வதிசார மணியைக்கண்டால்
வழியுமப்பா வமுர்தமது வழுவிப்பாயும்
குடுத்தமணி சதாசிவன்தான் சொன்னவாக்கியம்
குறைதவறா சாரவைப்பு கொடியமாத்தே. 65

கோடான கோடியென்ன மாத்தோகாணும்
கொடிதான சிவயோகி சித்தர்கெய்தும்
ஆடான யிம்மணிதா னதிகமாத்து
ஆயிரத்தி யெட்டண்டமெல்லாஞ் சோதிகாணும்
வாடாநீ யிம்மணியைப் பதனம்பண்ணு
வரிசைபெற்ற புலஸ்தியனே வளமாய்க்கேளு
சாடான சாரவைப்பை சொன்னோம்பாரு
சமர்த்தான சதாசிவன்தா னருள்தான்காணே. 66

அகஸ்தியர் வேதங்காணுதல்

காணுகின்ற சரிதையிலே வாழ்வோர்க்கெல்லாம்
கண்மணியே கிரிகையிலே தேறும்பேர்க்கு
ஓணுகின்ற யோகமதில் தெளிந்தபண்போர்
ஓகோகோ ஞானமதி லிருந்தபுத்திரர்
காணுகின்ற உலகமதி லுற்பவித்தோர்
நால்வேத மறிந்தவர்க்குப் பொதுவாய்ச்சொன்னோம்
ஆணுகின்ற பொய்வராது உண்மைஉண்மை
அகஸ்தியனான் தமிழறிந்து வருளினோமே. 67

அருளினதோ ரென்னவென்றால் புலஸ்தியாகேள்
அகஸ்தியர்நான் சூத்திரனடா பூமிபாலன்
மருளினதோ ரண்ணுமின்னு மெண்ணுங்கண்டோம்
மகத்தான அளவில்லா யோகங்கண்டோம்
அருளினதோ ராத்துமத்தின் கருவிகண்டோம்
மணிவிளக்கு சோதியிட வொளியுங்கண்டோம்
பருளினதோ ரண்டபிண்ட மாதியந்தம்
பரநாத சோதிரவி மதிகண்டோமே. 68

கண்டோமே வைந்துருவா லனேகங்கண்டோம்
காரசார நாதவிந்தால் கருவேவிண்டோம்
பண்டோமே பஞ்சபூத மைந்துங்கண்டோம்
பத்துநூற் காண்டமிதி லுறையாய்ச்சொன்னோம்
எண்டோமே யின்னூல்தா னாறாங்காண்டம்
யெடுத்தோமப்பா சற்குருவால் சரக்குவைப்பு
கண்டோமே வைந்துருவால் காரசாரம்
கருவைத்தா னெடுத்துமல்லோ மாட்டுறோமே. 69

மாட்டுகிறோம் சரக்கெல்லாம் வணக்கமாக
மகத்தான காவியத்தி லறிவாகத்தான்
ஓட்டுகிறோ மொவ்வொன்று கடுஞ்சத்தாக
ஓகோகோ சொல்லுகிறோ முண்மையாக
நாட்டுகிறோ முன்சொன்ன வைப்பேகொண்டு
நலமான சவுக்காரம் தன்னைத்தானும்
ஆட்டுகிறோ முண்டையது மணியேகொண்டு
அல்லலில்லா சரக்குவைப்பை அருளுவோமே. 70

அருளுவோம் சவுக்காரம் வைப்பேகொண்டு
அரகரா கல்வமதி லுண்டைசேர்த்து
குருளுவோம் சுத்தசலம் பனிநீர்விட்டு
கண்மணியே மூன்றுப்பும் கூடச்சேர்த்து
மருளுவோ மஞ்சுசுண்ணம் விராகன்கொண்டு
மகத்தான முப்பூவு முப்பலந்தான்
மருளுவோ மைங்காயம் விராகன்கொண்டு
வளமான வண்டமெழு விராகன்போடே. 71

போடப்பா பத்துவகை குருவேகொண்டு
புகழாக யிரண்டுநீர் விட்டேசாடு
நாடப்பா யிருசாமஞ் சாடினாக்கால்
நல்லமூர்த ரசமதுபோ லருவிப்பாயும்
பாடப்பா பதம்பார்த்து முச்செயநிர்விட்டு
பாலகனே முச்சாமம் பரிவாய்ச்சாடு
ஆடப்பா சாடையிலே யருவிப்பாயும்
அப்பனே யதைவழித்து யெடுத்துப்பாரே 72

அண்டரசம்

பார்க்கையிலே தங்கரவி பொடியைப்போலே
பாலகனே அதிருமப்பா பீங்கான்தன்னில்
ஆர்க்கையிலே பீங்கானிலதையே போட்டு
அப்பனே பன்னீர்தா னதனில்விட்டு
கார்க்கையிலே கரைத்துநீ தெளியவைத்தால்
கங்குலென்ற வமுர்தரச மிறங்கும்பாரு
ஏர்க்கையிலே பீங்கானில் தெளிவைவாங்கு
யிறுத்தாக்கா லமுர்தரச மிறங்கும்பாரே. 73

இறங்கினதோ ரமுர்தரச வாலையாகும்
யின்னமொரு பீங்கானில் இதனைப்போட்டு
துறங்கினதோர் சுத்தசலம் பாண்டமிட்டு
சொல்லுகிறோ மதனைவிட்டு மமுர்தம்விட்டால்
சறங்கினதோர் கரமதுவால் கரைத்துவைத்தால்
கனகம்போல் செயலரசமா மடியில்நிற்கும்
அறங்கினதோர் செயமான ரசந்தானப்பா
இதற்குப்பேர்ரசந்தான் காணே. 74

காணுகின்ற ரசமிதுவே குடுக்கைகொண்டு
கன்மணியே வதிற்பதனமாக வைத்து
பூணுகின்ற யோகசிவ பூசைசெய்து
புகழான வமுர்தரசம் பதனம்பண்ணு
ஆணுகின்ற வாலைரச மிதுதானப்பா
வாயிரத்தெண் மாத்தாகு மெல்லாந்தங்கம்
மூணுகின்ற மூன்ரசநீ ரெடுத்துக்கொண்டு
முக்கியமா மண்ட சவுக்காரங்கேளே. 75

கேளப்பா அண்டசவுக்கார உண்டை
கிருபையதா யெடுத்ததனைக் கல்வமிட்டு
மூளப்பா மூன்ரசநீர் கூடவிட்டு
முதண்ட பத்துவிதக் குருவேபோட்டு
ஆளப்பா யோர்சாமம் விடாதேசாடு
அப்பனே நவநீத மருவிப்பாயும்
மாளப்பா வைந்துருவின் தயிலங்கொண்டு
மாட்டப்பா சாமமது மாட்டிடாயே. 76

மாட்டினபின் சுத்தசலம் பனிநீர்விட்டு
மைந்தனே வோர்சாமம் அடவாய்ச்சாடு
ஆட்டினபின் முச்செயநீர் பலம்ரெண்டிட்டு
வடவாக யிருசாமம் சாடுசாடு
ஏட்டினபின் முருக்கம்பூ வர்ணமேலா
மியல்பான நவநீத மருவிபாயும்
வாட்டினபின் னதைவழித்துப் பாண்டந்தன்னில்
மைந்தனே யிட்டுநீ பனிநீர்வாரே. 77

வார்த்ததனைக் கரமதுவால் கரைத்துநீயும்
வளமான மதிதனிலே யிருநாழிவைத்தால்
ஆர்த்ததனை நவநீத மடியில்நிற்கும்
அமுர்தரச தெளிவதுநீர் மேலேநிற்கும்
ஏர்த்ததனை பாண்டமதி லிருத்துநீயும்
என்மகனே நவநீத அமுர்தந்தன்னை
சார்த்ததனை பாண்டமதில் நவநீதத்தில்
சமர்த்தான சுத்தசலம் சரியாய்வாரே. 78

வாரப்பா கரைத்ததனை தெளியவைத்தால்
மகத்தான வண்டரச மருவிப்பாயும்
ஏரப்பா யெடுத்தத்னை தெளிவைவாங்கி
என்மகனே அண்டநிற பதனம்பண்ணு
ஆரப்பா அமுர்தரச அண்டரசந்தான்கேளு
அப்பனே கெம்புபொடி யுதிர்ந்தாற்போலே
சேரப்பா குடுக்கைதனில் பதனம்பண்ணு
செயமான வண்டரசம் செயலைக்காணே. 79

காணுதற்கு யோகசிவ பூசைசெய்து
கலக்கமிலா வண்டரச மிதற்குப்பேரு
நாணுதற்கு நாடதிலே சத்தேகண்டால்
நவப்பிரம பரவெளியை அறிவார்பாரு
ஓணுதற்கு உலகமெலாங் கனகமாகும்
ஓகோகோ அளவில்லாக் கோடிதொந்தம்
ஆணுதற்கு அண்டரச சவுக்காரவைப்பு
அருளினோம் பிண்டசவுக்காரங் கேளே. 80

பிண்ட சவுக்கார ரசம்

கேளப்பா புலஸ்தியனே அமுர்தபிண்டம்
கிருபையென்ற சவுக்கார முண்டையேதான்
காளடா கல்வமதி லுண்டைவைத்து
கருவான வண்டமுர்த ரசநீர்விட்டு
மூளடா முச்சாமம் விடாதேசாடு
மூர்க்கமென்ற பிண்ட சவுக்காரந்தன்னை
ஆளடா வைந்துசுண்ண முப்பூமூன்றும்
அரகரா மெழுகுரெண்டு பத்துசேரே. 81

சேர்த்துநன்றாய் முச்செயநீர் தயிலங்கூட்டி
செயலாக யிருசாமம் செயமாயாட்டு
சார்த்துநன்றா யாட்டினபின் சுத்தசலம்விட்டு
துருவமதா யோர்சாமம் திறமாய்சாடு
பார்த்துநன்றா யதின்பிறகு பனிநீர்கொண்டு
பாலகனே யறுசாமம் பதமாயாட்டி
வார்த்துநன்றாய் வழித்ததுவை பார்த்தாயானால்
வச்சிரபொடி பொடியதுபோல் உதிருந்தானே. 82

தானவனா யிருந்தசதாசிவன் தானப்பா
தருவாக எனைமகிழ்ந்து அருளினார்பார்
பேனான பிண்டரச அமுர்தங்கொண்டு
பிலமான பீங்கானில் நடுவேவைத்து
சோனான சுத்தசல மதனில்விட்டு
சொற்பெரிய கரமதுவால் கரைத்துநீயும்
தேனான தெளியவைப்பா யிரண்டுநாழி
செயலாக தெளிவிறுத்து யெடுத்துக்கொள்ளே. 83

கொள்வதற்கு வன்னீரைப் பாண்டந்தன்னில்
குணமாக விட்டதனை அடக்கம்பண்ணு
பெள்வதற்குப் பிண்டரச மெடுத்துக்கொண்டு
பீங்கானில் அதைவிட்டு பனிநீர்விட்டு
கள்வதற்கு கரமதுவால் கலக்கிநீயும்
கண்மணியே தெளியவைத்து யிறுத்துக்கொண்டு
மூள்வதற்கு முன்னோ டின்னீரைச்சேர்த்து
மூர்க்கமென்ற பிண்டரச மெடுத்துப்பாரே. 84

எடுத்துப்பார் பிண்டரசம் என்னகூர்வேன்
இந்திரகோப நிறமதுபோ லிருக்கும்பாரு
அடுத்துப்பா ரதன்ரசத்தில் கோடாகோடி
அளவில்லா வேதையெல்லா மாடலாம்பார்
மடுத்துப்பார் பிண்டரச சமலைபொன்னாகும்
மகத்தான வமுர்தசஞ்சீவி தான்பாரு
படுத்துப்பார் சீசாவில் ரசத்தைவிட்டு
பரபூசை குருபூசை பணிந்திடாயே. 85

பணிந்திடாய் பிண்டசவுக்காரன் வைப்பில்
பாடுறோம் கோடாகோடி குளிகைவித்தை
மணிந்திடாய் பிண்டரச வமுர்தஞ்சொன்னோம்
மகத்தான காரரச வைப்பேகேளு
கனிந்திடாய் காரவைப்பி உண்டைகொண்டு
கல்வத்தி லிதைவைத்து முன்னீர்விட்டு
அணிந்திடாய் பத்துவித குருவேபோட்டு
அழகாக யிருசாம மாட்டுவாயே. 86

காரரச வைப்பு

ஆட்டடையிலே அமுர்தசஞ்சீவி விகம்
ஆலகால விஷம்போல சீறும்சீறும்
தாட்டையிலே தயிலம்விட்டு யிரண்டுசாமம்
தனதாக சாடிவர பிசினிபோலாகும்
மூட்டையிலே வதின்பிறகு முச்செயநீர்விட்டு
முறையாக முச்சாம மாட்டித்தீரு
மாட்டையிலே மெழுபோலாம் பாகம்பாகம்
மகத்தான சுத்தசலம் வாருவாரே. 87

வார்க்கையிலே சுத்தசலம் வலுவாய்விட்டு
வாழ்மயிலே பூசைசெய்து சாமமாட்டு
ஆர்க்கையிலே வதின்பிறகு பனிநீர்விட்டு
அப்பனே யொருசாம மடாவாய்ச்சாடு
மூர்க்கையிலே மூதண்ட காலாக்கினியே வீசு
முறையாக வதைவழித்துப் பீங்கான்தன்னில்
சோர்க்கையிலே சுத்தசலம் வலுவாய்விட்டு
சுகம்பெறவே கரைத்ததனை தெளியவையே. 88

தெளிந்தமுர்த மிறுத்ததனை பீங்கான்தன்னில்
திருவிளத்தைப் பூசைபண்ணி பதனம்பண்ணு
களிந்ததொரு காரரச மதிகவேகம்
காசினியோ ராரறிவார் சிவமேயாச்சு
பணிந்ததொரு பனிநீரு வலுவாய்விட்டு
பாலகனே கரைத்ததனை தெளியவைத்து
அணிந்தமுர்த காரரசம் சஞ்சீவியேயாகும்
அப்பனே அதையிறுத்து முன்னீரில்சேரே. 89

சேர்த்ததொரு காரரச மிதுவேயாச்சு
செகத்திலுள்ள மானிடரோ செய்யப்போறார்
ஆர்த்ததொரு வதின்வர்ணம் பளிங்குபோலாம்
அளவில்லா வேதையிதி லாடும்பாரு
மார்த்ததொரு யிவ்வேதை செய்தாயானால்
மண்டலமே யாண்டுமவர் புவனம்பாய்வார்
நார்த்ததொரு நாம்சொன்னோம் புலஸ்தியனேகேளு
நலமான சீசாவில் பதனம்பண்ணே. 90

பண்ணியதோர் காரரச வமுர்தந்தன்னை
பரபூசை குருபூசை பணிந்திடாய்நீ
அண்ணியதோ ரவ்வமுர்தம் பானம்பண்ணு
ஆத்தாளைப் பூசிப்பாய் சிவயோகத்தில்
முண்ணியதோர் காரரச மகத்தாம்வைப்பு
மூர்க்கமென்ற வைப்பதனை சொன்னோம்பாரு
வண்ணியதோர் காரரச முடிந்தேபோச்சு
மகத்தான காரவைப்பு ரசத்தைக்கேளே. 91

கேளப்பா புலஸ்தியனே சதாசிவத்தின்
கிருபையென்ற சாரரசம் சத்தியாச்சு
சாளப்பா சாரவைப்பு உண்மையேதான்
சமர்த்தான கல்வமதி லுண்டைவைத்து
மாளப்பா முன்சொன்ன குருதான்பத்து
மகத்தான உண்டைதனில் கூடச்சேர்த்து
ஆளப்பா முன்னுரைத்த செயநீர்விட்டு
அரகரா நால்சாம மாட்டுவாயே. 92

ஆட்டையிலே தயிர்தனைப்போல் வருதல்கண்டு
அண்டசெயநீர் மூன்று மடவாய்விட்டு
மூட்டையிலே முச்சாத மாடித்தீரு
மூதண்ட வச்சிரம்போ லுதிர்ந்துபோகும்
தாட்டையிலே யிதுபாகம் வருகும்போது
தயவாக வைந்துருவின் தயிலம்விட்டு
நாட்டையிலே யிருசாம மாட்டினாக்கால்
நலமான பிசினியைப்போல் மஞ்சளாமே. 93

ஆமென்ற வறுபாகம் கண்டாயானால்
அமுர்தபனி னீரைவிட்டு சாமமாட்டு
தேமென்றே வாட்டுமெழு காகும்போது
தேவிபரை வாலையைத்தான் தெரிசித்தேறு
வாமென்ற வாலை சஞ்சீவியாகும்
வளமான காரரச மெதக்கக்கேளு
தாமென்ற யிம்மெழுகை வழித்துக்கொண்டு
தகைமையுள்ள பீங்கானி லிட்டிடீரே. 94

இட்டிடாய் பீங்கானில் சுத்தசலம்விட்டு
யின்பரவி சஞ்சீவி கரைத்திடாய்நீ
கட்டியதோர் கரைத்ததொ்ரு சாரைநீரை
கண்மணியே தெளியவைத்து யெடுத்திடாய்நீ
எட்டிடா யிருத்ததனை பீங்கான்தன்னில்
யிருத்தநீர் பதனமதாய் வைத்துக்கொண்டு
அட்டிடா யருவியது பாயும்பாயும்
அப்பனே சீவரத்ன மிதற்கொவ்வாதே. 95

ஒவ்வாது சாரரச மிதற்கொவ்வாது
உடன்விட்டு பனிநீரைக் கரைத்துவைத்தால்
அவ்வமுர்த நீர்மேலே நிற்கும்பாரு
அடியில்நிற்கும் சாரரசம் யார்தான்காண்பார்
செவ்வாது பாண்டத்தில் சத்தைவிட்டு
செயலாகப் பராபரத்தை தெரிசிப்பாய்நீ
மவ்வாத சாரரச மார்தான்காண்பார்
மகத்தியனார் மாத்ததுக்கு மதிக்கப்போமே. 96

போமென்ற சவுக்கார வைப்பைச்சொன்னோம்
புகழான அண்டசவுக்காரம் சொன்னோம்
பேமென்ற பிண்டசவுக்கார வைப்பைபேசினோம்
காரசவுக் காரஞ் சொன்னோம்
நாமென்ற சாரசவுக் காரவைப்பை
நாட்டினோ மைந்தினிட வைப்புசொன்னோம்
ஆனென்ற வைந்துருவால் வைப்பதாச்சு
அறையுறோ மைந்துவைப்பில் ரசத்தின்பேரே. 97

பேரான சவுக்காரம் காரசாரம்
பெருமையென்ற விந்துரசம் பாலைசொன்னோம்
ஆரான வண்டபிண்டம் வைப்பினாலே
அண்டரச வாலையைத்தான் அறிவாய்ச்சொன்னோம்
மாரான மண்டரவி யாதியந்த
மகத்தான பிண்ட சவுக்காரவைப்பில்
தேரான பிண்டரச வமுர்தவாலை
திறமாக சொன்னோமப்பா தெரிசிப்பாயே. 98

தெரிசிப்பாய் காரமுர்த வைப்பிலேதான்
செயலான காரரசம் செயலாய்ச்சொன்னோம்
அரிசிப்பாய் சாரம்வைப்பில் அமுர்தநீரா
அருளினோம் சாரரச மடவாய்க்காணும்
மரிசிப்பிர் காவியந்தா ணறாங்காண்ட
மகத்தான செய்தியெல்லாஞ் சொன்னோம்பாரு
வருசிப்பா யென்னசொன்னோ மினிமேல்கேளு
மகத்தான வைப்பெல்லா மருளுவோமே. 99

மருளுவோ மினிமொழிதான் சகலத்தோர்க்கு
மகத்தான பரப்பிரம்ம காந்தம்காந்தம்
அருளுவோம் புலத்தியனே சென்மராசி
வருவிருந்தா லெய்துமடா யோகவாழ்வு
வருளுவோம் யோகத்தில் தேறும்தேறு
மகத்தான யோகவாழ் வளமேகண்டால்
பொருளுவோம் யோகசித்தி யாச்சுதானால்
உடனேதான் சகலசித்தி யாவார்பாரே. 100

பாரேநீ புலஸ்தியனே யாறாங்காண்டம்
பகுந்தமப்பா நூறுக்குள் பாடினோம்நாம்
ஆரேநீ யெழுநூற்றி யாறாம்பாடல்
அருளினோம் அதற்குள்ளே ஆறாங்காண்டம்
தேரேநீ யின்னூல்தான் ஆயிரத்தில்
தேறியிருந்தவற்குமே மோட்சங் கிட்டும்
மாரேநீ யாறாவ காண்டம்பாடி
மண்டாண்ட புவனமெல்லாஞ் செயமாமுற்றே. 101

ஆறாங்காண்டம் முற்றுப் பெற்றது.

ஏழாவது காண்டம்

வைப்புமுறை

செயமான சிற்பரையின் சோதிபாதம்
தெரிசித்தோ மாதியந்தம் பதியேபோற்றி
மயமான மனோன்மணிதான் வாலைதேவி
மதிரவியின் ரவியொளியின் பாதம்போற்றி
நயமான பரப்பிரம சொரூபமாதி
சோதிபர சரசோதியின் கமலம்போற்றி
அயமான காவியந்தா னேழாங்காண்டம்
அருளுகிறோம் புலஸ்தியனே வண்டங்காப்பே. 1

அகண்டமென்ற யேழாவ காண்டந்தன்னில்
ஆதிமுதல் சரக்குவைப்பு திராவகந்தான்
அகண்டமென்ற உப்புசெய நீர்கள்தானு
மருவியதோர் மதியமுர்த செந்தூரசுண்ணம்
திகண்டமென்ற யிதுவாறும் நன்றாய்ச்சொல்வோம்
செயலுள்ள புலஸ்தியனே செயலாய்க்கேளு
டகண்டமென்ற பராபரத்தின் கிருபையாலே
பாடுகிறோம் சரக்குவைப்பு பண்பாய்த்தானே. 2

அண்டசுத்தி தெளிவு அன்னீர்

தானென்ற சவுக்கார சத்தின்வைப்பு
சமர்த்தான லிங்கவைப்பு சாற்றக்கேளு
ஆனென்ற வைந்துருவி னண்டங்கேளு
அப்பனே நாதவிந்தை வெவ்வேறேவாங்கி
கானென்ற வண்டோட்டின் சவ்வைப்போக்கி
கண்மணியே பூநீரில் வானீர்விட்டு
தேனென்ற தெளியவைத்து சட்டிதன்னில்
செயலாக தெளிவிறுத்து வடுப்பிலேற்றே. 3

ஏற்றினதோர் பூனீரி லண்டவோடு
யின்பமென்ற நாதவிந்தி லிரண்டுசாமம்
ஊற்றினதோ ரூறவைத்துகருவைப்போடு
உத்தமனே சீலையிலே கிளியாய்க்கட்டி
நாற்றினதோர் நாதவிந்தி லோர்நாழிவீதம்
நலமுடன் யூரிநிற்கும் கிளியேகொண்டு

சாற்றினதோர் சலம்விட்டுக் கழுவிப்போட்டு
சமர்த்தாகப் பூனீரில் தயவாய்ப்போடே. 4

போட்டயினி பூனிரி லிரண்டுநாழி
புகழாகக் கொதித்து தென்றா லெடுத்துக்கொண்டு
ஆட்டமுடன் சலம்விட்டுக் கழுவிப்போட்டு
அப்பனே கிளியதனை யவிழ்த்துநீயும்
காட்டமுடன் கல்வத்தி லண்டோடிட்டு
கருணைதர வேண்டுமென்று பனிநீர்விட்டு
வாட்டமதாய் முச்சாம மெழுபோலாட்டி
மைந்தனே வழித்ததனைக் கலசம்பண்ணே. 5

பண்ணப்பா பொற்கலசம் போலேசெய்து
பரிவான ரவிதனிலே யிருசாமம்வைத்தால்
எண்ணப்பா யென்ன சொல்வேன் கல்போலாகும்
என்மகனே சவுக்கார சத்தின்வைப்பு
கண்ணப்பா சாதிலிங்க மாவதற்குக்
கலசமதில் ரசம்விட்டு விந்தால்சீலை
செண்ணப்பா செய்தமுடிப்பித்து நீயும்
செயமாக ரவிசாமம் செலுத்திப்பாரே. 6

சாதிலிங்கம் வைப்பு

பாரடா சுத்தசலம் பாண்டத்திட்டு
பரிவான கலசமதை யதற்குள்வத்து
நாரடா பாண்டத்தை அடுப்பிலேற்றி
நலமான வெட்பாலை விறகால்மூட்டு
சேரடா விந்ததுவால் சீலைசெய்து
செயலாக வோர்சாம மெரித்தாயானால்
சாரடா சாதிலிங்கம் செம்புபோலே
சாரணைக்கு கெவுனமதாய் கட்டும்பாரே. 7

பாரேநீ பாண்டத்தை யிறக்கிமைந்தா
பசுமையுள்ள கலசமதை யெடுத்துக்கொண்டு
ஆரேநீ பனிநீரு முச்செயநீர்காட்டி
அடவான பாண்டத்தில் விட்டுநீயும்
காரேநீ கலசமதை பாண்டத்திட்டு
கைபாகம் தவறாதே சீலைசெய்து
மாரேநீ பூமிதனி முழங்காலால்
மைந்தனே வெட்டியதை புதைத்துப்போடே. 8

அண்டசவுக்காரம்

போடப்பா வாரஞ்சென் றெடுத்தாயானால்
புகழான கலசமதை யெடுத்துக்கொண்டு
ஆடப்பா அன்னீரை புட்டிதன்னில்
அடக்கமதாய் பண்ணுமப்பா வப்பால்கேளு
காடப்பா கலசமதை உடைத்துப்பார்த்தால்
கண்மணியே சாதிலிங்கமென்ன சொல்வேன்
நாடப்பா சாதிலிங்க வைப்பேதானும்
நாடதிலே சொல்லாதே நலமாய்த்தானே. 9

தானான சாதிலிங்க மகத்தாம்வைப்பு
சாற்றினோ மதையெடுத்துப் பாண்டத்திட்டு
தேனான தேவியரைப் பூசைசெய்து
செயலான சிவயோகம் பூசைசெய்து
பானான பதனமதாய் வைத்துநீயும்
பராபரனைத் தெரிசித்து பணிந்திடாய்நீ
ஏனான யிந்தவைப்பு யெவருங்காணார்
யென்மகனே காவியத்தி லியம்பினோமே. 1

கெந்திவைப்பு

இயம்பினோம் சவுக்கார சத்தினாலே
யிளப்பமுள்ள லிங்கவைப்பு யிரவாசுச்சொன்னோம்
அயம்பினோ மண்டசவுக் காரந்தன்னை
அருளுகிறோ மண்டரச வதுவால்கேளு
முயம்பினோ முன்சொன்ன வஞ்சுருவினாலே
மூதண்ட வண்டோட்டால் கலசம்செய்து
மயம்பினோம் கெந்தியடா வைப்பைச்சொல்வோ
மாணாக்கள் அறிவதற்கு வசனிப்போமே. 11

வசனிப்போ மண்டரசம் வலுவாய்க்கொண்டு
வளமான கலசமதி லிட்டுநீயும்
வசனிப்போம் விந்ததினால் சீலைசெய்து
விபரமுடன் முச்சாமம் ரவிதனிலேவைத்து
வசனிப்போம் கல்போலே கட்டும்பாரு
கருவான கெந்தியடா நாகபாசம்
அசனிப்போ மதையெடுத்துப் பாண்டந்தன்னில்
அப்பனே அதில்வைத்துப் பனிநீர்வாரே. 12

வாரப்பா பாண்டத்தில் வலுவாய்நீயு
மகத்தான பாண்டத்துக்குச் சீலைசெய்து
மோரப்பா யிருசாமம் ரவியில்வைத்தால்
மேலான கெந்தியடா அறியப்போமோ
ஆரப்பா வடுப்பேற்றித் தீயைமூட்டி
அதின்மேலே பாண்டம்வைத்து வேங்கைக்காம்பால்
வேரப்பா விறகுகொண்டு அக்கினியேமூட்டி
விதமாக யோர்சாம எரித்திடாயே. 13

எரித்திடுவா யிச்சாமஞ்சென் றிறக்கிவைத்து
என்மகனே செயநீரைப் பாண்டமிட்டு
கரித்திடுவாய் கலசமதைப் பாண்டத்திட்டு
கண்மணியே விந்ததினால் சீலைசெய்து
பொரித்திடுவாய் பூமிதனில் குழிதான்வெட்டி
புகழாகப் பாண்டமதை புதைத்தாயானால்
வரித்திடுவாய் வாரஞ்சென் றெடுத்துப்பாரு
வச்சிறமென்ற கெந்திஉடல் வைப்பதாமே. 14

அண்டரசம்

தானென்ற கலசமதை யெடுத்துக்கொண்டு
தயவாக வதைவுடைத்துப் பார்த்தாயானால்
தேனென்ற கெந்தியப்பா மகத்தாம்வைப்பு
செகந்தனிலே யார்செய்யப் போறாறப்பா
நானென்ற வகஸ்தியனான் செய்தேன்பாரு
நன்மையதாய் புலத்தியனே உமக்குச்சொன்னோம்
ஏனென்ற யிந்தகெந்தி யார்தான்வைப்பார்
யீசன்வைத்த முறையிதுதா னினிமேல்கேளே. 15

பாஷாணவைப்பு

கேளுநீ கெந்திவைப்பைச் சொன்னோம்பாரு
கிருபையென்ற பாஷாண வைப்பைக்கேளு
பாளுநீ பிண்டரசமது தன்னாலே
பாஷாண முறையெல்லா மதற்குள்ளாகும்
மூளுநீ முன்போலே வைந்துரு
அண்டமூதண்ட கலசம்போல் செய்துகொண்டு
நாளுநீ பிண்டரச மதனில்விட்டு
நலமான விந்ததினால் சீலைசெய்யே. 16

செய்யப்பா பாண்டத்தில் சுத்தசலம்விட்டு
செயலான கலசமதை வதற்குள்வைத்து
அய்யப்பா விந்ததினால் சீலைசெய்து
அப்பனே முச்சாமம் ரவியில்போடு
நய்யப்பா ரவிகாய்ந்த பாண்டந்தன்னை
நலமாக வடுப்பில்வைத்து உதிரவேங்கை
வெய்யப்பா விறகுகொண்டு சாமஞ்சாடு
விதமாக சாடினபின் எடுத்துப்பாரே. 17

பாறப்பா சீலையதை கயட்டெரிஞ்சி
பரிவான கலசமதை யெடுத்துக்கொண்டு
தாறப்பா பாண்டத்தில் செயநீர்விட்டு
தருவான கலசமதை வதற்குள்வைத்து
சேறப்பா சீலைசெய்து காயப்போட்டு
செயலாகக் குழிவெட்டிப் புதைத்துப்போடு
வாறப்பா சாமஞ்சென் றெடுத்துப்பாரு
வளமான பாஷாண வைப்பேதானே. 18

வைப்பான பாண்டமதை யெடுத்துக்கொண்டு
மகத்தான கலசமது கயட்டெரிஞ்சி
கைப்பான கலசமதை யெடுத்துக்கொண்டு
கருணைதர வேண்டுமென்று உடைத்துப்பார்த்தால்
வைப்பான பாஷாண மகத்தாம்வைப்பு
பார்தனிலே யிவ்வைப்பு யார்தான்செய்வார்
சைப்பான சந்திரன்போல் விலாசமேவும்
தாயான பகவதியை பூசைசெய்யே. 19

செய்யப்பா வைப்பெடுத்துப் பாண்டத்திட்டு
சிவயோக பூசையது பதனம்பண்ணு
அய்யப்பா கடைசரக்கைப் பிடித்துக்கொண்டால்
அதிலென்ன பொன்விளையின் முன்முறையைப்பாரு
பையப்பா யிம்முறையை முடித்துநீயும்
பார்தனிலே பரிகாரஞ் செய்தாயானால்
நொய்யப்பா நோயென்னும் வினைதானேது
நொடிக்குள்ளே தேகவச்சிர காயமாமே. 20

காயமா ஐங்காய மதிககாயம்
கனகரத்தினம் போலாக்கும் கல்போல்கட்டும்
ஆயமா மாயிரத்தெண் சிவாலயமாம்
ஆயிரத்தெண் இதழ்களையு மிறுகிக்கட்டும்
உபாயமாம் பாஷாணம் வைப்பேவைத்து
உலகமதில் திரிவோர்கள் அனேகம்பேர்கள்
சிவாயமாம் பாஷாண வைப்பேவைத்து
சிவயோகி யெவர்க்கீடு யாவார்பாரே. 21

முதற்காண்டம் கடைக்காண்டம்பார்

பாரப்பா வெகுகோடி தவங்கள்செய்து
பணங்கோடி திரவியங் கொண்டவர்க்கேயீந்து
ஆரப்பா யிவரவர்க்கு அடுமையாகி
அளவில்லாக் காலம்வர பணிந்தாரானால்
காரப்பா பூபதியை செய்துகொண்டு
காவியத்தில் முதற்காண்டம் கடைக்காண்டம்பார்
பாரப்பா பத்துநூற் கப்பால்காண்டம்
பதினொன்றும் பார்த்தாக்கால் சித்திமுத்தியென்னே. 22

பிழைக்க

முத்தியென்ற சித்தியைநாம் சொன்னோம்பாரு
முடிவதற்குக் காவியத்தில் முடித்தோம்பாரு
வெத்தியென்ற மூன்றுலெட்ச மிதற்கப்பாலே
வெள்ளாட்டிப் பயல்களுக்கு வீணொப்பாக
சத்தியென்ற மாய்கையை நாம்போட்டோமப்பா
சகலருக்கு உலகமதில் பிழைக்கதாகா
சித்தியென்றுங் கோயிலென்றுங் குளங்களென்றும்
சிவாலயங்கள் உண்மையென்றும் போட்டோம்பாரே.23

பாரப்பா புலஸ்தியனே பிடாரியென்று
பணாமுடிதன் கணமென்றும் பிசாசமென்றும்
போறப்பா பொலியென்றும் சைவமென்றும்
பேர்பேறாய்ப் பிரித்து திட்டமிட்டோம்பாரு
நாறப்பா நால்சாதி பிரமசத்திரியான்
நளினமென்ற வணிகரைவை சூத்திரந்தானாகும்
ஆ,றப்பா அதினாலு பதினாறென்றும்
மகத்தியனான் நானென்றும் பெண்ணென்றும்பேரே. 24

பேறான பதினெட்டும் பிரித்துச்சொல்வோம்
பெருமையுள்ள பத்மகாண்டம் பேணிப்பாரு
நீறான வெகுவெள்ள மரங்கள்பூடு
நிலையாத சமுத்திரங்கள் சராசரங்கள்
மேறான பலபட்சி மிருகந்தானும்
மேகமென்றும் சத்தமென்றும் வாதமென்றும்
வேறான வேதமென்றும் சாத்திரமென்றும்
விதம்விதமாய் பிரித்திட்டு வளந்தோனாமே. 25

வளர்தோமே அங்கெங்கும் சட்டமாக்கி
அரன்செயலால் அகத்தியனான் தமிழைகண்டேன்
களந்தோமே யின்னூலு சித்தற்காக
காவியத்தைப் பார்ப்போர்கள் கடாட்சமெய்தும்
வளந்தோமே வாதமெல்லாம் யோகத்தாலே
வளந்தோமே சதாகால முப்பேகண்டோம்
இளந்தோமே மூன்றுலட்ச மின்னூலாச்சு
யிகபரமும் யுகபரமு மிதனாலாச்சே. 26

ஆச்சப்பா அசுவினியென் குருவின்வாக்கு
இந்நூலின் பயனறிந்து அடக்கம்பண்ணு
ஏச்சப்பா அசுவ்னியென் காண்டமின்னூற்
யென்குருவென் கடாட்சத்தா லன்னூல்சொன்னோம்
வாச்சப்பா சகலநெறி கல்வியாவாய்
வளமாக பலகலைகள் விளக்கமாகும்
காச்சப்பா வைப்பெல்லா மின்னூலுண்மை
கடைக்காண்ட முதற்காண்ட மாய்ந்துபாரே. 27

ஆய்ந்துபார் மூன்றுலட்ச மறைப்பாய்ச்சொன்னோம்
ஆதிகுரு யின்னூலு கிடையாதப்பா
பாய்ந்துபா ரின்னூலைப் பார்த்தபண்போர்
பணங்கோடி கொடுத்தாலும் கொடாரேபாரு
மாய்ந்துபார் கொடுக்கவென்று மனம்வந்தாலும்
மாதியென்று மறிவதுதான் கொடுக்ககொடாது
காய்ந்துபா ரிறப்போர்கள் பிறப்போயில்லை
கலையோக மிருந்தாக்காக்கால் பிறவியாவார். 28

பிறவியென்ற கருவிகளை யறிவார்பாரு
பிலமான மார்சட்டை கழட்டுவார்பார்
கறவியென்ற கற்பங்க ளுண்பார்பாரு
காசினியில் மானிடறோடே சேராரப்பா
பிறவியென்ற பெயரைப்போல் திரிவாரப்பா
பித்தங்கொண்டு ஊர்தோறும் பிஷ்ட்டியுண்போர்
மறவியென்று திரிவதனா லாவதென்ன
மதிரவியை ரவியொளியை வைத்தோனாமே. 29

காரசெயரசம்

வைத்தோர்கள் பாஷாண வைப்பைக்காண்பார்
மகத்தான யோகசிவ யோகஞ்செய்வார்
செத்தோர்க ளில்லையப்பா மோட்சம்பெற்றார்
செயமான காரசெய ரசத்தைக்கேளு
முத்தோர்கள் காரரசம் வைப்பில்மைந்தா
மூர்க்கமென்ற வீரமப்பா முயற்சியாகும்
அத்தோர்கள் வைந்துருவின் முன்சொன்னபாகம்
அப்பனே கலசம்செய்து காரத்தைவாரே. 30

வீரம்வைப்பு

வார்த்துநன்றாய் விந்ததினால் சீலைசெய்து
மகத்தான ரவிமுகத்தின் முச்சாமம்வைத்து
ஆர்த்துநன்றா யதையெடுத்து பாண்டத்திட்டு
அப்பனே சுத்தசல மடவாய்விட்டு
கார்த்து நன்றாய்க் கவசமிட்டு சில்லுசெய்து
கனரவியில் நிமிஷம்வைத்து வடுப்பிலேற்றி
வேர்த்துநன்றாய் வெள்வேலம் பட்டைகொண்டு
விளங்கவே யிருசாம மெரித்திடாயே. 31

எரித்ததொரு பாண்டமதை யெறக்கிவைத்து
யியலான கவசமதை கழட்டெரிந்து
பரித்ததொரு கவசமதை கட்டிப்போட்டு
பாண்டத்திற் குள்ளிருக்கும் கவசம்கொண்டு
மரித்ததொரு முச்செயநீர் தயிலங்கூட்டி
மகத்தான பாண்டமதில் விட்டுதானும்
கரித்ததொரு கலசமதை பாண்டத்திட்டு
கருணைபெற வேண்டுமென்று சில்லுசெய்யே. 32

செய்யப்பா விந்ததினா லேழுசில்லு
செய்தந்த பாண்டமதை ரவியில்போடு
மெய்யப்பா சாமஞ்சென் றெடுத்துக்கொண்டு
மேலான பூமியிலே முழக்குழிதான்வெட்டி
அய்யப்பா வதையெடுத்துப் புதைத்துப்போடு
அரகரா வாரஞ்சென் றெடுத்தாயானால்
பொய்யப்பா போகாது வீரவைப்பு
புகழான காரரச மதனாலாச்சே. 33

அண்டகலசம்

ஆச்சப்பா கட்டியது மணிபோலாகி
வாத்துமங்க ளறுவோடே செனனமாகி
காச்சப்பா வீரமதால் கனுபானங்கள்
கட்டினால் வெட்டிவனா மகத்தாம்வைப்பு
பாச்சப்பா புலஸ்தியனே யுலகோற்கெல்லாம்
பருங்கடுகு பிரமாணம் பட்டுதானால்
மூச்சப்பா மோடிவிடும் சகலநோய்கள்
மூலம்விட்டு குடிபோகு முண்மைதானே. 34

தானான வீரத்தின் வைப்பைக்கொண்டு
தவசியென்று திரிவார்க ளனேகம்பேர்கள்
கோனான குறையேது யவற்கென்னாளும்
கூண்டுவிட்டுப் போனாலும் குடிப்பேறாது
மானான மாதுசவுந்தரி வாமித்தாய்
மாயத்தில் விடுவோர்க்கு மயமங்கேது
தேனான வீரமது வைத்துக்கொண்டு
சிவயோகம் செய்பவற்கு சித்திதானே. 35

தானென்ற காரரச வீரவைப்பை
தவறாமல் பாகமதாய் தருவாய்ச்சொன்னோம்
தேனென்ற மொழியுடைய வாக்கமுர்தமெத்த
தேற்றமுடன் செய்துபார் வீரவைப்பை
ஆனென்ற குணமுடைய செல்வத்தோற்கு
அமைக்குமடா சகலசித்து மாவாராவார்
கோனென்ற குமரகுரு வாசிர்மத்தால்
கூறினோம் வீரவைப்பைத் தேறினோமே. 36

தேறினோம் சாரசெய ரசத்தில்மைந்தா
    செப்புகிறோம் துரிசிவைப்பு சிறப்பாய்நாமும்
மூறினோ முன்சொன்ன கலசம்போலே
    முறையாக செய்துமே முடித்துக்கொண்டு
ஆறினோம் சாரசெய ரசத்தைக்கொண்டு
    அழகான கலசமதில் ரசத்தைவிட்டு
மாறினோம் விந்ததினாலே லேமுசில்லு
    மகத்தான கலசமது கவசம்செய்யே. 37

செய்துமே ரவிதனிலே சாமம்வைத்து
    செயலாக வதையெடுத்து பாண்டத்திட்டு
முய்துமே சுத்தசலம் பனினீர்விட்டு
    மூற்கமதாய் சில்லுகளு மேமுஞ்செய்து
கைய்துமே கவசமது வலுவாய்ச்செய்து
    கனரவியில் சாமம்வைத்து வடுப்பிலேற்றி
அய்துமே வல்லாரை விறகேகொண்டு
    அக்கினியை தான்மூட்டி சாமஞ்சாடே. 38

சாடியபின் னீலம்போ லெமுப்புமாவி
    சமத்தாகப் பதம்பார்த்து யிறக்கிவைத்து
நாடியபின் கவசமதை கயட்டெரிந்து
    நலமான சில்லுதனை தள்ளிவிட்டு
பாடியதோர் பாண்டத்தி லிருக்கும்நீரு
    பாலகனே புட்டிதனை பதனம்பண்ணு
தேடியபின் கலசமதை யெடுத்துக்கொண்டு
    செயலான கவசமதைக் கழட்டிப்போடே. 39

போடப்பா சில்லுதன்னை தட்டிப்போட்டு
    புகழான கலசமதை யுடைத்துப்பார்த்தால்
சாடவே துருசினிட மகிமையென்னால்
    சாற்றொண்ணப் போகாது சாரம்சாரம்
ஆடப்பா துரிசிவைப்பைக் கடுகளவுமாத்திரம்
    அவனியிலே சீவசெந்து யெல்லோர்க்கெல்லாம்
பாடப்பா துரிசிவிடம் பட்டுதானால்
    பறந்திடுங்காண் நோய்களெல்லாம் பண்பாய்த்தானே

பண்மையென்ற துரிசிவைப்பில் கோடாகோடி
பலமான வேதையெல்லா மாயமாகும்
வெண்மையென்ற தனங்கோடி பணமீய்ந்தாலும்
மேலான துரிசிவைப்பை சொல்லார்பாரு
வண்மையென்ற துரிசிவைப்பை முடித்துக்கொண்டு
வையகத்தில் திரிவார்கள் யோகசித்து
துண்மையிது வாராது குணமுள்ளோர்க்கு
துதிபெறவே த்ரிசிவைப்பின் முறையைப்பாரே. 41

திராவகத்தி

பாரப்பா உள்முலம் பஞ்சபூதம்
பரிவான சரக்குவைப்பு பாடினோம்யாம்
சாரப்பா சவுக்கார உண்டையாகி
சலமான சுத்த்மூர்த ரசமுமாகி
ஆரப்பா வமூர்தரச சரக்குமாகி
அதில்கோடா கோ்டிவேதை யளவதாகி
தேரப்பா வைப்புமுறை வைந்துஞ்சொன்னோம்
தெளிவான் திராவகத்தின் செய்திகேளே. 42

கேளப்பா திராவகந்தா னிதனால்மைந்தா
கீர்த்திபெற்றோம் புலத்தியனே கேளுகேளு
நாளப்பா முன்சொன்ன நாலாங்காண்டம்
நலமான உப்பெடுத்து ஆடக்கேளு
ஆளப்பா சொன்னதொரு கலசம்போலே
அண்டத்தால் கலசமது அடவாய்ச்செய்து
பேளப்பா பீங்கான்போல் கிண்ணிபண்ணி
பேறான வலுப்பீங்கான் செய்துவையே. 43

வைத்ததொரு பீங்கானி லுப்பைக்கொட்டி
வாகாக முச்செயநீரதில் மூன்றிட்டு
அய்த்ததொரு பத்துவிதங் குருவேபோட்டு
அழகான சுத்தசலம் பனினீர்விட்டு
சுத்தமதாய் பிட்டதுபோல் பிசைந்துருட்டி
துதிபெறவே கலசமதை உள்ளேவைத்து
அத்தனைமுள் வேண்டுமென்று விந்தால்சீலை
அதில்மேலே கவசமதை யடவாய்ச்செய்யே. 44

செய்யப்பா கரகம்போல் கலசமுக்கு
செயம்பெறவே பாண்டமது நடுவேவைத்து
உய்யப்பா சுத்தசலம் பனினீர்விட்டு
உள்மூல மென்றதொரு தயிலம்விட்டு
அய்யப்பா வதன்மேலோர் பாண்டம்வைத்து
அடவாக அண்டமெழு கதனால்சில்லு
மெய்யப்பா மேற்கவசம் வலுவாய்ச்செய்து
மேலான சில்லதுவு மேழுஞ்செய்யே. 45

செய்துநீ ரவிதனிலே முச்சாமம்வைத்து
செயலாக வதையெடுத்துப் பார்த்தாயானால்
எய்துபார் நீரெல்லாங் குடித்துப்போடும்
யெழிலான அண்ட திராவகந்தான்பேரு
பைய்துமே வாலையைக்கொண்ட வாலையானால்
பருவமடா பத்துவய தாகுங்கண்டீர்
அய்துநீ திராவகமா மழியாத்தேகம்
அரன்சொன்னா ரிந்தமுறை யறிந்துபாரே. 46

அறிந்துபார் திராவகத்தின் வைப்பைக்கொண்டு
அப்பனே பூமியின்கீ ழடுப்பாய்கட்டி
தெறிந்துபார் வைப்பெடுத்து வடுப்பிலேற்றி
திருவான மண்கலச மார்பில்வைத்து
வறிந்துபார் வஸ்துயிர்க்கும் பாவினைபோல
வளமான ருத்திரவேங்கை விறகால்மூட்டு
மறிந்துபார் திராவகநீ ரிறங்கும்பாரு
மகத்தான புட்டிதனில் பதனம்பண்ணே. 47

பண்ணப்பா பரபூசை சிவபூசைசெய்து
பரிவான வாலையைத்தான் பாலைபூசை
எண்ணப்பா யென்குருவின் கந்தன்பூசை
யிப்பூசை அற்புதமாய் தவறாமற்செய்து
கண்ணப்பா திராவகந்தான் சகலத்திற்கும்
கடுாரமடா வெகுவேகம் கடுகுமாத்திரம்
மண்ணப்பா மலையீடோ கிரிகளீடோ
மதிற்கெதிரு யில்லையப்பா நீர்காண்பாரே 48

பாரப்பா திராவகங்கொண் டனேகவித்தை
பாடுகிறோம் புலத்தியனே பரிவாய்க்கேளு
ஆரப்பா வடிமெழுகை பரணிகொண்டு
அப்பனே பதனமதாய் வைத்துப்போற்றி
தேரப்பா திராவகத்தின் மெழுகால்கோடி
சேனைதொந்த மதிகமுண்டு கோடாகோடி
ஆரப்பா செய்யுவறோ செய்யாரப்பா
அமுஷைவிதி யோகசிவ யோகிதானே. 49

ரவிசெயநீர்

தானென்ற திராவகந்தா னனேகமுண்டு
சதாகோடி முறைக்கெல்லா மிதினாலாடும்
தேனென்ற லிங்கமப்பா பலந்தான்கொண்டு
விதமான பத்துவித குருவேசேர்த்து
ஆனென்ற ததின்பீங்கான் தன்னிலப்பா
அறையளவு மட்டாக உப்பைக்கொட்டி
சானென்ற லிங்கசவுக்கார உண்டை
தயவாக வோர்பலம்வைத் தூளதாக்கே. 50

தாக்கியதோர் வைப்புவைத்த லிங்கங்கேளு
தனதாக விராகனிடை சமனாய்ச்சேர்த்து
தூக்கியதோர் முச்செயநீர் பலமூன்றிட்டு
துதிபெறவே பிசைந்ததனை ரவியில்வைத்தால்
ஆக்கியதோ ரவிசெயநீ ரிறங்கும்பாரு
அதையெடுத்து புட்டிதனில் பதனம்பண்ணு
வாக்கியதோ ரவிசெயநீர் கோடாகோடி
வசனிக்க நாவுமுண்டோ வேதையாமே. 51

ஆமப்பா புலஸ்தியனே வாலைபூசை
அப்பனே சிவயோக மடவாய்ச்செய்து
ஓமப்பா உலகமெல்லா முப்புவாகும்
உண்மையென்ற உப்பினிட செயநீர்வேகம்
நாமப்பா வைப்பதனால் செயநீர்பாரு
நரர்களிதை செய்யுவறோ செய்யார்பாரு
மாமப்பா யிச்செயநீர் செய்துகொண்டு
மகத்தான சிவயோகி திரிவார்பாரே. 52

மதியமுர்த திராவகம்

திரிவார்கள் விதியிதந்த தெளிந்தபண்போர்
செயலான விம்முறையில் கோடாகோடி
அறிவார்க ளறிவதனால் இம்முறையைக்கண்டோம்
அதிகசிவ மவுனியென்றும் ஞானியென்றும்
தெரிவார்கள் சித்தரென்று முனிவரென்றும்
செகமதிலே அனேகமுண்டு தேறினோர்கள்
உரிவான உப்புசெய நீரைச்சொன்னோம்
ஓகோகோ மதியமுர்த முறைக்கக்கேளே. 53

கேளப்பா மதியமுர்த திராவகத்தைக்கேளு
கெடியாகச் சொல்லுகிறோம் கேளுமைந்தா
மூளப்பா முன்கலசம் கிண்ணிசெய்து
மூர்க்கமென்ற முப்பூவைப் பாண்டந்தன்னில்
ஆளப்பா வதையிட்டு செயநீர்விட்டு
அப்பனே பத்துவிதக் குருவேபோட்டு
நாளப்பா உப்பு திராவகத்தைவிட்டு
நலமான திராவகத்தின் செயநீர்வாரே. 54

வாரப்பா முச்செயநீர் கூடச்சேர்த்து
வளமான கெந்தியுண்டை வளமாய்க்கொண்டு
தூரப்பா தூளாக்கி கெந்திவிட்டு
துதிபெறவே முப்புதனில் நடுவேவைத்து
காரப்பா பிசைந்ததனை பிட்டுபோலே
கருணையுடன் முன்போலே சில்லுசெய்து
ஆரப்பா முன்வைத்த திராவகம்போல்
அப்பனே வைத்துரச மிறக்குவாயே. 55

இறக்குவாய் மதியமுர்த மிரண்டும்பாரு
யென்ன சொல்வே னதின்பெருமை நிறமேசந்திரன்
செறக்குவாய் புட்டிதனில் பதனம்பண்ணு
சிவபூசை குருபூசை சிணத்தில்பண்ணு
அறக்குவாய் மதியமுர்தம் செய்துகொண்டு
ஆரவியில் திரிவார்க ளறிந்தபண்போர்
வறக்குவாய் மதியமுர்தங் கோடாகோடி
மறத்திற்கு ஒவ்வாது வசனிப்போமே. 56

முச்செயநீர்

வசனிப்போ மதியமுர்தம் சொன்னோம்பாரு
மகத்தான சிவன்செயலா லருளினோம்யாம்
அசனிப்போ மமுர்த செந்தூரங்கேளு
ஐந்துருவி னதுவளவா லருளக்கேளும்
பசனிப்போம் பத்துவிதக் குருவேகொண்டு
பருவான கல்வமதி லதனில்வைத்து
முசனிப்போ முப்பூவும் கூடச்சேர்த்து
முக்கியமுள்ள உப்பு திராவகந்தான்வாரே. 57

வாரப்பா பஞ்சபூத சரக்கைப்போட்டு
வளமான பஞ்சரசம் கூடச்சேர்த்து
ஆரப்பா வைப்புவுண்டை பலந்தான்வீதம்
அப்பனே வைந்தையுந்தா னிறுத்துப்போடு
நாரப்பா முச்செயநீர் குருசெயநீர்விட்டு
நலமான சுத்தசலம் பனிநீர்விட்டு
காரப்பா கணபதிக்குப் பூசைசெய்து
கண்மணியே சாடிவா முச்சாமந்தானே. 58

தானான முச்சாமம் யிடைவிடாமல்
தருவாக காடிவழித் தெடுத்துக்கொண்டு
கானான வண்டமெமு குகைதான்செய்து
கருவாக வழித்து மெழுகதனில்போட்டு
வேனான விந்ததினால் சீலைசெய்து
வேதாந்த சிரோன்மணியைப் பூசைசெய்து
மானான ரவிதனிலே வைந்துசாம
மகத்தான குகையதனை வைத்திடாயே. 59

வைத்திட்ட குகைதனையைக் கொண்டுமேதான்
மகத்தான உதிரவேங்கை கரியினாலே
கைத்திட்ட கரிகொண்டு துருத்தீவைத்து
கருநடுவில் குகையதனை கருவாய்ச்செய்து
ஐத்திட்ட சுரபானம் போலேமைந்தா
அப்பனே பாலாகருணை கொண்டாடுவாய்நீ
மைத்திட்ட யிருசாமம் துருத்திகொண்டு
வளமாக சாடியதை யெடுத்துக்கொள்ளே. 60

கொள்ளப்பா செந்தூரக் குகையைமைந்தா
குருபூசை சிவபூசை குணமாய்ச்செய்து
கள்ளப்பா குகையுடைத்துப் பார்த்தாயானால்
கணக்கில்லா செந்தூரம் சிவப்பாங்கண்டீர்
செள்ளப்பா செந்தூர மென்னால்சொல்ல
சிவசிவா முடியாது மூன்றுலட்சம்
அள்ளப்பா வதற்கெல்லாங் குருதானப்பா
ஆதியந்தம் செந்தூரம் வேணும்பாரே. 61

பாரப்பா செந்தூரம் வாசம்பட்டால்
பாடைமேல் போறபிணம் மெழுந்தேநிற்கும்
ஆரப்பா வாயுசுதான் வளர்ந்தேபோச்சு
அரனாலு மயனாலும் வெல்லொண்ணாது
தேரப்பா செந்தூரம் செய்யும்பண்போர்
சிவனவனே யவனிவனே தேவனாவார்
வேரப்பா மலைகளுக்கு கடுகதில்பாதி
விபரமுள்ள செந்தூரம் கலந்தால்கேளே. 62

கலக்கிறதோர் வகையென்ன புலஸ்தியாகேள்
கருவான பனிநீரில் குழைத்துக்கொண்டு
மலக்கிறதோர் மலையினடி னேர்புறத்தில்
வலக்கையினால் போட்டுபோட்டுப் பாரு
முலக்கிறதோர் சஞ்சீவி செந்தூரம்பார்
முன்னிமிழ மதுக்குள்ளே குறியும்பாரு
அலக்கிறதோர் மலையெல்லாம் கனகமாகும்
அண்டபகிரண்ட மெல்லாந் தங்கமாமே. 63

ஆரப்பா செந்தூரஞ் செய்தாயானால்
ஆதியென்ற சோதியொளி நீயேயாவாய்
வாமப்பா செய்துகொண்டு சிவயோகத்தில்
மைந்தனே கடுகளவில் நாலிலொன்று
ஓமப்பா உள்க்கொண்டு சிவயோகத்தில்
உத்தமனே தம்பித்தால் இறுத்தும்வாய்வு
காமப்பா கல்போலாம் தேகமெல்லாம்
கனகமென்ற தங்கநிற மாகும்பாரே. 64

பாரேநீ தேகமெல்லாந் தங்கதேகம்
பரிவான சித்தனடா உலகிலுண்டு
ஆரேநீ யிம்முறையை யார்தான்செய்தார்
அரகரா யேழாஞ்காண்ட மின்னூல்பாரு
நாரேநீ செந்தூரம் நன்றாய்ச்சொன்னோம்
நாதாந்த சுண்ணமடா தங்கச்சுண்ணம்
வாரேநீ கனகமடா வாசம்பட்டால்
மண்டல மிம்மூன்றுமது கனகமாமே. 65

கனகமாம் தங்கசுண்ணம் சொல்லக்கேளு
கண்மணியே பத்துவகை குருவைக்கொண்டு
அனகமா மஞ்சுசவுக்கார உண்டை
அப்பனே அரைப்பல வீதமாக
முனகமா மூன்றுப்பு முப்புபோடு
மூதண்டம் பலங்கணக்காய் நிறுத்துப்போடு
மனகமா மைந்துவைப்பு சரக்கைப்போடு
மகத்தான வைந்துரச நீரைவாரே. 66

வாரப்பா முச்செயநீர் தயிலங்கூட்டி
மகத்தான உப்பு திராவகமுங்கூட்டி
சேரப்பா செயநீரு திராவகமுங்கூட்டி
செயமான சுத்தசலம் பனிநீர்விட்டு
ஆரப்பா கல்வமதி லிதுவெல்லாமிட்டு
அப்பனே வமுர்தநீர் விட்டுஆட்டு
தேரப்பா வறுசாமம் அமுர்தநீரால்
செயலாக வாட்டியதை வழித்துக்கொள்ளே. 67

வழித்ததனை வண்டகுகை வதனுள்ளிட்டு
மகத்தான செந்தூரம் விராகன்ரெண்டு
மெழித்ததனை மெழுகதனால் சில்லுசெய்து
மேலான விந்ததனால் ஏழுசில்லு
அழித்ததனை சில்லுசெய்து ரவியில்சாமம்
அப்பனே காய்ந்துதென்றா லெடுத்துக்கொண்டு
பழித்ததனை வெட்பாலை கரிதான்கொண்டு
பண்பாகக் கரிக்குள்ளே குகையையவையே. 68

வைத்துநீ துருத்திகொண்டு நால்சாமஞ்சாடு
மதிகோடி மதிசூரியன் மதிபோல்காணும்
ஐய்த்துநீ தீயாற்றிக் குகையெடுத்து
அப்பனே குகைஉடைத்துப் பார்த்தாயானால்
மைத்துநீ மகத்தான தங்கச்சுண்ண
மைந்தனே யாச்சுதப்பா மதியினாலே
சித்துநீ செய்யவென்றால் சீஷாகொண்டு
செயலான சுண்ணமதை பதனம்பண்ணே. 69

பண்ணப்பா சவுக்கார உண்டைவைப்பில்
பாடினோ மதில்வேதை கோடாகோடி
நண்ணப்பா வமுர்தசெய ரசத்தின்வைப்பில்
நளினமதாய் யெண்ணொண்ணா கோடிதொந்தம்
கண்ணப்பா சரக்குவைப்பில் கோடாகோடி
கழர்கோடி வேதையெல்லா மிதனாலாடும்
எண்ணப்பா திராவகத்தின் வைப்பின்னீரில்
யென்குருவே முடியாது சொல்லொண்ணாதே. 70

சொல்லொண்ணா செயநீறு திராவகத்தின்வைப்பில்
சொற்பெரிய அளவில்லா கோடிதொந்தம்
அல்லொண்ணர் செந்தூர வைப்பில்மைந்தா
அண்டபகிரண்ட மெல்லாங் கனகமாடும்
வல்லொண்ணா சுண்ணமடா வனந்தங்கோடி
வசனிக்க நாவுமுண்டோ யென்னால்சொல்ல
முல்லொண்ணா முடியாது தங்கசுண்ண
முடிந்தாச்சு புவனமெல்லா முயிர்களாச்சே. 71

ஆச்சப்பா தங்கசுண்ண சீசாகொண்டு
அடக்கமதாய் சிவயோகம் பூசைசெய்து
ஏச்சப்பா யேழாங்காண்டந் தன்னிலப்பா
யெடுத்ததெல்லாஞ் சற்குருவா மினிமேல்கேளு
மூச்சப்பா வைப்புமுறை யென்னசொன்னோம்
மூதண்டமான எட்டாங் காண்டம்பாரு
வாச்சப்பா யேழாங் காண்டந்தன்னிலப்பா
வசனித்தோம் வைப்புமுறை வாழ்வோர்தாமே. 72

வாழ்வோர்கள் காவியத்தி னேழாங்காண்டம்
வாசியது சித்திச்சால் வாதஞ்சித்தி
ஆழ்வோர்க்காம் மளவில்லா வேதைசொன்னோம்
அஷ்டயோக மென்றதொரு எட்டாங்காண்டம்
தாழ்வோர்க்கா மெட்டுடனே பத்துமொன்றும்
தருவான பதினொரு காண்டம் பார்த்தோம்
மாழ்வதற்கோ சாவேது வாழ்தானாச்சு
மளவில்லா சதா:கால முத்தியாச்சே. 73

ஆச்சிந்த காவியத்தி னேழாங்காண்டம்
அருளினோ மாகதொகை சொல்லக்கேளும்
ஏச்சுதிந்த எழுபத்து நாலுபாடல்
யிதற்குள்ளே முடிந்ததப்பா யேழாங்காண்டம்
வாச்சுதிந்த வைப்பெல்லா மெளியோர்க்காக
வசனித்தோம் செல்வபூபதி பார்த்தாக்கால்
சாச்சுதிந்த காலமட்டும் குறைகளேது
சகலநூல்கெல்லாந் தான்குருநூல் முற்றே. 74

ஏழாவது காண்டம் முற்றுப்பெற்றது.

எட்டாவது காண்டம்

குருவான சற்குருவின் பாதம்போற்றி
கூறுகிறோம் குருபரன்தன் அருளேபோற்றி
அருவான நவசதுர முகனேபோற்றி
அம்பிகைவாழ் சோதிபர னடியேபோற்றி
மருவான ஆயிரத்தின் மதியேபோற்றி
மதிரவிய னொளியிரவி மகண்டம்போற்றி
கருவான கதிரொளியின் குருவேபோற்றி
கணபதியின் குண்டலித்தாய் கமலங்காப்பே. 1

கமலமென்ற ஆயிரத்தெட் டிதழுக்கப்பால்
கணக்கில்லா கருவெல்லாங் கண்டுபார்த்து
வமலமென்ற ஆயிரத்தைப் பூசித்தாப்பால்
வாமப்பால் காமப்பால் சோமப்பாலால்
அமலமென்ற மதனப்பால் அமுர்தப்பாலால்
ஆகவைந்து உருவதனால் குருஉண்டாக்கி
பிமலமென்ற மலரதனால் மழைபோன்மாரி
பொழிந்தததுபோ லருமையினால் கருவியாச்சே. 2

ஆச்சப்பா வைப்புமுறை வைந்துக்குள்ளே
அதில்விறந்த கோடாகோடி வேதையெல்லாம்
காச்சுதப்பா காவியந்தா னெட்டாங்காண்டம்
கணக்கில்லா வேதையெல்லாங் கருவாய்ச்சொல்வோம்
பாச்சுதப்பா யின்னூலின்குருவைக்கொண்டு
பாச்சினால் கடுக்ளவும் பழுதுண்டோபார்
ஏச்சுதப்பா யின்னூலின் குருசெய்பாகம்
எடுத்தாக்கால் சகலநூ லேளிதமாய்ப்போமே. 3

ஏளிதந்தான் வாறாம லின்னூல்போற்றி
இயம்பினதோர்க் குருகண்டு முறைதப்பாமல்
வாளிதமாம் கருக்கண்டு அறிவால்செய்தால்
வாராது வொருகுறைகள் பொய்போகாது
ஆளிதந்தான் சகலத்திற்கு மின்னூல்பூட்டு
அரகரா யிப்பூட்டை திறந்தாரானால்
ஆளிதந்தான் குருபரனென் குருவைப்போல
அருள்தெளிந்து சிவயோகி ஆவாய்ப்பாரே. 4

இந்நூல்பூட்டு இந்நூலொருவருக்குங் கொடுக்கொணாது சிவயோகிக்கு கொடுக்கச் சொல்லும்படி இந்நூல்கூறல்

பாரப்பா புலஸ்தியனே யின்னூலைத்தான்
 பார்தனிலே மானிடற்குப் பகரவேண்டாம்
தாரப்பா தனங்கோடி பொருளீய்ந்தாலும்
 காத்தாலுங் கோடிவரை காட்டொண்ணாது
மாரப்பா காட்டவென்று மனம்போனாக்கால்
 மகத்தான சற்குருவில் கொஞ்சமீய்ந்து
ஆரப்பா வைப்புமுறை யொன்றேசொல்லி
 வைங்காய மெழுகதிலே கொஞ்சமீயே. 5

ஈவதென்ற சண்டாளர்க் கருளவேண்டா
 ஈய்ந்தாலுஞ் சிவலோக மிருப்போர்க்கீயும்
மாவதென்ற வவருக்குள் வயணங்கேளு
 மட்டயோக மிரண்டுஞ்சுத்தி யடவாய்சொல்லு
பாவதென்ற பழிபாவ முனக்கேயில்லை
 பாடினோ மிந்தநூல் ஆயிரம்போலுண்டோ
போவதென்றே யிருந்துவவர் பிரவேசிக்கப்
 புகழாக சொன்னதனால் பிழையாய்ப்போமே. 6

பிழைத்தவராய் சதாகாலம் யோகஞ்செய்வோர்
 பிழைவருமோ ஒருநாளுங் குறையங்கேது
அழைத்தவறா திசைதீட்சை வருளுங்கொண்டு
 அளவில்லா யோகம்வர செய்தானானால்
மழைதவறா யோகசித்தி தீட்சையாச்சு
 மகத்தான வாயுவுபத்து மொடுங்கிப்போச்சு
வழைத்தவறா விதற்குப்பேர் தீட்சையாச்சு
 வாதியென்ற வாசிபதம் வருகுந்தானே. 7

யோகசித்தி தசதீட்சை வாசிபதம்

வருகின்ற சிவயோகஞ் செய்பவரைக்கேளு
 மானிலத்தில் மனிதனாய் சென்மித்தவரும்
அருகுகின்ற வவயோகம் செய்யாதேபார்
 அனாதியென்ற சிவயோகி யவர்க்கேயெய்தும்
ஒருகுகின்ற ஒருபுத்தியவர்க்கே தோன்றும்
 ஒன்றான பலபுத்தி யற்றேபோகும்
திருகுகின்ற செல்வத்தில் மிகுதியுள்ளோர்
 செய்தா லிம்முறையெல்லாந் தீர்ந்துபோமே. 8

போமென்ற புண்ணியர்க்கே யோகசித்தி
புகழ்தரும் பிரமோட்ச சித்திபுனிதமாகும்
ஏமென்ற சதாகாலம் தவங்கள்செய்து
எட்டாவ காண்டமிதின் கருவைக்கண்டால்
நாமென்ற குருவறிந்தோ மறிவேகண்டோம்
நவப்பிரம சொரூபம்போ லிருந்தோனாமும்
ஆமென்றுங் குருபதத்தி லருளேபெற்றோம்
அவ்வருளில் கருவறிந்தோம் குருக்கண்டோமே. 9

அஞ்சுருவினறிவு

குருவான வைந்துருவி னறிவேகேளு
கோடானகோடி தவஞ்செய்தால் கிட்டும்
அருவான கருமறைப்பைத் திறந்தேசொல்வோம்
அண்டசத்த சாகரமும் அதின்பேர்சொல்வோம்
மருவான வைப்புமுறை கட்டுசெயநீர்
மாதளம்பூ வரணம்போல் திராவகந்தான்
வருவான சுண்ணமது செந்தூரங்கள்
மகத்தான குளிகை சாரணையுமாமே. 10

குருவில்வைப்பு அஞ்சுருவினுப்பு

சாரணைக்குள் கெவுனவம்பு சரந்தொடுத்தால்
சராசரங்க ளோடியொரு நொடிக்குள்ளாகும்
ஆரணிக்குள் புவனமெட்டு அட்டயோகம்
அளவில்லா சங்கமது கோடாகோடி
வாரணிக்குள் பூண்டசிவ னுமையாள்சொன்ன
வமுர்தசெய நாவுருசி வாக்கியமாகும்
தாரணைக்குள் எருள்தருகும் பரமேஞானம்
தவமிருந்தோர்க் கெய்துமடா சார்ந்துபாரே. 11

சார்ந்துபா ரஞ்சுருவி னுப்பேகேளும்
தாயான பூமுலையா ளமுர்தஉப்பு
மூர்ந்துபார் மூன்றுப்பு மெடுத்துக்கொண்டு
மூலமென்ற மந்திரத்தா லர்ச்சித்தாக்கால்
ஆர்ந்துபா ரஞ்செழுத்து சிம்நயவசிறிம்
நறிம் அருளான அறிம் வறிமென்றே
வோர்ந்துபார் கீழ்மறைமே லறைகொண்டேகேள்
ஓகோகோ புலஸ்தியனே உரைக்கக்கேளே. 12

மூலமந்திரம்சித்தி

உரைக்கக்கேள் ஈராறு பன்னிரண்டுமாச்சு
உத்ததமனே வவ்வரையி லிவ்வெழுத்தைநாட்டு
நரைக்கக்கே ளிவரையவ் வரைமேல்மைந்தா
நற்சவுக்க மெண்கோண மாட்டித்தீரு
மரைக்கக்கேள் நற்சவுக்க மசிவயந
மைந்தனே நாற்பக்கம் நாலெழுத்துநாட்டு
அரைக்கக்கேள் ஓரெழுத்து நறிமென்றாடு
அவ்வெழுத்தில் ஓமென்று முக்கோணந்தீரே. 13

சக்கரமாறல் மூலபீசம் நடுபீசம்

முக்கோணத்தி லறிமா சவுந்தரிமாதேவி
மூதண்ட சவுந்தரிமா வரையெண்கோணம்
அக்கோணத்தி லாடுகின்ற அரிமாசத்தி
அறுகோண மறுவரைமே லிருகோணமட்டம்
சற்கோணம் திசையெட்டு மாடுகின்ற
சரவணபவ நயவவென் மெழுத்தைமாட்டு
நற்கோண மாயினின்ற அறுகோணத்தில்
நாதாந்த முக்கோண மிட்டுந்தீரே. 14

எண்கோண அகோர மந்திரம்

மிட்டந்த யெண்கோண மதில்வட்டம்பார்
மேல்வட்டம் ரெண்டு முக்கோணமிட்டு
வெட்டிந்த யெண்கோண மிதழ்பத்தாக்கி
இதழ்பத்தில் லறிமென்ற வட்சரத்தைநாட்டு
நாட்டிந்த நால்பக்கம் துவாரயீசர்
நால்வாசல் கணபதியுங் கந்தன்வீரன்
அட்டிந்த செயவீரர் ஒன்பதுபேர்பாலர்
அகோரவீர மாகாளி அகாளியென்னே. 15

என்னவே அகோரயிந்திர யோகசத்தினி
யென்திசையு முச்சாடித்தா லலுத்துப்போகும்
அன்னவே சக்கிரவாளி யிதற்குப்பேரு
அறுகோண மாறுமுகம் பேர்வெல்வாளி
கன்னவே கபாலவா ளிதற்குப்பேரு
கருவான கருவுகளு மிதற்கீடில்லை
முன்னவே சிதம்பர சக்கரமென்றும்பேர்
மூலகமெல்லா முடலென்று குருவாம்பாரே. 16

அய்ந்துரு செந்தூரவைப்பு

பாரப்பா புலஸ்தியனே வண்டங்கொண்டு
பரிவான கேசரியாள் பிண்டத்தாலே
ஆரப்பா பீங்கானி லுடைத்துவிந்தை
அண்டோட்டின் தசையெடுத்து ஓட்டேகொண்டு
நாரப்பா சலங்கொண்டு கழுவில்போட்டு
நலமான பனினீரில் நிமிஷம்வைத்து
ஏரப்பா பனினீரை நிமிஷஞ்சென்று
யெடுத்ததனை சீலையிலே கிளியாய்க்கட்டே. 17

கட்டியதோர் செயநீரி லூறப்போடு
கருவான கிளியவிழ்த்து வண்டங்கொண்டு
அட்டியிந்த ஐந்துருவின் தயிலங்கொண்டு
அரகரா கல்வமதி லண்டோடிட்டு
தட்டியிந்த தயிலம்விட்டு யாட்டுசாமம்
சாட்டியதை வழித்தெடுத்துப் பில்லைசெய்து
மட்டியிந்த அண்டத்தால் கல்தான்செய்து
மகத்தான வில்லையதை வதற்குள்வையே. 18

சிவயோகம் தாம்பிரசக்கரம்

வைத்ததொரு வில்லையதைக் கீழ்மேலாக
மகத்தான கீழகல்மே கல்தான்பாகம்
குய்த்ததொரு குகைமெழுகால் சீலைசெய்து
கூறுகிறோம் ரவிதனிலே சாரம்வைத்து
இத்ததொரு வெட்பாலன் கரிகொண்டள்ளி
அப்பனே துருத்திகொண்டு வகலைவைத்து
கைத்ததொரு சாமமட்டும் சாடுசாடு
சாடினால் வெண்மேகம் புகைபோலாமே. 19

ஆமேதா னதுபாக மாகக்கண்டு
அப்பனே யாறவைத்து சீலைநீக்கி
தேமேதான் பீங்கானி லஞ்சுருவின்மூலம்
செந்தூர மைந்துருவி னதிலேபோட்டு
பாமேதான் தாம்பிரத் தகட்டில்மைந்தா
பரிவான செந்தூர மதிலேயிட்டு
நாமேதான் சிவயோகம் செய்யும்போது
நலமான சக்கரத்தை யதின்மேலாடே. 20

பஞ்சமூர்தம் வரும்படி தூபதீப நைவேத்தியம்

ஆடுகிற வேளைதனில் தாம்பரத்தகட்டி
    லப்பனே செந்தூரமிட்டு நற்சவுக்கமாக
ஏடுகிற யெண்கோண வரையதின்மேல்கீரி
    யிப்பீச நவமூல மிட்டிதற்கு
மாடுகிற மாந்தோ லாசனத்தின்மேலே
    மைந்தனே உட்கார்ந்து கணேசன்பூசை
நாடுகிற வரன்பூசை தியானஞ்செய்து
    நலமான லாகிரியை உட்கொள்வாயே. 21

உடல்தெரிசனம்

உளக்கொண்டு சக்கரத்தி லமுர்தப்பாலன்னம்
    ஓகோகோ மதுவஸ்துப் பாலாகுந்தான்
வளக்கொண்டு வடதோசை ஆறுவகையமுது
    மைந்தனே வருகும்பார் மதுக்கொள்வாய்நீ
முளக்கொண்டு கண்ணுருட்டிப் பார்க்கும்போது
    மும்மூலமென்ற வறுமுடனே னேரும்
அளக்கொண்ட செந்தூரம் பொட்டேயிட்டு
    அரகரா சக்கரத்தைப் பாருபாரே. 22

பார்க்கையிலே தூபநைவேத்தி கற்பூரமாலம்
    பரிவான தாம்பூலம் சோதிப்பிரகாசம்
ஆர்க்கையிலே சலபுட்ப மாத்தும்பூசை
    அப்பனே உள்ளுடல்போ லடவாய்த்தோற்றும்
ஊர்க்கையிலே உடல்தரிசனத்தைக் கண்டு
    ஓகோகோ யோகமதி லிருக்கும்போது
நார்க்கையிலே பரப்பிரமங் கபாலங்காணும்
    நல்வாளு சக்கரத்தில் சோதிகாணே. 23

சோதியென்ற உடல்தரிசனத்தைச் சொன்னோம்
    சொற்பெரிய வைப்புமுறை சொல்லக்கேளு
ஆதியென்ற உப்பதனா லஞ்சுவுப்பு
    அரகரா வைப்பதினால் அப்பேகேளு
மாதியென்ற சூத்திரகா வயித்தியஞ்செய்வோர்கள்
    மகத்தான வைப்பேகொண்டு முறையாய்ச்செய்தே
நாதியென்ற வைந்துருவின் வைப்பேநாமு
    [illegible]ரினமத [illegible] யொவ்வொன்றா உ[illegible]ரக்கச்

சவுக்காரவுப்பு

கேளடா புலத்தியனே மூன்றுப்புகொண்டு
கெடியான அண்டத்தின் பீங்கான்தன்னில்
நாளடா பனினீர்தான் சரியாய்க்கொண்டு
கல்லுப்பை பீங்கானில் நலமாய்விட்டு
வாளடா சவுக்காரவைப்பில் பலந்தானிட்டு
வளமான ரவிதனிலே சாமம்வைத்தால்
ஆளடா உருகியது வரைபோலோங்கி
அமுர்தம்போல் பொங்குகிற சமையங்காணே. 25

அஞ்சருமணி

காணப்பா யெடுத்ததனை மதியில்வைத்தால்
கட்டுமடா மதியுப்பு கல்லுப்பாகும்
ஏணப்பா யெடுத்ததனை பார்த்தாயானால்
என்னசொல்வேன் அதன்பெருமை தங்கம்தங்கம்
ஆணப்பா அடியுப்பு யிதற்குப்பேரு
அடிமூல மென்றிதற்குப் பேருண்டாச்சு
வேணப்பா வேதாந்த வெண்சாரையுப்பு
விளையாடுங் கல்லுப்பு சவுக்காரஉப்பே. 26

பாரையுப்பு மெழுகு குளிகைமணி

உப்பான வைந்துருவின் மணியேகொண்டு
ஓகோகோ பூசைசெய்து பதனம்பண்ணு
நப்பான நாற்றிசையு மெச்சுவுப்பு
நவப்பிரம அப்பென்று மிதற்குப்பேரு
தப்பொன்று மில்லையப்பா சவுக்காரஉப்பு
தானெடுத்துச் சீஷாவில் பதனம்பண்ணு
அப்பான உப்புவடா சாரையுப்பு
அதற்குப்பேர் வெண்சாரை சவுக்காரவைப்பே. 27
காரவுப்பு சவுக்கார வுப்பேசொன்னோம்
கருவாக வதிலாடும் வித்தைகேளு
ஆரப்பா வைந்துப்பு வெடியுப்பேதான்
அடவாகக் கல்வத்தி லுப்பேபோட்டு
சாரப்பா செயநீரைக் கூடவிட்டு
சார்ந்துபோ லரைத்ததனை முச்சாமஞ்சாடி
பாரையுப்பு மெழுகதனை வழித்துக்கொண்டு
பாலகனே புன்னைக்காயது போலசெய்யே. 28

சவுக்காரக்கட்டு பதினாலுகளை மதியமுர்தம்
செய்துவந்த வுண்டையைத்தான் எடுத்துக்கொண்டு
செயலாக முச்சாமம் ரவியில்வைத்து
அய்துஅந்த உண்டைதனை எடுத்துக்கொண்டு
அப்பனே ஐந்துருவின் திராவகத்தில் போட்டால்
நைய்துமே நாற்சாம மூதினாக்கால்
நவப்பிரம சவுக்காரக் கட்டுமாச்சு
வைதிந்தக் கட்டெடுத்துப் பார்த்தாயானால்
வைப்பையப்பா பதினாறு களையுமாமே. 29

தெளிவு அட்டமாசித்து

கனையானக் கட்டெடுத்துச் சொல்லக்கேளு
கருணைதர வேணுமென்று பூசைசெய்து
அணையான கட்டெடுத்து சுத்தசலம்விட்டு
அரைத்ததனைக் கடுகளவு நாவில்வைத்தால்
மணையான மதியமுர்தம் வழியும்பாரு
மகத்தான அமுர்தமதை பீங்கான்தன்னில்
வனையான உடற்சுண்ணம் விராகன்போட்டு
மகத்தான மதியமுர்தம் தெளிவைவாங்கே. 30
வாங்கியந்த தெளிவுதனை பாண்டந்தன்னில்
வளமாக வயணமதாய் வைத்திடாய்நீ
தாங்கியந்த யோகசித்தி யானபேர்க்கு
தப்பாது வாதசித்தி மதியமுர்தஞ்சித்தி
ஆங்கியந்த சிவயோகஞ் செய்யும்போது
அட்டமா சித்து விளையாடவென்றால்
பாங்கியந்த செந்தூர மதியமுர்தம்விட்டு
பாலகனே கடுகதுபோல் குழைத்திடாயே. 31

பூனீர்சித்தி

குழைத்துவந்த மதியமுர்தங் குணமாய்க்கொண்டு
குருபரனை தியானித்து மணியேகொண்டு
அழைத்துயந்தக் கட்டிதனை கடுகுபோல்
குழைத்து அப்பனேகமலையின் முனையில்வைத்தால்
வழைத்தந்த நிமிஷஞ்சென் றெடுத்தாயானால்
மாசோதி யுகமெல்லா மாளியாய்க்காணும்
தழைத்தபுகழ் அகத்தியனான் சொன்னகாவியம்
தவறாது எட்டான காண்டந்தானே. 32

தானென்ற அம்மலைதான் தங்கம்தங்கம்
தயவான புவனமெல்லாங் கனகமாகும்
ஆனென்ற மலைபிளந்து கடுகளவுவீதம்
அப்பனே கல்வத்தில் அறிவாய்விட்டு
மானென்ற சுத்தசலம் விட்டுஆட்டி
மைந்தனே வழித்ததனை செம்பேகொண்டு
நானென்ற களங்கை பூனீறில்சுத்தி
நலமாகச் செய்துவதை யெடுத்துக்கொள்ளே. 33

அண்டகுகை

கொள்ளப்பா அண்டகுகை செய்துகொண்டு
குணமான தாம்பிரத்தை வதற்குள்வைத்து
சள்ளப்பா சவுக்கார வுப்பேகொண்டு
தவறாமல் பணவிடைதா னதிலேயீய்ந்து
மெள்ளப்பா செவ்வேலங் கரியேகொண்டு
மேலான கரிதனிலே துறுத்திவைத்து
கள்ளப்பா கரிக்குள்ளே குகையேவைத்து
கருமேக மென்றதொறு வக்கினியேமூட்டே. 34

தங்கமணிகட்டு

மூட்டியந்த தாம்பிரந்தா னுறுகும்போது
முப்புரத்தை எரித்தசிவன் கண்கள்போலே
ஆட்டியந்த சாட்டையிலை முருக்கம்பூபோல்
அதினுடைய பெருமை நர்மளவிடாது
பாட்டியந்த வரைத்தங்கக் குருவேகொண்டு
பாலகனே கடுகளவில் மூன்றிற்போடு
நாட்விடு நாலுரெண்டு யெட்டுசேர்க்க
நாலான பாகமதாய் குகையில்போடே. 35

போட்டவுட னிமிசஞ்சென் றெடுத்தாயானால்
புவனமெல்லாஞ் சோதியடா ஒளியோகோடி
ஆட்டவுடன் அதையெடுத்து தீயில்வைத்தால்
அளவில்லா தங்கமப்பா மணியாய்க்கட்டும்
வாட்டமுட னம்முடியுங் கொடிமுடியுங்கூட
அளவில்லா மாத்துதா னிதற்கீடுண்டோ
நாட்டவுடன் மணியெடுத்துப் பூசைசெய்து
நலமான அதினாட்டம் நவிலக்கேளே. 36

இரசக்கன்னாடி வைப்பு

நவிலக்கேள் முன்முறையில் ரசக்கண்ணாடி
நலமான சவுக்கார ரசத்தைகொண்டு
அவிலக்கே ளண்டத்தின் கலசந்தன்னில்
அப்பனே சவுக்கார ரசத்தைவிட்டு
மவிலக்கேள் சாரத்தின் கட்டேவாங்கி
மகத்தான கல்வத்தில் சுத்தசலம்விட்டு
வவிலக்கேள் வட்டெடுத்து வுளுந்தின்வீதம்
வளமாக வுரைத்ததனை வழித்திடாயே. 37

அண்டவார்ப்பிடம்

வழித்ததொரு கட்டுடைய குருவேகொண்டு
மகத்தான சவுக்காரக் குருவேபோட்டால்
அழித்ததொரு கலசமது கவசஞ்செய்து
அளவான விந்ததினால் சீலைசெய்து
பழித்ததனை செய்துமுடிப்பித்துக் கொண்டு
பரிவான ரவிதனிலே யிரண்டுசாமம்
நழித்ததனை சாமஞ்சென் றெடுத்துக்கொண்டு
நலமான கலசமதின் சீலைவாங்கே. 38

வாங்கியந்த சீலைதனைக் கவசம்பார்த்தால்
மதனப்பா லுருகியது ரசந்தான்பொங்கும்
ஆங்கியந்த பாகமதா எடுத்துக்கொண்டு
அண்டத்தால் சவுக்கம்பேல லளவாய்ச்செய்து
தூங்கியந்த தத்துவரை பகுப்பின்பாகம்
தோன்றியந்த சவுக்காரந் தனையெடுத்து
தாங்கியந்த ரசக்கலசம் சவுக்காரந்தன்னில்
சாய்த்துவிடு புலஸ்தியனே சாற்றக்கேளே. 39

ரசக்கண்ணாடி புகை

சாற்றக்கேள் நிமிஷஞ்சென் றெடுத்துப்பார்த்தால்
சங்கையில்லா ரசமதுவால் கண்ணாடியாச்சு
வாற்றக்கேள் சாய்த்ததொரு ரசக்கண்ணாடி
வளமாக அதையெடுத்துப் பூசைசெய்து
ஏற்றக்கேள் எடுத்ததனை மணியேகொண்டு
யெண்ணவொண்ணா தங்கத்தின் குளிகைகொண்டு
ஆற்றக்கே ளைந்துருவின் திராவத்தைக்கொண்டு
அப்பனே கல்வத்தி லிட்டிடாயே. 40

இரசக்கன்னாடி பின்னே குருபூசலு

இட்டிடவே திராவகத்தை விட்டேயாட்டி
யென்மகனே ரசக்கண்ணாடி பின்னேபூசு
பட்டிடாய் பூசியதை மதியில்சாமம்
பாலகனே வைத்ததனை எடுத்துப்பாரு
அட்டிடா யெடுத்ததனைப் பார்த்தாயானால்
அப்பனே மண்டலங்கள் மூன்றுங்காணும்
நாட்டிடாய் குழைத்ததங்கம் குறுவேகொண்டு
நலமாக நெற்றிதனி லிட்டுப்பாரே. 41

இட்டுநீ சென்மசொந்த பட்டணமேபோய்
என்மகனே பித்தங்கப் பொட்டேயிட்டு
நட்டுநீ பட்டணமே போனாயானால்
நாமென்ன சொல்வமப்பா மகிமைமெத்த
கட்டுநி பட்டணத்தி லனவோரெல்லாம்
கைவசமே யாவார்கள் கருத்தாய்கேளு
நாட்டிலுள்ள வனவோரு முன்பிறகேமைந்தா
நாம்சொன்னோம் வருவாரப்பா நாடிப்பாரே. 42

இரசவீதி பூதிகள் வரவும்

நாடிநீ பொட்டையிட்டு ரசவீதி
நலமுடனே போவையென்றால் சொல்லக்கேளு
தேடிஉன்னை வருவாரப்பா கோடாகோடி
தெரிவையர்கள் மகிமையைநான் திறமோசொல்ல
வாடிநீ மங்கையென்று சிடிகைபோட்டால்
வருவார்கள் கோடிபெண்கள் வணங்கவேண்டாம்
போடிநீ யென்றுசொல்லி ரசக்கண்ணாடி
பின்னாலே பார்த்தாக்கால் போவார் தாமே. 43

மண்டலங்க ளெரிந்து போகவும்

போனவுடன் யிம்மண்டல மெரிந்துபோக
பொட்டிட்டு ஓம்றீயும் என்னுபார்த்தாயானால்
ஆனவுடன் திருட்டித்துப் பார்த்தாயானால்
அண்டரண்ட புவனமெல்லாம் நீறிப்போகும்
பானவுட வேணுமென்று ரசக்கண்ணாடி
மைந்தனே எடுத்ததனை முன்பக்கம்பார்த்தால்
ஞானமுட னெரிந்திட்ட புவனமெல்லாம்
நலமாகப் பழையபடி யாடும்பாரே. 44

மண்டலங்களுண்டாகவும்

பாரப்பா ரசக்கண்ணாடி யதிலேவேதை
பார்த்தாக்கால் கோடானகோடி தொந்தமெய்தும்
ஆரப்பா ரசக்கண்ணாடி செய்யப்போறார்
ஆரணியில் தனங்களெல்லா மெடுக்கலாம்பார்
பாரப்பா ரசக்கண்ணாடி விந்தால்சொன்னோம்
கருவான காந்தத்தின் கிண்ணங்கேளு
வேரப்பா காந்தவிந்தை எவர்தான்செய்வார்
விபரமுடன் நாம்சொல்வோம் விளங்கத்தானே. 45

சூதக்காந்தக்கிண்ணம் அண்டகலசம்

விளங்கவே வேண்டுமென்றால் புலஸ்தியாகேள்
விதமான அண்டரச மெடுத்துக்கொண்டு
அளங்கவே அண்டத்தின் கலசங்கொண்டு
அப்பனே அண்டரச மதனில்வார்த்து
வளங்கவே சவுக்கார மணியேகொண்டு
மைந்தனே செயநீர் திராவகத்தைவிட்டு
மளங்கவே அண்டரச மதனில்விட்டு
மகத்தான கவசஞ்செய்து சீலைசெய்யே. 46

விந்துசீலை ஏழு

செய்யப்பா விந்ததினா லேழுசில்லு
செய்துரவி முச்சாமம் செயலாய்வைத்து
கையப்பா காய்ந்தபிற கெடுத்துக்கொண்டு
கருவான துருத்திகொண்டு கரிக்குள்வைத்து
சைய்யப்பா அண்டத்தால் கிண்ணங்கட்டி
தருவாக மெழுகுகட்டி வார்ப்பிடமாய்வைத்து
அய்யப்பா அக்கினியைக் கொண்டுநீயும்
ஆரப்பா யிரண்டுநாழிகை தான்பாரே. 47

வார்பிடம் காந்தக்கிண்ணம் கோடாகோடிமாத்து
காந்தக்கிண்ணம் வாசம்பட்டால் சகலமும்வரும்

பாரடா யிரண்டுநாழிகை தான்சென்றால்
பாலகனே வதையெடுத்து ஆறவைத்து
வாரடா வார்ப்பிடந்தான் யிரண்டாய்கிண்ண
மதுதனிலே ரசம்வார்த்து புதைத்திடாய்நீ
வேரடா சாமஞ்சென்று எடுத்தாயானால்
விதமான அண்டவார்ப்பிடத்தைதட்டி

மாரடா சுத்தசலங் கொண்டேயப்பா
மகத்தான கிண்ணத்தை யூறப்போடே. 48
போடப்பா யிரண்டுநாழிகை சென்றாக்கால்
புகழாக எடுத்துப்பார் காந்தக்கிண்ணம்
கோடடா மாத்தான கோடாகோடி
கூறினோம் ரசக்கிண்ணம் யார்தான்செய்வார்
நாடடா வேதையெல்லா மிதனாலாச்சு
நலமான தொழில்களெல்லா மினிமேற்கேளு
ஆடடா ரசக்கிண்ணி மதித்துக்கொண்டு
அளவில்லா மாத்தெல்லா மாய்ந்துபாரே. 49
மாத்தான அண்டரசக் கிண்ணந்தன்னை
வளமாக எடுத்துமே பார்த்தாயனால்
காத்தான வேகமடா மலைகள்குண்ணும்
காடுசெடி மரங்களுட யிரும்புசெம்பு
ஆத்தான வெண்கலமோ வெள்ளிதங்கம்
அருளான பித்தளையின் ரகமெல்லாம்
வேத்தான ரசஅண்டக் கிண்ணவாச
மேலான வாசந்தான் பட்டாற்கேளே. 50

இரசக்கட்டுக்குளிகை

கேளப்பா காந்தத்தின் அண்டரசக்கிண்ணம்
கிருபையென்ற சஞ்சீவி தான்பட்டுதானால்
சாரப்பா சரந்தொடுத்தாற் போலேயல்லோ
சார்வாக யிருக்கும்பார் கிண்ணந்தானும்
ஆளப்பா சராசரங்கள் புவனமெல்லாம்
அண்டரசக் கிண்ணமது யிழுக்கும்பாரு
நாளப்பா யிந்தவித முறையேசெய்து
நலமான நாடதிலே உலாவிநில்லே. 51

இரசமணி பதினாறு

நிற்கவென்றால் காந்தத்தின் கிண்ணம்சொன்னோம்
நோந்துரச மணியதனை நிகழ்த்தக்கேளு
ஆற்கவென்றா லண்டரச மெடுத்துக்கொண்டு
அழகான கிண்ணத்தில் ரசத்தைப்பார்த்து
ஏற்கவென்று செந்தூர மெடுத்துக்கொண்டு
யெள்ளுமுனை யதுபோலே பனிநீர்விட்டு

மாற்கமுடன் குழைத்ததனை ரசத்திலிட்டு
　　மகத்தான கிண்ணமதை ரவியில்வையே. 52

வையப்பா யொருநாழி சென்றெடுத்துப்பாரு
　　மகத்தான வண்டரச மிறுதிக்கட்டும்
அய்யப்பா கேசரியி ரைம்பேகொண்டு
　　அப்பனே ரசமணிதான் பதினாறாக்கி
தையப்பா நரம்புதனில் கோர்த்துநீயும்
　　நலம்பெறவே ரசமணிக்கு பூசைசெய்து
கையப்பா சடக்கதனில் கட்டிநீயும்
　　கனயோகஞ் செய்தையென்றால் சிவயோகமாமே. 53

வாயில் சூதமணிபோட்டு ஸ்தம்பிக்க சகலதொழிலெல்லாம் லபிக்கும் குளிகைகொண்டு ஏறவும்.

ஆமப்பா அட்டயோகஞ் செய்யும்போது
　　அரகரா மணியெடுத்து உருவேசெய்தால்
மாமப்பா அண்டரண்ட புவனமெல்லாம்
　　ஆடுமடா ரசமணியின் பெருமைகேளு
ஓமப்பா ஒருமணிதான் வாயில்போட்டு
　　யோகசிவம் செய்யும்போது கும்பித்தாக்கால்
நாமப்பா வாசியது யிறுகிக்கட்டும்
　　நலமான மூலமதி லொடுங்கும்பாரே. 54

பாரப்பா விந்ததுவை மடக்கிக்கட்டும்
　　பாவையர்மே லாசையது கொடாதேபாரு
ஆமப்பா விந்ததுவை நாமேகட்டி
　　அட்டயோகம் செய்தோம்பார் சித்தியாச்சு
தேமப்பா மணிகுளிகை பதினாறுதன்னில்
　　தினந்தோறும் வாய்தனிலே போட்டுக்கொண்டு
வேமப்பா வாசியதை யிழுத்துவாங்கி
　　விளங்கவே யிடதுபக்கம் விட்டுப்பாரே. 55

விட்டுமே பார்த்தையானால் புலத்தியாகேள்
　　விவேகமதா யெழும்புமப்பா குளிகை
அட்டுமே பார்த்தியென்றா லண்டரண்டம்
　　அரைநொடிக்குள் புவனமெல்லாங் கொண்டேபோகும்
வட்டுநீ பார்த்தியென்றால் உலகமெல்லாம்
　　[illegible] குளிகையிது நிமிஷத்துக்குள்

நட்டுநீ குளிகைகொண்டு வாசிமேலே
நன்றாகயேறிவந்து நாட்டம்பாரே. 56

கண்ணாட்டம் சூதக்கட்டு தங்கச்சுண்ணம் சூதவங்கத்திற்கு

நாட்டமென்ற ரசகுளிகை சொன்னோம்பாரு
நளினமென்ற அண்டரசக் கட்டுகேளு
ஆட்டமென்ற வண்டரச மெடுத்துக்கொண்டு
அழகான கிண்ணத்தில் ரசத்தைவிட்டு
தாட்டமுள்ள தங்கசுண்ணம் கடுகின்வீதம்
தருவான முச்செயநீர் கூடச்சேர்த்து
வாட்டமதாய் குழைத்ததனை ரசத்தில்போட
மளமளென்று பொங்கியது சீறுந்தானே. 57

தானென்ற பதம்பார்த்து சற்குருபத்துந்தான்
தயவாக வன்னரசத்தில் குழைத்துப்போட்டு
மானென்ற ரவிதனிலே வொருநாழிவைத்தால்
வழியுமடா வங்கமது மடவாய்க்கேளு
சானென்ற அண்டத்தில் முன்னதுபோலப்பா
சவுக்கமதாய் சானகைபோல் செய்துகொண்டு
ஆனென்ற யிதின்ரசத்தை யதனிற்சாய்த்தால்
அப்பனே வங்கமது தகடாய்ப்போமே. 58

வங்கரசக்கட்டு கட்டு செயநீர்

போமென்ற வங்கத்தை எடுத்துக்கொண்டு
புகழாகப் பூசைசெய்து அரைப்பலந்தான்கொண்டு
தாமென்ற திராவகத்தின் செயநீரிற்சாமம்
நலமுடனே யூறினபின் எடுத்துக்கொண்டு
ஏமென்ற ரசக்கின்ண மதனில்வைத்து
என்மகனே அண்டரசம் பலந்தான்விட்டு
ஆமென்ற வொருசாமம் ஊறவைத்து
அப்பனே எடுத்ததனைச் சொல்லக்கேளே. 59

கேளப்பா கிண்ணத்தில் சுத்தசலம்விட்டு
கிருபையதா யொருசாம ஊறவைத்து
ஆளப்பா அதையெடுத்துக் கிண்ணத்திட்டு
அப்பனே தங்கசுண்ணம் விராகன்போட்டு
வாளப்பா ரசக்கிண்ணங் கவசம்செய்து
வளமாக விந்ததினா லேழுசில்லு

நாளப்பா சில்லிட்டு ரவியிற்போட்டு
நளினமதாய் நிமிஷஞ்சென் றெடுத்துப்பாரே. 60
பாரப்பா உருகியது வாசம்போல
பாலகனே கவசமதை எடுத்துதட்டி
காரப்பா காந்தகிண்ண மகிமைதன்னை
காசினியில் மானிடற்கு காட்டொண்ணாது
நாரப்பா வங்கமதை என்னாற்கூற
நாவுமுண்டோ வங்கரச கட்டேகேளு
ஆரப்பா உருகினதோர் வங்கந்தன்னில்
அறைக் கடுகளவு தங்கசுண்ணம் போட்டுப்பாரே. 61

கட்டுசெயநீர்

போட்டுநீ பார்த்தையென்றால் புலஸ்தியாகேள்
புனிதமென்ற வங்கரசங் கட்டதாகும்
நாட்டுமிந்த வங்கத்தின் கட்டைகொண்டு
நளினமதாய் பூசைசெய்து வங்கங்கூட்டில்
ஆட்டுநீ கட்டெடுத்து சொல்லக்கேளு
அரகரா நாவுமுண்டோ என்னாற்கூற
மூட்டுநீ முடியாது வங்கக்கூட்டை
முப்புரத்தை எரித்தசிவ னமுர்தக்கூட்டே. 62
அமுர்தமென்ற வங்கத்தின் கட்டேசொன்னோம்
அருளுகிறோம் கட்டுசெய நீரைக்கேளு
குமுர்தமென்ற வங்கத்தின் கட்டைகொண்டு
செயலான முச்செயநீர் பலங்கொண்டப்பா
சமுர்தமென்ற காந்தக்கிண்ண மதனில்வைத்து
கருவான வங்கத்தின் கட்டேபோட்டு
வமுர்தமென்ற வொருசாம மூறினாக்கால்
மகத்தான கட்டெடுத்து ஆடக்கேளே. 63
ஆடக்கேள் காந்தகிண்ண மதனில்மைந்தா
அப்பனே பத்துவிதங் குருவேபோட்டு
தேடக்கேள் கட்டெடுத்து குருவில்வைத்து
தெளிவான தங்கசுன்னம் செந்தூரமிட்டு
மாடக்கேள் மூன்றுப்பு மதன்மேல்வைத்து
மகத்தான சவுக்கார உப்பேபோட்டு
நாடக்கேள் கிண்ணமது கலசஞ்செய்து
நளினமென்ற விந்ததினால் சில்லுசெய்யே. 64

செய்யப்பா வெண்கருவா லேழுசில்லு
செய்துவதை முடிப்பித்து ரவியில்தானும்
மெய்யப்பா வோர்நாழி சென்றெடுத்துப்பார்த்து
மேலான கவசமதை கயட்டெரிந்து
அய்யப்பா சீலையெல்லாம் தட்டிப்போட்டு
அழகான கிண்ணமதை திறந்தாயானால்
கய்யப்பா வங்கரசத்தின் கட்டுதானும்
கல்லான கட்டுவந்து நீறாய்ப்போச்சே. 65

நீறான மதுசெலம்போல் பொங்கிநிற்கும்
நிகரில்லா வண்டத்தின் பீங்கான்கொண்டு
ஆறான மதுசலத்தைப் பீங்கான்தன்னில்
அப்பனே விட்டுஅதை ரவியில்வைத்தால்
சாறான வங்கசெய நீறுதானும்
சமர்த்தான கட்டுசெய நீரிறங்கும்
வாறான சீசாவில் செயநீர்விட்டு
மைந்தனே பிரட்டியதை மாட்டுமாட்டே. 66

மாட்டிநின்ற அடியில்பத்துங் குருவேகேளு
மகத்தான வங்கசெய மெழுகுதானப்பா
ஆட்டிநின்ற அடிமெழுகை வழித்துக்கொண்டு
அழகான வங்கக்கட்டி பலந்தான்கொண்டு
நாட்டிநின்ற காந்தத்தின் கிண்ணத்துள்ளே
நலமான வங்கசெயநீர் தான்விட்டு
வாட்டிநின்ற யார்பலந்தான் வங்கக்கட்டு
மகத்தான செயநீரி லூறப்போடே. 67

மெழுகுவங்கக்கட்டு சுண்ணம்

போடப்பா பூபதியே புலத்தியனேகேளு
புகழான கட்டுசுண்ணஞ் சொல்லக்கேளு
நாடப்பா வோர்சாம மூறினன்றாய்
நலமாக பாகமதா யெடுத்துக்கொண்டு
சேடப்பா செயநீரின் மெழுகினாலே
செயமான கவசஞ்செய் ரவியில்வைத்து
ஆடப்பா ஓர்நாழி சென்றுதானால்
அதையெடுத்துக் கிண்ணத்தி லடவாய்வையே 6௦

வைத்ததனைப் பத்துவிதக் குருவைப்போட்டு
மகத்தான சுண்ணமெல்லாஞ் செந்தூரம்போட்டு
அத்ததனை சுத்தசலம் பனிநீர்விட்டு
அடவாக கலந்ததனைக் கிண்ணந்தன்னை
சுத்ததனை கவசமது சில்லுசெய்து
கருணைதர வேண்டுமென்று ரவியில்வைத்து
செத்ததனை யதையெடுத்து கவசந்தட்டி
செயம்பெறவே பூசித்து எடுத்துப்பாரே. 69

எடுத்துப்பா ரென்னசொல்வோம் வங்கசுண்ணம்
ஈரேழு புவனமெல்லா மிதற்கீடில்லை
அடுத்துப்பார் வங்கசுண்ணம் யார்தான்செய்வார்
அரகரா சிவயோகி சித்தர்செய்வார்
மடுத்துப்பார் கடுகளவு சுண்ணம்கொண்டு
மகத்தான காந்தக்கிண்ண மதனிற்கேளு
வடுத்துப்பார் வங்கத்தின் தகடுபலமைந்து
வரிசைபெற வதையெடுத்து சுண்ணத்தூட்டே. 70

ஊட்டியே வங்கசெயநீர் தான்விட்டு
ஓர்சாம மூறவைத்து எடுத்துக்கொண்டு
நாட்டியே சுத்தசலம் பனிநீர்விட்டு
நலம்பெறவே சாமமது ஊறவைத்து
வாட்டியே கிண்ணத்தில் திராவகத்தைவிட்டு
வளம்பெறவே ஊறவைப்பாய் அரைசாமமட்டும்
ஆட்டியே எடுத்ததனை கிண்ணத்திட்டு
அப்பனே வங்கசுண்ணங் கடுகளவுயீயே. 71

ஈயப்பா கடுகளவு குருபத்துந்தான்
யியலாக புலஸ்தியனே திராவகந்தான்வாரு
அய்யப்பா பணவிடைதா னிட்டுமைந்தா
அப்பனே தக்குருவாகச் சேர்த்து
மையப்பா வெண்கருவால் கவசஞ்செய்து
மகத்தான விந்ததனால் சில்லுசெய்து
வையப்பா ரவிதனிலே அரைசாமம்வைத்தால்
மைந்தனே உருகியது மணியாய்ப்போமே. 72

வங்க சூதக்குளிகை

மணியான கிண்ணமதை எடுத்துக்கொண்டு
வளமான கவசமதை கயட்டெரிந்து
அணியான சில்லெல்லா மவிழ்த்துப்போடு
அப்பனே மணியதனை எடுத்துப்பார்த்தால்
வணியான வங்கரச குளிகைபாரு
மகத்தான தங்கபூபதி தான்மைந்தா
கணியான கனகமடா கோடாகோடி
கணக்கில்லாத் தொந்தமென்றுங் கண்டோம்நாமே. 73

கண்டோமே சாரணைதா அனந்தங்கோடி
காலமட்டு மிப்பொருளை வைத்துக்கொண்டு
ஒண்டோமே யோகதரிசனந்தான் பார்த்து
ஒருபுத்தி மனமறிவால் வாழ்வீர்மைந்தா
அண்டோமே யெனையாண்ட கந்தன்சொன்ன
அண்டமெல்லா மாத்திதுக்கு அளவிடாது
கொண்டோமே குருபரன் றானருளைக்கண்டோம்
குருவான வங்கத்தின் குருசொன்னோமே. 74

குருவான அண்டசாரணையைக் கண்டோம்
கொடிய ரவிமதியிரவி மாத்துங்கண்டோம்
அருவான யிம்மணியி லனேகவேதை
அளவிடப் போகாது அனேகயேமம்
பருவான பருவமடா பாலிபந்தான்
பசுமையுள்ள சீவரத்தின மதற்கீடுண்டோ
துருவான உருவத்தின் மணியேகொண்டு
சொல்லவொண்ணா தொந்தமெல்லா மாகுவாயே. 75

வெள்ளீயரசம் சாரத்தின் வெள்ளிக்கட்டு

ஆடுதற்கு வங்கத்தின் தங்கஞ்சொன்னோ
மறையுறோ மதில்கோடி கோடாகோடி
வேடுதற்கு வெள்ளிவங்க ரசத்தைக்கொண்டு
விபரமதாய் காந்தகிண்ணி மதனில்வார்த்து
நாடுதற்கு வங்கத்தில் மணியேகொண்டு
நாதமென்ற பனிநீரில் கடுகளவுவிதம்
வாடுதற்கு வுரைத்தனை வழித்துக்கொண்டு
வளமான கிண்ணத்தில் ரசத்தில்போடே. 76

போட்டிதனை வெண்கருவால் கவசஞ்செய்து
போட்டதனை விந்ததனால் சில்லுசெய்து
நாட்டதனி ரவிதனிலே சாமம்வைத்து
நலம்பெறவே யெடுத்ததனைக் கவசத்தாட்டி
வாட்டதனை சில்லெல்லா மவுத்துப்போட்டு
வளம்பெறவே பார்த்தாயென்றால் சோதிகாணும்
ஆட்டதனை யென்னசொல்வேன் வெள்ளிக்கட்டு
யாராலே ஆகுமப்பா அமுர்தக்கட்டே. 77

அமுர்தமென்ற வங்கரச மதனில்மைந்தா
ஆச்சுதப்பா வெள்ளியது யிடையென்னாலே
குமுர்தமென்ற நாவதனால் சொல்லப்போமோ
கோடான கோடியிலே வேதையாகும்
நமுர்தமென்ற வெள்ளியதை பூசைசெய்து
நலமான மணியெடுத்து சொல்லக்கேளு
வமுர்தமென்ற வாலையடா யிதற்கீடுண்டோ
வசனிக்கப் போகாது யிம்முறையைக்கேளே. 78

கேளடா புலஸ்தியனே வெள்ளிக்கட்டு
கிருபையுடன் சொன்னமப்பா யினிமேல்கேளு
ஆளடா வெள்ளியதன் கட்டேகொண்டு
அப்பனே அதினளவில் செந்தூரக்கட்டு
வேளடா வெள்ளி செந்தூரக்கட்டை
விபரமுடன் வசனிப்போம் விதமாய்க்காணும்
நாளடா காந்தத்தின் கிண்ணந்தன்னில்
நலம்பெறவே வெள்ளியதின் கட்டேவைத்தே. 79

வெள்ளீய செந்தூரம்

சித்தியடா திராவகத்தை கிண்ணத்தில்வார்த்து
தெளிவான கட்டதனை யதனில்போட்டு
அய்த்திடா முப்புசெய நீரிலப்பா
அப்பனே ரவிதனிலே காய்ந்துதானால்
வைத்திடாய் வங்கநீரில் சாமம்
நலம்பெறவே காய்ந்துதென்றால் எடுத்துக்கொண்டு
மைத்ததனை குருபத்தும் பனினீர்விட்டு
மளினமதாய் குழைத்துமே கவசஞ்செய்யே. 80

செய்யப்பா காந்தகிண்ண மதனில்வைத்து
செயலான திராவகத்தி லரைப்பலந்தான்விட்டு
அய்யப்பா கிண்ணத்திற்கு கவசஞ்செய்து
அப்பனே விந்ததுவால் சில்லுயேழு
மெய்யப்பா செய்துமுடிப்பித்து கொண்டு
மேலான ரவிதனிலே சாமம்வைத்து
வையப்பா ரவிகாய்ந்து எடுத்துக்கொண்டு
வளமான கிண்ணத்தின் கலசந்தட்டே. 81

தட்டியதின் சீலையைத்தான் கயட்டெரிந்து
தயவாக நீபாரு தனதாநீயும்
அட்டியே பார்த்தியென்றால் என்னசொல்வேன்
அரகரா செந்தூரங்கட்டி நேர்மை
வெட்டியிது போட்டிடுங்காண் வேதையெல்லாம்
வீரவச்சிர வேல்வாளி யிதுபோலுண்டோ
நட்டிவிதை சொல்லாதே செந்தூரக்கட்டு
நாமென்ன வப்பாயிது மகிமைபாரே. 82

முன்ரசக்கண்ணாடி குருவித்தை

பாரடா புலஸ்தியனே முன்ரசக்கண்ணாடி
பரிவான கண்ணாடி தானும்வாங்கி
வேரடா வெள்ளி செந்தூரக்கட்டில்
விபரமுடன் கடுகளவில் நாலிலொன்று
தேரடா திராவகத்தை பணவிடைதான்விட்டு
தெளிவான வோருரைப்பு உரைத்துக்கொண்டே
பாரடா ரசக்கண்ணாடி பின்னேபூசி
பரிவாக உலகமெல்லாம் பார்த்தால்கேளே. 83

கேளடா புலஸ்தியனே நயவசிநமவென்று
கிறீயும் இறீயும் அவலுசவலு அரிமாவென்னும்
வேளடா யித்தியானத்தால் முடிகிப்பார்த்தால்
மேலோகம் கீழ்லோக மெல்லாமொன்றாம்
வாளடா கொடிமுடியை வாலென்றாக்கால்
வருளுமப்பா வரைநொடியில் மகிமைமெத்த
ஆளடா நிமைப்பொழுதி லண்டங்களாகும்
அண்டத்தில் சீவசெந்து உயிர்களாமே. 84

ஆமப்பா நினைத்தபடி முடியும்பாரு
அரனிங்கே வருகவென்றால் வருவார்பாரு
தேமப்பா வறுசுவைதா றுணவோ வென்று
செயமான கண்ணாடி தன்னைப்பார்த்தால்
வாமப்பால் வருகுமப்பா அமுர்தந்தானே
வந்தமுர்தம் பொசித்திட்டு வாபோவென்ன
நாமப்பா ரசகண்ணாடி அனேகவித்தை
நன்றாக வாழுவையா வசுவகாண்டம்பாரே. 85

அசுவகாண்டம் பார்க்கவும்

காண்டமா மெட்டாவ காண்டமின்னூல்
கருவாக வசனித்தோம் பொருள்களெல்லாம்
மாண்டமா மின்னூலு மாயிரத்தில்
வளவிடாப் பொருள்களெல்லாம் மடவாய்விள்ளும்
ஏண்டமா மிம்முறைக ளெல்லாங் குருதான்மைந்தா
எடுத்தனப்பா சகலநூல் விளையாடுதற்கு
பாண்டமாம் வைப்பில் ரசமொன்றி
மைந்தா பாடினோம்மனேகமுறை பாடினோமே. 86

பா்ரேநீ எட்டாவகாண்ட முற்றும்
பாடினோம் பாடலெண்ணூற் றெழுபதுக்குள்
வாரேநீ எட்டாவ காண்டக்கோர்வை
வசனித்தோம் பாடலெண்பத் தெட்டுக்குள்ளே
ஆரேநீ யின்னூலி லனேகவேதை
அருளினோம் குருபரன்றன் னருளினாலே
வேரேநீ யின்னூல்தான் சகலத்திற்கும்
வேதமெய்ஞ் ஞானத்தின் வித்தாமுற்றே. 87

எட்டாங்காண்டம் முற்றுப்பெற்றது.

ஒன்பதாவது காண்டம்

அமுர்தசஞ்சீவி கோர்வைக்கு மேற்பட்ட ஒன்பதாங் காண்டம்

விந்தினடி யருளடியே னடியேபோற்றி
மெய்யடியில் அருள்தருகும் பதியேபோற்றி
முந்தினுமை தொழுதடியேன் விளக்கமான
மூலமே மேவுலகு முடியேபோற்றி
தந்திகணபதி முகவன் வறுமுகனென் வாக்கியம்சார்ந்து
நாமுனக்களித்தோ மளித்தோன் போற்றி
அந்திமுனை மாலயனே வையனேபோற்றி
அருள்பெருகும் குருவருளி னதீதங்காப்பே. 1

அதீதமுள்ள முப்பாலுக் கப்பாலேகேள்
அளவில்லாச் சதகோடி வாசியோகம்
வதீதமென்ற யோகத்தில் தெளிந்தோநாமு
மதியீ;வி ரவிமதியு மறிந்தோநாமும்
நதீதமென்று மதித்ததுக் கப்பாலெல்லாம்
பொய் நாதாந்தச் சதானந்தங்கண்டோம்
மதீதமென்ன ‹வரையாறுக் கப்பாலேபோய்ப்
மதியமுர்த மூண்டுவினை ஆடினோமே. 2

ஆடினோம் கேசரியின் குருவினாலே
அளவில்லாக் கருக்களெல்லாங் கண்டோம்பாரு
நாடினோ மிதனுடைய சாதிநாலில்
நவகோடி கோடாகோடி முறைகள்சொன்னோம்
தேடினோ மானாதி அண்டத்தாலே
தெளிவான கெவுனமதில் குளிகைகொண்டு
சாடினோ மண்டசரா்சரங் களெல்லாம்
சலஅமுர்த மாதியந்தம் சாடினோமே. 3

ஓமென்ற பூரணமாம் துரியாதீதம்
ஓகோகோ துரியவதின் களவைக்கண்டோம்
நாமென்ற களவுதனி லளவைக்கண்டோம்
நலமான பஞ்சரிவின் குருவைக்கண்டோம்
ஆமென்ற அக்குருவா லனேகங்கண்டோ
மண்டரண்ட புவனமெல்லாஞ் செயமேபெற்றோம்
தேமென்ற திசைஎட்டுங் கீர்த்திபெற்றோம்
தெளிவான காவியத்தில் தேறினோமே. 4

தேறினோம் அகாரத்தா லுகாரங்கொண்டு
தெளிந்தோமே ஓங்கார முள்மூலந்தான்
வாறினோ மைந்தாறு கருவேகொண்டு
வசனித்தோம் அகாரவிந்தா லனேகஞ்சொன்னோம்
ஆறினோம் அடிமூல முள்மூலங்கேள்
அப்பனே உகாரவிந்தால் அனேகஞ்சொன்னோம்
கோறினோம் குளிகைகொண்டு கெவுனம்யாவும்
கூறினோம் காகமப்பா அண்டந்தானே. 5

தானான அண்டமதில் பிண்டங்கண்டோம்
தருவான பிண்டமதி லனேகஞ்சொன்னோம்
மானான மங்கையடா கெங்கைகெங்கை
மகத்தான அமுர்தமடா பனிநீறாகும்
தேனான பனிநீறு தெளிவிறுத்தால்
செயலான சுத்தசல மமுர்தநீரு
ஆனான அன்னீரி லனேகமுப்பு
அளவில்லா அவ்வுப்பில் கோடாகோடி. 6

கோடியென்ற அளவில்லாப் பாகமின்னூல்
குருவான வொன்பதாங் காண்டமப்பா
நாடியென்ற ஒன்பதிலே யனேகங்காணும்
நவமூல மென்றநெகழ் பந்தங்காணும்
ஆடியென்ற நெகழ்பந்தக் குருவேகாணும்
ஆயிரத்தின் மூலமெல்லா அடவாய்க்காணும்
தேடிநீ வாடாதே பொருளேகாணும்
சிவாலயங்க ளாதியந்தஞ் சிணத்திற்காணே. 7

வேறு

ஆதியாம் பூரணத்தி னருள்தரும் பரமெய்ஞ்ஞானம்
சோதியாங் காவியத்தில் துதிபெறு மொன்பதுக்குள்
வேதியாம் வரையினாறில் விளங்கினோம் பனிரண்டாகும்
தீதிலா வாயிரத்தில் திரட்டினோம் கருக்கள்தாமே. 8

நாதியா மறைகட்கெல்லா நலம்பெற விதிநூலிந்நூல்
பாதியா மதியினாலே பானுவை யிட்டுக்கொண்டு
நீதியாய் யோகம்பார்ப்போர் நிகழ்த்தினோம் விளக்கமாக
மாதுசேர் முலையாளீசன் வசனிக்கும் ஆதியாமே. 9

ஆமேதான் சிவனுமையாள் சொன்னவாக்கி
மறிந்துணர்ந்து நந்திதன்வந்திரிக்குச் சொன்னார்
மாமோதான்அசுவனிக்கு உபதேசித்தார்
அசுவனிதான் அகஸ்தியர்க்கு உபதேசித்தார்பார்
நாமேதான் வொன்பதுக்குள் மூலங்கண்டோம்
நவமூல மொன்பதையும் நன்றாய்விண்டோம்
ஓமேதான் ஒன்பதுக்குள் காண்டமின்னூல்
ஒன்பதிந்த நவமூல மொடுக்கங்காணே. 10

ஒடுக்கமென்ற ஒன்பதாங் காண்டமின்னூல்
ஓகோகோ சகலதுறை தொந்தங்கோடி
மடுக்கமென்ற ரசங்கோடி கட்டுகோடி
மகாவேதை தொந்தமென்று வகுத்தோம்பாரு
அடுக்கமென்ற திராவகங்கள் செயநீர்கோடி
அளவில்லா வைப்புமுறை அனேகங்கோடி
துடுக்கமென்ற சுண்ணங்கள் சுண்ணசெயநீர்
தொந்தமென்றும் கோடானகோடி சொன்னோம்பாரே.

சொன்னோமே உப்புக்கட்டு உப்புசெயநீர்
சொல்தவறா யதில்வேதை கோடாகோடி
வன்னோமே செந்தூரம் செந்தூரக்கட்டு
மகத்தான ரசக்குளிகை கெவுனயோகம்
அன்னோமே வதிற்கோடி கோடானகோடி
அளவில்லா வேதையென்று மளித்தோம்பாரு
நின்னோமே யோகமதில் ஒருமனதால் நின்றோம்
நெகிழ்பந்தங் கோடாகோடி குருசொல்வோமே. 12

சொல்வோமே வைந்துருவி னண்டபிண்டம்
சொற்பெரிய பிண்டத்தின் மூன்றாமுப்பு
அல்வோமே அவ்வுப்பு வெடியுப்பாகும்
அவ்வுப்பில் முப்பலந்தா னெடுத்துக்கொண்டு
நல்வோமே அண்டத்தின் பீங்கான்தன்னில்
நலமான உப்பெடுத்து அதனில்வைத்து
மல்வோமே சுத்தசலம் பனிநீர்விட்டு
மகத்தான உப்புதனை கரைத்துக்கொள்ளே. 13

கொள்ளப்பா மறுபீங்கான் தன்னில்பீழு
குருவுப்பை தெளியவைத்து தெளிவைவாங்கி
வள்ளப்பா ரவிதனிலே மூன்றுசாம
மகத்தான நீரெடுத்து வைத்துநீயும்
ஒள்ளப்பா யோர்சாமம் சென்றுதானால்
ஓகோகோ பொங்கியது யிறுகிப்போகும்
அள்ளப்பா மறுசாமம் சென்றுதானால்
அவ்விறுகில் மேலேயப்பா வடியுப்பாமே. 14

ஆமேதான் மறுசாமஞ் சென்றிருந்தாயானால்
அளவில்லாப் பாறையுப்பை வதின்மேலாகும்
நாமேதா னெடுத்தனப்பா பனியில்வைத்தால்
நளினமென்ற மூன்றாங்காச்ச லதுக்கும்பேரு
போமேதா னுப்பெடுத்து சொல்லக்கேளு
புதுமையுள்ள முச்செயநீர் திராவகத்தைவிட்டு
வாமேதான் திராவகத்தின் செயநீர்விட்டு
மகத்தான மூன்றுப்பி னடிமெழுகைப்போடே. 15

போடப்பா சுத்தசலம் பனினீர்விட்டு
புனிதமென்ற வுப்புதனைப் பிசைந்துநீயும்
நாடப்பா வங்கரச மதனில்வார்த்து
நலமான பீங்கானைக் கவசம்செய்து
வாடப்பா விந்ததினால் சீலைசெய்து
மகத்தான மெழுகதினா லேழுசில்லு
ஆடப்பா செய்து முடிப்பித்துக்கொண்டு
அப்பனே யில்லத்தின் குகையில்வையே. 16

வைத்ததனை சிவயோகம் பூசைசெய்து
அளவில்லா தவயோகம் செய்தாயானால்
அத்ததனை யோர்சாம மதற்குள்மைந்தா
அப்பனே பூர்க்குமப்பா கற்பூரவைப்பாம்
பொத்திசெய்து எடுத்துப்பா ரென்னசொல்வேன்
புகழான பூரமடா அதிகபூரம்
வத்தியுடன் பூரமதை யெடுத்துக்கொண்டு
வரிசைபெற ...தனில்வைப்பா வழங்கக்கேளே. 17

கேளடா புலஸ்தியனே கற்பூரக்கட்டு
கிருபையுடன் சொல்லுகிறோம் கேட்டிடாய்நீ
காளடா கற்பூர மைந்துபலம்வாங்கி
கருணைதர வேண்டுமென்று பூசைசெய்து
நாளடா காந்தகிண்ண மதனில்மைந்தா
நலம்பெறவே பூரமதை யதற்குள்வைத்து
ஆளடா பிண்டரச ஐந்துபலங்கொண்டு
மடவான காந்தக்கிண்ண மதனில்வாரே. 18

வாரப்பா சுத்தசலம் பனினீர்விட்டு
மகத்தான தங்கசுண்ணம் கடுகுபோடு
வேரப்பா விந்ததனால் கவசம்செய்து
வெண்கருவால் சீலைசெய்து ரவியில்சாமம்
ஆரப்பா சாமஞ்சென் றெடுத்துக்கொண்டு
அரகரா சில்லெல்லாம் தட்டிப்போட்டு
காரப்பா கவசமதை கயட்டெரிந்து
கருணைதர வேண்டுமென்று கிண்ணம்பாரே. 19

பாரப்பா கிண்ணமதை பார்த்தாயானால்
பாலகனே யென்னசொல்வேன் கற்பூரக்கட்டு
மாரப்பா மதிகோடி கோடாகோடி
மகத்தான ரவிகோடி யிரவிகோடி
ஆரப்பா யிக்கட்டு அமுர்தக்கட்டு
அளவில்லா வேதையெல்லா மாகுங்கட்டு
வேரப்பா வேதைக்கு வெண்கட்டாகும்
வேதாந்த மாயிரத்தில் விளங்குங்கட்டே. 20

கட்டான கட்டெடுத்து சொல்லக்கேளு
கணக்கில்லா வைப்புமுறை யுரைக்கக்கேளு
அட்டான யிக்கட்டில் பலந்தான்கொண்டு
அப்பனே காந்தக்கிண்ண மதனில்வைத்து
மட்டான காரசார மதனில்வார்த்து
மகத்தான தங்கசுண்ணம் கடுகுபோட்டு
வட்டான கவசமது சில்லுசெய்து
மகத்தான ரவிதனிலே சாமம்வையே. 21

ஹவயப்பா ரவிதனிலே சாமம்வைத்து
மகத்தான கிண்ணமதை எடுத்துக்கொண்டு
கையப்பா கவடமதின் சில்லுதட்டி
கருவான கிண்ணத்தை பார்த்தாயானால்
மெய்யப்பா கற்பூரச் சுண்ணமைந்தா
வேரப்பா வேதைக்கு அதிககாரம்
அய்யப்பா மலைகள்முதல் செடிகள்பூடு
அப்பனே யிவ்வாசம்பட்டா லெரிந்துபோமே. 22

போமென்ற கற்பூர சுண்ணத்தேதான்
புகழாக பூசைசெய்து யிருபலந்தான்கொண்டு
காமென்ற காந்தகிண்ண மதனில்வைத்து
கருவான காரரச மதனில்விட்டு
சேமென்ற திராவகத்தின் செயநீர்விட்டு
செயலான கவசமதை சில்லுசெய்து
ஆமென்ற காந்தகிண்ண மெடுத்துக்கொண்டு
அப்பனே ரவிதனிலே நாழிவையே. 23

வைத்ததனை யிருநாழி சென்றெடுத்து
வளமான சில்லெல்லாங் கயட்டெரிந்து
பைத்தனைக் கிண்ணத்தைப் பார்த்தாயானால்
பகல்போலே சூரியனில் காந்தல்காணும்
செத்ததனை நீயெடுத்து தெரிசித்துப்பார்
தேவரெல்லா மிதற்கீடோ செயசெந்தூரம்
தத்ததனை சடாமுடியில் வைத்தோனீசன்
தனிந்தமுறை யிதுதானே யளவிடாதே. 24

அளவிடா செந்தூரம் யோகபூசை
அப்பனே செய்து முடிப்பித்துக்கொண்டு
களவிடா செந்தூரம் சீஷாதன்னில்
கைமுறைகள் தவறாமல் கருத்தாய்வைத்து
மளவிடா செந்தூரம் கடுகளவுதானும்
மகத்தான பனிநீரில் குழைத்துப்போட்டு
வளவிடாய் வங்கத்தின் தகடுபலமிரண்டு
மகத்தான யிக்கருவைக் கவசஞ்செய்யே. 25

செய்துமே காந்தகிண்ண மதனில்வைத்து
செயலான சில்லுசெய்து ரவியில்வைத்து
அய்துமே யிரண்டுநாழிகை தான்சென்றால்
அப்பனே கிண்ணமதை யெடுத்துக்கொண்டு
மைய்துமே சில்லெல்லாங் கயட்டெரிந்து
மைந்தனே பார்த்தையென்றா லுருகியாகும்
நைதுமே முருக்கம்பூ போலேபொங்கி
நவநிறம்போல் மணிகட்டு மறன்பூம்பாரே. 26

பாரப்பா அண்டத்தில் அச்சுசெய்து
பாலகனே யிதையெடுத்து அதனில்சாய்த்தால்
மாரப்பா வருவியது அருவிப்பாய்ந்து
மணியாகக் கட்டியது மணிபோல்காணும்
ஏரப்பா யிதன்மகிமை என்னசுடர்வேன்
எட்டுதிக்கும் விலையில்லாத் தங்கமாகும்
ஆரப்பா வங்கத்தின் தங்கந்தன்னை
ஆயிரத்தெண் கோடியதுக் கப்பால்போமே. 27

போமேதான் தாம்பிரத்தின் தங்கந்தன்னை
புனிதமுடன் பூசைசெய்து பணிந்துபோற்றி
ஏமேதா னுந்தமக்கு யிடைகூர்வந்தால்
யெள்ளளவு வதிலெடுத்து சொல்லக்கேளீர்
மாமேதான் கடைவீதி தன்னிபோய்
மதித்தாக்கா லித்தங்க மாற்றோகோடி
வேமேதான் விலையில்லாத் தங்கம்தங்கம்
வேதாந்த யோகிகட்கு வேணும்பாரே. 28

வேணும்பார் யோகமது சிவயோகந்தான்
விபரமுடன் சித்தித்தால் முத்திகேளு
காணும்பார் கனகமது சித்தியாகும்
கருவாளி நீயாவாய் கனகத்தாலே
ஓணும்பரயோகி யென்றுபேர் பெற்றோர்க்கு
ஒன்றான கனகமதை பதனம்பண்ணு
ஆணுமப்பா பிண்டஉப்பில் கண்டோம்தங்கம்
அளவில்லா வெகுகோடி முறைகண்டோமே 29

முறையான வொன்பதாங் காண்டமின்னூல்
மூலமுதல் மும்மூல முறையாய்ச்சொல்லும்
கறையான காவியமா மின்னூலாதி
காணலாந் துறைகாணா வேதையெல்லாம்
அறையான செந்தூர மார்தான் செய்வார்
அரகரா செய்வரென்றா லனேகவேதை
மறையான முறைகளுக்கு குருவாமிந்நூல்
வசனித்தோ மாயிரந்தான் வாதநூலே. 30

நூலான விந்நூலி லளவில்லாத
நுணுக்க மெல்லாஞ் சொல்வமப்பா நுண்மைபாரீர்
காலான வனேகங்கால வெட்டவேண்டாம்
கருவான நூலிதுதான் ஒன்றேகால்தான்
நாலான வேதாந்தம் யோகத்தோற்கு
நல்லவிதி யுண்மையெல்லா முறையாய்ச்சொன்னோம்
வேலான வேலப்பா வடிவேல்கந்தன்
விளங்கியதோர் வாக்கியந்தான் முழுதும்பாரே. 31

பார்ப்போர்க ளிந்நூலை யதிகனல்லோர்
பார்த்திதனை பூசித்தோர் பதியாய்வாழ்வார்
தீர்ப்போர்க ளிந்நூலை வைத்துக்கொண்டு
சிவயோக முறைதவறா செய்தானானால்
கார்ப்போனா மகத்தியனுட வமுர்தவாக்கியம்
கலியுகம்போய் மறுயுகந்தான் கடப்போராலும்
சேர்ப்போர்க ளிந்நூலின் கோர்வைமுற்றும்
சேர்த்தவர்கள் அதிககுண செல்வத்தோரே. 32

ஒன்றான கற்பூர செந்தூரஞ்சொன்னோம்
ஒருபுத்தி யறிவுடையோர் செய்துபாரீர்
நேறான காரரசம் முன்சொல்பாதம்
நேறாக வதையெடுத்து பூவால்கொண்டு
நாறான கிண்ணமப்பா பூவானகிண்ணம்
நாதாந்த சித்தர்களின் காந்தக்கிண்ணம்
வேறான கிண்ணமதில் ரசத்தைவிட்டு
விளங்கவே முன்வெடியுப்பைப் போடே. 33

போடுகிற காந்தகிண்ண மதனிற்கேளு
புனிதமென்ற பூரசுண்ணம் வற்ாகன்போடு
ஆடுகின்ற வைங்காய மெழுகுபோலாகும்
அப்பனே வங்கசெந்தூரம் போடு
நாடுகின்ற சுத்தசலம் பனிநீர்வாரு
நலமாக பிசைந்தததனை யுண்டைபண்ணு
தேடுகின்ற உண்டையதை பதமாய்வைத்து
தேவபரை வாலையைத்தான் தெரிசித்தேரே. 34

தெரிசித்துக் காரரச மதனில்பலம்விட்டு
தெளிவாக வண்டமெழு கவசம்செய்து
வரிசித்து விந்ததினா லேமுசில்லு
வளமான காந்தகிண்ணம் செய்துகொண்டு
அரிசித்துக் கிண்ணமதை யெடுத்துக்கொண்டு
அழகான ரவிதனிலே வைத்துமேதான்
நரிசித்து யிரண்டுநாழிகை வந்தப்பா
நலம்பெறவே யெடுத்ததனை சொல்லக்கேளே. 35

கேளடா புலஸ்தியனே காந்தகிண்ணம்
கிருபையென்ற கிண்ணமதில் கவசம்வாங்கி
நாளடா சீலையதைக் கயட்டெரிந்து
நலமாக காந்தகிண்ண மதிலேகேளு
ஆளடா யென்னசொல்வேன் ரசசெந்தூரம்
ஆயிரத்தென் கோடிமாத் தளவிடாது
கோளடாவாராது நிறமோகோடி
கோடான கோடிகளை யிதற்கீடுண்டோ. 36

சூதசெந்தூர செயநீர்

உண்டடா சூதசெந்தூர மைந்தா
ஓகோகோ பூசைசெய்து சீசாதன்னில்
வண்டடா செந்தூரம் பதனம்பண்ணு
மகத்தான செந்தூர மிருபலந்தான்கொண்டு
கண்டடா வெடியுப்பு யிருபலந்தான்கூட்டி
கருவான காந்தகிண்ண மதனில்வைத்து
அண்டடா பத்துவித குருவேபோட்டு
அழகான ரசபீங்கான் தன்னில்வையே. 37

வைத்துமே சுத்தசலம் பனினீர்விட்டு
வரிசைபெற பிசைந்துமே பீங்கான்தன்னில்
செத்ததனை ரவிதனிலே நிமிஷம்வைத்தால்
சிவாசிவா ரசசெந்தூரம் செயநீராகும்
எத்ததனை யிறங்குமப்பா செந்தூரசெயநீர்
எடுத்துவந்து வைத்துமே சீசாதன்னில்
பொத்துமே பூசைசெய்து பதனம்பண்ணு
புகழான செந்தூரம் செயநீராமே. 38

ஆமேதான் செந்தூர செயநீர்வாங்கி
அப்பனே யிரண்டுபலம் பாண்டந்தன்னில்
மூமேதான் முப்பூவு முப்பலந்தான்போடு
முச்செயநீர் யிச்செயநீர் திராவகத்தின்செயநீர்
நாமேதான் ரசசெந்தூரம் விராகன்போட்டு
நலமான சுத்தசலம் பனினீர்விட்டு
கோமேதான் கரைத்துமே தெளியவைத்து
கருணைதர வேண்டுமென்று யிறுத்துக்கொள்ளே. 39

முப்பின்மெழுகு

கொள்ளப்பா அடியில்நின்ற குழம்புகொண்டு
கூறாக வைந்துருவின் தயிலம்விட்டு
நள்ளப்பா ரசசெந்தூரம் விராகன்போட்டு
நலமான காந்தகிண்ண மதனில்வைத்து
அள்ளப்பா ரவிதனிலே நிமிஷம்வைத்தால்
அப்பனே முப்பூவின் மெழுகதாச்சு
கள்ளப்பா வழித்துமே பூசைசெய்து
கருணைதர வேண்டுமென்று பரணியில்வையே. 40

வைத்துமே முன்சொன்ன முப்புநீரை
வளமாகத் தானெடுத்து வெளியில்வைத்து
அத்துமே யோர்சாமஞ் சென்றுதானால்
அழகான நீரெல்லாம் தெளிவாய்ப்போமே
செத்துமே தானெடுத்து சீசாதன்னில்
செய்துமே யோகமுர்தம் பூசைசெய்து
நைத்துமே சீசாவிற் பதனம்பண்ணு
நலமுடனே யடியில்நின்ற தெளிவைவாங்கே. 41

படிகாரவுப்பு

வாங்கடா தெளிவெடுத்து ரவியில்வைத்தால்
மகத்தான கல்போலே கட்டும்பாரு
ஆங்கடா சாமஞ்சென் றெடுத்துப்பார்க்க
அப்பனே ரசபீங்கா னதனிற்கேளு
ஏங்கடா கட்டெடுத்துப் பீங்கானிட்டு
என்மகனே செந்தூர செயநீர்வார்த்து
மாங்கடா மதிதனிலே வைத்தாயானால்
மகத்தான படிகார உப்பைதாமே. 42

யோகபூசை

ஆமென்ற படிகாரம் பூர்க்கும்பாரு
அப்பனே கட்டெல்லா முப்புவாகும்
போமென்ற பீங்கான்மேல் வளர்போவாகும்
பேறான உப்பெடுத்துப் பூசைசெய்து
தேமென்ற சீசாவில் பதனம்பண்ணு
செயமான படிகார் முப்பலந்தான்
நாமென்ற ரசப்பாண்டந் தன்னில்வைத்து
நலமான சுத்தசலம் பனினீர்வாரே. 43

மதியமுர்தம்

வார்த்துமே உப்பெல்லாங் கரைத்துக்கொண்டு
மகத்தான மதிதனிலே தெளியவைத்து
யேர்த்ததனை பாண்டத்தி லிறுத்துக்கொண்டு
என்மகனே ரவிதனிலே சாமம்வைத்தால்
நார்த்ததனை மதியமுர்த மேலேநிற்கும்
நலமுடனே எடுத்தல்லோ யிறுத்துமேதான்
மார்த்துமே சிவயோகம் பூசைசெய்து
மகத்தான மதியமுர்தம் பதனம்பண்ணே. 44

பண்ணப்பா வடியில்நின்ற குழம்பேகொண்டு
பரிவான ரவிதனிலே சாமம்வைத்து
அண்ணப்பா அடியில்நின்ற குழம்பெல்லாந்தான்
அப்பனே கட்டுமடா பொட்டுலுப்பாகும்
கண்ணப்பா எடுத்துமே செந்தூரசெயநீர்
கருவான முச்செயநீர் கூடவார்த்து
பெண்ணப்பா பாண்டமதை யெடுத்துமேதான்
பேறான பனிதனிலே வைத்திடாயே. 45

இரவியமுர்தம் பொட்டுலுப்புவைப்பு

வைத்துநீ காலந்தனி லெடுத்துப்பார்த்தால்
வழியுமடா பாண்டத்தில் பொட்டுலுப்பாகும்
பொத்ததனை பொட்டுலுப்பை பார்த்தாயானால்
புட்பமலர் மல்லிகையின் யிதழ்போல்காணும்
ஐந்துமே புட்பமல ரெடுத்துக்கொண்டு
அரகரா சிவயோகம் பூசைசெய்து
நைத்துமே சீசாவில் பதனம்பண்ணு
நாதாந்த உப்பதனில் பலந்தான்வாங்கே. 46

பொட்டுலுப்பு செயநீர்

வாங்கப்பா பொட்டிலுப்பு முப்பலந்தான்வாங்கு
வரிசைபெற பீங்கானில் வளமாய்ப்போட்டு
ஆங்கப்பா யோகமுர்த ரவியமுர்தமிட்டு
அருளான படிகார மறைப்பலந்தான்போட்டு
தேங்கப்பா பத்துவித குருவேபோட்டு
தனதாக வதைப்பிசைந்து பீங்கான்தன்னில்
ஓங்ககப்பா வைத்ததனை முடித்துக்கொண்டு
நளினமென்ற ரவிதனிலே வைத்திடாயே. 47

வைத்திடா யிரண்டுநாழிகை மைத்தாக்கால்
வழிந்தருவி பொங்கியது பாயும்பாரு
அத்திடா யதையெடுத்து சீசாதன்னில்
அப்பனே யிறுத்ததனை பிரடைபோடு
நைத்திடாய் பொட்டிலுப்பு செயநீர்தன்னை
நாவுமுண்டோ சொல்வதற்கு நண்பாய்க்கேளு
ஏத்திடா யென்னசொல்வேன் செயநீர்வேகம்
எட்டுதிக்கும் சுட்டுவரும் மின்னீர்தானே. 48

தானென்ற யின்னூலை யோகபூசை
தருவாகப் பூசைசெய்து பதனம்பண்ணு
ஆனென்ற பொட்டுலுப்பு செயநீர்சொன்னோம்
அறையுறோ முப்பு திராவகத்தைக்கேளு
வானென்ற பொட்டுலுப்பு செயநீர்விட்டு
மைந்தனே பலமிரண்டு வளமாய்ப்போட்டு
மானென்ற பீங்கானில் சொல்லக்கேளு
வசனிப்போம் செய்நீர் திராவகத்தைவாரே. 49

உப்புதிராவகம்

வாரடா புலத்தியனே படிகாரந்தான்
மைந்தனே யிரண்டுபலம் வளமாய்ப்போட்டு
ஆரடா முப்பூவும் பலந்தான்போட்டு
அருளான வைந்துருவி னுப்பேபோட்டு
நேரடா சுத்தசலம் பனினீர்விட்டு
நீமகனே கூட்டியதை பிசைந்துகொண்டு
காரடா ரசசக்ரக் கலசந்தன்னில்
கண்மணியே பிசைந்துவுண்டை அதனில்வையே. 50

வையப்பா மேல்மூடி கவசம்செய்து
மகத்தான வெண்கருவால் சில்லுயேமு
மெய்யப்பா செய்து முடிப்பித்துக்கொண்டு
மேலான வண்ணானடுப்பது போல்செய்து
அய்யப்பா வதற்குநேர் மேமைசெய்து
வதன்மேலே பீங்கானை யடவாய்வைத்து
நையப்பா கரகமதை எடுத்துக்கொண்டு
நளினமதா அடுப்பின்மேல் வைத்திடாய். 51

இரசக்கரகம்

வைத்துமே யடுப்பின்மேல் மண்சீலைசெய்து
வளமான வக்கினியை முட்டிடாய்நீ
அத்திந்த பாலையடா பாலைக்கொம்பு
அவ்விறகால் தான்மூட்டி சாமந்தானும்
கைத்திந்த கலசத்திற் காவியேறி
காளமேகமென்ற திராவகந் தானப்பா
மைத்திந்த கருவியைப்போ லருவிப்பாய்ந்து
மகத்தான பீங்கானி லாறாவீழ்கும்பாரே. 52

பாரப்பா திராவகந்தா னென்னசொல்வேன்
பாரினிலே மனிதர்கள்தா னார்தான்செய்வார்
ஆரப்பா திராவகந்தான் நிறமோகோடி
அளவில்லா சிகப்புநிற மென்னால்சொல்ல
நாரப்பா நாவுமுண்டோ வாயோயில்லை
நாம்சொன்னோம் பொட்டுலுப்பு திராவகந்தான்மைந்தா
தேரப்பா கரகமதை எடுத்துக்கொண்டு
செயலான சீலையெல்லாம் கயட்டிடாயே. 53

வெண்காரவைப்பு

கயட்டிடாய் கவசமதை தட்டிப்போட்டு
கருணைதரவேண்டு கரகத்தைப் பார்த்தால்
அயட்டிடாய் திராவகந்தான் கோடிசூரியன்
அளவில்லா ரவிகோடி காந்திகாணும்
வயட்டிடாய் திராவகத்தைப் பூசைசெய்து
வளமான சீசாவில் பதனம்பண்ணு
குழட்டிடாய் பொட்டுலுப்பு கூறுகிறோம்
வெண்கார வைப்பைக் கேளே. 54

வைப்பான வைப்புமுறை யிதற்கீடுண்டோ
மானிலத்தில் மானிடரோ செய்யப்போறார்
அய்ப்பான முன்சொன்ன பொட்டுலுப்பைக்கேள்
அவ்வைந்து பலமுப்போ கொண்டு
நைப்பான ரசபீங்கான் தன்னிற்கேளு
நலம்பெறவே யிவ்வுப்பை யதனிலிட்டு
தைப்பான வெடியுப்பு வடியுப்புந்தான்
தயவான மூன்றுப்பு முப்புந்தானே. 55

தானென்ற வுப்பெல்லா மதனிலிட்டு
தருவான செந்தூரம் செயநீர்விட்டு
ஆனென்ற சுத்தசலம் பனிஙீர்விட்டு
அப்பனே அதைப்பிசைந்து உண்டையாக்கி
நானென்ற பீங்கானில் சொல்லக்கேளு
நலமான வங்கதிராவகத்தை வாரு
தேனென்ற உண்டையது நடுவில்வைத்து
தெளிவான வெண்கருவால் கவசம்செய்யே. 56

கஞ்சாசெடி

செய்யப்பா விந்ததினால் சில்லுயேழு
செயம்பெறவே செய்து முடிப்பித்துக்கொண்டு
வையப்பா பூமிதனில் முழக்குழிதான்வெட்டி
வையப்பா பீங்கானை குழியில்நீயும்
ஐயப்பா வைத்ததனை மேல்ப்பலகைபோட்டு
வதுமேலே வாத்துமண லடவாய்ப்போட்டு
கையப்பா கெஞ்சாவின் செடியைநட்டு
கருணைபெற சலம்வார்த்துப் பூசிப்பாயே. 5'

பூசிப்பாய் வாரமட்டும் புலஸ்தியாநீ
புனிதமுடன் சென்றுதென்றால் புகலக்கேளீர்
ஆசிப்பாய் செடியாகி மரமுமாகி
அள்வில்லாப் பூவாகி பிஞ்சுமாகி
நாசிப்பாய் காயாகி பழமுமாகி
நன்மரம் போலோங்கி யதுவிழுதுமாகி
காசில்லாய் விழுதுதனில் சடையுமாகி
கணக்கில்லா விருட்சமாய் கருவியாச்சே. 58

நீர்அருவிபாயும்

கருவியென்ற கஞ்சாவின் மரந்தான்மைந்தா
கண்மணியே வாரமதி லிவ்விதங்களாகி
அருவியென்ற மரமதனை வெட்டிப்பார்த்தா
லதினுள்ளே கோடாகோடி வருடஞ்சென்றே
செருவியென்ற சிகப்புநிற மரமெல்லாந்தான்
செம்மரம்போல் நிறமுடைய சூரியகாந்தி
நருவியென்ற மரமதனை வெட்டிச்சாய்த்தால்
நவப்பிரம சடையெல்லா மெடுத்துக்கொள்ளே. 59

கொள்ளுகிற சடையெல்லாம் பேய்ச்சுரைக்குடுக்கை
குருவான குடுக்கையிலே பதனம்பண்ணு
அள்ளுகின்ற மரம்வெட்டி மாதிரிக்கேரலாக
அப்பனே யோகக்கோ லெட்டும்செய்து
வள்ளுகின்ற மைந்ததொரு கொம்பெல்லாந்தான்
மைந்தனே கட்டியதை பதனம்பண்ணு
தள்ளுகின்ற சடைக்கஞ்சா யிதற்குப்பேரு
சதாசிவன்றான் கொண்டதொரு கற்பமாமே. 60

மெழுவிலாட்டு கஞ்சாபுகைபிடிக்க

ஆமப்பா மற்றதெல்லாம் கெஞ்சாவாமோ
அப்பனே யிக்கஞ்சா பிடித்தாறானால்
வாமப்பால் சொரிந்ததுவு மருவிப்பாயும்
மதனமென்ற லாகிரிதா னென்ன சொல்வேன்
நாமப்பா கொண்டுவிட்டோம் சிவயோகத்தில்
ரத்தினம்போல் தேகமெல்லாம் சித்தியாச்சு
மாமப்பா மதைக்கொண்டு மதியமுர்தமூன்று
மகத்தான தேகமெல்லாங் குளிர்ச்சியாச்சே. 61

வெண்காரவைப்பு

ஆமேதா னிக்கெஞ்சா சித்தியாச்சு
　　ஆரணியி லுலுத்தரென்ற மாண்பர்கூடி
ஓமேதா லூர்தனிலே விளையுங்கெஞ்சா
　　உறுத்தமென்ற வரட்டுகெஞ்சா விதற்குப்பேரு
வாமேதான் பேய்மூலி உலகந்தன்னில்
　　மைந்தனே அதைப்பிடிப்பார் மாண்டிடுவார்
தேமேதா னிந்தமுறை செய்துமேதான்
　　சிவயோகி யாவதற்கு செய்திடீரே. 62

செய்திடீர் சறுவேத யோகத்திற்கு
　　செயமான கெஞ்சாவின் விருட்சஞ்சொன்னோம்
அய்த்திடீர் புதைத்துவைத்த வெண்காரவைப்பு
　　அதையெடத்துப் பாண்டமதில் கவசம்வாங்கி
மைதிடீர் சில்லெல்லா மவிழ்த்துவாங்கி
　　மகத்தான பீங்கானைப் பாருபாரு
நைதிடீர் வெண்காரக் கட்டிதுபார்
　　நாம்சொன்னோம் புலஸ்தியனே வெண்மையாமே.63

வெண்காரக்கட்டியின் நிறமறியவும்

ஆமப்பா வதிதிறந்தா னதிகவெள்ளை
　　ஆரணியில் விற்கும் வெண்காரமாமோ
நேமப்பா யிதுகாரம் சகலத்திற்கும்
　　நிமிஷத்தில் கடுகளவு பட்டுதானால்
மாமப்பா மலைகுகைகள் கிரிகளெல்லா
　　மைந்தனே நீறாக்கும் வெண்காரக்கட்டு
பாமப்பா யிதையெடுத்துப் பூசைசெய்து
　　பரிவாக பதனமதாய் வைத்துக்கொள்ளே. 64

கொள்ளடா புலஸ்தியனே வெண்காரத்திட்டு
　　குருவமிசை யிருந்ததனால் குணமுண்டாச்சு
வெள்ளடா வெண்காரக் கட்டைச்சொன்னோம்
　　விபரமதாய் விளம்புகிறோம் சீனக்காரம்
கள்ளடா வெண்காரம் கட்டிபலம்வாங்கி
　　நலமான வெடியுப்பு வடியுப்புங்கூட்டி
மொள்ளடா முப்பூவு மூன்றுங்கூட்டி
　　மூர்க்கமுள்ள ரவியமுர்த மதியமுர்தம்வாரே. 65

வாரப்பா ரசபீங்கால் தனிலேமைந்தா
மகத்தான பத்துவிதங் குருவேபோட்டு
ஆரப்பா முச்செயநீர் திராவகத்தின்செயநீர்
அளவில்லா ரசசெந்தூர செயநீர்வாரு
சாரப்பா பிசைந்ததனை உண்டையாக்கு
கருணைதர வேண்டுமென்று கவசஞ்செய்து
தேரப்பா விந்ததினா லேழுசில்லு
செயலான வண்டமெழு சீலைசெய்யே. 66

சீனக்காரவைப்பு

செய்துயிந்த பீங்கானை முன்சொன்னபாகம்
செயலாக பூமிதனில் புதைத்திடாய்நீ
வைதுயிந்த வாரஞ்சென் றெடுத்துப்பார்த்தால்
மகத்தான சீனமது பூரத்தைக்கட்டும்
அய்துயிர்த்த காரமடா சீனக்காரம்
அப்பனே வெகுசுறுக்கு வேதைக்கெல்லாம்
மையிது யிந்தவைப்பெடுத்துக் கவசந்தட்டி
மகத்தான சீலையெல்லா மவிழ்த்துப்போடே. 67

சீனக்காரக்கட்டு

போடுகின்ற சீனக்கார கட்டைக்கொண்டு
புனிதமுடன் பூசைசெய்து பதனம்பண்ணு
ஆடுகின்ற வைப்புமுறை சகலத்திற்கும்
அறைக்கடுகு விதமுடன் பட்டுதானால்
வாடுகின்ற வேதையெல்லா மறைநொடிக்குள்ளாகி
மகத்தான சீனக்கார மகிமைபாரு
நாடுகின்ற நாடெல்லாஞ் சீனமானால்
நாமென்ன தொழிலாளி அகத்தியனாமே. 68

நாகவைப்பின்கட்டு

ஆமப்பா புலஸ்தியனே சொல்லக்கேளு
மடவான வைப்பெல்லா மிதனாலாகும்
போமப்பா சீனக்கார வைப்போசொன்னோம்
புகழான நாகவைப்பின் கட்டைக்கேளு
சேமப்பா சீனகார மிருபலந்தான்கொண்டு
செயலான வங்கரசம் பிங்கரசம்கொண்டு
நாமப்பா ரசபாண்ட மதனிற்போட்டு
நளினமென்ற வரைப்பலந்தான் வீதம்போடே. 69

போடப்பா புலஸ்தியனே சொல்லக்கேளீர்
புனிதமென்ற சுத்தசலம் பனிநீர்பாரு
ஆடடா பிசைந்ததனை யுண்டையாக்கி
அப்பனே பாண்டமதி லடவாய்வைத்து
நாடப்பா பாண்டத்திற் கலசம்செய்து
நலமான வெண்கருவால் சில்லுயேழு
சேடப்பா செய்து முடிப்பித்துக்கொண்டு
செயலான ரவிதனிலே யெடுத்துவையே. 70

வையப்பா யிரண்டுநாழிகை வைத்தாக்கால்
மகத்தான உப்பெல்லா முருகும்பாரு
ஐயப்பா உருகியது மணியாய்க்கட்டும்
அப்பனே நாகரசக் கட்டின்பேரு
நையப்பா நாகரசங் கட்டிநிற்கும்
நலமான பாண்டமதை யெடுத்துக்கொண்டு
பையப்பா கவசமெல்லாந் தட்டிப்போடு
வரிவான சில்லெல்லாம் கழட்டிப்போடே. 71

நாகரசக் கட்டினத்தின் பெயர்

போட்டவுடன் பார்த்தையென்றால் நாகந்தானும்
புனிதமுடன் கட்டிநிற்கும் கட்டேகொண்டு
ஆட்டதனை பூசைசெய்து பதனம்பண்ணு
அப்பனே யொருபலந்தான் னாகம்வாங்கி
நாட்டமுடன் பாண்டத்தில் கட்டைப்போட்டு
நலமான கெந்திரச மதனில்வார்த்து
காட்டதனை சுத்தசலம் பனிநீர்விட்டு
கருவான பீங்கானுக் கவசம்செய்யே. 72

நாகரச செந்தூரம்

செய்யப்பா விந்ததினா லேழுசில்லு
செய்துநன்றா அதையெடுத்து ரவியில்வைத்து
ஐயப்பா இரண்டுநாழிகை சென்றாக்கால்
அப்பனே பீங்கானை எடுத்துக்கொண்டு
கையப்பா கவசமெல்லாங் கயட்டெரிந்து
கண்மணியே சீலையேழுந் தட்டிப்போட்டு
மெய்யப்பா நாகத்தின் கட்டுதானும்
மேலாக மீறியது செந்தூரமாமே. 73

ஆமப்பா செந்தூர மென்னசொல்வே
னளவிடப் போகாது கோடாகோடி
வாமப்பா மாற்றதுதான் என்னாற்கூற
வசனிக்கப் போகாது செந்தூரங்கொண்டு
நாமப்பா சீஷாவில் பதனம்பண்ணு
நலமாக சிவயோகம் பூசைசெய்து
பாமப்பா பதனமதாய் வைத்துநீயும்
பரிவான லிங்கரச முப்பலந்தான்கொள்ளே. 74

லிங்கரசம்

கொள்ளடா லிங்கரசம் காந்தற்கிண்ணம்
கூறினோ மதுதனிலே வார்த்துநீயும்
வள்ளடா நாக செந்தூரந்தானும்
மைந்தனே ரசமதுவால் கடுகுவீதம்
மொள்ளடா போட்டதிலே கவசம்செய்து
மேலான விந்ததினா லேழுசீலை
சொள்ளடா செய்து முடிப்பித்துக்கொண்டு
செயமான ரவிதனிலே செய்திடாயே. 75

லிங்கரசத்தில் தங்கவேதை மாற்று

செய்துவந்த காந்தகிண்ண மிரண்டுநாழி
செயலாக ரவிதனிலே யிருந்ததானால்
ஐதுவந்த ரசமதுதா னுரைபோல்பொங்கி
அமருமப்பா கிண்ணத்தில் அடவாய்ப்பாரு
கைதுயிந்தக் கிண்ணமதை யெடுத்துமேதான்
கவசமெல்லாங் கயட்டெரிந்து சீலைதட்டி
நைதுயிந்த லிங்கரசந் தங்கமாக்கி
நவகோடி கோடாகோடி மாத்ததாமே. 76

வறுமையில் தங்கமாறிக் கொள்ளவும்

மாத்தான மாத்தப்பா யிதற்கீடுண்டோ
மைந்தனே வண்டவச்சில் சாய்த்திடாய்நீ
காத்தான குளிகைமணி யதுபோல்தானும்
கண்மணியே மணியெடுத்துப் பூசைசெய்து
ஆத்தான யிம்மணியை பதன்ம்பண்ணி
அப்பனே யுனக்கெளுமை வருகுங்காலம்
முத்தான மணியதனில் விராகன்கொண்டு
மூதண்டக் கடைபசார் தன்னிற்செல்லே. 77

செல்லடா புலஸ்தியனே தங்கங்கொண்டு
செயலான கடைதனிலே சென்றாயானால்
சொல்லடா அனைவோரும் சூழ்ந்தேகொள்வார்
அப்பனே தங்கத்தை மதித்தாயானால்
வெல்லடா வளவிடா திரவியங்கொடுத்தாலும்
விலைமதிக்க மாட்டார்க ளித்தங்கத்தை
மல்லடா மாறியதை திரவியங்கொண்டப்பா
மகத்தான கோடாகோடி யோகம்பாரே. 78

பாரடா யிப்பொருளை வைத்துக்கொண்டு
பாணுவென்ற சதகோடி காலமெல்லாம்
ஆரடா மதியமுதம் தினந்தோறுண்ணு
அன்னத்தை மறவாதே மறந்தாயானால்
காரடா வாசியது வொடுங்காதப்பா
காயத்தில் வினைவந்து அணுகும்பாரு
பேரடா வமுசையது கடந்தேபோகும்
பெலன்களெல்லாம் குண்ணியது ஒதிங்கிப்போமே. 79

தங்கவேதை கொண்டு யோகஞ்செய்யவும்

ஒடுங்காம லிருப்பதற்குப் புலஸ்தியாகேள்
வொருபுத்தி வேண்டுமடா யோகிக்கேதான்
அடுங்காமல் பலபுத்தி யெண்ணுவோர்க்கு
அப்பனே யோகசித்தி வருமோமைந்தா
நடுங்காம லிருப்போற்கு விந்தசையாதப்பா
நாம்சொன்னோம் காண்டமிதி னொன்பதுக்குள்
கடுங்காம லிருந்தமா னாதியாதி
கருவையெல்லாங் காவியத்தில் விளம்புவோமே. 80

மானாதியறியவும்

விளம்புவோ நாகமதில் தங்கஞ்சொன்னோ
மேலான தங்கமதில் பலந்தான்வாங்கி
நளம்புவோம் ரசக்கின்ண மதனில்மைந்தா
ரவியமுர்த மதியமுர்த மிரண்டுபலமிட்டு
அளம்புவோம் செயநீர் திராவகத்தில்மைந்தா
அறைசாமம் தங்கமணி யூறவைத்து
எளம்பவோ மெடுத்ததனைக் கிண்ணத்திட்டு
யின்பரவி யென்றவிந்தால் சீலைசெய்யே. 81

தங்கசுன்னம்

செய்யப்பா புலஸ்தியனே சீலைசெய்து
சிறப்பான ரவிதனிலே யிதற்குநாழி
வையப்பா சென்றவுட னெடுத்துக்கொண்டு
மைந்தனே சீலையெல்லாங் கயட்டெரிந்து
பையப்பா கின்னத்துள் பார்த்தாயானால்
பலகோடி ரவிமதியுஞ் சோதிகாணும்
அய்யப்பா காண்டத்தி னொன்பதுக்குள்
அப்பனே யிக்குருவி லாடலாமே. 82

நவமூல சத்தி

ஆடலாம் நவமூலஞ் சித்தியாச்சு
அளவில்லா சுண்ணமடா தங்கசுண்ணம்
பாடலாம் பலகோடி வண்டமெல்லாம்
பகிரண்ட அண்டபகிரண்ட மெல்லாம்
நாடலாம் தங்கசுண்ணம் பூசைசெய்து
நவமூல யோகமதில் நாட்டம்பாரு
சாடலாம் தங்கசுண்ணம் கொண்டேமைந்தா
சதாசிவன் போலென்னாளும் சாரலாமே. 83

நவமூலயோகத்தில் வயதைந்து

சாராலந் தங்கசுண்ணம் பதனம்பண்ணு
சமர்த்தான சீசாவில் பதனம்பண்ணு
ஆரலா மிச்சுண்ண மெவர்தான்செய்வார்
அப்பனே செய்தாரென்றால் செப்பக்கேளு
சேரலாம் சிவயோக மஷ்டயோகம்
சிவசித்தன் மெஞ்ஞானி என்போலாவார்
வாரலாம் சதாகோடி யுகங்களாலும்
வயதெண்ண முடியாது வயதைஞ்சாமே. 84

தாம்பிர வைப்பு

அஞ்சான வயதாகி யோகஞ்செய்வார்
அப்பனே முப்பதுக்குள் முடித்துக்கொள்வார்
கஞ்சான நாற்பதுக்குள் கற்பமுண்பார்
கருணைதரு மன்பதுக்குள் கெவுனம்பாய்வார்
வஞ்சான யெண்பதுக்குள் குளிகைகொண்டு
மகத்தான நூறாண்டில் முத்தியாவார்

மஞ்சான பரமபதம் நூறுக்குள்ளே
மகத்தான பதவிநால் வருகுந்தானே. 85

நவமூலத்தில் யோகம் பார்க்கவும்

தாளென்ற தங்கசுண்ணம் சொன்னோம்பாரு
தருவான தாம்பரத்தின் வெளுப்பைக்கேளீர்
ஆனென்ற லிங்கரசம் பலமூன்றப்பா
அப்பனே காந்தகிண்ண மதனிலிட்டு
வாகனென்ற முப்பூவு முப்பலந்தானிட்டு
மகத்தான லிங்கவைப்பு பலமூன்றிட்டு
சேனென்ற செந்தூரம் செயனீர்விட்டு
சிறப்பான காந்தகிண்ணம் கலசம்செய்யே. 86

செய்யப்பா விந்ததினால ஏழுகவசம்
செயம்பெறவே செய்துவதை ரவியில்வைத்தால்
கையப்பா நால்நாழி ரவிகாய்ந்தாக்கால்
நலம்பெறவே வுருகியது நளினமாகும்
அய்யப்பா வுருகிறதோர் சமையம்பார்த்து
அப்பனே வதையெடுத்து சொல்லக்கேளு
கையப்பா கவசமெல்லாம் கயட்டெரிந்து
கருவான சீலையெல்லா' கழட்டிப்போடே. 87

போட்டதனை வண்டத்தி னச்சில்தானும்
புகழாக வதையெடுத்துக் கிண்ணஞ்சாய்த்தால்
ஆட்டதனை யென்னசொல்வேன் தாம்பூரந்தான்
அளவில்லா வேதையெல்லா மதிலேயாகும்
பாட்டதனை லோகமப்பா பஞ்சலோகம்
பழுதில்லா லோகத்தின் கட்டைகொண்டு
வாட்டதனை பூசைசெய்து பதனம்பண்ணு
மகத்தான பஞ்சலோகம் சொன்னோம்பாரே. 88

பஞ்சலோகப் பழுப்பு

பாரப்பா புலஸ்தியனே ராசயோகி
பரிவான பஞ்சலோகம் பலம்ரெண்டாகும்
ஆரப்பா வங்கத்தின் தகடுபலம்ரெண்டு
அப்பனே வங்கரசம் பலந்தான்ரெண்டு
நாரப்பா காந்தகிண்ண மதனிற்போட்டு
நலம்பெறவே செந்தூரம் செயநீர்விட்டு

காரப்பா முப்புசெந்தூரம் போட்டு
கருணைதர வேண்டுமென்று கவசம்செய்யே. 89
செய்யப்பா சீலையது யேழுஞ்செய்து
செயலான ரவிமுகத்தி லிருநாழிவைத்தால்
மெய்யப்பா வுருகியது பொங்கும்பாரு
மேலான பாகமடா வேளைபார்த்து
அய்யப்பா யெடுத்ததனைக் கவசம்தட்டி
அப்பனே சீலையெல்லாம் தட்டிப்போடு
நையப்பா காந்தகிண்ண மதையெடுத்து
நலமான அண்டத்தில் சாய்த்திடாயே. 90

வெங்கலவைப்பு

சாய்ந்ததொரு ரசமதுதா னோடிப்பாய்ந்து
சாய்ந்ததொரு வெங்கலமா மகத்தாம்வைப்பு
ஆய்ந்ததொரு தகடதுவாய்ப் பெருகியோங்கி
அப்பனே யிருக்குமப்பா யெடுத்துக்கொள்ளு
போய்த்ததனைப் பூசைசெய்து பதனம்பண்ணு
புனிதமென்ற வெண்கலமா மதில்தான்கோடி
வாய்த்ததொரு வெங்கலத்தில் சேர்தானெட்டு
வளமாக தங்கசுண்ணங் கடுகுதானே. 91

அட்டலோகவைப்பு

தானென்ற ரசக்கிண்ண மதனில்வைத்து
தயவான சாரரசம் அதனில்வார்த்து
மோனென்ற முச்செயநீர் கூடச்சேர்த்து
மூதண்ட காரரச மதனில்வாறு
ஆனென்ற கிண்ணமது கலசம்செய்து
அப்பனே வெண்கருவால் வேழுசீலை
நானென்ற சீலையது நன்றாய்ச்செய்து
நல்லதொரு ரவிதனிலே யிரநாழிவையே.. 92

நவலோக வைப்பு

வைத்துநீ பார்த்தையென்றால் சொல்லக்கேளு
வசனிக்க நாவுமுண்டோ வட்டலோகம்
பொத்துநீ வதையெடுத்து கவசம்தட்டி
புனிதமென்ற சீலையெல்லாந் தட்டிப்போட்டு
ஐத்துநீ வண்டஅச்சில் சாய்த்தாயானால்
அஷ்டலோக பூபதியென் றருளினோம்யாம்

மைத்துநீ தகடெடுத்துப் பூசைசெய்து
மைந்தனே பதனமதாய் வைத்துப்போற்றே. 93

போற்றியே பூபதியில் பலந்தானொன்று
புகழான லோகமதில் பலந்தான்கொண்டு
ஆர்த்தடா வங்கத்தின் பலந்தான்ரெண்டு
அப்பனே காந்தகின்ண மதனில்வைத்து
காத்திடாய் சுத்தசலம் பனிநீர்விட்டு
கருணசெயநீர் திராவகந்தான் வார்த்து
நாத்தடா செந்தூரஞ் செயநீர்விட்டு
நலமான காரரசம் பலந்தான்வாரே. 94

வார்த்ததனைக் கிண்ணமது கவசம்செய்து
வளமான வெண்கருவா லேழுசீலை
ஆத்ததனை செய்து முடிப்பித்துக்கொண்டு
அழகான ரவிதனிலே யிரண்டுநாழி
பார்த்ததனை வைத்தெடுத்துக் கவசந்தட்டி
வளமான சீலையெல்லாம் கழட்டெரிந்து
மார்த்ததனை வண்டவச்சில் சாய்த்துப்பார்த்தால்
மகத்தான நவலோகம் வைப்புதானே. 95

வைப்பான நவலோகம் கோடாகோடி
வசனிக்க நாவுமுண்டோ மாத்தோகோடி
ஐப்பான நவலோகம் தகட்டேகொண்டு
அப்பனே சிவயோகம் பூசைசெய்து
கைப்பான கனகமடா நவலோகத்தில்
கண்மணியே சேர்நாலு கிண்ணத்திட்டு
மைப்பா காரரசம் பலந்தான்விட்டு
மகத்தான வங்கசெந்தூரம் போடே. 96

போடப்பா கடுகளவு செந்தூரமிட்டு
புகழான காந்தகிண்ணம் கவசம்செய்து
பாடப்பா வெண்கருவா லேழுசீலை
பரிவாக செய்து முடிப்பித்துக்கொண்டு
நாடப்பா ரவிதனிலே யிரண்டுநாழி
நலமாக வைத்ததனை எடுத்துக்கொண்டு
ஆடப்பா கவசமெலாங் கயட்டெரிந்து
அப்பனே சீலையெல்லாம் அவிழ்த்திடாயே 97

அவிழ்த்திடாய் காந்தகிண்ணம் மதன்தான்பார்த்தால்
அளவிடப் போகாது கோடாகோடி
மவித்திடாய் நவலோக முருகிமைந்தா
மதியிரவி ரவிமதியாக் கட்டும்பாரு
நவித்திடாய் காந்தகிண்ண மெடுத்துக்கொண்டு
நலமாக வண்டவச்சில் சாய்த்திடாய்நீ
கவித்திடாய் மணியெடுத்து யோகபூசை
கருணைதர வேண்டுமென்று பதனம்பண்ணே. 98

நவலோக தங்கம்

பண்ணப்பா மணிதனிலே விராகன்கொண்டு
பாலகனே கடைபசார் தன்னிற்சென்று
அண்ணப்பா மணியெடுத்து மதித்தாயானால்
அண்டரண்ட புவனமெல்லாம் விலையோயில்லை
நண்ணப்பா விலையிதனை செய்துகொண்டு
நவகோடி கோடாகோடி காலமெல்லாம்
சென்னப்பா சிலவுசெய்து யோகஞ்செய்தால்
செயம்பெறலாம் நவேலாகத் தங்கம்பாரே. 99

காந்த செந்தூரம்

பாரப்பா யித்தங்க வேதைகொண்டு
பாரினிலே திரிவோர்கள் யோகசித்தர்
ஆரப்பா செய்வார்கள் நவலோகத்தங்கம்
அருமையப்பா செய்வோர்கள் யுகத்துக்கொன்று
வாரப்பா யித்தங்கம் நாமேசெய்தோம்
அளவில்லாக் காலமெல்லாம் யோகஞ்செய்தோம்
நாரப்பா நவலோகத் தங்கஞ்சொன்னோம்
கண்மணியே காந்த செந்தூரங்கேளே. 100

கேளப்பா நவகாண்ட மொன்பதுக்குண்
கெடியான முறைபாகம் கைபாகங்கள்
நாளப்பா செய்பாகம் குருவின்பாகம்
நளினமென்ற முறைமுறையாய்ச் சொல்லக்கேளு
ஆளப்பா காவியந்தா னின்னூல்போலே
ஆர்சொன்னார் சிவன்நமக்கு வருளினார்பார்
தேளப்பா யின்னூலி லாகும்வேதை
தெளிவாக குருவையெல்லா மருளுவோமே. 101

அருளுவோங் காந்த செந்தூரங்கேளு
அரகரா முன்னுரைத்த காந்தம்வாங்கி
மருளுவோ மிருபலந்தான் கிண்ணத்திட்டு
மகத்தான லிங்கரசம் வளமாய்வார்த்து
மருளுவோம் லிங்கசெயநீர் தான்விட்டு
மாற்கமுடன் முறைபாகம் பிசகிடாமல்
தெருளுவோம் திராவகத்தின் செயநீர்வார்த்து
தெளிவான கிண்ணமது கவசம்செய்யே. 102

செய்யப்பா விந்ததினாலே சீலைசெய்து
சிறந்த கிண்ணமதையெடுத்து ரவியில்வைத்து
அய்யப்பா யிரண்டுநாழிகை சென்றாக்கால்
அப்பனே கிண்ணமதை எடுத்துக்கொண்டு
மெய்யப்பா கவசமதை கயட்டெரிந்து
மேலான சீலையெல்லா மவுத்துப்போட்டு
பையப்பா கிண்ணமதை எடுத்துக்கொண்டு
பரபூசை குருபூசை பணிந்திடாயே. 103

பணிந்திடாய் காந்த செந்தூரமைந்தா
பார்தனிலே யார்செய்யப் போறாரப்பா
அணிந்திடாய் செந்தூர மெடுத்துப்பார்த்தால்
மருணநிற மிதற்கீடுவது உண்டாமோ
குணிந்திடாய் கோடானகோடி வேதை
கூறினோ மிதனளவால் கூறக்கேளு
வணிந்திடாய் காந்தசெந்தூரம் சொன்னோம்
வசனிப்போம் இன்னமொரு சேதிகேளே. 104

கேளப்பா புலஸ்தியனே யோகவானே
கிருபையதாய்ச் சொல்லுகிறோம் கெவுனவானே
நாளப்பா வெகுநாளு தவமேசெய்தால்
நல்லசிவ யோகசித்தன் ஞானியாவார்
கோளப்பா வாறாது குருநூல்வாக்கியம்
கூறினோம் காவியந்தா னின்னூல்மைந்தா
ஏளப்பா சருக்கமது வொன்பதுக்குள்
யியம்பினோம் காண்டமிது வொன்ட தாச்சே

ஆச்சப்பா வைப்புமுறை கோடாகோடி
அளவில்லா செந்தூரஞ் சுண்ணங்கோடி
நாச்சப்பா தங்கமது கனகங்கோடி
கருவான திராவகங்கள் செயநீர்கோடி
மாச்சப்பா வளவில்லா வைப்புகோடி
வங்க செந்தூரத்தின் வேதைகோடி
பாச்சப்பா பாகமது கோடாகோடி
பரியேம மெழுகுவகை பகரக்கேளே. 106

பகரக்கேள் சரக்குவகை தொந்தங்கோடி
பாடினோம் குளிகைமணி கோடாகோடி
அகரக்கேள் ஐங்காயந் தயிலங்கோடி
அப்பனே நவயோக மனந்தங்கோடி
நகரக்கேள் யெண்ணவொண்ணா தொழில்களெல்லாம்
நாம்சொன்னோம் புலத்தியனே நன்றாய்க்கேளு
யுகரக்கேள் யோகியென்ற சித்தரேகேள்
ஒன்பதாங்காண்ட மின்னூ லுரைசொன்னோமே. 107

சொன்னோமே சகலநூல் குருவேசொன்னோம்
சொற்பெரிய பாடல்நூற்றி யெட்டுக்குள்ளே
முன்னோமே ஒன்பதாங் காண்டமப்பா
முடிந்துதையா சிவயோக முன்னோர்வாக்கியம்
அன்னோமே வேதையெல்லாம் பொருளாய்ச்சொன்னோம்
அமுர்தகடல் காவியந்தான் வாதநூலு
ஒன்னோமே ஒன்பதாங்காண்ட மின்னூல்
ஒகோகோ முடிந்துதப்பா நவமூலமுற்றே. 108

ஒன்பதாம் காண்டம் முற்றுப்பெற்றது.

பத்தாவது காண்டம்

நவமூலம் மிம்மூலம் பிரமூலத்தின்
நவப்பிரம வடிமூல முடியேபோற்றி
அவமூலம் வெளிக்கப்பால் வொளியின்பாதம்
அமர்ந்தசிவ யோகத்தின் அருளேபோற்றி
இவமூலம் நாதவிந்தின் சின்மயமேபோற்றி
யிரவிமதி ரவியொளியின் கமலம்போற்றி
நவமூலம் பரப்பிரம சரஸ்வதியேபோற்றி
சரவேத குண்டலியின் வேதாந்தங்காப்பே. 1

காப்பான தொகைபத்துக் காண்டமின்னூல்
கருவான பொருள்களெல்லாங் கணக்காய்சொல்வோம்
தாப்பான சகலகலைக் கியானபீடம்
தருவான காவியந்தான் பத்தாங்காண்டம்
ஆப்பான சங்கையில்லா யின்னூல்மைந்தா
அண்டரண்ட புவனத்தில் அமுர்தவாக்கியம்
மூப்பான மூன்றுலட்சம் பாடலுக்கெல்லாம்
முகிந்ததலை முறைபத்து முரைப்போநாமே. 2

உரைப்போம்நா மின்னூலு சித்தர்கண்டால்
விட்ாரப்பா காவியத்தி லுறுதிகண்டோர்
அரைப்போம் நாமிந்நூலு சர்வபீட
மாயிரந்தா னிந்நூலு தசநாதபீடம்
திரைப்போம்நா மாயிரத்தின் கமலபீடம்
தெளிவான காவியந்தா னமுர்தபீடம்
மரைப்போநா மண்டவிந்து பிண்டநாதம்
மவுனத்தின் திகைப்பூட்டை மாட்டக்கேளே. 3

மாட்டுகிறோம் புலஸ்தியனே சொல்லக்கேளு
வசனிப்போ மாயிரத்தின் வளமைகேளீர்
ஆட்டுகிறோ மாயிரத்தின் பீடத்துக்குள்
அளவில்லா சகலகலைக் கியானமெல்லாம்
வாட்டுகிறோம் புலஸ்தியனே வறுபத்துநாலு
மகத்தான கலைக்கியானம் வசனித்தோம்பார்
நாட்டுகிறோம் சாலமறுபத்து நாலும்
நாம்சொன்னோ மாகதொகை நாட்டக்கேளே. 4

கேளப்பா யென்பத்தோ ராயிரந்தான்சொன்னோம்
கிருபையுள்ள சாத்திரத்தின் பேரைச்சொன்னோம்
ஏளப்பா அந்நூலில் பதினாறுலட்சம்
ஏமமென்ற வாதநூல் தொகையுஞ்சொன்னோம்
ஆளப்பா வன்பத்தோ ராயிரந்தான்
அப்பனே யாமுரைத்தோம் கனகமெத்த
நாளப்பா யெண்பத்தோ ராயிரந்தான்
நளினமென்ற யிரண்டுநூல் கோர்வைபாரே. 5

பன்னீராயிரக் காண்டபெருமை நூல்தொகை
நூல் கோடி கணக்கு

கோர்வையாம் கோடி பன்னீராயிந்தான்
கோடான கோடிநூல் பெருநூல்காண்டம்
ஏர்வையா முப்பத்தா ராயிரந்தான்
என்மகனே யிருபத்தோ ராயிரந்தான்
பார்வையாம் பதினையா யிரந்தான்பாரு
பரிவான நூல்களப்பா பதினெண்ணாயிரந்தான்
சேர்வையாம் எண்ணாயிரத்திலப்பா சிணத்திலே
ஆரைந்து மூன்றொன் றென்றைப்பாரே. 6

பாரப்பா நூல்தொகை வென்பத்தோராயிரத்தில்
பகல்போலே சொன்னோமப்பா சேதியெல்லாம்
ஏரப்பா யிவ்வளவும் பார்த்துத்தேறி
யின்நூல்தான் காவியத்தை எடுத்துப்பார்த்தால்
நேரப்பா திகழ்பரந்த குருக்களெல்லாம்
நிலவுபோல் தோன்றும் பார்நேரேகாணு
ஆரப்பா வறிவார்க ளாயிரந்தான்மைந்தா
அரகரா காவியத்தின் கருவைக்கேளே. 7

கருவான கருக்களெல்லாம் நெறடில்லாமல்
கண்மணியே சொல்லுகிறோம் கருத்தாய்கேளு
அருவான ரவிமதியு மிரவிமூன்றும்
அரகரா கும்பகந்தான் ரவியுமாகும்
மருவான ரேசகந்தான் மதியுமாகு
மகத்தான பூரகந்தா னிரவியாகும்
சருவான யிரவியப்பா அருவிப்பாய்ந்து
சலஅமுர்த அண்டமென்று சாற்றினோமே. 8

அஷ்டமாத்தயிலம்

சாத்துகிறோ முன்மூல முளைமூலங்கேள்
சமர்த்தான அட்டமா தயிலங்கேளு
மாற்றுகிறோ மறுபத்து நாலுசித்து
மடிவா தயிலமொன்று வருளுவோம்நாம்
பூத்தமலர் மாத்ததிக முப்புகொண்டு
புகழாக நாலுபல மெடுத்துக்கொண்டு
ஆத்துகிறோ மூன்றுப்பு முப்போடாறு
அதிதமென்ற ஆறையுந்தான் சொல்லக்கேளே. 9

சொல்லக்கேள் ரசகவச மதனிலிட்டு
சொற்பெரிய வைந்துருவின் தயிலம்விட்டு
மெல்லக்கேள் முன்சொன்ன முச்செயநீர்விட்டு
மேலான யிரண்டுபல வீதமாக
அல்லக்கேள் முப்புசுண்ணம் விராகன்போட்டு
அப்பனே பிசைந்ததனை யடவாய்நீயும்
வல்லக்கேள் முன்சொன்ன திராவகம்போல்
மைந்தனே வருஷத்திற்கும் பாவனையாய்வையே. 10

வையப்பா வெண்கருவால் கவசம்செய்து
மகத்தான வண்ட மெழுகதனால்சீலை
மெய்யப்பா செய்து முடிப்பித்துக்கொண்டு
மேலான பூமியிலே குழிதான்வெட்டி
அய்யப்பா ரசபீங்கான் தன்னில்வைத்து
அப்பனே கவசமது துவாரஞ்செய்து
பொய்யப்பா வாராது பீங்கான்றன்னில்
புனிதமுட னிக்கவச மதைவைத்திடாயே. 11

வைத்திடாய் மேற்காண்டம் வலுவாய்மூடி
மகத்தான மண்சீலை வலுவாய்ச்செய்து
சொத்திடா யதம்மேலோர் துணிதான்போட்டு
சோராமல் புதைத்தனை சென்றேயானால்
அத்திடா யதன்மேலே வெட்பாலைக்கொம்பு
அப்பனே கட்டைகொண்டு அக்கினியைமூட்டு
ஒத்திடா யோர்சாமம் அக்கினியைமூட்டி
ஓகோகோ கவசமெல்லா மெடுத்திடாயே. 12

எடுத்ததனை கலசமதின் கவசம்வாங்கி
 என்மகனே சீலையெல்லாந் தட்டிப்போட்டு
கடுத்ததனைக் கவசமதை பார்த்தாயானால்
 கருவான வட்டமா தயிலமாகும்
அடுத்ததனை தயிலமது வதிகசோதி
 அப்பனே யித்தயிலஞ் சீசாகொண்டு
வடுத்ததனை தயிலமதை மதனில்வார்த்து
 வரிசையதாய் சிவலோகம் பூசைசெய்யே. 13

நவரத்தின சுண்ணம்

செய்யப்பா முன்தயில மார்தான்செய்தார்
 சிவன்செய்தார் நாம்கண்டு தெளிவாய்ச்சொன்னோம்
அய்யப்பா அரன்சொன்ன வமுர்தவாக்கு
 அகத்தியனா மாயிரத்தில் செய்தோம்பாரு
மெய்யப்பா யித்தயிலஞ் சகலத்திற்கு
 மேலான குருதயில மிதுதான்மைந்தா
கையப்பா யித்தயிலங் கடுகுவீதம்
 கருவான தயிலங்கட்கு தொட்டுஆட்டே. 14

[illegible]டவென்றா லட்டமா தயிலஞ்சொன்னோம்
 அப்பனே யித்தயிலம் பதனம்பண்ணு
தேடவென்றால் முறைகளுக்குப் பாகஞ்சொன்னோம்
 தெளிவான குருவமிசை யிருந்தாற்கூடும்
நாடவென்றா லின்னமொரு முறையைக்கேளு
 நவரத்தின மொன்பதிற்குஞ் சுண்ணங்கேளு
பாடவென்றால் மும்முறையைச் செய்துபாரு
 பலகோடி அண்டமெல்லாம் பரியைக்காணே. 15

காணப்பா நவரத்தின சுண்ணந்தன்னை
 கருவாகச் சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளு
ஆணப்பா முத்தாலே யாணிமுத்து
 அரகரா யிரண்டுபலம் நிறுத்துக்கொண்டு
வாணப்பா ரசபாண்டந் தன்னில்வைத்து
 வளமான வட்டமா தயிலங்கொண்டு
ஏணப்பா யிரண்டுபல மதிலேவிட்டு
 யென்மகனே ரவிதனிலே வைத்திடாயே. 16

வைத்துப்பா ரவிதனிலே யிரண்டுநாழி
வளமாக வூறிநன்றா யிருக்கும்போது
அத்துப்பா ரதையெடுத்து முத்தெல்லாந்தான்
அரகரா காந்தகிண்ண மதனிலிட்டு
கத்துப்பார் முச்செயநீர் பலந்தானிட்டு
கருவான லிங்கரச மரைப்பலந்தான்வார்த்து
மத்துப்பார் வங்கசெந்தூரங் கொண்டு
வரிசைபெற கடுகளவு மைந்தாபோடே. 17

தாம்பரவேதை

போட்டந்த வண்டோட்டின் மெழுகினாலே
பொற்கிண்ணம் கவசம்செய்து விந்தால்சீலை
வேட்டதனை விந்ததனை யேழுசில்லு
விபரமுடன் செய்து முடிப்பித்துக்கொண்டு
நாட்டதனை ரவிதனிலே யிரண்டுசாமம்
நலமான கிண்ணமதை வைத்துநீயும்
ஆட்டதனை வதையெடுத்துக் கவசந்தட்டி
அப்பனே சில்லெல்லா மவிழ்த்துப்போடே. 18

போடப்பா காந்தகிண்ண மெடுத்துப்பார்த்தால்
புனிதமென்ற சற்குருதான் சகலத்திற்கும்
சாட்டப்பா சந்திரன்போல் வுர்ணங்காந்தி
மகத்தான சுண்ணமடா முத்துசுண்ணம்
ஆடப்பா வதையெடுத்து யோகபூசை
அட்டகும்ப பூசைசெய்து அடக்கம்பண்ணு
நாட்டப்பா முத்துசுண்ணம் நாமேசொன்னோம்
நல்லகுண மறிவுடையோர் செய்துபாரே. 19

பஞ்சலோக தங்கம்

பாரப்பா முத்துசுண்ணங் கடுகின்வீதம்
பரிவான பஞ்சலோகம் நவசேர்கொண்டு
சேரப்பா காந்தகிண்ண மதனிலிட்டு
செயமான சிந்தூரம் செயனீர்விட்டு
வாரப்பா முச்செயநீர் கூடச்சேர்த்து
வரிசைபெற வெண்கருவால் கவசஞ்செய்து
வேரப்பா வெண்கருவா லேழுசில்லு
விபரமுடன் செய்து முடிப்பித்துக்கொள்ளே. ௨0

கொள்ளடா காந்தகிண்ண மெடுத்துக்கொண்டு
கூறுகிறோம் ரவிதனிலே யிரண்டுநாழி
அள்ளடா சென்றவுட னெடுத்துக்கொண்டு
அப்பனே கவசமெல்லா மெரிந்துபோடு
மொள்ளடா சில்லெல்லா மவிழ்த்துப்போடு
மூதண்ட கிண்ணமதை பார்த்தாயானால்
வள்ளடா நவப்பிர மிதற்கீடாமோ
மதிரவியு மிதற்கீடாகாது பாரே. 21

முத்து லோகம்

பாரப்பா புலஸ்தியனே தாம்பரலோகம்
பழுதில்லா வண்டஅச்சில் சாய்த்தாயானால்
ஆரப்பா யிதற்கீடு தாம்பிரவேதை
அளவில்லா அச்சுதனில் தகடாய்ப்பாய்ந்து
காரப்பா நீளமதா யோங்கியோங்கி
கனகமென்ற மணியதுபோல் கட்டும்பாரு
தேரப்பா யிதையெடுத்துப் பூசைசெய்து
சிவயோக மவுனமதில் சேர்ந்திடாயே. 22

சேர்ந்திடாய் புலஸ்தியனே யோகபூசை
செய்து முடிப்பித்ததனை செய்துநீயும்
வார்ந்திடாய் பஞ்சலோகம் தங்கம்தங்கம்
வசனித்தோ மாயிரத்தின் காண்டம்பத்தில்
நார்ந்திடா யித்தங்கம் பதனம்பண்ணு
நாதாந்த சற்குருவின் கந்தன்வாக்கியம்
பார்ந்திடாய் பரியேமம் கோடிகோடி
பாடினோம் செயவமுர்த மாத்ததிகமாமே. 23

முத்து லோகம்

அதிகமாம் கோடாகோடி வேதைக்கெல்லாம்
அளவில்லாத் தங்கமாத் ததிகமாகும்
வதிகமாஞ் சிவயோகஞ் செய்யும்போது
மைந்தனே யுந்தனுக்கு வறுமைவந்தால்
மதிகமா மித்தங்கம் கடுகின்வீதம்
மைந்தனே நிறுத்தெடுத்து கடைதானேகி
பதிகமா மித்தங்க மதித்தாயானால்
பாரமுடன் விலைமதிக்க மாட்டார்தானே. 24

தானென்ற யித்தங்க மதித்தாரானால்
    தரும்புவன மட்டதிக்கும் விலையோயில்லை
ஆனென்ற யித்தங்கம் கோடிகோடி
    அளவில்லா திரவியத்தைக் கொடுப்பார்பாரு
வானென்ற திரவியத்தை வாங்கிக்கொண்டு
    வாசிசிவ யோகமதில் பூசிப்பாய்நீ
கானென்ற கனகமடா முத்துலோகம்
    காணரிது காணரிது கண்டாக்கால் முத்திதானே. 25

தானான லோகமெல்லாம் பழுப்பதாக
    சாற்றுகிறோம் புலஸ்தியனே சாற்றக்கேளு
ஆனான முத்துசுண்ண முன்னோசொன்னோ
    வதின்பின்னால் முத்துசெந்தூரம் சொன்னோம்
தேனான முத்துதா னிரண்டுபலம்
    வாங்கி தெளிவான ரசக்கிண்ணமதனில்விட்டு
மானான மதியமுர்தம் ரவியமுர்தம்விட்டு
    மகத்தான செயநீரு பலந்தான்வாரே. 26

செந்தூர கற்பம்

போடப்பா புலஸ்தியனே ராசயோகி
    புகழான செயநீர் திராவகத்தைவாரு
நாடப்பா அரைப்பலந்தான் வீதமாக
    நளினமதாய் வார்த்ததனை கவசம்செய்து
ஆடப்பா விந்ததினா லேழுசில்லு
    அப்பனே விந்ததினால் சீலைசெய்து
சாடப்பா ரவிதனிலே யிரண்டுநாழி
    சமர்த்தாக வைத்ததனை யெடுத்துக்கொள்ளே. 27

கொள்ளப்பா காந்தகிண்ணம் கவசம்தட்டி
    கூறினோம் கவசமதை கயட்டெரிந்து
வள்ளப்பா காந்தகிண்ணம் பார்த்தாயானால்
    வசனித்தோ மகாகாந்தி யதற்கீடுண்டோ
பள்ளப்பா முத்துசெந்தூர மைந்தா
    பார்தனிலே யார்செய்யப் போராரப்பா
அள்ளப்பா செந்தூர மெடுத்துப்பார்த்தால்
    அளவில்லா சதகோடி கவர்தான்பாரே 28

பாரப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு
பரபூசை குருபூசை பணிந்துநீயும்
சேரப்பா சீசாவில் செந்தூரமிட்டு
சிவயோகம் பூசைசெய்து பதனம்பண்ணு
ஆரப்பா உனக்கீடு வொருவருண்டோ
ஆணிமுத்துச்செந்தூர மடக்கம்பண்ணு
தேரப்பா செந்தூரம் விராகன்கொண்டு
செயலான மதியமுர்த மறைப்பலந்தான்கொள்ளே. 29

செந்தூர கற்பம்

கொள்ளுகிற வகையென்ன சொல்லக்கேளு
கூறுகிறோ மிரண்டையுந்தான் கூட்டிமத்தி
அள்ளுகிற சிவயோகம் செய்யும்போது
அப்பனே செந்தூர கற்பமுண்டால்
தெள்ளுகிற தேசத்தில் விளையும்போகும்
தீவினைதா னகத்தியருள் நல்வினைதானாகும்
சள்ளுகிற சட்டையெல்லா முறிந்தேபோகும்
சமர்த்தான கற்பமுண்டு சார்ந்துபாரே. 30

சார்ந்துபார் தேகமெல்லாம் கனகமாகும்
சமர்த்தான கல்போலே திரிதிகூட்டும்
ஆர்ந்துபார் யிக்கற்ப மண்டலமேகொண்டால்
அளவில்லா சதாகாலம் வயதென்னாலே
மார்ந்துபார் வயதென்ன முடியாதப்பா
மண்டலத்தில் கொண்டகற்பஞ் சித்தியாச்சு
சோர்ந்துபார் கற்பமுண்டு சிவயோகத்தில்
சுருபமதில் தானிருந்து சேர்ந்திடீரே. 31

வெங்கல தங்கம்

சேர்ந்திடீர் செந்தூர பற்பஞ்சொன்னோம்
சிவசிவா வெண்கலத்தின் தங்கங்காணும்
ஆர்ந்திடீர் வெண்கலந்தான் சேரெட்டாக
அப்பனே காந்தகிண்ண மதனிலிட்டு
பார்ந்திடீர் அஷ்டமா தயிலங்கொண்டு
பாலகனே வறைப்பலந்தான் அதனிலிட்டு
வார்த்திடீர் செந்தூரம் செயநீர்வீட்டு
மகத்தானரச மறைப்பலந்தான் வாரே. 32

வாரப்பா திராவகத்தின் செயநீர்வார்த்து
வளமாக ரவிதனிலே யிரண்டுநாழி
ஆரப்பா வூறினபின் எடுத்துக்கொண்டு
அப்பனே காந்தகின்ண மதனிலிட்டு
சேரப்பா லிங்கசெய ரசநீர்விட்டு
செயலான முத்துசெந்தூரம் போட்டு
காரப்பா காந்தகிண்ணம் கவசம்செய்து
கருணைதர வேண்டுமென்று கவசம்செய்யே. 33

செய்துமந்த காந்தகிண்ணம் ரவியில்மைந்தா
செயம்பெறவே யிருநாழி சென்றுதானால்
அய்ந்துயிந்தக் காந்தக்கிண்ண மெடுத்துக்கொண்டு
அப்பனே கவசமெல்லாங் கயட்டெரிந்து
எய்துஅந்த கவசமதை தட்டிப்போட்டு
யென்மகனே காந்தகிண்ணம் பார்த்தாயானால்
வைதிந்த வெண்கலந்தான் உருகிமைந்தா
மகத்தான ரவிகோடி நிறமதாமே. 34

ஆமேதான் அண்டஅச்சில் சாய்த்தாயானால்
அருவியது பாய்ந்ததுபோ லடவாய்ப்பாயும்
ஏமேதா னித்தங்கம் தகடாயோடி
யெண்ணவொண்ணா யேமமதா யிருக்கும்பாரு
நாமேதா னித்தங்கங் கொண்டு
நாதாந்த சிவயோகம் பூசைசெய்து
வேமேதான் வெண்கலத்தின் தங்கம்கொண்டு
விவேகமுள்ள பாலகனே பதனம்பண்ணே. 35

பண்ணப்பா சிவயோகம் செய்யும்போது
பாலகனே சிறுமையது வருகுங்காலம்
சொண்ணமப்பா யித்தங்கஞ் சிலவுசெய்து
செயம்பெறவே சதகோடி யோகம்பாரு
அண்ணப்பா யித்தங்க மகத்தாம்வேதை
அருமையப்பா செய்வோர்கள் செய்தாரானால்
நண்ணப்பா குறைவரா திந்தவேதை
நாடெல்லாம் பொன்னாகும் நாம்சொன்னோமே. 36

கோமேதக சுண்ணம்

சொன்னோமே முத்து செந்தூரஞ் சொன்னோம்
சொல்லுகிறோம் கோமேதகம் சொல்லக்கேளு
முன்னோமே கோமேதக மாறுபலம்வாங்கி
மூதண்ட ரசப்பீங்கா னதனில்வைத்து
அன்னோமே வைந்துருவின் தயிலம்பலம்விட்டு
அப்பனே ரவிதனிலே யிரண்டுநாழி
ஒன்னோமே வூறினதோர் கோமேதகங்கொண்டு
உத்தமனே காந்தகின்ண மதனிற்போடே. 37

போடப்பா முத்துசெந்தூரம் போடு
புனிதமென்ற செந்தூரம் செயநீர்வாரு
நாடப்பா முத்துப்பு செயநீர்தான்வாரு
நளினமென்ற வுடற்சுண்ணம் கடுகளவுபோடு
ஆடப்பா விந்தகினால் கவசஞ்செய்து
அண்டோட்டின் மெழுகதனால் சீலைசெய்து
காடப்பா காந்தகின்ண மெடுத்துக்கொண்டு
கருணைதர வேண்டுமென்று ரவியில்வையே. 38

வையப்பா யிரண்டுநாழி சென்றுதானால்
வசனித்தோம் காந்தகின்ண மெடுத்துநீயும்
மெய்யப்பா கவசமெல்லா மெடுத்தெரிந்து
மேலான கவசமதை தட்டிப்போட்டு
வையப்பா பார்த்தையென்றால் கோமேதகசுண்ணம்
பாடினோ மாயிரத்தில் பரிவாய்நாமும்
அய்யப்பா கோமேதக சுண்ணங்கொண்டு
அட்டயோக பூசைசெய்து அடக்கம்பண்ணே. 39

கோமேதக செந்தூரம்

அடக்கமென்ற விச்சுண்ண முறையேநாமு
மளவிடப் போகாது களையோகோடி
நடக்கமென்ற சுண்ணமடா புலஸ்தியாகேள்
நவசரா சரங்களெல்லாம் நீறிப்போகும்
படக்கமென்ற கல்சுண்ண முறைக்கெல்லாந்தான்
பலமான சுண்ணமடா பதனம்பண்ணி
வடக்கமென்ற சுண்ணத்தில் கடுகளவுகொண்டு
மாட்டினால் கோடாகோடி வேதையாமே. 40

வேதையாம் கோமேதக சுண்ணஞ்சொன்னோம்
விபரமதாய் செந்தூரம் விள்ளக்கேளு
பாதையாம் கோமேதக மைந்துபலம்வாங்கி
பரிவான சுண்ணத்தில் விராகன்கொண்டு
சோதையாங் காந்தகிண்ண மதனிலிட்டு
சொல்தவறா முச்செயநீ ரதனில்விட்டு
ஆதையாம் ரவிதனிலே அரைச்சாமவீதம்
அப்பனே யூறினதா லெடுத்துக்கொள்ளே. 41

கொள்ளுறதோர் கோமேதகம் பீங்கானிலிட்டு
குருவான வங்கசெந்தூரம் போட்டு
முள்ளுறதோர் முச்செயநீர் கூடவார்த்து
மூதண்ட வெங்காய மெழுகைப்போட்டு
அள்ளுறதோர் ஊறிநின்ற நீரெல்லாம்விட்டு
அப்பனே காந்தகிண்ணம் கவசம்செய்து
செள்ளுறதோர் வெண்கருவால் சீலைசெய்து
செயலான ரவிதனிலே அரைச்சாமம்வையே. 42

வைத்ததனை யரைச்சாமம் சென்றெடுத்துமைந்தா
வளமான கவசமெல்லாந் தட்டிப்போட்டு
எத்ததனை கவசமெல்லாம் கயட்டெறிந்து
யென்மகனே காந்தகிண்ணம் பார்த்தாயானால்
அத்ததன்ன வதினுள்ளே கோடாகோடி
அளவில்லா காந்தியப்பா என்றுகூற
முத்ததனை முடியாது நாவுமுண்டோ
மூதண்ட கோமேதக செந்தூரந்தானே. 43

தானென்ற செந்தூரம் சீசாகொண்டு
தருவான தமர்போட்டு செந்தூரத்தை
நானென்ற யோகசிவ பூசைகொண்டு
நளினமென்ற செந்தூரம் பதனம்பண்ணு
ஆனென்ற செந்தூரங் கோடாகோடி
அருணநிற மதுவென்று மருளினோம்நாம்
ஏமென்ற கோமேதக செந்தூரஞ்சொன்னோம்
யெடுத்துரைப்போ மதில்வேதை நவலோகந்தானே. 44

தானான நவலோகஞ் சேர்நால்வாங்கி
தருவான காந்தகின்ண மதனிற்போட்டு
தேனான வட்டமாந் தயிலம்விட்டு
தேவர் மகிழ்ந்தருளினதோர் ரவியமுர்தம்விட்டு
ஆனான மதியமுர்தஞ் செந்தூரஞ்செயநீர்
அருளான கோமேதக செந்தூரம்போட்டு
மானான வெண்கருவால் கவசஞ்செய்து
மகத்தான வெண்கருவால் சில்லுசெய்யே. 45

செய்துஅந்த காந்தகின்ணம் ரவியிலரைசாமம்
செய்து முடிப்பித்ததனை யெடுத்துக்கொண்டு
அய்துவந்த காந்தகின்ணம் கவசம்தட்டி
அப்பனே கவசமெல்லாம் அவிழ்த்துப்போட்டு
பைதுவந்த நவலோக மென்னசொல்வேன்
பழுப்பேறி சிவப்புநிற மாகுங்கண்டீர்
வயதுனக்கு என்னாலே சொல்லப்போமோ
மதிகோடி ரவிகோடி காந்திபாரே. 46

புட்பராக சுண்ணம்

காந்தியிலே செகசோதி கலைதான்மேவும்
கணக்கில்லா தங்கமப்பா யெவர்தான்செய்வார்
சாந்தியிலே நவலோகத்தே தான்செய்வார்
சதாசிவத்தின் யோகசிவ பூசைசெய்து
அந்தியென்ற வண்டத்தின் சீஷாதன்னில்
அடக்கமதாய் செந்தூரம் வைத்தால்போல
தந்திதமாய் தங்கத்தை யெடுத்துக்கொண்டு
தருவான பொட்டியிலே பதனம்பண்ணே. 47

பண்ணப்பா சிவயோக ராசயோகம்
பரிவான யோகமது செய்யும்போது
எண்ணப்பா யோகமது செய்யுங்காலம்
யெளுமைவந்து தேகமுங்காண் யேமங்கொண்டு
அண்ணப்பா மாறியதை சிலவுசெய்து
அட்டயோகஞ் செய்தையென்றால் வறுமையேது
நன்ணப்பா நாம்சொன்னோம் கோமேதகசெந்தூரம்
நாடதிலே யார்செய்வார் நாம்செய்வோமே. 48

செய்தோமே புட்பராக முரைக்கக்கேளு
செயமான சுண்ணமடா யதிகவேகம்
அய்தோமே புட்பராக மைந்துபலம்வாங்கி
அப்பனே காந்தகிண்ண மதனிலிட்டு
மைதோமே மதியமுர்த ரவியமுர்தம்விட்டு
மகத்தான ரவிதனிலே யிரண்டுநாழி
உய்தோமே யூறவைத்து யெடுத்துக்கொண்டு
ஓகோகோ காந்தகிண்ண மதனிற்போடே. 49

போடப்பா கோமேதக செந்தூரந்தன்னை
புனிதமுடன் கடுகுவீதம் போட்டுநீயும்
நாடப்பா வாலைரசம் செயநீர்வார்த்து
நலமான செந்தூர செயநீர்வாரு
கேடப்பா திராவகந்தான் விராகனெடைவிட்டு
தெளிவான வெண்கருவால் கவசம்செய்து
ஆடப்பா வண்டோடின் மெழுகாற்சீலை
அப்பனே செய்து முடிப்பித்துக்கொள்ளே. 50

கொள்ளப்பா செய்ததொரு காந்தக்கிண்ணம்
குருவான கிண்ணமதை யெடுத்துக்கொண்டு
அ்ள்ளப்பா ரவிதனிலே யிரண்டுநாழி
அப்பனே யெடுத்ததனை வைத்துநீயும்
மொள்ளப்பா கவசமதை யெடுத்தெரிந்து
மூதண்ட கவசமெல்லாம் தட்டிப்போட்டு
வள்ளப்பா பார்த்தையென்றால் புட்பராகசுண்ணம்
வசனித்தோம் காவியத்தில் சுண்ணம்பாரே. 51

பாரடா சுண்ணமதை சீசாதன்னில்
பாலகனே பதனமதாய் வைத்துப்போற்றி
சாரடா யோகசித்தி பூசைசெய்து
சமர்த்தான புட்பராக சுண்ணந்தன்னை
வாரடா நினைந்தபடி யாடுதற்கு
வளம்பெறவே யிச்சுண்ண மனேகவேதை
ஆரடா புட்பராக சுண்ணம்சொன்னோம்
அறையுறோ மட்டலோக வேதைகாணே. 52

அட்டலோக தங்கவேதை

காணடா புலஸ்தியனே யோகராஜா
கருவான குருவப்பா சொல்லக்கேளு
ஆணடா வட்டலோகத் தங்கஞ்சொல்வேன்
அறையுறோ மைந்துபலம் லோகம்வாங்கி
சாணடா காந்தகிண்ண மதனிலிட்டு
சமர்த்தான புட்பராக சுண்ணம்போட்டு
மாணடா யிச்சுண்ணம் விராகன்போட்டு
மதியமுர்தம் ரவியமுர்தம் கூடச்சேரே. 53

சேரப்பா வுப்புதிராவகத்தை வார்த்து
செந்தூர செயநீருங் காற்பலந்தான் வார்த்து
மாரடா வண்டமெழு கவசம்செய்து
மகத்தான வெண்கருவால் சீலைசெய்து
ஆரடா ரவிதனிலே யோர்சாமம்வைத்தால்
அட்டலோக தங்கமதை யென்னாற்கூறவு
மூரடா முடியாது லோகந்தானு
முருகியது காந்தகிண்ணம் பிரளும்பாரே. 54

பாரப்பா புலஸ்தியனே யோகராஜாங்கம்
பழுப்பேறி மதுபோலே பாகங்கண்டு
காரப்பா காந்தகிண்ண மெடுத்துமைந்தா
கருணைதர வேண்டுமென்று கவசந்தட்டி
ஆரப்பா கவசமெல்லா மவிழ்த்துப்போடு
ஆகாகா லோகமதைப் பார்த்தாயானால்
நாரப்பா வுருகியது மணிபோல்கட்டும்
நளினமதாய் வண்டவச்சில் சாய்த்திடாயே. 55

சாய்த்திட்டுப் பார்த்தையானா லட்டயோகம்
சராசரங்க ளிதற்கீடுவுண்டோ மைந்தா
ஓய்த்திட்ட மரம்போலே புலஸ்தியாகேள்
விலைமதிக்க மாட்டார்கள் மதித்தாரானால்
அய்த்திட்ட மூர்க்கர்களை யெரித்தகந்தன்
அவர்மதிப்பா ரொருவரால் மதிக்கப்போமோ
பாய்த்திட்டு மிரளாதே வஷ்டயோகம்
பரிவான தகடெடுத்து பூசைசெய்யே. 56

செய்யப்பா சிவயோகம் சத்தியோகம்
செயமான கும்பகத்தில் பூசைசெய்து
அய்யப்பா சிவயோகம் செய்யும்போது
அளவில்லா வுனக்கெளுமை நேர்ந்துதானால்
செய்யப்பா யித்தங்கம் கடுகுகொண்டு
சமர்த்துடனே கடைவீதி சென்றுமேதான்
மெய்யப்பா சொல்லிவிட்டோ மதித்தாயானால்
வேதையிதின் மகிமையப்பா சொல்லொண்ணாதே. 57

புட்பராக செந்தூரம்

சொல்லொண்ணா பொருளப்பா கோடாகோடி
திரவியத்தைக் கொடுப்பார்கள் வாங்கிக்கொண்டு
செல்லொண்ணா சிவயோகஞ் செய்யும்போது
சிலவுசெய்து திரவியத்தை சிவயோகம்பார்
அல்லொண்ணா வட்டலோக மிதற்கீடுண்டோ
மளவிறந்த சதாகோடி காலமெல்லாம்
மல்லொண்ணா வொருநாளும் குறைவராது
மஷ்டலோக தங்கத்தை வருளினோமே. 58

அருளினோம் புட்பராக வேதைசொன்னோம்
அப்பனே புட்பராக செந்தூரங்கேளு
மருளினோம் புட்பராக மைந்துபலம்வாங்கி
மகத்தான ரசக்கிண்ண மதனில்விட்டு
சருளினோஞ் சாரசெயநீர் தான்விட்டு
சமர்த்தான முச்செயநீர் கூடவிட்டு
வருளினோம் ரசக்கிண்ண மெடுத்துக்கொண்டு
மகத்தான ரவிதனிலே வைத்திடாயே. 59

வைத்துநீ குறைதவறா பாகமாக
வரிசைசெய்தால் ரசக்கிண்ண மெடுத்துமேதான்
ஐத்துநீ யதிலிருந்து புட்பராகம்
அதையெடுத்து காந்தகிண்ண மதனில்வைத்து
முத்துநீ புட்பராக சுண்ணங்கொண்டு
மூதண்ட சுண்ணமதில் கடுகுவீதம்
நைத்துநீ போட்டதிலே திராவகந்தான்விட்டு
நலமாக காந்தகிண்ணங் கவசஞ்செய்யே. 60

செய்யப்பா வெண்கருவால் கவசஞ்செய்து
செயமான வெண்கருவால் சீலைசெய்து
வெய்யப்பா ரவிதனிலே யிரண்டுநாழி
வீரமுடன் வைத்தனை யெடுத்துக்கொண்டு
அய்யப்பா கவசமெல்லாந் தட்டிப்போட்டு
அப்பனே சீலையெல்லாங் கயட்டெரிந்து
பொய்யப்பா சொல்லவில்லை புட்பராகம்
புகழான செந்தூர மெடுத்துப்பாரே. 61

எடுத்துப்பார் புட்பராக செந்தூரந்தான்மைந்தா
அண்டரண்ட புவனமெல்லாம் விலையோயில்லை
வடுத்துப்பார் காந்தியிலே சூரியகாந்தி
மகத்தான ரவியொளிபோல் சோதிகாணும்
தடுத்துப்பா ரிச்சோதி வருணன்போலே
தயாபரனே யுந்தமக்கு வாய்க்கலாச்சு
நடுத்துப்பார் புட்பராக செந்தூரத்தை
நவப்பிரம யோகசிவ பூசைசெய்யே. 62

செய்தயிந்த செந்தூரஞ் சீசாதன்னில்
செயலாக பதனமதாய் வைத்துநீயும்
மெய்துயிந்த சிவயோகஞ் செய்யும்போது
மேலான செந்தூரம் வேண்டும்பாரு
கொய்தமலர் பூபோலே பதனம்பண்ணி
குருபதமே கெதியெனவே வொருமனதாய்நின்று
நைந்துயிந்த காவியந்தா னாயிரத்தைமைந்தா
நாள்தோறும் பூசைசெய்து பதனம்பண்ணே. 63

பண்ணப்பா வுலகத்தோர் மாண்பருக்கு
பலபுத்தி காமுகர்குங் காட்டவேண்டாம்
நண்ணப்பா வொருவருக்கு யிந்தநூலை
காட்டினால் வெகுகோடி பாபமெய்தும்
அண்ணப்பா யெண்ணுமுத லீசன்சொன்னார்
அனந்தமசி அவனேயென்று சாபம்போட்டார்
ஒண்ணப்பா யென்குருவே விமோசனந்தான்
ஓம்நம சிவாயகுரு வுருசொன்னாரே. 64

ஒருவருக்கு நூல்கொடுத்தால் ஈசன்சொன்ன சாபந்தீரும்படி
உருவான முதலெழுத்து யிதவால்மைந்தா
ஓட்டிலோம் வித்வேஷணந்தான் முன்சொன்னதியானம்
அருவான சதாகோடி சாபமெல்லா
மற்றுதப்பா யிவ்வெழுத்தால் செத்துப்போச்சு
முருவான வைப்பெல்லாம் சகலநூலு
மூதண்ட சாபமெல்லாம் நிவர்த்தியாச்சு
சருவான யென்னுடைய கோர்வைநூலு
சமர்த்தான பதினாறுலெட்சம் நிவர்த்தியாச்சே. 65

சாபநிவர்த்தி

ஆச்சப்பா புட்பராக செந்தூரஞ்சொன்னோ
மறையுறோம் சதாளந்தம் ராசயோகம்
வாச்சப்பா வங்கமதில் சேர்தானெட்டு
வசனித்தோ மதைக்கொண்டு ரசக்கிண்ணத்திட்டு
பாச்சப்பா முச்செயநீர் திராவகத்தின்செயநீர்
பரிவான செந்தூர செயநீர்வார்த்து
காச்சப்பா ரசக்கிண்ண மெடுத்துநீயும்
கருணைதர வேண்டுமென்று ரவியில்வையே. 66
வைத்துப்பா ரிரண்டுநாழிகை சென்றாக்கால்
மகத்தான ரசக்கிண்ண மெடுத்துநீயும்
மைத்தப்பா வங்கத்தின் தகடெடுத்து
மகத்தான காந்தகிண்ண மதனிலிட்டு
அத்துப்பார் புட்பராக செந்தூரந்தான்
அப்பனே கடுகளவு மதனிலிட்டு
பைத்துப்பார் லிங்கரசம் விராகன்வீதம்
பரிவாக செந்தூரம் திராவகத்தைவாரே. 67

சதானந்த யோக ராசாங்கம்

வார்த்தனை மேற்கலசஞ் சீலைசெய்து
வளமான ரவிதனிலே அரைச்சாமம்வீதம்
ஆர்த்ததனை சென்றவுட னெடுத்துமைந்தா
அனுவான கலசமெல்லாங் கழட்டிப்போடு
பார்த்ததனை கவசமெல்லா மவிழ்த்தெரிந்து
பாலகனே காந்தகிண்ண மெடுத்துப்பார்த்தோம்
நார்த்திசையு விலைமதிக்கா தங்கம்தங்கம்
நவகோடி கோடாகோடி களைதானாமே. 68

ஆமப்பா யித்தங்கம் அண்டவச்சில்
அரகரா சாய்த்தையென்றால் தகடாய்ப்பாயும்
வாமப்பா தகடெடுத்து சிவபூசைசெய்து
மைந்தனே பதனமதாய் வைத்துமேதான்
காமப்பா வட்டயோகஞ் செய்யும்போது
கணக்கில்லா யெளுமைவருங் காலந்தன்னில்
நாமப்பா தகடதிலே தகட்டின்வீதம்
மைந்தனே தானெடுத்து சிலவுசெய்யே. 69

சதானந்த யோக ராஜாங்க மென்றறியவும்

செய்யப்பா புலஸ்தியனே சதானந்தயோகம்
செகந்தனிலே யார்செய்தார் நாமேசெய்தோம்
மெய்யப்பா யித்தங்கம் அதிகவேதை
வேதாந்த மாயிரந்தான் பத்தாங்காண்டம்
அய்யப்பா தொடுகந்தான் தொந்தங்கோடி
அளவில்லா தொந்தத்தில் கோடாகோடி
வையப்பா லோகமெல்லாம் நீறதாக
மாட்டுகிறோம் நவரத்தின மணிகள்போலே. 70

வங்கவேதை தங்கம்

மணியான சதானந்தம் யோகம்சொன்னோ
மாட்டினோம் வங்கத்தின் தங்கஞ்சொன்னோம்
அணியாக சொல்லுகிறோம் புலஸ்தியாகேள்
அரகரா வைடூரியத்தின் சுண்ணங்கேளு
வணியான வைடூரியம் பலமைந்துவாங்கி
வளமான ரசக்கிண்ண மதனில்வைத்து
கணியான காரரசம்தனி லரைச்சேர்
கருணைதர வேண்டுமென்று ரவியில்வையே. 71

வைடூரியம்

வைத்துப்பா ரிரண்டுநாழிகை சென்றாக்கால்
வகையான வைடூரிய மெடுத்துக்கொண்டு
கைத்துப்பார் காந்தகிண்ண மதனில்விட்டு
கருவான செந்தூர செயநீர்விட்டு
பொத்துப்பார் புட்பராக செந்தூரங்கேளு
பொங்கமுட னிருகடுகு வீதம்போடு
முத்துப்பார் முப்புசுண்ண மிருகடுகுபோடு
மேலான வட்டமா தயிலம்வாரே. 72

வாரப்பா வுப்பு திராவகந்தான்விட்டு
வரிசையதா யண்டமெழு கவசம்செய்து
ஆரடா அண்டவிந்தால் சில்லுசெய்து
அப்பனே ரவிதனிலே யிரண்டுநாழி
வேரடா வீதமுடன் சென்றுதானால்
விவேகமுள்ள பாலகனே சொல்லக்கேளு
சாரடா கிண்ணமதை யெடுத்துநீயும்
சமர்த்தான கவசமெல்லாம் கழட்டுப்போடே. 73

போடப்பா சில்லெல்லாந் தட்டிப்போடு
புனிதமென்ன காந்தகிண்ணம் பார்த்தாயானால்
வாடப்பா வயிடுாரியத்தின் சுண்ணமப்பா
வசனிக்கப் போகாது கலையோமெத்த
நாடப்பா கொள்ளாது யிந்தசுண்ணம்
நாதாந்த சுண்ணமடா சீஷாதன்னில்
ஆடப்பா சுண்ணமதை யடக்கம்பண்ணி
அட்டயோக பூசைசெய்து அப்பால்கேளே. 74

கேளப்பா புலஸ்தியனே யிந்தசுண்ணம்
கெடியான சுண்ணமடா் கோடாகோடி
ஆளப்பா அதிககளை யிதற்கீடுண்டோ
அண்டரண்ட புவனமெல்லாம் நீறிப்போகும்
தேளப்பா கொட்டுமுதல்போல் கொட்டுமைந்தா
தெளிவான சுண்ணமடா யீசன்சொன்னார்
நாளப்பா யிந்தசுண்ணங் கடுகுபோட்டால்
நவகோடி வேதையெல்லா மாகுந்தானே. 75

தானென்ற வைடுாரிய சுண்ணஞ்சொன்னோம்
சமர்த்தான வதில்வேதை சாற்றக்கேளு
ஆனென்ற யிச்சுண்ணஞ் சொன்னோம்பாரு
அறையுறோம் ரசத்தகட்டின் தங்கம்கேளு
மானென்ற ரசதகடு சேரொட்டார்
மைந்தனே ரசக்கிண்ண மதனில்விட்டு
வானென்ற வட்டமா தயிலமைந்தா
வரிசையதாய் பலம்நாலு நிறுத்துவாரே. 76

வார்த்ததனை ரவிதனிலே யிரண்டுநாழி
வரிசையதா யூறினபின் னெடுத்துக்கொண்டு
ஆர்த்ததனை காந்தகிண்ண மதனிலிட்டு
அப்பனே வயிடூரிய சுண்ணமிட்டு
பார்த்ததனை முச்செயநிர் பலந்தான்வார்த்து
பரிவான செந்தூரம் திராவகந்தான்வாரு
நார்த்ததன வெண்கருவால் கவசம்செய்து
நலமான மெழுகதனால் சீலைசெய்யே. 77

செய்துவந்த கிண்ணமதை ரவியில்மைந்தா
செயம்பெறவே யறைச்சாமம் செய்துமுடிப்பித்து
அய்துஅந்தப் பாகமதாய் சென்றுதானால்
அப்பனே காந்தகிண்ண மெடுத்துநீயும்
நைய்து வந்தக்கிண்ணமதில் கவசந்தட்டி
நளினமென்ற கவசமெல்லா மவிழ்த்துப்போட்டு
வைய்துமந்தக் கிண்ணமதை வண்டவச்சில்
வசனித்தோஞ் சாய்த்திடுவன் வளமாய்ப்பாரே. 78

ரசவேதை தங்கம்

பாரப்பா புலஸ்தியனே சொல்லக்கேளு
பரியேம் மிதற்கீடு பண்மையாமே
நாரப்பா சரம்போலே யருவிப்பாய்ந்து
நலமான ரசத்தங்க மோடிநிற்கும்
ஆரப்பா யிதனுடைய விலாசஞ்சொல்ல
அரனாலு மயனாலு மகையாதப்பா
வாரப்பா நாவுமுண்டோ கோடாகோடி
வசனிப்போ மாத்திதுதான் வளங்காண்பாயே. 79

காணடா ரசத்தங்கம் தகடேகொண்டு
கருணைதர வேண்டுமென்று யோகபூசை
ஆணடா செய்து முடிப்பித்துக்கொண்டு
அப்பனே ரசதங்கம் பதனம்பண்ணு
நாணடா நாதவிந்து விந்துநாதம்
நாதாந்த ரவிமதியு மிதற்கொவ்வாது
வாணடா யித்தங்கம் வலுவாய்க்கொண்டு
மவுனசிவ யோகத்தில் மருவலாமே. 80

மருவலாம் தசயோகஞ் செய்யும்போது
மகத்தான வறுமைவந்து செய்துநாளில்
அருவலா மித்தங்க மெடுத்துக்கொண்டு
அப்பனே மாறியிதை திரவியங்கொண்டப்பா
வருவலாஞ் சிலவுசெய்து யோகம்பாரு
மஉவிறந்த சதாகாலம் கோடிகாலம்
கொருவலாம் குறையேது வறுமையேது
கூறினோம் காவியந்தான் குருவிதாமே. 81

வயிடூரிய செந்தூரம்

குருவான ரசத்தங்க குருவைச்சொன்னோம்
குணமுடையோ ரறிவறிந்து செய்துபாரீர்
அருவான ரசதங்க மருளினோம்பார்
அறையுறோம் வைடூரிய செந்தூரங்கேள்
மருவான வைடூரியம் பலமைந்தாக
வசனித்தோம் ரசக்கிண்ண மதனிலிட்டு
உருவான முச்செயநீர் ரெண்டுபலமிட்டு
மூதண்ட ரவியமூர்த மதியமூர்தம்வாரே. 82

வார்த்து நன்றாய் ரசக்கிண்ண மெடுத்துக்கொண்டு
வளமான ரவிதனிலே யிரண்டுநாழி
ஏர்த்துநன்றாய் வீதமுடன் சென்றுதானால்
யியலான வைடூரிய மெடுத்துநீயும்
கார்த்து நன்றாய் காந்தகிண்ணமதனில்விட்டு
கருவான வைடூரியத்தின் சுண்ணம்போட்டு
ஆர்த்துநன்றாய் ஐங்காய முப்புசுண்ணம்
அப்பனே யிருகடுகு நிறுத்துப்போடே. 83

போடப்பா முப்பூவின் செயநீர்விட்டு
புனிதமென்ற காந்தகிண்ணங் கவசம்செய்து
வாடப்பா வெண்கருவால் சில்லேயிட்டு
வளம்பெறவே ரவிதனிலே வைத்தாயானால்
நாடப்பா வுருகியது பிரளும்பாரு
நலமான பாகமதாய் யெடுத்துமைந்தா
ஆடப்பா கவசமெல்லாந் தட்டிப்போட்டு
அப்பனே சில்லெல்லா மவிழ்த்துப்போடே. 84

போட்டதனை காந்தகிண்ண மெடுத்துநீயும்
புகழான சீசாவில் செந்தூரமிட்டு
நாட்டதனை சிவயோகஞ் செய்யும்போது
நளினமதாய் செந்தூரம் பதனம்பண்ணு
ஆட்டதனை செந்தூர மிதுவாலப்பா
அளவில்லா சததகோடி வேதையாகும்
மாட்டதனை மகத்தான குருத்தானையா
மளவில்லா சதகோடி களைதான்பாரே. 85

களையான காந்தியிலே யதிககாந்தி
கணக்கில்லா கோடாகோடி விலாசமேவும்
நளையான செந்தூர மென்னாற்சொல்ல
நாவுமுண்டோ வசனிக்க நாவோயில்லை
அளையான வைடூரியத்தின் செந்தூரஞ்சொன்னோம்
அறையுறோ மதில்வேதை கோடாகோடி
பளையான செந்தூரம் சொன்னோம்பாரு
பாடுகிறோம் யத்தினிட வண்மைபாரே. 86

அயவேதை தங்கம்

பாரடா அயமதுதான் சேரெட்டாக
பரிவான காந்தகிண்ண மதனிலிட்டு
மாரடா ரசபாஷாணம் பலந்தான்கொண்டு
மகத்தான காந்தகிண்ணம் நடுவேயிட்டு
வேரடா கெந்திரச மரைச்சேர்விட்டு
விபரமதாய் காந்தகிண்ண மெடுத்துநீயும்
நாரடா ரவிதனிலே யிரண்டுநாழி
நளினமதாய் பாகமுடன் வைத்துப்பாரே. 87

அயச்செம்பு

வைத்துமே பார்த்தையென்றால்
வரிசையதாய் அயமதுவும் வுருகியாடும்
அய்த்துமே யதையெடுத்துப் பார்த்தாயானால்
அயமென்ற யிரும்பதுவும் செம்பதாச்சு
கைத்துமே அயச்செம்பை யெடுத்துநீயும்
கருணைதர வேண்டுமென்று பணிந்துபோற்றி
நைத்தநீ காந்தகிண்ண மதனிலிட்டு
நலமான செந்தூரம் நடுவேவையே. 88

நடுவான மூன்றுப்பின் செயநீர்பலம்விட்டு
நளினமென்ற செந்தூரம் திராவகந்தான்வார்த்து
வடுவான அட்டமா தயிலமதைவிட்டு
வளமான வெங்காய கடுகின்வீதமுத்து
மடுவான வழலைசுண்ணம் கடுகளவுபோட்டு
மகத்தான வெண்கருவால் கவசஞ்செய்து
அடுவான அண்டோட்டின் மெழுகால்சீலை
அப்பனே செய்து முடிப்பித்துக்கொள்ளே. 89

கொள்ளப்பா காந்தகிண்ணஞ் சில்லுசெய்து
குருவான ரவிதனிலே யிரண்டுநாழி
வள்ளப்பா வைத்ததனை பதனம்பண்ணு
மைந்தனே சென்றவுட னெடுத்துக்கொண்டு
மெள்ளப்பா கவசமதை கயட்டிப்போடு
மூதண்ட கவசமதை தட்டிநீயும்
கள்ளப்பா காந்தகிண்ண மெடுத்துக்கொண்டு
கருவான அண்டவச்சில் சாய்த்திடாயே. 90

சாய்த்ததனை பார்த்தையென்றா லருவிப்பாய்ந்து
சமர்த்தாக வோடுமப்பா தகடாய்த்தானும்
ஆய்த்ததனை போற்றிசெய்து அயத்தங்கத்தை
அப்பனே தக்டெடுத்து சிவயோகத்தில்
போய்த்ததனை பூசைசெய்து அடக்கம்பண்ணு
புனிதமென்ற அயத்தங்கங் கோடாகோடி
மாய்த்ததனை சொல்லமுடி யளவிடாது
மகத்தான சதகோடி களைதான்பாரே. 91

நவரெத்தின செய்ய

பாரேநீ அயத்தங்கம் பதனம்பண்ணு
பானுவென்ற சதாயோகஞ் செய்யும்போது
ஏரேநீ யேழ்மைவந்து நேருங்காலம்
யெள்ளளவு தங்கமது எடுத்துக்கொண்டு
வேரேநீ விலைமதித்து மாறிமைந்தா
விளக்கமதாய் சிலவுசெய்து யோகம்பாரு
ஆரேநீ வயதுயது நேராதப்பா
அளவில்லா சதகோடி வயசதாமே. 92

வயதான வயதப்பா அளவில்லாத
வயதண்டா மயத்தங்கம் சோதித்தோம்பார்
கைதான கனகமடா வயத்தங்கத்தை
கருவான சொன்னமப்பா கனகமெத்த
அயதான அயத்தங்கஞ் சொன்னோம்சொன்னோம்
அருளுகிறோம் கெம்புரத்தின் மருளக்கேளு
நைதான செம்புவப்பா வைந்துபலம்வாங்கி
நளினமென்ற ரசக்கிண்ண மதனில்வையே. 93

வைத்தப்பா வைடூரியத்தின் செந்தூரமிட்டு
வளமான திராவகந்தா னிருபலந்தான்வார்த்து
அய்த்தப்பா ரவிதனிலே யறைச்சாமவீதம்
மப்பனே யூறினதோர் சமயம்பார்த்து
எத்துப்பா ரெடுத்ததனைக் கிண்ணத்திட்டு
யிந்திரமாஞ் செந்துரம் செயநீர்வார்த்து
மைத்துப்பார் திராவகந்தா னிருபலந்தான்விட்டு
மகத்தான வூறினதோர் முன்னீர்வாரே. 94

வார்த்தனை அண்டமெழு கவசஞ்செய்து
மகத்தான வெண்கருவால் சில்லுசெய்து
ஆர்த்துமே யறைச்சாமம் ரயில்வைத்தால்
அரகரா கெம்புரத்தின சுண்ணமாகும்
ஏர்த்துப்பார் காந்தகிண்ண மெடுத்துமைந்தா
யெண்ணவொண்ணா கவசமெல்லா மெடுத்துப்போட்டு
நார்த்ததனை சீலையெல்லா மவிழ்த்தெரிந்து
நளினமென்ற கெம்புரத்தின் சுண்ணம்பாரே. 95

அன்னமடா மிச்சுண்ணங் கோடாகோடி
யரியகளை நவகோடி சொல்லொண்ணாது
அண்ணமா மிச்சுண்ணம் சீஷாகொண்டு
அரகரா வதினளவி லடக்கம்பண்ணி
வண்ணமா மிச்சுண்ணம் நவலோகத்தில்
மாட்டி லறைக்கடுகு மாத்தோகோடி
முண்ணமாஞ் சுண்ணமடா யோகபூசை
மூதண்ட பூசைசெய்து வைத்துக்கொள்ளே. 96

அஷ்டயோக வேதையில் தூங்கமறியவும்

கொள்ளப்பா கெம்புரத்தின் சுண்ணந்தன்னில்
கோடான கோடியென்னும் வேதையாகும்
அள்ளப்பா யிச்சுண்ணம் மருளினோம்பாம்
அரகரா யிதில்வேதை யறையக்கேளீர்
நள்ளப்பா வட்டலோக மெண்சேர்கொண்டு
நலமானப் பீங்கான் தன்னிலிட்டு
மொள்ளப்பா வட்டமாதயில மிருப்பலமிட்டு
மூதண்ட முப்புசெயநீர் தான்வாரே. 97

வாரடா ரசபீங்கான் ரவியிலறைசாமம்
வரிசையதாய் வைத்துநீ சென்றாயானால்
ஆரடா ஹுறிநிற்கும் பாகம்பார்த்து
அப்பனே ரசபீங்கா னெடுத்துநீயும்
ஊரடா ஹுறினதோ ரட்டலோகம்
ஓகோகோ காந்தகிண்ண மதனிலிட்டு
சாரடா கெம்புரிரத்தின சுண்ணந்தன்னை
சார்பா கடுகின்வீதம் கிண்ணம்போடே. 98

போடப்பா கெந்திரச மரைப்பலந்தான்விட்டு
புனிதமென்ற முப்புசுண்ணம் கடுகுபோடு
ஆடப்பா வைந்துருவின் தயிலம்விட்டு
அப்பனே ரசசெயநீர் கூடச்சேர்த்து
காடப்பா காந்தகிண்ணங் கவசம்செய்து
கருணைதர வேண்டுமென்று விந்தாற்சீலை
சேடப்பா செய்துமுடிப்பித்துக்கொண்டு
சிவசிவா ரவிதனிலே அரைச்சாமம்வையே. 99

வையடா சென்றவுட னெடுத்துக்கொண்டு
வளமான கவசமெல்லா மவிழ்த்துப்போடு
செய்யடா சில்லெல்லாங் கயட்டெரிஞ்சு
செயமான அண்டஅச்சில் சாய்த்தாயானால்
அய்யடா யருவியது வோடிப்பாய்ந்து
அப்பனே தகடாகக் கட்டும்பாரு
மெய்யடா சொல்லிவிட்டோ மளவில்லாத
மேலான சததகோடி மாத்தாம்பாரே. 100

பாரப்பா அட்டலோக தங்கந்தன்னை
பரிவான தகடெடுத்துப் பூசைசெய்து
ஆரப்பா வடக்கமதாய் பதனம்பண்ணு
அட்டலோகத் தங்கமிது யார்தான்செய்வார்
சேரப்பா சிவயோகஞ் செய்யும்போது
சிவசிவா செலவுசெய்து யோகம்பார்த்தால்
சாரப்பா சாவேது பிறவியாச்சு
சமர்த்தான அட்டலோக தங்கந்தானே. 101

தானான வட்டலோகத் தங்கஞ்சொன்னோம்
சாற்றுகிறோம் கெம்புரத்தின செந்தூரங்கேள்
தேனான கெம்புரத்தின் மைந்துபலம்வாங்கி
செயலான ரசக்கிண்ண மதனில்விட்டு
ஆனான வைந்துருவின் தயிலம்வார்த்து
அப்பனே காரரச மதனிலிட்டு
வேனான ரவிதனிலே யிரண்டுநாழி
வீதமுடன் சென்றுதென்றா லெடுத்துக்கொள்ளே. 102

கொள்ளடா புலத்தியனே கெம்பைக்கொண்டு
கூறினோங் காந்தக்கிண்ண மதனிலிட்டு
அள்ளடா கெம்புசுண்ணம் கடுகின்வீத
மதுநடுவி லதையிட்டு வறையக்கேளு
மெள்ளடா முப்புசுண்ணம் கடுகுபோடு
முச்செயநீர் செந்தூரஞ் செயநீர்வாரு
கள்ளடா மெழுகதனால் கவசஞ்செய்து
கறுப்பேற விந்ததனால் சீலைசெய்யே. 103

செய்யப்பா சீலையது செய்துமுடிப்பித்து
செயலான ரவிதனிலே யறைச்சாமம்வைத்தால்
மெய்யப்பா செந்தூர மென்னசொல்வேன்
வெகுகோடி வேதையெல்லா மிதனாலாடும்
ஐயப்பா காந்தகிண்ண மெடுத்துமேதான்
அழகான கவசமதை கழட்டிப்போட்டு
பையப்பா சீலைதனைத் தட்டிநீயும்
பாரப்பா செந்தூரம் பண்மைதானே. 104

கெந்திரச தங்கம்

தானென்ற செந்தூரம் சீசாதன்னில்
    தருவாக யிதனையே யதனில்சேர்த்து
ஆனென்ற பரபூசை குருபூசைசெய்து
    அப்பனே செந்தூர மடக்கம்பண்ணு
நானென்ற செந்தூரங் கெம்பலாச்சு
    நாம்சொன்னோ மதில்வேதை நாட்டக்கேளு
வானென்ற கெம்பு செந்துரங்கேளு
    மாட்டுகிறோம் கெந்திரச தங்கங்கேளே. 105

கேளப்பா கெந்திரச மெண்சேர்கொண்டு
    கிருபையென்ற காந்தகிண்ண மதில்வைத்து
ஆளப்பா முப்புசுண்ணம் விராகன்போட்டு
    அப்பனே முச்செயநீர் அரைப்பலந்தான்வார்த்து
நாளப்பா ரவிதனிலே நிமிஷம்வைத்தால்
    நலமான கெந்திரச மணிபோல்கட்டும்
கோளப்பா வாராது வெள்ளிபோலாங்
    குருவான வெள்ளியைத்தா னெடுத்துக்கொள்ளே. 106

கொள்ளுறதோர் வெள்ளியிலே யெண்சேர்கொண்டு
    கூறினோங் காந்தகிண்ண மதனிலிட்டு
அள்ளுறதோர் லிங்கரசம் வங்கரசம்விட்டு
    அழகான திராவகத்தின் செயநீர்வார்த்து
கள்ளுறதோர் காந்தகிண்ணங் கவசம்செய்து
    கருவான விந்ததினால் சில்லுசெய்து
தொள்ளுகிற ரவிதனிலே யரைச்சாமம்வைத்து
    தெளிவாக நீயெடுத்துக் கவசந்தட்டே. 107

தட்டடா கவசமெல்லாங் கயட்டெரிந்து
    தருவான அண்டஅச்சில் சாய்த்தாயானால்
அட்டடா அருவியது ஓடிப்பாய்ந்து
    அப்பனே தகடாகக் கட்டும்பாரு
வட்டடா கெந்திவெள்ளி தங்கவேதை
    மதிகோடி ரவிகோடி காந்திவீசும்
நாட்டடா யித்தங்க மளவில்லாத
    நவகோடி கோடாகோடி சதகோடிமாத்தே. 108

மாத்தான யித்தங்க மட்டயோக
மகத்தான பூசைசெய்து பதனம்பண்ணு
ஆத்தான யித்தங்க மளவில்லாத
அரகரா சிவயோகஞ் செய்யுநாளில்
காத்தான கனகமதை சிலவுசெய்து
கனயோகம் ராசானந்த யோகம்பாரு
வாத்தான வறுமைவந்து அணுகாதப்பா
வசனித்தோங் கெந்திவெள்ளி தங்கமாமே. 109

கெந்தி ரசத்தில் தங்கவேதை

ஆமேதான் கெந்திவெள்ளி தங்கஞ்சொன்னோ
மறையுறோம் நவரத்தினம் நாலுங்கேளு
பாமேதான் பச்சைவச்சிர மரகதந்தானீலம்
பரிவாக நாலையுந்தா னரைவீசைகொண்டு
காமேதான் ரசக்கிண்ண மதனில்வைத்து
கடுாரமென்ற காரரசஞ் சேர்தான்விட்டு
நாமேதான் முச்செயநீர் திராவகத்தின்செயநீர்
நலமான செந்துர செயநீர்வாரே. 110

வாரப்பா ரசக்கிண்ண மதனில்வார்த்து
வளமான ரவிதனிலே யாரைசாமம்வைத்து
ஊரப்பா ஊறியது நீறாகும்பாரு
உத்தமனே ரசக்கிண்ண மெடுத்துக்கொண்டு
நாரப்பா நவரத்தினம் நாலுங்கொண்டு
நாதாந்த காந்தகிண்ண மதனில்வைத்து
ஆரப்பா படிகார மரைப்பலந்தானிட்டு
அரகரா கெம்பு செந்தூரம்போடே. 111

போடப்பா முப்புசுண்ணம் கெம்புசுண்ணம்
புகழான பஞ்சரத்தின சுண்ணம்போடு
நாடப்பா மதியமுர்தம் ரவியமுர்தம்விட்டு
நலமான செந்தூரம் செயநீர்வார்த்து
மூடப்பா முச்செயநீர் திராவகத்தின்
மூதண்ட வைங்காய மெழுகேபோட்டு
காடப்பா வம்மெழுகு கவசம்செய்து
கருணைதர வேண்டுமென்று ரவியில்வையே. 112

வைத்ததனை யோர்சாமஞ் சென்றெடுத்து
வளமாக கவசமதின் சீலையெல்லாம்
அத்ததனை தட்டியதை செய்துமுடிப்பித்து
அழகான காந்தகிண்ணம் பார்த்தாயானால்
முத்ததனை நவரத்தின சுண்ணமாகி
முப்பூவின் சுண்ணம்போ லிருக்கும்பாரு
அத்ததனை அளவில்லாக் கோடாகோடி
அரகரா சிவகளை கோடியாமே. 113

ஆமப்பா நவரத்தின சுண்ணந்தன்னை
அடக்கமதாய் சீசாவில் பதனம்பண்ணி
ஓமப்பா யோகசிவ மவுனபூசை
வுத்தமனே யோகபூசை செய்துநீயும்
நாமப்பா நவரத்தின சுண்ணஞ்சொன்னோம்
நளினமதா யதில்வேதை சொல்லக்கேளு
பாமப்பா பாஷாண ரசத்தைக்கேளு
பாலகனே ரசந்தானும் பலத்தைவாங்கே. 114

பாஷாணத்தின் தங்கவேதை

வாங்கடா காந்தகிண்ண மதனிலிட்டு
வளமான நவரத்தின சுண்ணம்போடு
சாங்கடா சாரசெயநீர் தான்விட்டு
சமர்த்தான முப்புசுண்ணம் விராகன்போட்டு
நாங்கடா ரவிதனிலே நிமிஷம்வைத்து
நல்லதொரு பாஷாணம் கட்டிப்போகும்
ஆங்கடா அளவில்லா வெள்ளியாகும்
அப்பனே அதையெடுத்துக் கிண்ணத்தூட்டே. 115

ஊட்டப்பா காந்தகிண்ண மதனிலிட்டு
ஓகோகோ வெண்கார வுப்புபலமிட்டு
நாடப்பா காரசெயநீர் தான்விட்டு
நாதாந்த வெங்காய மெழுகைப்போட்டு
ஆட்டப்பா வைந்துருவின் தயிலம்விட்டு
அப்பனே அட்டமா தயிலம்விட்டு
காட்டப்பா காந்தகிண்ணங் கவசம்செய்து
கருணைதர வேண்டுமென்று சில்லுசெய்யே. 116

செய்யப்பா விந்ததனால் சில்லுசெய்து
    சிறப்பான ரவிதனிலே அரைச்சாமம்வைத்தால்
உய்யப்பா வுருகியது பொங்கும்பாரு
    வுத்தமனே யப்பாகங் கண்டெடுத்துப்பாரு
அய்யப்பா அதையெடுத்து கவசந்தட்டி
    அழகான சில்லதுவை யவிழ்த்தெரிந்து
மெய்யப்பா அண்டவச்சில் வார்த்தாயானால்
    விவேகமென்ற ரசபாஷாணம் தங்கமாமே. 117

ஆமேதா னருவியது பாய்ச்சல்பாய்ந்து
    அப்பனே தகடாக ஓடிநிற்கும்
வாமேதா னித்தங்க மளவில்லாகோடி
    மாத்திதுக்கு வொவ்வாது தகடேகொண்டு
சேமேதான் சிவயோகம் பூசைசெய்து
    செயலான தங்கமிதை பதனம்பண்ணு
ஓமேதா னுனக்கேழ்மை வருகுங்காலம்
    ஒன்றான தங்கமிதை சிலவுசெய்யே. 118

ரசபாஷாண செந்தூரம்

செய்யப்பா ரசபாஷாணத் தங்கஞ்சொன்னோம்
    செயமான பாஷாண செந்தூரங்கேளு
நையப்பா நவரத்தினம் நாலுங்கொண்டு
    ரசப்பீங்கான் தனிலிட்டு ரசனாகம்வார்த்து
அய்யப்பா அட்டமாத் தயிலங்கூட்டி
    அரைசாமம் ரவிதனிலே அடவாய்வைத்து
பையப்பா கிண்ணமதில நவரத்தினங்கொண்டு
    பரிவான காந்தகிண்ண மதனில்வையே. 119

வையடா புலஸ்தியனே ராசயோகி
    வசனித்தே குருசொன்ன தெல்லாம்போடு
செய்யடா செந்தூர மெல்லாமிட்டு
    செயமான செயநீர்க ளெல்லாம்வார்த்து
அய்யடா திராவக மெழுகெல்லாந்தான்
    அப்பனே வதிலிட்டு கவசஞ்செய்து
மெய்யடா வெண்கருவால் சில்லுசெய்து
    விவேகமதாய் ரவிதனிலே சாமம்வையே. 120

வைத்ததனைப் பாகஞ்சென் றெடுத்துமைந்தா
மகத்தான சில்லெல்லாம் கவசம்தட்டி
அத்ததனை பார்த்தையென்றால் சொல்வோமைந்தா
அரகரா ரசபாசாண செந்தூரமாகும்
பொத்ததனை வதையெடுத்துச் சீசாதன்னில்
புகழாக பதனமதாய் வைத்தேநீயும்
செத்ததனை சிவயோக மவுனயோகம்
செயமான பூசைபண்ணி யடக்கம்பண்ணே. 121

பண்ணப்பா ரசபாஷாண செந்தூரஞ்சொன்னோம்
பாடுகிறோம் நாகரச வேதைகேளு
எண்ணப்பா நாகரச மெண்பலந்தான்வாங்கி
யிந்திரமென்ற காந்தகிண்ண மதனிலிட்டு
செண்ணப்பா சீனக்கார வுப்புபலமிட்டு
செயலான செந்தூர திராவகத்தைவிட்டு
அண்ணப்பா காந்தகிண்ண/மெடுத்துநீயும்
அப்பனே ரவிதனிலே நிமிஷம்வையே. 122

நாகரசவேதை

வைத்துப்பார் நாகரச முந்தியாடு
மைந்தனே வேளைகண்டு மணியேகொண்டு
கைதுபார் காந்தகிண்ண மதனிலிட்டு
கருவான பத்துவிதக் குருவேபோட்டு
அய்துபா ராருப்பு திராவகத்தைவார்த்து
அண்டமெழு கதனாலே கவசஞ்செய்து
முத்துப்பார் மூதண்ட விந்தாற்சீலை
மூர்க்கமென்ற சில்லுசெய்து ரவியிற்போடே. 123

போடப்பா யோர்சாமம் சென்றுதானால்
புனிதமென்ற நாகரச தங்கம்பொங்கி
நாடப்பா சாரையைப்போல் பொங்கிவோங்கி
நல்லதொரு பாகங்கண்டு கிண்ணந்தன்னை
ஆடப்பா யெடுத்ததனை கவசமெல்லாம்
அப்பனே கயட்டெரிந்து சீலைதட்டி
சாடப்பா அண்டஅச்சில் சாய்த்தாயானால்
சலஅமுர்த அருவியைப்போல் பாயுந்தானே. 124

தானான தங்கமடா நாகத்தங்கம்
 சதாகோடி மளவில்லா மாத்தோகாணும்
யோனான யிவையெடுத்து சிவயோகபூசை
 யென்மகனே செய்துயிதை அடக்கம்பண்ணு
கானானத் தங்கமது சுத்ததங்கம்
 கனயோகஞ் செய்கையிலே யித்தங்கத்தை
மானான மாறியிதை சிலவுசெய்து
 மவுனசிவ யோகமதில் மருவிப்பாரே. 125

மருவிடீர் சதாகோடி வேதைசொன்னோம்
 மகத்தான சுண்ணங்கள் செந்தூரஞ்சொன்னோம்
அருவிடீர் அளவில்லாத் தங்கஞ் சொன்னோம்
 அட்டநவ லோகங்கள் நவரத்தினஞ்சொன்னோம்
வருவிடீர் கோடாகோடி தொந்தஞ்சொன்னோம்
 மகத்தான சதாகோடி பாகஞ்சொன்னோம்
பருவிடீர் காவியந்தான் பத்தாங்காண்டம்
 பகல்போலே சொன்னோமப்பா ரத்தினங்கள்பாரே.126

பாரப்பா நூற்றிருபத் தொன்பதுக்கு
 பாடினோம் தசகாண்டம் புத்ததாச்சு
ஆரப்பா ஆகதொகை பாடல்கேளு
 ஆயிரத்து ஒருநூற்று முப்பதாலே
மாரப்பா யின்னூலை ஆயிரந்தான்மைந்தா
 மகத்தான நூலிதுதான் பத்தாங்காண்டம்
தேரப்பா தேவரிஷி அமுர்தவாக்கு
 தேறினால் காண்டம்பத்தில் திருவாமுத்தே. 127

ஆக பாடல் தொகை
தெக்ஷணாமூர்த்தி தேவரிஷி வாக்குவாத காவியம்
முற்றுப் பெற்றது.

தாமரை
நூலகம்